மாதம் இருமுறை நவம்பர் 01, 2025 - 48 பக்கங்கள் இலவச சஞ்சிகை

# கதிர் ஒளி

KATHIROLI
ULAGATHIN OREA OLI TAMILARGALIN
IT'S A PEOPLE NEWSPAPER

கனடா - இந்தியா - இலங்கை வெளியீடு

647-473-9698 கனடாவின் நம்பர் 1 தமிழ் இதழ்! 437-833-4304

விலை / Price $ 1/-



Editor in Chief: RAJAPANDIAN PAULRAJ

Editor: HUDSON PAULRAJ
Vol: 14 • Issue: 397
ePaper: www.kathirolimedia.ca

Kathir Oli Media Inc., 35 Shoreham drive, Unit. 723 North York, Ontario. M3N1S5 Canada TP: 437-833-4304 | kathirolinews@gmail.com www.kathirolimedia.ca

# வாக்குகளுக்காக பிரதமர் டான்ஸ் ஆடுவார்: பீகார் பேரணியில் ராகுல் காந்தி கடும் விமர்சனம்

பீகார் மாநிலத்தில் அடுத்த மாதம் 6 மற்றும் 11ஆம் தேதிகளில் சட்டமன்ற தேர்தல் நடைபெற இருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் காந்தி இன்று பிரசாரத்தை தொடங்கினார்.

முதல் பிரசார கூட்டத்திலேயே பிரதமர் மோடியை கடுமையாக சாடினார். பிரதமர் குறித்து ராகுல் காந்தி



கூறியதாவது:-

பிரதமர் மோடி உங்கள் வாக்குகளை விரும்புகிறார். நீங்கள் நரேந்திர மோடியை டான்ஸ் ஆட சொன்னால், அவர் டான்ஸ் ஆடுவார். அவர்கள் உங்கள் வாக்குகளை திருடுவதில் ஈடுபட்டுள்ளனர். ஏனென்றால், அவர்கள் இந்த தேர்தலை முடிவுக்கு கொண்டு வர விரும்புகிறார்கள். மகாராஷ்டிரா, அரியானாவில் தேர்தல்களை திருடினார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். பீகாரில் அவர்கள் உங்களுடைய சிறப்பை திருட முயற்சி செய்வார்கள். இவ்வாறு ராகுல் காந்தி விமர்சனம் செய்திருந்தார்.

இதற்கு பாஜக உடனடியாக பதலடி கொடுத்துள்ளது. பாஜக-வின் செய்தி தொடர்பாளர் பிரதீப் பண்டாரி 'ராகுல் காந்தி லோக்கல் குண்டர் போல் பேசுகிறார். பிரதமருக் காக வாக்களித்த அனைத்து மக்களையும் அவமதித்துள்ளார். வாக்காளர்களையும், இந்திய ஜனநாயகத்தையும் கேலி செய்துவிட்டார்' என பதில் கொடுத்துள்ளார்.

# வழக்கு விசாரிக்கப்பட்ட நாட்களை விட ஒத்தி வைக்கப்பட்ட நாட்கள் அதிகம் – சந்தியா எக்னெலிகொட

தமது கணவர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கு விசாரணை செய்யப்பட்ட நாட்களை விடவும் ஒத்தி வைக்கப்பட்ட நாட்கள் அதிகம் என ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் குறித்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டது. மூவர் அடங்கிய விசேட நீதி பதிகள் குழாமின் நீதிபதி சுஜிவ நிஸ்ஸங்க வழக்கை ஒத்தி வைப்பது குறித்து அறிவித்திருந்தார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட 17 குற்றச் சாட்டுகள் ராணுவ அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது. கிரிதலே ராணுவ முகாமின் கட்டளை அதிகாரி கேர்ணல் ஷம்மி அர்ஜுன் குமாரரத்ன உள்ளிட்ட ராணுவ புலனாய்வு பிரிவின் 9 அதிகாரிகளுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த வழக்கினை விசாரணை செய்யும் நீதிபதிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மூவர் அடங்கிய நீதிபதிகள் குழாமின் இரண்டு நீதிபதிகளுக்கு வெற்றிடம் நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதிகள் குழாமின் நீதிபதிகளுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டதாலும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதாலும் இந்த குழாமினால் தொடர்ச்சியாக விசாரணைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த 16 ஆண்டுகளாக தனது கணவரின் கொலைக்கு நியாயம்



பெற்றுக் கொள்வதற்காக போராடி வருவதாக சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

நீதிபதி குழாமில் காணப்படும் வெற்றிடங்கள் காரணமாக வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாட்களில் வழக்கு விசாரணை செய்யப்பட்ட நாட்களை விடவும் ஒத்திவைக்கப்பட்ட நாட்கள் அதிகம் என அவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிக ஆர்வம் காட்டப்படும் வழக்கு விசாரணைகளில் ஒன்றான இந்த வழக்கினை துரித கதியில் விசாரணைக்கு உட்படுத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

இவ்வாறு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதே தனதும் தனது பிள்ளைகளினதும் ஒரே எதிர்பார்ப்பு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதிகளுக்கு நிலவும் வெற்றிடங்களை நிரப்புமாறு கோரிக்கை விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!






# 3 மாதங்களில் 50 கிலோ குறைத்தால் ரூ.1.30 கோடி மதிப்புள்ள Porsche கார் - கவர்ச்சிகர அறிவிப்பை வெளியிட்ட GYM

இன்றைய காலக்கட்டத்தில் மாறிவரும் உணவு பழக்கத்தால் பலர் உடல் பருமனால் அவதிக்குள்ளாகினர். அவ்வாறு அவதிக்குள்ளாகுபவர்கள் டயட் மற்றும் உடற்பயிற்சி செய்து உடல் எடையை குறைக்க விரும்புகின்றனர். இதனால் பலரும் ஜிம்-மை நோக்கி படையெடுக்கின்றனர். இதன் காரணமாக தற்போது வீதிக்கு ஒரு உடற்பயிற்சி கூடம் திறக்கப்படுகிறது.

அவ்வாறு உடற்பயிற்சி கூடத்தை நோக்கி வருபவர்களுக்காக பல்வேறு அறிவிப்புகளை ஜிம் நிர்வாகத்தினர் அறிவிக்கின்றனர். அந்த வகையில் சீனாவில் ஜிம் நிர்வாகம் அறிவித்த அறிவிப்பு பலரையும் அதிர்ச்சியிலும், ஆச்சரியத்திலும் உறைய வைத்துள்ளது.

அதாவது, 3 மாதங்களில் 50 கிலோ எடையை குறைப்பவர்களுக்கு சுமார் ரூ.1 கோடியே 30 லட்சம் மதிப்புள்ள Porsche காரை பரிசாக அளிக்க உள்ளதாக ஜிம் நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இந்த சவாலில் பங்கேற்க அனுமதி கட்டணமாக ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் வசூலிக்கப்படுகிறது. மேலும் உணவு, தங்கும் வசதிகளை ஜிம் நிர்வாகமே அளிக்கிறது. இதனால் பலரும் அந்த உடற்பயிற்சி கூடத்தை நோக்கி படையெடுக்கின்றனர்.

இதனிடையே, இதுபோன்று எடைக்குறைப்பது உடல் நலத்திற்கு கேடு என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

உடற் பயிற்சி கூடத்திற்கு சென்றால் உடல் எடை குறைக்கலாம், உடல் நலம் காக்கலாம் என்று பலரும் நினைக்கையில் இது போன்ற அறிவிப்பு லாப நோக்கத்திற்காக அறிவிக்கப்பட்டது என்று இணையதள வாசிகளிடையே விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது.





# உலக செய்திகள்

# உலகின் முதல் ஏஐ போர் விமானத்தை உருவாக்கிய அமெரிக்கா

உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தில் இயங்கக்கூடிய போர் விமானத்தை அமெரிக்காவின் KRATOS Defense & Security Solutions நிறுவனம் உருவாக்கியுள்ளது

X-BAT எனப்படும் இந்த ஃபைட்டர் ஜெட், விமானி இல்லாமல் இயங்கும் தன்மை கொண்டது.

இந்த விமானத்தை இயக்க ரன்வே கூட தேவையில்லை, நிலத்திலிருந்து நேரடியாக புறப்படும் என கூறப்படுகிறது.

www.kathiroli-media.ca

# கோழிகள் மீது கொண்ட அன்பால் சிறை தண்டனை பெறும் நிலைக்கு ஆளான இளம்பெண்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்தவர் ஜோ ரோசன்பெர்க் (23 வயது). இவரது தந்தை கால்நடை மருத்துவர் என்பதால் சுமார் 40 ஏக்கரில் பூனை, நாய் என வளர்ப்பு விலங்குகளுக்கு மத்தியில் வளர்ந்தார்.

கல்லூரியில் பயின்று வரும் ரோசன்பெர்க் Direct Action Everywhere என்ற விலகுங்கள் நல குழுவில் செயல்பட்டு வருகிறார்.

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நள்ளிரவில், ரோசன்பெர்க் மற்றும் அவரது குழுவினர், வட கலிபோர்னியாவில் உள்ள இறைச்சி ஆலைக்குள் தொழிலாளர்கள் போல் வேடமிட்டு நுழைந்தனர். அங்கிருந்த ஒரு லாரியில் அடைக்கப்பட்டிருந்த கோழிகளில் இருந்து நான்கு கோழிகளை எடுத்துச் சென்றனர். குழுவினர் இந்தச் சம்பவத்தை வீடியோவாக எடுத்து வெளியிட்டனர்.

இதன் பின் அவர் மீதும் அவரது குழுவினர் மீதும் புகார் அளிக்கப்பட்டது. இந்த வழக்கில், தான் விலங்குகளைத் திருடவில்லை



என்றும், அவற்றை கொடுமையான சூழ்நிலையிலிருந்து மீட்டதாகவும் ரோசன்பெர்க் வாதிட்டார்.

இந்நிலையில் அத்துமீறி நுழைதல், வாகனத்தை சேதப்படுத்த முயற்சி செய்தல், மற்றும் சதி செய்தல் ஆகிய குற்றச்சாட்டுகளை உறுதி செய்து அவர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தண்டனை விவரங்கள் வரும் டிசம்பர் 3 ஆம் தேதி அறிவிக்கப்பட உள்ளது. இந்த குற்றங்களுக்காக ரோசன்பெர்க்குக்கு ஐந்து வருடங்களுக்கு மேல் சிறைத் தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது.

ரோசன்பெர்க்கின் வழக்கறிஞர்கள், இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

# வர்த்தகப் பிரச்னைகளை தீர்க்க அமெரிக்கா - சீனா இடையே உடன்பாடு

அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்றதில் இருந்து பிற நாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில், சீன பொருட்களுக்கு எதிராக கூடுதல் வரி விதித்தார். இதனால் அமெரிக்கா- சீனா இடையே சலசலப்பு ஏற்பட்டு வந்தது.



இந்த நிலையில், தென்கொரியாவின் புசான் நகரில் அமெரிக்க அதிபர் டிரம்ப்- சீன அதிபர் ஜி ஜின்பிங் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்நிலையில், அமெரிக்காவிடம் சோயாபீன்ஸ், சோளம் போன்ற விவசாய பொருட்களையும், கச்சா எண்ணெயையும் வாங்க சீனா ஒப்புதல் அளித்துள்ளது. அதே சமயம் அரிய பூமி தாதுக்களை அமெரிக்காவுக்கு மீண்டும் ஏற்றுமதி செய்ய சீனா சம்மதம் தெரிவித்துள்ளது.

முன்னதாக முக்கிய வர்த்தகப் பிரச்னைகளைத் தீர்க்க இருநாடுகளும் ஒருமித்த கருத்தை எட்டியுள்ளதாக சீன அதிபர் ஜி ஜின்பிங் கூறியிருந்த நிலையில், சீனா மீதான வரியை 57% லிருந்து 47% ஆக குறைப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்த ஆண்டிற்கான சிறந்த வார்த்தையாக தேர்ந்தெடுக்கப்பட்ட '67' ஏன் தெரியுமா?

Dictionary.com 2025 ஆம் ஆண்டிற்கான சிறந்த வார்த்தையாக ``67'' ஐத் தேர்ந்தெடுத்துள்ளது. 67 என்ற எண்ணை வார்த்தையாக தேர்தெடுத்திருப்பது பலரையும் சிந்திக்க வைத்துள்ளது.

இதற்கு காரணம் 67 என்பது ஒரு எண்ணாக அல்லாமல் குறியீடாக இருப்பதே ஆகும். அண்மை காலங்களாக சமூக வலைத்தளங்களில் கஜென் ஆல்பா சிறுவர் சிறுமிகள் 67 என்ற எண்ணை அதிகம் பதிவிடுகின்றனர்.

2010 and 2024 இடையில் பிறந்தவர்கள் ஜென் ஆல்பா ஆவர். அவர்களுக்கு 67 என்பது உற்சாகத்தை வெளிப்படுத்தும் ஒரு குறியீட்டு வழியாக மாறியுள்ளது. டிக்டாகில் 67 என்ற ஹேஷ்டேக் 2 மில்லியன் பதிவுகளை தாண்டியுள்ளது.

இதன் அர்த்தம் என்னவென்று தெரியாமல் பெற்றோர்களும் ஆசிரியர்களும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர்.

டிரெண்டின் படி, இதை 'அறுபத்தி ஏழு' என்று உச்சரிக்காமல், 'சிக்ஸ்-செவன்' என்றுதான் சொல்ல



வேண்டும்.

67 எப்படி குறியீடாக மாறியது என்பது உறுதியாகத் தெரியவில்லை. இதற்கு ஒரு நிலையான வரையறை இல்லை, அதன் பயன்பாடு சூழலுக்கு சூழல் மாறுபடும் என்று Dictionary.com தெரிவித்துள்ளது.

இதன் பயன்பாடு, அமெரிக்க ராப் பாடகர் ஸ்கிரில்லாவின் 'Doot Doot (6 7)' என்ற பாடலில் இருந்து வந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

பள்ளிகளில் வகுப்பில் சில மாணவர்கள் ஆறு என்று சொல்லும்போது, மற்றவர்கள் ஏழு என்று கத்துகின்றனர். ஆசிரியர்கள் 67 என்ற எண்ணையே மாணவர்கள் உச்சரிக்க தடை விதிக்கும் அளவுக்கு 67 என்பது இளைய தலைமுறையின் குறியீடாக மாறியுள்ளது.

# இந்திய செய்திகள்

## கேரளாவில் 31.34 லட்சம் மகளிருக்கு மாதம் ரூ.1000 வழங்கப்படும் – பினராயி விஜயன் அறிவிப்பு



அடுத்தாண்டு கேரளாவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், முதலமைச்சர் பினராயி விஜயன் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டை தொடர்ந்து கேரளாவிலும் மகளிருக்கு மாதம் ரூ.1000 வழங்கப்படும் என்று முதலமைச்சர் பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.

அரசின் எந்த திட்டத்திலும் பயனாளியாக இல்லாத 35 வயது முதல் 60 வயதுக்குள் உள்ள 31.34 லட்சம் மகளிருக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூ.3800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், பிளஸ்-2, ஐடிஐ, டிப்ளமோ அல்லது பட்டப்படிப்புகளை முடித்த பிறகு, திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் அல்லது போட்டித் தேர்வு பயிற்சியில் கலந்து கொள்ளும் பொருளாதாரத்தில் பின்தங்கிய இளைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு குடும்ப வருமானம் ரூ.1 லட்சத்திற்கும் குறைவாக உள்ள 18 முதல் 30 வயதுடைய இளைஞர்கள் இந்த திட்டத்தில் பலன்பெறலாம். இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் ஐந்து லட்சம் இளைஞர்கள் பயனடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

## அமெரிக்காவில் இருந்து நாடுகடத்தப்பட்ட 2,790 இந்தியர்கள் – மத்திய அரசு தகவல்



இந்த ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்க அதிபராக 2வது முறையாக பதவியேற்றது முதல் சட்டவிரோத குடியேறிகளை நாடு கடத்தும் செயல்முறையில் டிரம்ப் தீவிரம் காட்டி வருகிறார்.

நாடுகடத்தப்படுபவர்கள் கைவிலங்கிடப்பட்டு மோசமாக நடத்தப்படுவது குறித்து பல்வேறு நாடுகள் கவலை தெரிவித்துள்ளன.

இந்நிலையில் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய 2,790 இந்தியர்கள் இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை நாடு கடத்தப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் வாராந்திர செய்தியாளர் சந்திப்பில் பேசுகையில், ‘ இந்த ஆண்டின் ஜனவரி முதல் அக்டோபர் 29 வரை, தகுதிகளைப் பூர்த்தி செய்யாமல் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 2,790க்கும் மேற்பட்ட இந்திய குடிமக்கள் நாடுகடத்தப்பட்டுள்ளனர் ‘ என்று தெரிவித்தார்.

இதேபோல் பிரிட்டனில் இருந்து இந்த ஆண்டு சுமார் 100 இந்தியர்கள் நாடுகடத்தப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

## மோன்தா புயலால் ரூ.5,265 கோடி இழப்பு.. ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தகவல்



மோன்தா புயலின் பாதிப்பால், ஆந்திரப் பிரதேசத்துக்கு குறைந்தது ரூ.5,265 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக, முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

வங்கக் கடலில் உருவான மோன்தா புயல், கடந்த அக்டோபர் 28 ஆம் தேதி இரவு ஆந்திரப் பிரதேசத்தின் காக்கிநாடா அருகில் கரையைக் கடந்தது.

இந்தப் புயலால், ஆந்திராவின் கடலோர மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. புயல் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆய்வு செய்தார்.

இதன்பின் செய்தியாளர்களைச் சந்தித்தஅவர், ஆரம்பகட்ட மதிப்பீடுகளின்படி, மோன்தா புயலால் சாலைகள் மற்றும் கட்டடங்கள் துறைக்கு ரூ. 2,079 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயத் துறைக்கு ரூ.829 கோடியும், மீனவளத் துறைக்கு ரூ.1,270 கோடியும் இழப்பு ஏற்பட்டுள்ளது. மொத்தமாக ரூ.5,265 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

பல மாவட்டங்களில் இன்னும் நெல் பயிர்கள் வெள்ள நீரில் மூழ்கி இருப்பதால், சேதத்தின் முழுமையான இறுதி அறிக்கை விரைவில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படும் என்று அவர் கூறினார்.

எனினும், மேம்பட்ட தொழில்நுட்பத்தின் உதவியுடன் துரித செயல்பாடுகள் மூலம் உயிர் சேதம் பெருமளவு தடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

## பிப்ரவரி 17 முதல் பொதுத்தேர்வு.. 10, 12 ஆம் வகுப்புக்கான தேர்வு அட்டவணையை வெளியிட்ட CBSE

2025-26ம் கல்வியாண்டுக்கான சிபிஎஸ்சி 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளுக்கான கால அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, சிபிஎஸ்இ 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு அடுத்த ஆண்டு பிப்ரவரி 17ம் தேதி முதல் ஜூலை 15ம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 12ஆம் வகுப்புத் தேர்வுகளும் பிப்ரவரி 17 அன்று தொடங்கி ஏப்ரல் 9 வரை நடைபெற உள்ளன.



பெரும்பாலான பாடங்களுக்கு காலை 10.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை தேர்வுகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேர்வு அட்டவணையை cbse.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இந்த தேர்வில் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து சுமார் 45 லட்சம் மாணவர்கள் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிபிஎஸ்இ பாடத்திட்டத்தின்கீழ் நாடு முழுவதிலும் ஆயிரக்கணக்கான பள்ளிகள் மற்றும் வெளிநாடுகளிலும் பள்ளிகள் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



# கனடா பிரதமர் தென் கொரிய நீர்மூழ்கிக் கப்பல் தொழிற்சாலைக்கு விஜயம்



கனடாவின் பிரதமர் மார்க் கார்னி தென் கொரியாவில் நீர்மூழ்கிக் கப்பலக்ள தயாரிக்கும் உற்பத்திசாலைக்கு விஜயம் செய்துள்ளார்.

கனடாவின் அடுத்த தலைமுறை நீர்மூழ்கிக் கப்பல்கள் தயாரிக்கும் ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்ளும் போட்டியில் உள்ள நிறுவனங்களில் ஒன்றான தென் கொரியாவின் ஹன்வா ஓஷன் (Hanwha Ocean) நிறுவனம் தயாரித்த கப்பல் களைப் பார்வையிடும் நோக்கில் அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

தென்கொரியா விஜயம் செய்துள்ளபிரதமர்அங்குபாதுகாப்பு கூட்டணி ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கார்னியுடன் பாதுகாப்புத் துறை அமைச்சர் டேவிட் மெக்ஜின்டி, வைஸ் அட்மிரல் ஆங்கஸ் டாப்ஷி மற்றும் தென் கொரியா பிரதமர் கிம் மின்-சொக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

**கனடிய செய்திகள்**

www.kathirolimedia.ca

# கனடாவில் மோசடி குறுந்தகவல்கள் குறித்து விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

கனடா முழுவதும் மோசடி குறுந்தகவல்கள் எண்ணிக்க அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வங்கிகள், தபால் திணைக்களம் அல்லது வருமான வரித்துறை (CRA) ஆகியவற்றின் பெயரில் வரும் மோசடி குறுந்தகவல்கள் அதிகரித்துள்ளன.

பெரும்பாலானோர் அவை போலியானவை என்று அறிந்திருந்தாலும், பலர் இன்னும் இத்தகைய சதிகளுக்குள் சிக்கி வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.




போமன்வில்லில் (Bowmanville, Ontario) வசிக்கும் கேவின் போரிசிக் சமீபத்தில் ஃபேஸ்புக் மார்க்கெட் பிளேஸில் ஒரு மீன்பிடி கம்பி விற்க முயன்றபோது ஒரு மோசடிக்குள்ளானார். கொள்வனவாளர் என நம்பிய ஒருவர் அவருக்கு 150 டொலர் பணம் அனுப்பியதாகக் கூறி ஒரு e-Transfer இணைப்பை அனுப்பினார். போரிசிக் அந்த இணைப்பை கிளிக் செய்ததும், அவரது வங்கிக் கணக்கில் இருந்து 400 டொலர் மோசடியாக எடுக்கப்பட்டது. அவரிடமிருந்து பணம் வருமென நினைத்தேன், ஆனால் என் கணக்கிலிருந்தே பணம் போய்விட்டது, என அவர் கூறினார்.



கனேடியர்கள் அதிக அளவில் மோசடி அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர் என புதிய சைபர் பாதுகாப்பு ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

தற்போது, போலி செய்திகள் மின்னஞ்சல், குறுந்தகவல் மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக பரவுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


## KATHIROLI ADVERTISMENT RATES

**இந்திய வர்த்தகர்கள் விளம்பரக் கட்டணங்கள்**

Per Edition

**முழுப் பக்கம்:** Rs. 25,000 (INR)

**அரைப் பக்கம்:** Rs. 15,000 (INR)

**கால் பக்கம்:** Rs. 10,000 (INR)

**பேனர்:** Rs. 5,000 (INR)


**அன்பு கதிர் ஒளி வாசகர்களே உங்கள் அனைவருக்கும் மீண்டும் வாழ்த்துக்களை கூறிக் கொண்டு இந்த இதழை உங்களுக்கு சமர்ப்பணம் செய்கிறேன் இதை வாசித்து பயன் அடையுங்கள் உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கும்படி தூண்டுங்கள்.**

# கனடாவில் போதைப் பொருள் குற்றங்கள் அதிகரிப்பு

கனடாவில் போதைப்பொருள் குற்றச்செயல்களில் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

12ஆண்டுகளில்முதன்முறையாக இவ்வாறு போதைப் பொருள் குற்றச் செயல்கள் உயர்ந்துள்ளதாக கனடிய புள்ளிவிபரவத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், இந்த அளவு 2011 ஆம் ஆண்டில் பதிவான போதைப் பொருள் குற்றச் செயல்களை விடவும் 61 சதவீதம் குறைவாகவே காணப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், 2023 முதல்



2024 வரையிலான காலப்பகுதியில் நாடு முழுவதும் போதைப்பொருள் குற்றச்செயல் விகிதம் 13 சதவீதம் உயர்ந்ததாக கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக கஞ்சா, கோகெய்ன் மற்றும் ஹெராயின் தவிர்ந்த பிற ஒப்பியாய்டு வகை போதைப் பொருட்களுடன் தொடர்புடைய கைப்பற்றல் மற்றும் கடத்தல் வழக்குகள் அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், 2024 ஆம் ஆண்டில் 100,000 பேருக்கு 128 வழக்குகள் என்ற அளவில் பதிவான போதைப்பொருள் குற்ற விகிதம், 2011 ஆம் ஆண்டில் பதிவான 330 வழக்குகளிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தே உள்ளது.

இந்த அறிக்கை, கனடாவின் போதைப்பொருள் குற்றங்கள் குறித்து கடந்த ஒரு தசாப்தத்திற்கு பின் வெளிவந்த முக்கியமான மதிப்பீடு எனவும், கஞ்சா சட்டபூர்வமாக்கம் மற்றும் ஒப்பியாய்டு நெருக்கடி போன்ற முக்கிய மாற்றங்களுக்குப் பின்னர் இது வெளிவந்தது எனவும் குறிப்பிடுகிறது.

2018 ஆம் ஆண்டில் கஞ்சா சட்டபூர்வமாக்கப்பட்டதிலிருந்து, போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான பதிவுகளில் ''கணிசமான மாற்றம்'' ஏற்பட்டுள்ளதாகவும் கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.





# Kathir Oli Tamil News Paper

**Editor in chief :Dr. Paulraj Rajapandian, DD**

**Editor : Mr. Hudson Paulraj, MCs**

**Published by: Kathir Oli Media Incorporate**

**Publish Office: Kathir Oli Media Incorporate**

**#723- 35 Shoreham drive, North York, Ontario. M3N1S5 Canada.**

**Published Media: Online paper: www.kathirolimedia.ca**

**Printing Press: Sun Rise Printers, Toronto, Ontario. Canada.**

**Our Contact info: Canada office. 647-473-9698, 437-833-4304 (Editor), kathirolinews@gmail.com, www.kathirolimedia.ca, India office. +91-984-050-0001, kathirolimedia@gmail.com**


**All rights reserved to “Kathir Oli Media Incorporate” Canada, and the Associate editor’s office in Chennai, India for adding and deleting the articles. The writers are only response for their own writings.**

**Confidentiality Notice from the Kathir Oli Media Incorporate, Canada.**

# இலங்கை செய்திகள்

# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளை அம்பலப்படுத்த அரசாங்கம் ஏன் தயங்குகின்றது!

போதைப்பொருள் கடத்தல், வர்த்தகம் மற்றும் பாதாள உலகக் குழு செயற்பாடுகள் போன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பிரபல அரசியல்வாதிகளை அம்பலப்படுத்த அரசாங்கம் ஏன் தயக்கம் காட்டுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசாங்கம் 76 ஆண்டு சாபம் என மக்களிடம் கூறி மக்களை பிழையாக வழிநடத்தியுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கம் கூறிய பொய்களை மூடிமறைத்துக்கொள்ளும் நோக்கில் இவ்வாறு கபட நாடகமாடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

போதை பொருள் வர்த்தகத்துடன் அரசியல்வாதிகளுக்கு நேரடி தொடர்பு இருப்பதாக ஆளும் கட்சியினர் மேடைகளில் கூச்சலிட்டதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறு கூச்சலிட்டவர்கள் ஏன் தற்பொழுது மௌனம் காக்கிறார்கள் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த குற்றச்செயலுடன் தொடர்புடைய பெயர்களை முதலில் அம்பலப்படுத்துமாறு அவர் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார். அரசாங்கம் மக்களை திசை திருப்பும் வகையில் பல்வேறு நாடகக் காட்சிகளை அரங்கேற்றி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

போதைப் பொருளுக்கு எதிரான தேசிய வேலை திட்டத்திலும் இவ்வாறான நாடகங்கள் அரங்கேற்றப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ ஆட்சியிலும் இவ்வாறான நாடகங்கள் அரங்கேற்றப்பட்டதாகவும் அதே விதமான செயற்பாடுகளையா இந்த அரசாங்கமும் முன்னெடுக்கின்றது? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலகக் குழு செயல்பாடுகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளை தாமதம் இன்றி அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என சமிந்த விஜேசிறி கோரிக்கை விடுத்துள்ளார்.

## பொலிஸ் மா அதிபருடனான சந்திப்பை எதிர்பார்க்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து கலந்துரையாட, பொலிஸ் மா அதிபரிடம் (IGP) இருந்து விரைவில் சந்திப்பு நேரம் கிடைக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்பார்ப்பதாக எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தமது பாதுகாப்பு குறித்து கலந்துரையாட பொலிஸ் மா அதிபரைச் சந்திக்கும் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

விரைவில் சந்திப்பு

இதற்கமைய, பொலிஸ் மா அதிபரை நாடாளுமன்றத்திற்கு அழைக்கக் கோரி கடந்த 27ஆம் திகதி சபாநாயகரிடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சபாநாயகர் தற்போது வெளிநாடு சென்றுள்ள நிலையில், அவரது அறிவுறுத்தலின் பேரில் எதிர்க்கட்சியின் இந்தக் கோரிக்கையை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்புவதற்கு சபாநாயகர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க மேலும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து பல விடயங்கள் குறித்து கலந்துரையாட வேண்டிய அவசியம் இருப்பதால், பொலிஸ் மா அதிபருடனான சந்திப்பு விரைவாகக் கிடைக்கும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

## இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான முக்கிய அறிவிப்பு

இலங்கைக்கு வரும் அனைத்து குறுகிய கால சுற்றுலாப் பயணிகளும், 2025 ஒக்டோபர் 15, முதல் மின்னணு பயண அங்கீகாரத்தை (ETA) பெற வேண்டும் என்ற குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் முன்னைய அறிவிப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

2025 ஒக்டோபர் 13 அன்று வெளியிடப்பட்ட முடிவு மறு அறிவிப்பு வரும் வரை ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் திணைக்களம் உறுதிப் படுத்தியுள்ளது.

மேலும் அனைத்து உகூஅ மற்றும் விசா வழங்கும் சேவைகளும் தற்போதுள்ள நடைமுறைகளின் கீழ் தொடர்ந்து செயற்படும்.

எனவே பயணிகள் ஒக்டோபர் 15, 2025 க்கு முன்பு இருந்த அதே செயல்முறையின் கீழ் விசாக்களுக்கு விண்ணப்பிக்கலாம் என குடிவரவு குடியகழ்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

## வெளிநாடுகளில் பதுங்கியுள்ள பாதாளக் குழுவினருக்கு வலை! 82 பேருக்கு சிவப்பு பிடியாணை




வெளிநாடுகளில் பதுங்கியுள்ள பாதாளஉலகக்குழுஉறுப்பினர்களை நாட்டுக்கு கொண்டு வந்து, சட்டத்தின் முன் நிறுத்துவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், '216 பேருக்குஎதிராகசிவப்புபிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் முன்னெடுக்கப்பட்டது போல்

இவர்கள் அனைவரும் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் அல்லர். சுமார் 82 பேரே பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடையவர்கள். பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களில் 17 பேர் இதுவரையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களில் அதிகளவானோர் டுபாயிலேயே இருக்கின்றனர். சிலர் வெளிநாட்டு சிறைகளில் உள்ளனர். இவர்களைக் கொண்டு வருவதற்குரிய இராஜதந்திர நடவடிக்கையும் இடம்பெறுகின்றது.

இந்தோனேசியாவில் முன்னெடுக்கப்பட்டது போல் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் இடம்பெறும்.

இந்தநாட்டில்குற்றச்செயல்களில் ஈடுபட்டு விட்டு வெளிநாடுகளில் பதுங்கி வாழ்வதற்கு இடமளிக்க மாட்டோம். அவர்கள் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். இதற்கு நீதி அமைச்சின் ஒத்துழைப்பும் கிடைக்கப் பெற்று வருகின்றது.' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

www.kathiroli-media.ca

This invitation publicity it's the God's True Call and Choice Make Sure. Come soon and Learn the Truth. Go fast Preach the True Gospel and make Disciples and Teach

Reg 108/9-10

TRUE WISDOM BIBLE COLLEGE

Accredited by IATA

Yelahanka New Town, Bangalore-64. Mob: 97 41 66 22 22

Applications are invited from Born again Christians who are the 'People Chosen by God, a Royal Priesthood, a Holy Nation, a People Belonging to God, that you may declare the praises of Him who called you out of darkness into His wonderful light. Young men and women who want to undergo Biblical Training to prepare themselves for our Masters Service may apply.

2Tim 2:15 - Study to shew thyself approved unto God, a workman that needeth not to be ashamed, rightly dividing the word of truth.
Eph 4:12 - For the perfecting of the saints, for the work of the ministry, for the edifying of the body of Christ.
2Tim 3:17 - that the man of God may be complete, thoroughly equipped for every good work.

- The College is Accredited by IATA
- Admission are in Progress. Classes begin in the 1st Week June 2025.
- Well qualified professors.
- Seats are limited. Application will be selected on a 'first come, first served' basis.
- We are offering the following Bible-based courses through True Wisdom Bible College.

COURESE OFFERED

| SN | Courses | Duration | Qualification Required | Medium |
|---|---|---|---|---|
| 1 | Diploma in Theology | 1 Year | SSLC | English & Kannada |
| 2 | Bachelor of Theology | 3 Year | D.Th / PUC 2 nd year pass & Pastors those who are in ministry | English & Kannada |
| 3 | Master of Divinity | 2 Year | B.A. / B.Com / B.Th / B.D / 1 Yr Exp. | English & Kannada |
| 4 | Master of Theology | 2 Year | M.Div. / 5 Years Exp | English & Kannada |

Note: Daily Classes Monday to Friday 9am to 1pm

We also Offer D.TH, B.Th, M.Div & M.Th Classes Every Saturday Morning 10am to 5pm Compulsory

PLEASE CONTACT. ADMISSIONS OPEN FOR THE ACADEMIC YEAR 2025-26. WANTED COMMITTED STUDENTS & PLEASE PRAY & SHARE THIS BROCHURE IN CHRISTIAN GROUPS

Yelahanka New Town, Bangalore-560064

Call & WhatsApp Mob: 9741662222 E-mail: royalkingsgowda@gmail.com





## மாதிரி மற்றும் சாயல் கிறிஸ்துவே பொருள்

ஆதியிலே தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கான ஆராதனை பலிகள் மற்றும் கட்டளைகளை தெய்வீக நோக்கத்தோடு திட்டம் பண்ணி வைத்திருந்தார். அவைகள் நோக்கம் ஏதும் இல்லாத பண்டிகைகள் அல்ல, ஆனால் ஒரு உன்னதமான நோக்கத்திற்கு முன் அடையாளமாக கொண்டுவரப்பட்டவைகள்.

பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள சில பண்டிகை ஆசரிப்புகள், நிகழ்வுகள், ஜனங்கள் யாவும் கிறிஸ்துவை முன் குறித்து, சுட்டிக்காட்டப்பட்ட நிழலாட்டமான காரியங்களே இவைகளையே மாதிரிகள் எனலாம். புதிய ஏற்பாட்டின் ஆவிக்குரிய உண்மைக்கு நிழலாக முன்பதாகவே செய்யப்பட்ட செயல்பாடுகள் அவைகள் எபி 10 : 1 கூறுகையில் அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது. கொலோ 2 : 17.

நிழலாக கொடுக்கப்பட்டவைகள் குழப்பத்திற்கானவைகள் அல்ல, ஆனால் போதிக்கப்பட வேண்டியவை ஒவ்வொரு காணிக்கையிலும், சடங்காச்சாரங்களிலும், பலியிடும் இடத்திலும் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு பரிசுத்தத்தையும், தியாகத்தையும் அவரை அணுகும் முறைகளையும் கற்றுக் கொடுத்திருக்கிறார். திரும்பத் திரும்ப பழி செலுத்துதல் பரிசுத்த ஆசாரித்துவம், பிரித்தெடுக்கப்பட்ட பரிசுத்த ஸ்தலம், இவை யாவும் கிறிஸ்துவில் நாம் காணும் பரிபூரணத்தையே சுட்டிக் காட்டுகிறது. இவை யாவும் மேசியாவுக்காக அநேக இருதயங்களை கறை திரை முதலானவைகள் ஏதுமின்றி தயார்படுத்தும் விதமாக சீர்செய்யப் படுவதற்கு பயிற்றுவிப்பாளராய் இருந்தது. பழைய ஏற்பாட்டின் உருவங்கள், சாயலும் நிழலுமானவைகள் உண்மையான நிறைவேறுதல் புதிய ஏற்பாட்டில் பூரணமாகிறது அதுவே பொருள். நியாயப்பிரமாணத்தின் கீழ் பொருட்களாகவும் சரித்திரமாகவும் பார்க்கப்பட்டவைகள் ஒவ்வொன்றும் உண்மையில் ஆவிக்குரிய மற்றும் நித்தியமாக கிறிஸ்துவில் பூரணமாயிற்று.

தேவன் அருளிய அடையாளங்கள் மற்றும் கட்டளைகளின் வழியாகவே பூரணம் மீட்பு என்பது முன்னோட்டமாக இருந்தது. பின்பு கிறிஸ்துவின் வழியாக அது நிறைவேறும்போது, ஜனங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சகரை கண்டறிந்து கொண்டனர்.



சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், (யோவான் 3 : 14).

வேதம் நமக்கு தெளிவாக விவரிக்கிறது ஆதாம், முதல் மனுஷன் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன் (ரோம 5 : 14) அவன் கிறிஸ்துவின் மாதிரி கடைசி ஆதாம் ஜீவனை கொண்டு வந்தவர். முதலாம் ஆதாமோ மரணத்தை கொண்டு வந்தவர். ஒரே மனுஷனுடைய மீறுதலினாலே மனுக்குலத்தின் மீது பாவம் வந்தது. கிறிஸ்துவோ ஜெயம் பெற்று நீதியினாலே நித்திய ஜீவனையும், நம்பிக்கையும் கொண்டு வந்தார். பஸ்கா ஆட்டுக்குட்டி என்பது நாம் நன்றாக அறிந்த ஒரு முன்மாதிரி எகிப்திலே வீட்டின் நிலைக்கால்களில் பூசப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தம் சங்காரதூதனிடம் இருந்து இஸ்ரவேல் ஜனங்களை காப்பாற்றியது.

புதிய ஏற்பாட்டில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காய் பலியிடப்பட்டிருக்கிறாரே (1 கொரி 5 : 7) ஆட்டுக்குட்டி என்பது ஒரு நிழல். கிறிஸ்துவே பொருள், அவருடைய இரத்தமே மரணத்தினின்று நம்மை மீட்டு இரட்சிக்கும்.
வெண்கலத்தினால் செய்யப்பட்ட சர்ப்பம், வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டது ஒரு மாதிரி உருவம். சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டவன் உயர்த்தப்பட்ட இந்த சர்ப்பத்தை நோக்கி பார்க்கும்போது பிழைப்பான். சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், யோவான் 3 : 14. விசுவாசத்தோடு, அதை நோக்கி பார்த்தவன் பிழைத்ததை போல, கிறிஸ்துவை விசுவாசிக் கிறவர்கள் நித்திய ஜீவனுக்கு பாத்திரவான்

ஆசரிப்புக் கூடாரத்தில் அமையப்பெற்ற மர வேலைகளும், சித்திர வேலைகளும் இன்னும் ஓர் மாதிரியான உருவம். எபி 8 : 5 கூறுகிறது. பரலோகத்தில் உள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது. பலிபீடம், மகா பரிசுத்த ஸ்தலம் என ஒவ்வொன்றும் கிறிஸ்து மற்றும் அவருடைய இரட்சிப்பின் உன்னத திட்டத்திற்கு நிழலாட்டமான காரியங்கள் தேவ பிரசன்னத்திற்கான வழி திறக்கப்படவில்லை. ஆனால் திரைசிலை இரண்டாகப் பிளந்து, தேவனோடு உள்ள உறவை சீர் செய்தது. ஆசாரியத்துவம் என்பது ஒரு முன்னோட்டமான மாதிரி அது கிறிஸ்துவின் நித்திய ஊழியத்தை சுட்டிக்காட்டுகிறது. நமக்கு முன்னோடியானவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார் எபி 6 : 20.
எல்லா மனுஷரின் பாவத்திற்காகவும் ஒரே தரம் மரித்து தேவனோடு உள்ள உறவை சீர்படுத்தினார். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில்,



அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே. 1 கொரி 10 : 4. தண்ணீரின் குணாதிசயம் மாறாமல் நிலைத்திருப்பது போல கிறிஸ்துவானவர் தம்மை உண்மையாய் விசுவாசிக்கிற யாவருக்கும் ஆவிக்குரிய ஜீவத்தண்ணீரை அளிக்க வல்லவராய் இருக்கிறார்.

பழைய ஏற்பாட்டு வழிமுறைகள் யாவும் தற்காலிகமானது அந்த நியாய பிரமாணத்தின் கீழ் இருந்தவர்களால் சீர் செய்யப்பட முடியாத, ஆனால் வரப்போகிற காரியங்களுக்கு அதாவது கிறிஸ்துவின் வருகைக்கு நிழலாய் மாத்திரம் இருந்தது.
இஸ்ரவேல் தேசத்தின் வரலாறு நமக்கு அநேக பாடங்களை சுட்டிக்காட்டுகிறது. பாவ அடிமைத்தனத்தை எகிப்து சுட்டிக்காட்டுகிறது. மீட்பராகிய கிறிஸ்துவை போல அன்று மோசே மாதிரியாக காணப்பட்டார். ஆவிக்குரிய வாழ்வின் ஜெயம் மற்றும் சுதந்திரத்தை காட்டும் வண்ணமாக, கானான் தேசமானது நிழலாட்டமாய் கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும்,எபி 9 : 11 சொல்கிறது நிழலானது பொருளாய் மாத்திரம் இருந்தது. ஆனால் அதன் மாதிரி வரப்போகிற உண்மைக்கு வழி வகுத்தது. இவைகள் வேதத்தின் ஒருமைப்பாட்டையும் தேவனுடைய ஞானமுள்ள திட்டத்தையும் வெளிப்படுத்துகிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் என்பது தனி தனி பாகங்கள் அல்ல ஆனால் ஆதி முதல் அந்த முறையிலான ஒரே தெய்வீக வெளிப்பாடு. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு உருவங்களின் மூலம் வெளிப்படுத்தினவைகள் யாவும் இயேசு கிறிஸ்துவின் வழியாக பூரணம் ஆயிற்று. மாதிரி மற்றும் நிழல்களின் வாயிலாக தேவன் தம்முடைய இரட்சிப்பின் வழியை எவ்வளவு அழகாக வாக்குத்தத்தங்களோடு தம்முடைய குமாரராகிய கிறிஸ்துவில் நிறைவாக்கினார். பண்டிகைகள் மற்றும் உருவங்களில் மறைந்திருந்த உண்மையான கருப்பொருளானது சுவிசேஷங்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. வேதத்தின் தெய்வீக அதிகாரத்தை புரிந்து கொள்ள முடிகிறது. நிழல் என்பது தற்காலிகமானது, அதன் பொருள் நித்தியமானது கிறிஸ்துவில் ஒவ்வொரு நிழலும் உருவம் பூரணமாயிற்று. அவரே பரிசுத்த ஆட்டுக்குட்டி நித்திய பிரதான ஆசாரியன் ஜீவனுள்ள ஆசரிப்பு கூடாரம். அவராலே பாவமன்னிக்கப் படுதலும், உள்ளான பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுதலும், தேவனோடு உள்ள உறவை வலுப்படுத்தவும் கிறிஸ்துவின் வழியாக நாம் பிரவேசிக்க முடியும். இதுவே மகிமையான உண்மை. முன்பு நிழலாய் இருந்தது பின்பு இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்டது. ■

கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-

ஆயர். W.S.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227, சர்ச் தெரு,
கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107

## வேதாகமம், நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3:16-17; 2 பேது 1:20-21;
மத் 24:35
**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23,
1 யோவா 4:7-11
**மனந்திரும்புதல் :**
அப் 3:19; 17:30; 2 கொரி 7:10
**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4,
எபே 2 :1, 5-6
**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11
**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2
**பரிசுத்தம் :**
லூக் 1:73-75; எபி 12:14; 1 பேது 1:15-16;
தீத்து 2: 11-12; ரோம 6:22
**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.
**சபை**- அப் 2:47; எபே 4:4-6;
1 கொரி 12 :12-13; கொலோ 1:18
**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3:28;
வெளி 18:2-4
**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30;
1 கொரி 11 :23-27; யோவா 13:14-17
**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16
**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3;
1 கொரி 7:10, 11
**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2:9-10; 1 கொரி 11 :14-15;
உபா 22 :5
**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 :28,29;
2 கொரி 5 :10; மத் 25 :31-46
**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4: 23,24; எபே 5 :19;
2 கொரி 3 :17
**சுவிசேசம் அறிவித்தல்**
மாற் 16:15

2


# Dear Brothers n Sisters
Daily Verses
(FREE - FREE - FREE)
Daily Verses (PAID)
old b/w photo to colour restoration
Digital Invitation, logo design, logo animation, title animation, video editing, youtube - thumbnails, meeting posters, web design
magazine (tamil)
english tamil translation
proof reading
Pls introduce any of ur well known pastors and churches.
**9944796286**


## பாடல்: இயேசு ராஜா இன்று பிறந்தார்
## ராகம்: இயேசுராஜா முன்னே செல்கிறார்

இயற்றியவர் : புலவர் W.S. வேதா

இயேசுராஜா இன்று பிறந்தார்
மாட்டுத் தொழுவத்திலே
ஏழை கோலமதில்
பிறந்தார் தவழ்ந்தார்
மரியன்னை மடியினிலே
மனு உருவாகி உலகினிலே

1.இருள் சூழ்ந்த நேரத்திலே- நல்ல
இடையர்கள் கூட்டத்திலே
தேவதூதர் தோன்றிப்பாடி
செய்தி கூறினரே
மகிழ்வோம் புகழ்வோம்
புண்ணியர் நாமமதை
தினம் தொழுதே வணங்கிடுவோம்
-இயேசு

2.பெத்தலை நகரினிலே –அங்கு
சத்திர முன்னணையில்
கந்தைத் துணியில் கர்த்தர் இயேசு
பிறந்த கோலமதோ
நல்லவர் வல்லவர்
புனிதரின் நாமமதை
நாம் புகழ்ந்தே தொழுதிடுவோம்
-இயேசு

3.ஞானிகள் புடைசூழ வந்து
நாதரை வணங்கி நின்றார்
பொன்னும் வெள்ளி போளமதனை
படைத்து வணங்கி சென்றார்
ஆடுவோம் பாடுவோம்
ஆனந்த கீதமுடன்
அவர் பாதம் வணங்கிடுவோம்
-இயேசு

## பாடல் : நேசர் இயேசு திரு நாமத்திற்கு
## ராகம் : இயேசு என்ற திருநாமத்திற்கு

நேசர் இயேசு திருநாமத்திற்கு
நித்தியமான துதி ஸ்தோத்திரம்

1.வானவர் தோன்றினார்
மாட்டுத் தொழுவிலே
மன்னர் இயேசு எனும் நாமமுடன்
நாமும் நன்றியுடன் துதி சாற்றிடுவோம் – 2
(நேசர்)

2.பெத்தலை ஓரம் ஓர் சத்திரம் மீதிலே
காவிய நாயகர் கந்தையிலே
ஏழை கோலமதில் சிறு சீலையிலே – 2
(நேசர்)

3.ஏதேனின் பாவத்தைத்
தீர்த்திட வந்தவர்
எல்லையில்லா மகிழ் என்னுள்ளிலே
கன்னி மரியன்னை மடி மீதினிலே – 2
(நேசர்)



## போதகரின் அவசரம்
## Pastor's Emergency

**ஜெட் விமானம்** ஒன்றில் **விமானி, பள்ளி மாணவன்** ஒருவன் மற்றும் ஒரு **போதகர்** என மூவரும் பயணித்துக் கொண்டிருந்தார்கள். நடுவானில் **என்ஜின்** கோளாறு காரணமாக விமானம் பழுதடைந்து போனது. உடனே விமானி நிலைமையை மற்ற இரண்டு பேரிடமும் எடுத்துக் கூறினார். மேலும் விமானத்தில் இரண்டு **பாராசூட்** மாத்திரமே உள்ளது. ஆனால் இங்கு நாம் மூன்று பேர் இருக்கிறோமே என சொல்லும்போதே போதகர் வேகமாக ஒன்றை எடுத்துக் கொண்டு விமானத்திலிருந்து கீழே குதித்தார். 'பரவாயில்லை தம்பி இன்னொரு பாராசூட் உள்ளதே. அதை எடுத்து நீ உயிர் பிழைத்துக்கொள். அதற்கு மாணவன், 'இல்லை ஐயா, நாம் இருவருமே உயிர் பிழைத்துக் கொள்ளலாம்' என்றான். 'அது எப்படி கூடும் ? நம்மிடம் ஒரு பாராசூட் தானே உள்ளது.' என்றார். , 'போதகர் குதிக்கிற வேகத்தில் பாராசூட்டை விட்டுவிட்டு, என் School Bag ஐ தூக்கிக்கொண்டு அவசரமாய் கீழே குதித்து விட்டார். ஆகவே நம்ம ரெண்டு பேருக்கும் **பாராசூட்** உள்ளது' என கூறினான்.

## வேதவினா -4 BIBLE QUIZ - 4
நடுவர் : சகோதரி. மிஸ்பா ராபின்

1. ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது எது?
2. கர்த்தர் வெறுமையாய் திரும்பி வரப்பண்ணினது யாரை?
3. எந்தக் கூட்டம் வெறுமையாய் போம்?
4. களஞ்சியம் வெறுமையாயிருப்பது எங்கே?
5. வெறுமையாய்த் திரும்பாமல் விரும்புகிறதைச் செய்வது எது?
6. .......... அனுப்பி விட்டார்.
7. யார் யாரிடம் கூறியது?
நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பி விட்டிருப்பீர்.
8. எதை வெறுமையாய் அனுப்பாமல் குற்ற நிவாரண காணிக்கையைச் செலுத்த வேண்டும்?
9. யார் வெறுமையாக்கப்பட்டு தரையிலே உட்காருவாள்?
10. யாருடைய பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை?

### சரியான விடை எழுதியவர்கள்
சகோதரி.**ரூத் ஜெயராணி**, தூத்துக்குடி
சகோதரி.**வச்சிரம்**, சங்தோஷபுரம்
சகோதரி.**ஏஞ்சல்**, பழங்குளம்
சகோதரி.**பாகிரதி கிரிதரன்**, தண்டுபத்து
சகோதரி.**செல்லமணி அல்பர்ட்**, மூக்குப்பீறி
சகோதரி.**டோரின் டேனியல்**, புளிப்புனம்
சகோதரி.**கிரேஸ் எபனேசர்**, வள்ளியூர்
சகோ.**பென்னி**, ஈரோடு
சகோதரி.**ஞானமணி**, பழங்குளம்
சகோதரி.**எஸ்தர்பாய்** , அருவிக்கரை
சகோதரி.**பியூலா ஜேசுராஜன்**, புதுச்சேரி
சகோதரி.**அமுதா**, கோவில்பட்டி
சகோதரி.**விமலா சாலமோன்**, மருதகுளம்
சகோதரி.**ஜெபா நியூட்டன்**, நெல்லை
சகோதரி.**சீலி ஜேக்கப்**, வேப்பலோடை
சகோதரி.**பவுலின் மார்டின்**, காரைக்குடி
சகோதரி.**அன்புக்கமலம்**, காரைக்குடி
சகோதரி.**ராஜி ராமச்சந்திரன்**, வாலாஜா
சகோதரி.**பொன்ராணி அன்புநாதன்**, தென்கரை
சகோதரி.**சாந்தகுமாரி**, நாசரேத்
சகோதரி.**மெர்சி ஜெயசிங்**, நாசரேத்
சகோதரி.**ரெஜினா தாமஸ்**, நாசரேத்
சகோதரி.**கெத்சி செல்வின்**, சென்னை
சகோதரி.**ரெத்னாவதி முத்துராஜ்**, சாத்தான்குளம்
சகோதரி.**ராணி செல்வராஜ்**, நாசரேத்

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :
**திருமதி.V.செல்வம் வேதா**
**அஞ்சல் பெட்டி-54,**
**பொள்ளாச்சி-642 001.**

### போட்டி 3 - சரியான விடைகள்

| | |
|---|---|
| 1. யாத் 32 : 15 | 6. தானி 1 : 3 |
| 2. யாத் 39 : 30 | 7. தானி 5 : 24 |
| 3. லேவி 19 : 28 | 8. லூக் 1 : 59 |
| 4. எஸ்றா 4 : 7 | 9. யோவா 7 : 14 |
| 5. யோபு 19 : 24 | 10. 2 கொரி 3 : 6 |

### பரிசு பெறுபவர்கள்
முதல் பரிசு ரூ.**500** பெறுபவர்
சகோ.**பென்னி**, ஈரோடு
2ம் பரிசு ரூ.**300** பெறுபவர்
சகோதரி.**டோரின் டேனியல்**, புளிப்புனம்
3ம் பரிசு ரூ.**200** பெறுபவர்
சகோதரி.**விமலா சாலமோன்**, மருதகுளம்

சகோதரி.**எபனேசர்**, திருத்தங்கல்
சகோதரி.**ஜேன் தர்மராஜ்**, மருதகுளம்
சகோதரி.**ரூபவல்யா**, நாசரேத்

### கலந்து கொண்டவர்கள்
சகோதரி.**டோரா**, மூக்குப்பீறி
சகோதரி.**இமாக்குலேட் விக்டர்**, அந்தியூர்
சகோதரி.**ரோஸ்லின் தாமஸ்**, சென்னை

# தமிழில் தொடர்ச்சியாக நடிக்க மறுப்பது ஏன்? – நடிகை அஞ்சு குரியன் சொன்ன பதில்



'நேரம்', 'சென்னை டு சிங்கப்பூர்', 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'ஓஹோ எந்தன் பேபி' போன்ற படங்களில் நடித்த அஞ்சு குரியன், மலையாளம் மற்றும் தெலுங்கு மொழிகளிலும் படங்கள் நடித்து வருகிறார்.அவ்வப்போது சமூக வலைதளங்களில் தனது கவர்ச்சி படங்களை வெளியிட்டும் ரசிகர்களைக் குஷிப்படுத்தி வருகிறார். அஞ்சு குரியன் நடிப்பில் விரைவில் 'அதர்ஸ்' என்ற தமிழ் படம் அடுத்த வாரம் வெளியாகிறது.

இதற்கிடையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட அஞ்சு குரியனிடம், 'தமிழில் தொடர்ச்சியாக நடிக்க மறுப்பது ஏன்?', என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில், ''தமிழ் சினிமாவில் நடிக்க யாருக்குத்தான் பிடிக்காது. எனக்கு மிகுதியாக அந்த ஆசை உண்டு.

தகுந்த கதைக்காக காத்திருந்தேன். அது நடந்தது. இனி தமிழில் தொடர்ச்சியாக நடிக்க திட்டமிட்டுள்ளேன். ரசிகர்கள் என்மீது கொண்ட அன்புக்கு நன்றிக்கடன் பட்டுள்ளேன்'', என்றார்.

# 'கருப்பு' படத்தின் ரிலீஸ் எப்போது.. வெளியான தகவல்

தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் சூர்யா. இவர் ஆர்.ஜே.பாலாஜி இயக்கத்தில் டிரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிப்பில் 'கருப்பு' படத்தில் நடித்துள்ளார். இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளார். கதாநாயகியாக திரிஷா நடித்துள்ளார்.

மேலும், சுவாசிகா, இந்திரன்ஸ், யோகி பாபு, ஷிவாதா, சுப்ரீத் ரெட்டி, அனகா மாயா ரவி மற்றும் நட்டி நட்ராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்து, பின்னணி வேலைகள் விறுவிறுப்பாக நடைபெற்று, ரிலீசுக்கு தயாராகி வருகிறது.

இதற்கிடையில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 'கருப்பு' படத்திலிருந்து முதல் பாடலான காட் மோட் (God Mode) என்ற பாடல் வெளியாகி வைரலானது.



இந்த நிலையில், கருப்பு படத்தின் ரிலீஸ் குறித்த தகவல் கிடைத்துள்ளது. அதன்படி, கருப்பு படம் அடுத்த ஆண்டு (2026) ஜனவரி மாதம் 23ந் தேதி சுதந்திர தின விடுமுறைகளை முன்னிட்டு வெளியாகும் என்ற தகவல் கிடைத்துள்ளது. இந்த தகவல் சூர்யா ரசிகர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கவினின் ''கிஸ்'' திரைப்படத்தின் ஓடிடி ரிலீஸ் தேதி அறிவிப்பு



சதிஷ் இயக்கத்தில் கவின், பிரீத்தி அஸ்ரானி நடிப்பில் உருவான 'கிஸ்' திரைப்படம் வரும் நவம்பர் 7ம் தேதி ஜீ5 தளத்தில் வெளியாகவுள்ளது.

தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் ஹீரோக்களில் ஒருவர் கவின். இவர் 'நட்புன்னா என்னானு தெரியுமா', 'லிப்ட்', 'டாடா' உள்ளிட்ட படங்களில் நடித்து மக்கள் மத்தியில் பிரபலமானவர். இவரது நடிப்பில் கிஸ் என்ற படம் சமீபத்தில் வெளியானது. இந்த படத்தினை அறிமுக இயக்குனர் சதீஷ் இயக்கியுள்ளார். இந்த படத்தில் கவினுக்கு ஜோடியாக 'அயோத்தி' படத்தின் மூலம் பிரபலமடைந்த நடிகை பிரீத்தி அஸ்ரானி நடித்துள்ளார். மேலும் மிர்ச்சி விஜய், விடிவி கணேஷ், ராவ் ரமேஷ், தேவயானி என பலரும் நடித்திருந்தனர். ரோமியோ பிக்சர்ஸ் ராகுல் தயாரித்த இப்படம் தமிழ், தெலுங்கு , இந்தி உள்ளிட்ட மொழிகளில் வெளியானது.

பேண்டஸி ரொமான்டிக் காமெடி கதைக்களத்தில் உருவான இந்த படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில் சதிஷ் இயக்கத்தில் கவின், பிரீத்தி அஸ்ரானி நடிப்பில் உருவான 'கிஸ்' திரைப்படம் வரும் நவம்பர் 7ம் தேதி ஜீ5 தளத்தில் வெளியாக உள்ளதாக ஜீ5 ஓடிடி தளம் வீடியோ வெளியிட்டு அறிவித்துள்ளது.




Paul Healthy Life Clinic
HOMEOPATHY & ACUPUNCTURE

Paul Joseph, B.H.M.S.(India), R.Ac., R.Hom(Canada)
(Bachelor of Homeopathic Medicine and Surgery)

1193 Brimley Road, Scarborough, Ontario M1P 3G5
Tel: 416 438 3939 Cell: 416 986 4903
e-mail:jp123canada@gmail.com

- Qualified from Tamil Nadu Dr. M.G.R. Medical University, Madras, India.
- Registered Acupuncturist (Canada)
- Former Professor - Homeopathy Medical Colleges, Dr. M. G. R. Medical University, India
- Head of Department - Homeopathy & Acupuncture, Shanmuga Medical Research Foundation, India
- Twenty five years of experience in the field of medicine
- Specialist in Homeopathy Medicine, Acupuncture, Pulse Diagnosis, Acupressure, Scientific Meditation, Yoga and Counselling

Treatment for all chronic diseases


1193 Brimley Road, Scarborough, Ontario M1P 3G5
Tel: 416 438 3939 Cell: 416 986 4903
e-mail:jp123canada@gmail.com


# 'வாய்ப்பு கிடைத்தால் அவர்களுடன் நடிக்க விரும்புகிறேன்' – நடிகை தன்யா

ஏழாம் அறிவு, காதலில் சொதப்புவது எப்படி, ராஜா ராணி உள்ளிட்ட பல படங்களில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த நடிகை தன்யா பாலகிருஷ்ணா. மேலும் இவர் தெலுங்கு மற்றும் மலையாளத்திலும் பல படங்களில் நடித்துள்ளார்.



இந்நிலையில், அவர் இன்ஸ்டாகிராமில் ரசிகர்களுடன் உரையாடினார். அப்போது, ரசிகர்கள் கேட்ட பல கேள்விகளுக்கு அவர் சுவாரசியமான பதில்களை அளித்தார். அந்த பதில்கள் இப்போது வைரலாகி வருகின்றன.

அதன்படி, சூர்யா, பவன் கல்யாண் மற்றும் ரன்பீர் கபூர் ஆகியோர் தனக்கு பிடித்த நடிகர்கள் என்றும், வாய்ப்பு கிடைத்தால் அவர்களுடன் நடிக்க விரும்புவதாகவும் கூறினார். இவர் ஏற்கனவே ஏழாம் அறிவு படத்தில் சூர்யாவுடன் நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தன்யா தற்போது நடித்திருக்கும் படம் கிருஷ்ணா லீலா. தேவன் இயக்கி நடித்திருக்கும் இப்படம் வருகிற நவம்பர் 7-ம் தேதி வெளியாக உள்ளது. இப்படத்தில் வினோத் குமார், பிரித்வி (பெல்வி), ரவி காலே, துளசி, 7 ஆர்ட் சரயு, ஆனந்த் பரத் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்திருக்கின்றனர். பீம்ஸ் சிசரோலியோ இந்தப் படத்திற்கு இசையமைத்திருக்கிறார்.

# 3 நாட்கள் கண் மூடி கிடந்த ரஜினி!

மதுரை விமான நிலையத்தில் ரஜினி தகராறு செய்த சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பரவி பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. விமானத்துக்குள் ஏற்றப்பட்ட பிறகும் ரஜினியை கட்டுப்படுத்துவது நடிகர்-நடிகைகளுக்கு மிகவும் சவாலாக இருந்தது. ரஜினி ஒருவித பதட்டத்துடன் இருப்பதை கண்டு நடிகர்கள் வித்தியாசமாகப் பார்த்தனர்.

சிறிது நேரம் ரஜினி அமைதியாக இருப்பார். எங்கேயோ பார்த்துக் கொண்டு எதையோ சிந்தித்துக் கொண்டே இருப்பார். அவர் என்ன சிந்திக்கிறார் என்பது யாருக்கும் தெரியாது. அடுத்த சில நிமிடங்களில் ஆக்ரோஷம் வந்தது போல சத்தம் போட ஆரம்பித்து விடுவார்.

இதனால் ரஜினி அருகில் செல்ல நடிகர்-நடிகைகள் அனைவரும் பயப்பட்டனர். அந்த சமயத்தில் நம்பியார் மட்டும் துணிச்சலாக முன் வந்து ரஜினியை அழைத்து தனது பக்கத்து இருக்கையில் உட்கார வைத்துக் கொண்டார். சபரிமலைக்கு அழைத்துச் சென்ற குருசாமி என்பதால் ரஜினி அவர் அருகில் அமர்ந்ததும் அமைதியானார்.

அதன் பிறகு சென்னை வரும் வரை ரஜினி எந்த தொந்தரவும் யாருக்கும் செய்யவில்லை. சென்னையில் விமானம் தரை இறங்கியதும் நடிகர்-நடிகைகள் யாரும் அவரை அப்படியே விட்டு விட்டுச் சென்று விடவில்லை. மருத்துவமனையில் ரஜினியை அனுமதிக்க முடிவு செய்தனர்.

நடிகர் சங்கத்தில் முக்கிய பொறுப்பு வகித்த மேஜர் சுந்தரராஜன், நம்பியார், பாலாஜி, நாகேஷ் ஆகிய 4 பேரும் கூடி ஆலோசனை செய்தனர். விமான நிலையத்தில் இருந்து தங்களது காரில் வடபழனியில் உள்ள விஜயா நர்சிங் ஹோம் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல தீர்மானித்தனர்.

அதன்படி ரஜினி நேரடியாக விஜயா நர்சிங் ஹோமுக்கு



அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவரை டாக்டர் செரியன் தலைமையிலான டாக்டர்கள் குழு பரிசோதனை செய்தது. பல்வேறு மருத்துவ சோதனைகள் நடத்தப்பட்டன. பிறகு ரஜினிக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை டாக்டர்கள் விளக்கி கூறினார்கள். 'மேனியாக் டிப்ரெசிவ் சைக்கோசிஸ்' என்று அழைக்கப்படும் மிகப்பெரிய நரம்பு தளர்ச்சி நோயால் ரஜினி பாதிக்கப்பட்டு இருப்பதாக டாக்டர்கள் கூறினார்கள்.

ஓய்வு எடுக்காமல், தூக்கமே இல்லாமல் வேலை செய்பவர்களுக்கு இத்தகைய நரம்பு தளர்ச்சி ஏற்படும். இதனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது தெரியாமலேயே நடந்துக் கொள்ளச் செய்துவிடும் என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர். இதை கேட்டதும் மேஜர் சுந்தரராஜன், நம்பியார், பாலாஜி, நாகேஷ் ஆகிய 4 பேரும் அதிர்ச்சி அடைந்தனர். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். அதற்கு டாக்டர்கள், 'நல்ல வேளை சரியான நேரத்தில் இவரை அழைத்து வந்தீர்கள். இன்னும் 10 நாட்கள் நீங்கள் இவரை இப்படியே வைத்து இருந்தால் மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டு இருக்கும்.

அவர் 72 மணி நேரம் (3 நாட்கள்) மருத்துவமனையில் படுக்கையில் தூங்க வேண்டும். 3 நாட்கள் அவர் தூங்கி எழுந்தால்தான் அவருக்கு அடுத்தக் கட்ட சிகிச்சையை நாங்கள் தொடர முடியும்' என்றனர். அதற்கு நடிகர்கள் 4 பேரும் சம்மதித்து சிகிச்சையை தொடருமாறு தெரிவித்தனர்.

இதற்கிடையே ரஜினி உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தகவல் பெங்களூரில் உள்ள அவரது சகோதரர் சத்திய நாராயணா மற்றும் நண்பர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அவர்கள் பெங்களூரில் இருந்து சென்னைக்கு விரைந்து வந்தனர்.

ஆஸ்பத்திரியில் இருந்த 3 நாட்களும் அவரை மூத்த சகோதரர் சத்திய நாராயணா, நண்பர் முரளி, அவரது உதவியாளர் கிரி ஆகியோர் கவனித்துக் கொண்டனர். இந்த நிலையில் ரஜினி உடல்நலம் பற்றி பத்திரிகைகளில் வெளியான பலவிதமான மாறுபட்ட தகவல்களை பார்த்து விட்டு விஜயா நர்சிங் ஹோம் முன்பு நூற்றுக்கணக்கான ரஜினி ரசிகர்கள் திரண்டு விட்டனர். அவர்களை சமாளிப்பது போலீஸ்காரர்களுக்கும், நடிகர் சங்க நிர்வாகிகளுக்கும் மிகவும் சவாலாக இருந்தது.

இந்த நிலையில் ரஜினிக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை மேஜர் சுந்தரராஜன் நிருபர்களிடம் விளக்கி கூறினார். அவர் கூறுகையில், 'கடந்த சில மாதங்களாக ரஜினி காந்த் சரியான தூக்கமின்றி இரவு-பகலாக நடித்து வருகிறார். கடந்த ஒரு வருட காலமாகவே அவருக்கு ஓய்வு இல்லை, தூக்கம் இல்லாததால் அவர் உடல் நிலையும், மன நிலையும் பாதிக்கப்பட்டு இருப்பதாக டாக்டர்கள் கூறுகிறார்கள். அவர் 72 மணி நேரம் (3 நாள்) தொடர்ந்து தூங்க வேண்டும் என்றும், அதன் பிறகுதான் சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் டாக்டர்கள் கூறி இருக்கிறார்கள்' என்றார்.

Orangeville HYUNDAI




T 519.943.0232 M 647-405-9039
E rpassi@orangevillehyundai.ca W www.orangevillehyundai.ca
753006 Second Line P.O. Box 338 Orangeville, ON L9W 2Z7
Raj Passi
Sales Professional

# 13 ஆம் திருத்த

— தம்பியப்பா கோபால கிருஸ்ணன் —

அண்மையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சிவ ஞானம் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரியது தொடர்பாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினரு மான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அக்கோரிக்கைக்கு எதிராக '38 வருடம் நடைமுறைப்படுத்தப் படாத அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி தற்போது அமுல்படுத்துமாறு கோருவது 'ஏக்கியராஜ்ய' என்ற ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வை முடக்குவதற்காகவே' என யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த 38 வருடங்களாக 13-ஆம் திருத்தம் நடைமுறைப் படுத்தப்படவில்லையென்றால் அதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட அவரும் (கஜேந்திரகுமாரும்) அவருடைய கட்சியும் உள்ளடங்கிய தமிழர்தம் அரசியல் தரப்புத்தானே பிரதான காரணம் என்பதைக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மூடிமறைத்துப் பேசுகிறார்.

13ஆம்திருத்தத்தைநடைமுறைப் படுத்தக் கடந்த 38 வருடங்களாகத் தமிழரசுக் கட்சி அர்ப்பணிப்புடனும் முழுமையான ஈடுபாட்டுடனும் செயற்படவில்லையென்பது வேறு விடயம். ஆனால், தற்போதைய அரசியல் களநிலையில் 13ஆம் திருத்தத்தை விட்டால் தமிழ் மக்களுக்கு வேறு மாற்றுவழியில்லையெனும் சூழலில் தமிழரசுக் கட்சித் தலைவர் சிவஞானத்தின் கோரிக்கை அரசியல் யதார்த்தமானது.

அதனை எதிர்ப்பதானது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அரசியல் சூனியத்தின் வெளிப்பாடே தவிர வேறல்ல.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எனும் பெயர்ப் பலகையை அல்லது முகமூடியை மாட்டிக் கொண்டு 'இருதேசம்; ஒரு நாடு' எனும் அரசியல் கோஷத்துடனும் 'சமஸ்டி' அரசியலமைப்புக் கோரிக்கையுடனும் முன்னுக்குப் பின் முரணான ஒருவித முரண்பாட்டு அரசியலையே முன்னெடுத்துவருகிறார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் விதிமுறைகளுக்கமைய அவருடைய கட்சி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்தான். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அல்ல.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் ஒரு கேள்வி?

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தற்போது நடைமுறையிலுள்ள அமைப்பு விதிகளில் இலங்கையின் இன பிரச்சனைக்குத் தீர்வாக சமஸ்டியை முன்வைக்கும் 'ஷரத்து' (விதி) உள்ளதா? ஆனால், தமிழரசுக் கட்சியின் அமைப்பு விதிகளில் பெயரளவிலேனும் 'சமஸ்டி' பற்றிய 'ஷரத்து' அதன் அமைப்பு விதிகளில் உள்ளது.

இந்தப் பின்னணியில் தர்க்கரீதியாகப் பார்க்கும்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெறுமனே வார்த்தை அலங்காரங்களால் தமிழ் மக்களை ஏமாற்றும் அரசியலைத்தான் முன்னெடுத்து வருகிறார். இதன் அர்த்தம் தமிழரசுக் கட்சி ஏதோ 'திறம்' என்றும் ஆகிவிடாது.

இலங்கையின் தற்போதைய அரசியல் அரங்கிலே 'சமஸ்டி' என்பது சாத்தியமாதல் அரிது. இந்த நடைமுறை யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அனைத்துத் தமிழ் அரசியற் கட்சிகளும் ஆளுக்காள் சேறடிப்பதை நிறுத்திக்கொண்டு -ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுவதையும் குறை கூறுவதையும் நிறுத்திக் கொண்டு 13-ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அரசியல் களவேலைகளை முடுக்கிவிடுவதுதான் தமிழ் மக்களுக்கு நன்மை தரக்கூடியதே தவிர அதனை விடுத்து மாயமான் போன்ற கற்பனாவாதக் கோரிக்கைகளை அரைத்த மாவை மீண்டும் அரைப்பதுபோல் முன்வைப்பது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் எதிர்காலத்தில் அரசியல் சூனியத் திற்குள்தான் தள்ளிவிடும்.

தமிழ் மக்களுடைய அரசியல் பொதுவெளியில் அதிகுறைந்த பட்சம் 13ஆம் திருத்தத்தின் அமுலாக்கத்தை உண்மையாகவே அரசியலில் விருப்புடன் எதிர்பார்க்கும் தமிழ் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் இணைந்து இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் அழுத்தம் கொடுக்கும் வகையில் 13ஆம் திருத்தத்தை அமுல் செய்யக்கோரும் ஒரு வெகுஜன இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். அதனைவிடுத்துத் தமிழ் அரசியல் கட்சிகள் தனித்தவில் அடிப்பதால் எதுவுமே ஆகாது.







House for Sale
At Chennai on main road and one in Palakad, Kerala





# புனித ஜார்ஜ் கதீட்ரல் தேவாலயம் பழமை சிறப்பு மாறாமல் புதுப்பிப்பு: 1-ந்தேதி திறக்கப்படுகிறது

சென்னையில் பழமையான கிறிஸ்தவ ஆலயங்களில் சிறப்பு பெற்றது புனித ஜார்ஜ் கதீட்ரல் தேவாலயம்.ராதாகிருஷ்ணன்சாலையில் ஜெமினி பாலம் அருகே அமைந்துள்ள இந்த ஆலயத்தை தென்னிந்திய திருச்சபை (சி.எஸ்.ஐ.) சென்னைப் பேராயம் நிர்வகித்து வருகிறது.

210 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த ஆலயத்திற்கு வரலாறு உண்டு. கிறிஸ்தவ மிஷனரிகளால் உருவாக்கப்பட்ட புனித ஜார்ஜ் தேவாலயம் வரலாற்று கட்டிடம் என்பதால் அதனை அதன் பழமை மாறாமல் புதுப்பிக்க திட்டமிடப் பட்டது.

சென்னையின் இதயம் போன்ற மையப்பகுதியில் இடம் பெற்றுள்ள இந்த ஆலயம் செயிண்ட் ஜார்ஜ் கதீட்ரல் கர்னல் டேவிட் என்பவரின் முயற்சியில் மீண்டும் உயிர்பிக்கப்பட்டு உள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் புதுப்பிக்கும் பணி தொடங்கி இந்த மாதம் நிறைவடைந்துள்ளது. ஒவ்வொரு தூண்களும் வளைந்த கலைப்பொருட்களும் புத்துயிர் பெற்றுள்ளது.

இந்த நினைவுச் சின்ன தேவாலயமானது கடினமான கட்டிட சவாலாக இருந்தது என்று டேவிட் தேவசகாயம் தெரிவித்தார். கட்டிட



கலைஞர்கள், பொறியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஒன்றிணைந்துநினைவுச்சின்னத்தை ஆன்மிக வாழ்க்கையின் துடிப்பான மையமாக மாற்றியுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

இந்த மறு சீரமைப்பு பணியில் சென்னை ஐ.ஐ.டி பேராசிரியர் அருண்மேனன் போன்ற நிபுணர்கள் உடனிருந்து கட்டமைப்பு ஒருங்கிணைப்பை மேற்பார்வையிட்டனர். கதீட்ரல் தேவலாயத்தின் ஒளிரும் கோபுரம் மற்றும் உறுதியான நம்பிக்கையுடன் அழியாத சின்னமாக மீண்டும் புதுப்பொலிவு பெற்றுள்ளது.

இதுகுறித்து சி.எஸ்.ஐ. சென்னைப் பேராயர் பால் பிரான்சிஸ் ரவிச்சந்திரன் கூறியதாவது:-

புனித ஜார்ஜ் கதீட்ரல் தேவாலயம் 1816-ம் ஆண்டு கட்டப்பட்டது. அதன் எழில், கட்டிடக்கலை எதுவும் சிறிதும் மாறாமல் அப்படியே மறுசீரமைக்கப்பட்டுள்ளது. புதிய ஆலயத்தின் திறப்பு விழா வருகிற 1-ந்தேதி (சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு நடைபெறுகிறது. இதனை பிரதம பேராயர் ரூபன் மார்க் திறந்து வைக்கிறார். முன்னதாக சென்னை பேராயத்தில் உள்ள ஆயர்கள் பங்கேற்கும் ஊர்வலம் பேராயத்தில் இருந்து புறப்பட்டு ராதாகிருஷ்ணன் சாலை வழியாக புனித ஜார்ஜ் கதீட்ரல் ஆலயத்திற்கு செல்வார்கள். அதனை தொடர்ந்து சிறப்பு வழிபாடு நடைபெறும். மறுசீரமைப்பு என்பது கட்டிடக் கலையைவிட மேலானது. இது ஆன்மிக புதுப்பித்தலாகும். எங்கள் பார்வை ஒரு அழகான கட்டிடம் மட்டுமல்ல. ஒன்றுபட்ட கதீட்ரல் சமூகத்தின் எதிரொலி. இதன் மூலம் கிறிஸ்துவின் அன்பு புலப்படுகிறது என்றார்.

இதுகுறித்து தேவாலயத்தின் போதகர் ரூபன் ஜெயக்குமார் கூறியதாவது:-

கிழக்கிந்திய கம்பெனியை சேர்ந்த என்ஜினீயர்கள் கர்னல் ஜேம்ஸ் கால்டுவெல் மற்றும் கேப்டன் தாமஸ் ஆகியோர் இந்த ஆலயத்தை 1815-ல் கட்டி எழுப்பினார்கள். 1816-ல் திருச்சபையாக உருவாக்கப்பட்டது. 10 மாதங்கள் நடந்த கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று உள்ளன. திருச்சபை மக்களின் காணிக்கை மூலம் கட்டப்பட்டுள்ளது. ரூ.10 கோடி இதற்கு செலவிடப்பட்டு உள்ளது என்றார்.

# அடுத்த 6 நாட்களுக்கான வானிலை நிலவரம்




சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்தியகிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் நேற்று நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், இன்று காலை 08.30 மணி அளவில் அதே பகுதிகளில் நிலவுகிறது. இது, அடுத்த 36 மணி நேரத்திற்கு, வடக்கு-வடமேற்கு திசையில், மத்தியகிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் வழியாக நகரக்கூடும்.

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்று முதல் 5-ந்தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 35° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26° செல் சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 35° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.




# ஊட்டி, கொடைக்கானலை தொடர்ந்து வால்பாறைக்கும் இ-பாஸ் கட்டாயம் - மாவட்ட நிர்வாகம் அறிவிப்பு

ஊட்டி மற்றும் கொடைக்கானல் மலை பிரதேசங்களுக்கு வாகன வரவை குறைக்கும் வகையில் இ-பாஸ் முறை நடைமுறையில் உள்ளது. உயர்நீதிமன்ற ஆணைப்படி, இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

இந்நிலையில், கோவை மாவட்டம் பொள்ளாச்சி அடுத்து உள்ள வால்பாறைக்கு செல்ல நவம்பர் 1-ம் தேதி முதல் இ-பாஸ் கட்டாயம் என மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார். போக்குவரத்து நெரிசலை தடுக்க மாவட்ட நிர்வாகம் சார்பில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப் பட்டுள்ள அறிவிப்பில், www.tnepass.tngov.in என்ற இணையதளத்தில் வால்பாறைக்கு செல்லும் அனைத்து வாகனங்களும் இ-பாஸ் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் சோதனை சாவடிகளில் மாவட்ட நிர்வாகம்




சார்பில் அதிகாரிகள் இதனை கண்காணிக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வால்பாறைக்கு பிளாஸ்டிக் பொருட்களை எடுத்துச் செல்லவும் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழக செய்திகள்

## 16 வயதில் கிராண்ட்மாஸ்டர் ஆன செஸ் வீரர் இளம்பரிதிக்கு முதல்வர் ஸ்டாலின் பாராட்டு

சென்னையைச் சேர்ந்த 16 வயது இளம் செஸ் வீரர் ஏ.ஆர். இளம்பரிதி. இவர் போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவில் நடந்த பிஜெல்ஜினா ஓபன் செஸ் தொடரில் விளையாடினார். இந்த போட்டியில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றார்.



இதன்மூலம்16வயதில்சாம்பியன் பட்டத்தை வென்று இளம்பரிதி சாதனை படைத்துள்ளார். மேலும் தமிழ்நாட்டின் விளையாட்டு மேம்பாட்டு ஆணைய ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இவர், இந்தியாவின் 90-வது மற்றும் தமிழ்நாட்டின் 35-வது கிராண்ட் மாஸ்டர் ஆனார்.

இந்நிலையில் அவருக்கு எக்ஸ் பக்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ள முதல்வர் ஸ்டாலின், 'சதுரங்கத்தில் தமிழ்நாட்டின் 35வது கிராண்ட் மாஸ்டராக இளம்பரிதி சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம் தமிழ்நாட்டின் சாம்பியன் கிரீடத்தில் அவர் மற்றொரு ரத்தினத்தைச் சேர்த்துள்ளார். தமிழ்நாடு சதுரங்கத்தில் சூரியன் உதிக்கும் போது இன்னும் பல கிராண்ட்மாஸ்டர்கள் உருவாகின்றனர்.' என்று பதிவிட்டுள்ளார்.

உங்கள் வியா-
பாரம் உலகம்
முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில்
விளம்பரம்
செய்யுங்கள்!




# ‘இந்த நாட்டிற்காக இளமையை அர்ப்பணித்தோம்; எங்களை விரட்டுவதா?’ – அமெரிக்க துணை அதிபரிடம் இந்திய வம்சாவளி பெண் கேள்வி

அமெரிக்க அதிபராக கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்றுக் கொண்ட டொனால்டுடிரம்ப், பொருளாதாரம் மற்றும் நிர்வாக ரீதியாக பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். குறிப்பாக அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை கண்டறிந்து, அவர்களை அதிரடியாக நாடு கடத்தும் நடவடிக்கைகளை டிரம்ப் மேற்கொண்டுள்ளார். டிரம்ப் நிர்வாகத்தின் தீவிர குடியேற்ற சட்டங்களால் வேலைக்காகவும், படிப்பிற்காகவும் அமெரிக்கா சென்றவர்கள் பெரும் சிரமங்களை சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், இன்று மிசிசிப்பி பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவர்களுடன் கலந்துரையாடினார். ஜே.டி.வான்ஸ் இந்திய வம்சாவளி பெண்ணான உஷாவை திருமணம் செய்துள்ளார். இவர்களுக்கு 3 குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், ஜே.டி.வான்ஸ் குடும்பம் குறித்து பல்கலைக்கழக மாணவி ஒருவர் அவரிடம் நேரடியாக கேள்வி எழுப்பினார்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த அந்த மாணவி கூறுகையில், ‘‘உங்கள் மனைவி உஷா கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர் கிடையாது. உங்கள் வம்சாவளியினர் அமெரிக்காவிற்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வந்தனர். அதே சமயம், உங்கள் மனைவியின் வம்சாவளியினர் சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வந்திருப்பார்கள். உங்கள் குழந்தைகளிடம் நீங்கள் எவ்வாறு மதம் குறித்து சொல்லிக் கொடுக்கிறீர்கள்?

அமெரிக்காவில் அளவுக்கு அதிகமானோர் குடியேறிவிட்டதாக நீங்கள் கூறுகிறீர்கள். அந்த எண்ணிக்கையை எப்படி முடிவு செய்தீர்கள்? எங்களிடம் ஏன் கனவுகளை விற்பனை செய்தீர்கள்? நாங்கள் எங்கள் இளமைக் காலத்தை இந்த நாட்டிற்காக அர்ப்பணித்தோம். நீங்கள் எங்களுக்கு தர வேண்டியது எதுவும் இல்லை. நாங்கள் கடுமையாக உழைத்திருக்கிறோம்.

அப்படி இருக்கும்போது, ‘இப்போது நிறைய பேர் வந்துவிட்டார்கள், அவர்களை விரட்டுவோம்’ என்று நீங்கள் எப்படி கூறலாம்? நீங்கள் கேட்ட வரிகளை நாங்கள் செலுத்துகிறோம். நாங்கள் இந்த நிலத்தை சேர்ந்தவர்கள் இல்லை என்று நீங்கள் எப்படி சொல்லலாம்? உங்களில் ஒருவராக இருக்க வேண்டும் என்றால் கிறிஸ்தவராக இருக்க வேண்டும் என்று சொல்லப் போகிறீர்களா?’’ என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த ஜே.டி. வான்ஸ், ‘‘குடியேற்றம் என்பது குறைந்த அளவிலேயே இருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். அமெரிக்க அரசு ஒரு சத்தியத்தை செய்து கொடுத்தால் அதை நிச்சயம் நிறைவேற்றும். ஆனால், இங்கு நாம்



பேசிக் கொண்டிருக்கும் பிரச்சினை என்பது சட்டவிரோத குடியேற்றம் பற்றியது. இதனை கட்டுப்படுத்த அமெரிக்க அரசு சட்டங்களை இயற்றுகிறது. சில நூறு பேர் சட்டரீதியாக குடியேறி இருக்கிறார்கள் என்பதற்காக, பல மில்லியன் அளவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை நாம் தடுக்காமல் இருக்க முடியாது.

அரை நூற்றாண்டுக்கு முன்பு இருந்த குடியேற்ற சட்டங்களை இனி வரும் காலங்களிலும் நாம் தொடர்ந்து பின்பற்ற முடியாது. அமெரிக்காவிற்கு வர வேண்டும் என்று நிறைய பேர் விரும்பலாம். ஆனால் அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக, ஒட்டுமொத்த உலக மக்களின் நலன்களை விட அமெரிக்க மக்களின் நலன்களில் கவனம் செலுத்துவதே எனது முதல் கடமை.

மேலும் எனது மனைவி கிறிஸ்தவர் கிடையாது. அவர் இந்து குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். ஆனால் அவர் தீவிர மத நம்பிக்கை கொண்டவர் கிடையாது. நாங்கள் எங்கள் குழந்தைகளைகிறிஸ்தவர்களாகவே வளர்க்க முடிவு செய்துள்ளோம். இதுபோல் கலப்பு திருமணம் செய்து கொள்பவர்கள், முதலில் அனைத்தையும் பேசி முடிவு செய்து கொள்ளுங்கள் என்று நான் கூறுவேன். ஞாயிற்றுக்கிழமைகளில் உஷா என்னுடன் தேவாலயத்திற்கு வருகிறார். நிச்சயம் அவர் ஒரு நாள் கிறிஸ்தவராக மாறுவார் என்று நான் நம்புகிறேன். ஒருவேளை அவர் மாறாவிட்டாலும், கடவுள் அனைவருக்கும் தனித்தன்மையை கொடுத்திருக்கிறார் என்பதால், அதை நான் ஒரு பிரச்சினையாக கருத மாட்டேன்’’ என்று தெரிவித்தார்.

# உலக செய்திகள்

# அணு ஆயுத சோதனையில் இறங்கப் போவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் மிரட்டல்

சோவியத் ரஷியா மற்றும் அமெரிக்கா இடையே 1990-களில் பனிப்போர் நிலவியது. இதனால் இருநாடுகளும் அணு ஆயுத சோதனைகளில் தொடர்ந்து ஈடுபட்டு உலக நாடுகளை அச்சுறுத்தி வந்தனர். இதனை தொடர்ந்து போரில் சோவியத் ரஷியா தோல்வி அடைந்ததை தொடர்ந்து அது ரஷியாவாக பிரிக்கப்பட்டது.

மேலும் அமெரிக்கா, ரஷியா உள்ளிட்ட உலக நாடுகள் அனைத்தும் அணு ஆயுத சோதனையை மேற்கொள்ள ஐ.நா. அமைப்பால் தடைவிதிக்கப்பட்டது. இந்த நிலையில் உக்ரைன்-ரஷியா இடையே போர் தொடங்கி 3 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. போரை முடிவுக்கு கொண்டுவர உலக நாட்டு தலைவர்களின் தொடர் முயற்சி தோல்வியடைந்து வருகிறது. குறிப்பாக ரஷிய அதிபர் புதின் இந்த போரை முடிவுக்கு கொண்டு வராமல் தொடர்ந்து இழுத்தடிப்பு செய்து வருகிறார். இதனிடையே



ரஷிய ராணுவம் தற்போது அணுசக்தி சோதனையில் ஈடுபட்டு வருகிறது. 'பறக்கும் அணுஉலை' என்று சொல்லக்கூடிய அதிநவீன அணுசக்தி ஏவுகணையான 'புரெவெஸ்ட்னிக்'கை சோதித்தது.

எதிரிகளின் ரேடாரில் சிக்காமல் கண்டம்விட்டு கண்டம் பாய்ந்து எதிரி இலக்குகளை துல்லியமாக தாக்கும் தன்மை கொண்டதாக இது உள்ளது. இந்தநிலையில் மீண்டும் ஒரு அணு ஆயுதத்தை ரஷியா நேற்று சோதித்தது. அணுசக்தியால் இயங்கும் வல்லமை கொண்ட கட்டுக்கடங்காத தூரம் செல்லும் நீர்மூழ்கி டிரோனை ரஷியா வெற்றிகரமாக சோதித்தது. 'போசைடன் சூப்பர் டார்பிடோ' என பெயரிடப்பட்டுள்ள இந்த டிரோன் ரஷியாவின் மிகவும் சக்திவாய்ந்த ஏவுகணையைவிட தாக்கும் திறன் கொண்டது. இதனை ரஷிய அதிபர் புதின் உறுதிப்படுத்தினார். அவர், "அணு உலையைபோல 100 மடங்கு சக்திவாய்ந்த அணு என்ஜின் பொருத்தப்பட்ட நீர்மூழ்கி டிரோன் சோதனை வெற்றிப்பெற்றுள்ளது" என்றார்.

ரஷியாவின் இந்த சோதனைக்கு டிரம்ப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள வலைத்தள பதிவில், "அமெரிக்கா வேறு எந்த நாட்டையும் விட அதிக அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளது. ரஷியா 2-வது இடத்தில் உள்ளது, சீனா 3-வது இடத்தில் உள்ளது. ரஷியாவின் தொடர் அணு ஆயுத சோதனைகளால் 5 ஆண்டுகளுக்குள் அது அமெரிக்காவை ஈடு செய்யும். மற்ற நாடுகள் அணு ஆயுதங்களை சோதிப்பதால், நமது அணு ஆயுதங்களை சமமான அடிப்படையில் சோதிக்கத் தொடங்குமாறு ராணுவத் துறைக்கு அறிவுறுத்தியுள்ளேன். அந்த செயல்முறை உடனடியாகத் தொடங்கும்" என்றார். இதனால் 30 ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்கா அணு ஆயுத சோதனையில் ஈடுபட உள்ளது.

# மியான்மர் அகதிகளுக்கு பாதிப்பா? ஐ.நா. நிபுணர் குற்றச்சாட்டை நிராகரித்தது இந்தியா

ஐ.நா. சபையின் சிறப்பு நிபுணர் தாமஸ் ஆண்ட்ரூஸ் மியான்மர் மனித உரிமைகள் குறித்து தாக்கல் செய்த அறிக்கையில் கூறியிருந்ததாவது:- இந்தியாவில் கடந்த ஏப்ரல் மாதம் 22-ந் தேதி காஷ்மீரின் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் மியான்மரை சேர்ந்த யாரும் ஈடுபடவில்லை என்றாலும், மியான்மரை சேர்ந்த அகதிகள் இந்தியாவில் கடுமையான அழுத்தத்துக்கு உள்ளாகினர். அந்த சம்பவத்துக்கு பிறகு இந்திய அதிகாரிகளால் சுமார் 40 மியான்மர் அகதிகள் காவலில் வைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு நாடு கடத்தப்படுவார்கள் என்று அச்சுறுத்தப்பட்டனர். கடந்த மே மாதத்தில் இந்திய அதிகாரிகள் ஏராளமான ரோஹிங்கியா அகதிகளை வங்காள தேசத்துக்கு நாடு கடத்தினர். இந்த நாடு கடத்தல்கள் குறித்து இந்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டது.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

இந்நிலையில் நியூயார்க்கில் நடந்த ஐ.நா. பொது சபையின் 3-வது குழுவில் மியான்மர் அகதிகள் குறித்து ஐ.நா. நிபுணர் அறிக்கை ஆதாரமற்ற பாரபட்சமான கருத்தாக உள்ளது அசாமை சேர்ந்த பா.ஜனதா எம்.பி. திலீப் சைகியா அறிக்கை அளித்தார். அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருந்தாவது:- இந்தியா தொடர்பான அறிக்கையில் உள்ள ஆதாரமற்ற மற்றும் பாரபட்சமான கருத்துகளுக்கு கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கிறேன்.

# லேசர் கதிர்வீச்சு மூலம் மழைப்பொழிவு சாத்தியமா?

## அபுதாபி தொழில்நுட்ப மைய ஆராய்ச்சியாளர்கள் விளக்கம்

அபுதாபி தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மையத்தின் (டி.ஐ.ஐ) ஆராய்ச்சியாளர்கள் அமீரக மழை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நடத்திய ஆராய்ச்சியில் லேசர் கதிர்வீச்சு தொழில்நுட்பத்தில் மழைப்பொழிவுக்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

ஆய்வக சோதனை:

சாதாரணமாக மழைப்பொழிவு என்பது தண்ணீர் ஆவியாகி மேகக்கூட்டம் உருவாகி அது குளிரும் போது பெய்வது ஆகும். இதில் செயற்கையாக கிளவுட் சீடிங் முறையில் சில ரசாயனங்களை பயன்படுத்தி மேகத்தை குளிர்வித்து மழைப்பொழிவை உண்டாக்கலாம். உலகில் அமீரகம், இந்தியா உள்பட நாடுகள் வெற்றிகரமாக இதனை செய்து வருகின்றன. பொதுவாக மழைப்பொழிவு குறைவாக உள்ள பகுதிகளில் இதுபோன்ற மாற்று தொழில்நுட்ப வழிகள் மூலம் மழை பெறப்படுகிறது. இதன் அடுத்தகட்ட நகர்வாக லேசர் கதிர்வீச்சு மூலம் மழைய தூண்ட முடியும் என கண்டறியப்பட்டுள்ளது.

இதுவரை ஆராய்ச்சி கட்டுரை வடிவில் மட்டுமே இருந்த இந்த புதிய வழிமுறை தற்போது அமீரக ஆய்வகத்தில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது. அமீரகத்தின் மழை மேம்பாட்டு திட்டத்திற்காக தேசிய வானிலை ஆய்வு மையத்துடன் இணைந்து அபுதாபி தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மையத்தின் சார்பில் ஆய்வக சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

லேசர் மூலம் மழைப்பொழிவு:

லேசர் மூலம் மழைப்பொழிவு செய்யப்படுவது லேசர் இன்டியூஸ்டு கண்டன்சேஷன் அல்லது லேசர் இன்டியூஸ்டு கிளவுட் சீடிங் என ஆங்கிலத்தில் அழைக்கின்றனர். இதற்கு சக்தி வாய்ந்த அல்ட்ரா ஷார்ட் லேசர் கதிர்கள் பயன்படுத்தப்படுகிறது. இந்த லேசர் கதிரை உருவாக்கும் கருவிகள் பாலைவன பகுதிகள், மலைப்பாங்கான பகுதிகளில் பொருத்தினால் போதுமானது.

அதில் இருந்து வெளியாகும் கதிர்கள் காற்றில் உள்ள நைட்ரஜன், ஆக்சிஜன் போன்ற வாயுக்களை சிதைத்து நுண் துகள்களை (மின்னேற்றம் செய்யப்பட்ட அயனிகள்) உருவாக்கும். இவைகள் நீராவி துகள்களை ஈர்த்து ஒரு நியூக்கிளியஸ் (கரு) போல செயல்படும். இதனை தற்போது அபுதாபியில் உள்ள தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மையத்தில் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வக சோதனை நடத்தினர்.

மைல்கல்:

இதில் லேசர் கதிர்கள் நீர்த்துளிகளை உருவாக்கி உள்ளது ஒரு மைல்கல்லாக கருதப்படுகிறது. இந்த திட்டத்தின் அறிவிப்பு நிகழ்ச்சியில் அடுத்த கட்டமாக அமீரகத்தில் ஹஜார் மலைத்தொடர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நடமாடும் லேசர் கதிர்வீச்சு கருவிகளை பயன்படுத்தி மேகங்களில் மழையை தூண்டுவதற்கான நடைமுறைகள் சோதனை முறையில் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தனர்.

அதற்கான சோதனைகளுக்கு ஆராய்ச்சியாளர்கள் தயாராகி வருவதாக தெரிவித்துள்ளனர். இந்த திட்டம் வெற்றியடையும்பட்சத்தில் கிளவுட் சீடிங் முறையுடன், லேசர் கதிர்வீச்சும் இணைந்து அமீரகத்தில் மழைப்பொழிவை அதிகரிக்க அதிக வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.




**Kathiroli Marriage Matches!**

**We are here to help your children's for finding out the correct matches. So far thousands of couples joined through our Kathiroli Marriage Match bureau. For more information and the Application, please contact our coordinator @**

**Managing Director.**

**Kathiroli Media Inc.**

**Call: 647-473-9698, 437-833-4304**

# கதிர் ஒளி திருமண சேவை!



M. RACHEL

**Personal Details**

| | |
|---|---|
| DOB | :- 04/12/1996 |
| Blood Group | :- A- Negative |
| Height | :- 153 cm |
| Weight | :- 60kg |
| Education | :- M. A., B. Ed |
| Occupation | :- Eagle Diaries, Thousand Light, Chennai. |
| Income | :- 15000/mnth |

**Family Background**

| | |
|---|---|
| Father | :- Pr. R. Davidmani |
| Occupation | :- Church Pastor (Prince Of Peace ) Arungulam. |
| Mother | :- M. Bhuvaneswari |
| Occupation | :- House Wife |
| Sister | :- One Younger Sister |
| Maternal | :- Not Married |

**Others**

| | |
|---|---|
| Address | :- 3/110A, sandhu Street, Arungulam Village &post, Tiruttani Taluk, Tiruvallur District, Tamilnadu-631201. |
| Contact | :- 9445302329, 9952279144 |



| | |
|---|---|
| Name | : Er.G.Ephraim Bleson Noble BE., MS.. |
| Mobile | : 9843053644 |
| Qualification | : BE. Aeronautical Engineering (Aircraft Design & Engineering) Nanging University of Aeronautics & Astronautics, China ME. (Mech) University of Michigen, Shanghai Jiaotong, China Top 10 University All over world |
| Occupation | : Product Project Manager within the Research and Technology Department in SUZHOU WEST DEANE EV ELECTRONICS CO., Ltd., Suzhou, Jiangsu, China. Director of JSM Broad casting Channel (P) Ltd Trusty of Jesus Saves Ministries (NGO) Trusty of JSM Noble Theresa Trust (NGO) |
| Salary | : 15000 RMB from April 2025 |
| Permanent Address | : Bishop Bungalow, JSM Cathedral Road, Itteri, Tirunelveli-627007 |
| Birth of Place | : Nazareth, Tuticorin District |
| Date of Birth | : 04.04.1996, Age 29 |
| Colour | : Fair |
| Character | : God fearing and Good Character |
| Height& Weight | : 173cm. 75kg |
| Father | : Rt.Rev.Dr.Godfrey Noble DD.. CSITA TDTA TND Spiritual wing Chairman. Founder of Jesus Saves Ministries & JSM Noble Theresa Trust |
| Mother | : Mrs.Arulmathi Godfrey M.Sc.. B.Ed. (Maths) PG Asst |
| Brother | : Dr.G.David Gladson Noble MBBS., Practice as a Physian at Hosur (Unmarried) |
| Grand Father | : Late. Mr.P.Noble Theogaraj (Rtd Tr) Schatter Hr.Sec.School |
| Grand Mother | : Mrs.Hepzie Rubavathi Noble M.A.. B.Ed., (Rtd Tr) Mary Sargent Er.Sec.School |
| Periyamma | : Mrs.Joice Lazarus, Nalumavadi, Tuticorin |
| Contact : | : Mob : 9843053644, 9362911773 |



D.DAVIDRAJ

| | |
|---|---|
| NAME | : D.DAVIDRAJ |
| DATEOFBIRTH | : 20-MAR-1993 |
| TIME | : 4.40AM |
| CASTE | : CHRISTIAN PADAYACHI (BC) |
| EDUCATION QUALIFICATION | : M.COM |
| OCCUPATION | : WORKING AS MANAGER in (Blue Whale Logistics Services) |
| SALARY | : 6,00,000/-(Per Annum) |

ADDRESSFORCOMMUNICATION

PresentAddress : D.DAVIDRAJS/OC.DEVADOSS PERIYAR NAGAR, THIRUVOTTIYUR, CHENNAI - 19 Phone: 9884240922



S.JENISH

| | |
|---|---|
| Name | : S.Jenish |
| Date of Birth | : 4.2.1998 |
| Age | : 25 |
| Qualification | : M.Sc(maths).,B.Ed., |
| Religion & Caste | : CSI Christian, Nadar |
| Address | : 5/3 West Street, Vellalanvilai. |
| Mobile No | : 9489193161, 8667523526 |



A.JOSHUA

| | |
|---|---|
| Name | : A.Joshua |
| DOB | : 15th October 1993 |
| Height | : 5.7 feet |
| Religion | : Christian |
| Address | : 60/2, 1st Cross, Manjunath nagar, Oorgaumpet, K.G.F |
| Contact number | : 9686584983 |



LYDIA J

| | |
|---|---|
| Name | : LYDIA.J |
| Date of Birth | : 19.10.1978 |
| Height | : 154 cms |
| Weight | : 55kg |
| Mother Tongue | : Tamil |
| Expectation | : A Good job & good spiritual groom wanted Any B.C wanted |
| Contact No | : +91 9952598399 |



FRANKLINE P

| | |
|---|---|
| NAME | : Frankline .P |
| DOB | : 12/07/1998 |
| HEIGHT | : 176 CM |
| RELIGION | : Christian |
| MOTHERS NAME | : Caroline.L |
| OCCUPATION | : Teacher (Private school) |
| CELL NO | : 9600079689, 9445439689. |



RAJESH KUTTI BABU

| | |
|---|---|
| Name | :- Rajesh Kutti Babu |
| Caste | :- Christian. Castle No Bar |
| DOB | :- 03-03-1988 |
| Blood Group | :- A + |
| Height | :- 5.0 |
| Weight | :- 60 |
| Education | :- M Com .D.min |
| Email | :- earrowrajesh2017@gmail.com |
| Contact | :- +919944058063 |



BRAVIN JASS R

| | |
|---|---|
| Name | : Bravin Jass R |
| Date Of Birth | : 7 September,1995 |
| Height | : 176 cm |
| Occupation | : Motion graphic designer |
| Contact Details | : Pr.S.Robert +91 9942680464 |



DR.P.A.CHARISHMA MARILIN

| | |
|---|---|
| NAME | Dr. P. A. CHARISHMA MARILIN |
| AGE | 27 |
| DATE OF BIRTH | 12.08.1995 |
| HEIGHT | 5′ 2″ |
| COMPLEXION | Dusky |
| EDUCATION | B.D.S |
| PROFESSION | Dentist |

Contact

PHONE 9840812266 9840708382

Church Information

PASTOR'S NAME Pastor Jay
CHURCH NAME The Ark Victory Church, Chennai



SMAILAN J

SMAILAN J

Personal Details

Blood Group A+
DOB 20/April/1988
Height 5.4'
Weight 75Kg
Education DECE, BBA, DIS, IOSH.,

Father Name L JAMES
Occupation Electrician
Mother Name J VICTORIA

Native Place Ramanathapuram
Contact +91 9788416308 +91 9003522214
Address L.James, 10/864, Mandapam Main Road, Ramanathapuram District, Uchippuli Post - 623534.



ROHINI SELVARAJ

| | |
|---|---|
| NAME | :ROHINI SELVARAJ |
| DATE OF BIRTH | :14.12.1998 |
| AGE | :25 |
| HEIGHT | :153CM |
| QUALIFICATION | :B.E ( PRODUCTION ENGINEERING)) |
| GENDER | :FEMALE |
| MARITAL-STATUS | :UNMARRIED |
| ACTIVITIES. | |
| ADDRESS | : POLLACHI, COIMBATORE |
| EXPECTATION | : SPIRITUAL EDUCATED CARING PERSON WITH GOOD JOB |



V M IKKESH PRAVEEN

Name : V M Ikkesh Praveen

Age : 29

Date of Birth : 15/09/1995

Qualification : B.com, MBA, ACA

Profession : Practising Chartered Accountant (Office in own building), Guest Lecturer in Bishop Heber College Trichy, Trainer in ICAI Bhawan Trichy

Annual Income : 12,00,000 to 14,00,000

Address : No 11 Convent Road, Cantonment, Trichy 620001

Church Name : Trichy City AG Church

Contact No : 7010177160



PRESCILLA RAJ

| | |
|---|---|
| Name | : Prescilla Raj S |
| Date of Birth | : 6 November 1995 |
| Height | : 5 feet |
| Mother tongue | : Tamil |
| Education | : Bachelor of Engineering, Bachelor of Theology |
| Job | : Working as Cybersecurity Engineer |
| Contact Number | : 9742398907 8147609688 |
| Address | : Seegehall, Bangalore 560049 |



EBEN MOSES

| | |
|---|---|
| Name | : C. Eben Moses |
| DOB | : 22-08-2000 |
| Age | : 24 Years |
| Church Denomination | : CSI |
| Spiritual Status | : Saved by God's Grace, Born Again. |
| Qualification | : B.E (Mechanical), pursuing M.B.A |
| Occupation | : Engineer, Renault Nissan Technology & Business Centre, Chennai |
| Annual Salary | : ₹ 6.5 Lakhs |
| Address | : No. 8, Anna Street, Chelli Nagar, Selaiyur, Chennai - 600 073. |



S.GLASTON

| | |
|---|---|
| Name | :S.Glaston |
| DateOfBirth | :28.12.1992 |
| EducationalQualification | : M.com |
| Height | 160 |
| Religion | : CSI ChristianNadar |
| Profession | : Branch Credit Manager HDB Financial services Thisayanvilai |
| Salary | : 35000/- |
| CellNo | :9500282871, 9500007978 |

# கதிர் ஒளி திருமண சேவை!



| | | |
|---|---|---|
| Name | : | Soundariya Thangaswami |
| Father | : | K.Thangaswami (H.P.F., Ooty) |
| Mother | : | Jothi Thangaswami (House Wife) |
| Siblings | : | Elder sister (Married) |
| Birth Place | : | Gobichettipalayam,Tamil Nadu,India |
| Date of Birth | : | 26/10/1988 |
| Qualification | : | MCA., M.Phil., |
| Job | : | Ministry(Jesus Redeems, Nalumavadi, Tamil Nadu, India) Worked as an Assistant Professor in Private College |
| Contact Number | : | +91 9486191767 , +91 8778443617 |
| Email | : | anukiruthika@gmail.com |
| Height | : | 5'3" |
| Blood Group | : | A1+ |
| Baptism | : | Immersion baptism in New Life Assembly of God ,Chennai |
| Church | : | Christian Miracle Center,Gobichettipalayam |
| Pastor | : | Arun Aron |



Nandhini's Profile

**PERSONAL DETAILS**

| | | |
|---|---|---|
| D.O.B. | : | 06 Feb 1988 |
| Placed in | : | Chennai |
| Native Place | : | Neyveli Township |
| Languages known | : | Tamil, English & Hindi. |
| Height & Weight | : | 150 cm, 54 kg |
| Interests | : | Listening to music, reading books, teaching |
| Blood Group | : | O+ |
| Physical Status | : | Normal |

**FAMILY DETAILS**

| | | |
|---|---|---|
| Family Type | : | Nuclear |
| Father | : | Rajamanickam K, Neyveli Lignite Corporation |
| Mother | : | Amutha R |
| Sibling | : | Two elder sisters.<br>Elder Sister Srimathi (house wife) settled in Villupuram<br>Younger Sister Uma (lecturer) settled in Tindivanam.<br>Younger Brother Mahesh.(married) Working in Royal Enfield, Chennai.<br>Unmarried |

**ACADEMIC DETAILS**

| | | |
|---|---|---|
| Education | : | BE - CSE |
| Job Description | : | Lead Engineer. Olam Information Service, Ascend as IT Park, Chennai. |

**FAITH AND LIFE**

| | | |
|---|---|---|
| Spiritual Walk | : | I come from a non-Christian background. I'm the only one to have accepted Christ as my personal Saviour. I have experienced Christ's love in several instances of my life. I believe in growing in fellowship with Christ by meditating on His Word, praying and maturing within God's family. |
| Church Affiliation | : | PENTECOSTAL , NEYVELI |
| Commitment | : | God's will to be fulfilled in life. |

**EXPECTATIONS**

- Must be born again
- Should have given his life over to God to live it God's way



JEBA CHRISTOBEL

| | | |
|---|---|---|
| NAME | : | A.JEBA CHRISTOBEL |
| DATE OF BIRTH | : | 21.12.1998 |
| AGE | : | 25 YEARS |
| HEIGHT | : | 5.3' |
| RELIGION | : | CHRISTIAN NADAR |
| QUALIFICATION | : | M.A.ENGLISH., B.Th., M.Div.,(studying) |
| CONTACT NUMBER | : | 9442638822,9443512406 |
| EXPECTATION | : | GOD FEARING ,LOVABLE AND CARING, WORKING AND DOING MINISTRY |



PREM KUMAR

| | |
|---|---|
| Name: | V. Prem Kumar |
| DOB: | 03/02/1994 |
| Religion: | Christian |
| Qualification: | B.Th., |
| Profession: | Asst. Pastor, Carmel Church (Satchiyapuram) |
| Father Name: | V. Veerasamy (Late) |
| Address: | 1/174, Keelatheru, Vallampatti, |
| Expectation: | God Fearing Girl |
| Pastor Name: | Pr. Juda Eleazar, (90036 38921) |



SHANKAR W

| | | |
|---|---|---|
| Name | : | Shankar.W |
| D.O.B | : | 14.12.1988. |
| Occupation | : | Business (Event Management, Way360 Holidays & Activities) |
| Father's Name | : | M.William James. (Rtd. Forest officer) |
| Mother's Name | : | Shyamala Devi(Late) |
| Siblings | : | Two Elder sister (Married) |
| Spritual Status | : | Born again Christian |
| Denomination | : | Assembly Of God |
| Church Name | : | AG Church, Masinagudi. |
| Contact | : | 73396 71694, 96267 79447 (Pastor) |



PAUL CHARLES

**Name : I. Paul Charles**

**Date of Birth : 28.10.1983**

**Place of Birth : Chennai**

**Education : B.com., MBA**

**Contact Number : 9342340054**

**Address : 195, 3rd Main Road, KKR Gardan, Madhavaram, Chennai - 60**



DR INDU SELVARAJ

**Name: Dr Indu Selvaraj,**

**Educational Qualification & Experience: M.B.B.S. from Christian Medical College, Vellore.**

**Recipient of Certificates of Honour: In Pathology, Microbiology,**

**Contact Details Mobile: 7358689427, 9899985589.**

**E-mail : dr.indu.sraj@gmail.com**



Dr.M.Gnanaraj

Qualification. M.Sc., M.Phil.,MBA.,Ph.D.,
Profession. Assistant Professor
St.Joseph's University, Bangaluru.Karnataka.
Salary. 9 Lakh/annum

+919080233196 (Father), 9597766161 (Brother)



Sudhakaran K

| | | |
|---|---|---|
| Name | : | Sudhakaran k (BE-ECE) |
| Father | : | Karunakaran |
| Mother | : | Vasantha kumarai(Late) |
| D.O.B | : | 9-1-1991 |
| Height | : | 173 |
| Community | : | Nadar |
| Occupation | : | Southern Railway |
| Salary. | : | 32000 |



Mr.V.P Singh

**Name.Mr.V.P Singh .**
**Father name. MR.MEYYER**
**MOTHER NAME.MR.RAKKU( late)**
**Caste .B.C. Agamudyar .**
**Date of birth. 11.07.92.**
**Education. +2.**
**Private Driver and Own land Agricultural.**
**CONTACT.9790204182 9668251485.**



Raymond Santhosh

Name - Raymond Santhosh
DOB - 01/06/1989
Height - 5.8"
Weight - 68kg
Caste - Soliya Vellalar
Qualifi - MBA - Hr
Job - SM at Aditya Birla Capital
Salary - 4lakh per Annum
Father - Gnanaraj
Occup - Landlord ( Agri)
Mother - Home Maker
Brother - 1 - Married
Native - Trichy
Contact no 8122294098

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்





## Bio data

Name : Ps. P. Issac mathew
DOB : 25.07.1996
Height : 5.3
Education : Bsc.Optometry, B.Theology
Occupation : Pastor
Church : Arunodhayam Deva sabai

**Family details**

Father name : A. Sam prem kumar
Occupation : Pastor
Mother name : P. Mythili Priscilla
Younger brother : P. Shalom (Married)
Occupation : Staff nurse - CMC
Younger sister : P. Blessy karmel (PA)
Address : No 42G, Road shop, Ammoor post, Walajah taluk

Expectation : God fearing girl with ministry involvement. Without jewels.

Contact Us :
9047801793

" Praise The Lord "
விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது .... (எபி 13:4)

### புதுவாழ்வு - திருமண திட்டம் படிவம்



1. பெயர் : பவித்ரா (எ) ரேச்சல்
2. வயது : 23.
3. பிறந்த தேதி : 17.03.2001.
4. கல்வி தகுதி : B.Com.
5. வேலை விபரங்கள் :
6. மாத வருமானம் :
7. தந்தை பெயர் : வேலு (எ) பவுல்.
8. தாய் பெயர் : [illegible]
9. உடன் பிறந்தோர் : [illegible]
10. வீட்டு முகவரி : [illegible]
11. சொந்த ஊர் : [illegible]
12. இனம் (விருப்பப்பட்டால்) : SC.
13. சபை பெயர் : புது வாழ்வு (சபை)
14. சபை போதகரின் பெயர் : PR. [illegible]
15. ஞானஸ்தானம் பெற்றவரா : ஆம் / இல்லை
16. ஞானஸ்தானம் பெற்ற தேதி :
17. கைபேசி எண்கள் : 9750529355.

2024.07.22 10:58

# துன்பமே இன்பம் ஆகுமோ?

வாழ்க்கையின் இன்பத் தருணங்களை எப்போதும் எதிர்நோக்கிக் காத்திருக்கும் இனிய வாசகப் பெருமக்களே! வணக்கம்.

'எல்லாம் இன்ப மயம்!' என்கிற முழக்கம் கவிதைகளிலும் பாடல்களிலும் கதைகளிலும் மட்டுமே கேட்கிறதே, அன்றாட வாழ்வியலில் அது வந்து போவது எக்காலம்?; அப்படி அது வந்து போனாலும் ஒரு மின்னலைப் போலல்லவா தோன்றியவுடன் மறைந்து விடுகிறது?; நிரந்தர மகிழ்வாய்த் தங்கி நம்மை நிரந்தர இன்பத்தில் ஆழ்த்திடும் காலம் என்பது வாராதா? என்பதெல்லாம் நம் ஒவ்வொருவரின் ஏக்கமாகவே இருக்கிறது. துன்பமும் இன்பமும் மாறி மாறிவருமென்பதுவாழ்வியல்உண்மை என்றாலும், பெரும்பாலானோர் வாழ்வில் துன்பம் மட்டுமே தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறதே இதற்கு மாற்றுக் காண்பது எவ்வாறு?.

'இன்பம்' என்பதும் 'துன்பம்' என்பதும் எதிர் எதிர் உணர்வுகள்தாம். இன்பம் வந்தால் உள்ளமும் உடலும் மகிழ்ச்சியால் திளைத்திருப்பதும், உற்சாக உணர்வோட்டம் உடலெங்கும் பரவுவதும் இயல்பாக இருக்கிறது. இன்பச் சூழ்நிலையில் எதைச் செய்தாலும் சரியாகவும் திறமாகவும் இருக்கிறது; இன்பச் சூழ்நிலை பெரும்பான்மையும் வெற்றிச் சாதனைகளின் ஊற்றுக் கண்ணாகவே இருக்கிறது. ஆனால் துன்பச் சூழலோ முற்றிலும் மாறுபட்ட உணர்வுகளைக் கொண்டுவந்து சேர்க்கிறது; மனம் துயரத்தில் ஆழ்ந்து குழப்பத்தில் தடுமாறுகிறது; உடலோ சோகத்தில் தள்ளாடிச் செயலற்றுப் போகிறது. துன்பம் நமக்கு எதிர்மறைச் சிந்தனைகளைக் கொண்டுவந்து கொட்டுவதால், எல்லாச் செயல்களும் தோல்விப் பயணங்களாகவே முடிவடைகின்றன. துன்பத்தை இன்பமாக மாற்றும் மாயவித்தைதான் என்ன?.

இராமாயணத்தில், இராமனைப் பிரிய நேருகிற தருணத்தில் குகன் கலங்கி நிற்கின்றான். பிரிவு என்பது வந்துவிட்டால் துன்பம் வந்துவிடுமே! என்பது அவனது கலக்கத்திற்கான காரணம். அந்த நேரத்தில் குகனைப் பார்த்து இராமன், 'துன்புளது எனினன்றோ சுகம் உளது!' என்று கூறுகிறான். அதாவது 'எல்லா இன்பங்களும் முதலில் துன்பங்களாகவே வரும்; துன்பங்களின் நிறைவு இன்பங்களாகவே மலரும்!' என்பதை இந்தத் தொடரின் வாயிலாக இராமன் நமக்கு உணர்த்த விரும்புகிறான். பிரிவது துன்பமானால் பின்பு இணைவது இன்பம்தானே! என்று குகனிடம் உணர்த்தாமல் உணர்த்தி நிற்கிறான் இராமன். திருவள்ளுவரும்,

'இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்

துன்பம் உறுதல் இலன்'

என்கிறார். 'இடும்பை எனப்படும் துன்பம் என்பது, மனித வாழ்வியலின் போக்கில் அடிக்கடி ஏற்படுவதுதான்!; இயல்பானதுதான்! என்கிற உண்மையைப் புரிந்து கொள்பவன் இன்பத்தைத் தனியாகத் தேடாமல், துன்பத்தோடு வாழ்வதற்கும்கூடப் பழகிக்கொள்வான்' என்கிறார் திருவள்ளுவர். சுவைகளில் இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, கார்ப்பு, புளிப்பு, உறைப்பு எனப் பலவகை உண்டு என்றாலும் மனம் எப்போதும் இனிப்பை மட்டுமே நாடி நிற்பது போன்றது இன்பத்தை மட்டுமே வேண்டி நிற்பது ஆகும். எல்லாச் சுவைகளின் கூட்டுக்கலவைகளில் நமக்குக் கிடைக்கும் உணவுப் பொருள்கள், ஆகச் சிறந்த சுவைப்பையும், சத்துக்களையும் தருவதைப்போல, இனிப்புத் தவிர்ந்த பல்சுவை உணர்வுகளையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் நமக்கு வேண்டும்.

துக்கமோ மகிழ்ச்சியோ அதை நமது மனம் எவ்வாறு ஏற்றுக்கொள்கிறது என்பதைப் பொறுத்தே அவை தரும் விளைவுகளின் தாக்கமும் எதிர்மறையானதாகவோ நேர்முறையானதாகவோ இருக்கும். இன்பத்தை இன்பமாக எதிர்கொள்வதைப்போல, துன்பத்தையும் இன்பமாகவே



எதிர்கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு துன்பம் வருகிறது; அதற்கு எளிதாகத் துன்பம் கொடுத்து அதனைத் துரத் தள்ளிவிடுவதற்கு ஓர் எளிய வழியை வள்ளுவர் கூறுகிறார்.

'இடும்பைக்கு இடும்பைப் படுப்பர் இடும்பைக்கு

இடும்பைப் படாதவர்'

'துன்பத்தைக் கண்டு துவண்டுவிடாமல் துணிச்சலோடு எதிர்த்து நின்று போராடத் தெரிந்தவர்களே துன்பத்திற்குத் துன்பம் செய்து இன்பம் விளைவிப்பவர்கள்' என்பது வள்ளுவ வாக்கு. வாழ்க்கையில் துன்பமே இயல்பானது; அதனைத் துரத்தித் துரத்திப் போரிடுவதே இன்பம் விளைவிக்கும் செயலாகும். இப்போராட்டத்தில், துன்பமும் துயரமும் சூழத் தளர்ந்து போரிடாமல், தெம்பும் நம்பிக்கையும் பெருக உத்வேகத்துடன் போரிட்டால், வெற்றி இலக்கு மகிழ்ச்சியாகத்தானே இருக்கும். ஓர் ஊரில் ஒரு வணிகர் இருந்தார். பலசரக்கு வணிகம் செய்து வந்த அவருக்குப் போதுமான அளவுக்கு வருமானம் இருந்தது. நாலு பெண்குழந்தைகள். தனது வருமானத்தில் நாலு பெண்குழந்தைகளுக்கும் நல்ல கல்வியை வழங்கி ஆளாக்கி வளர்த்து விட்டார். இப்போதுதான் அவரது வாழ்க்கையில் துன்பம் எட்டிப் பார்க்கத் தொடங்கியது. நாலு பெண்களுக்கும் படிப்புக்கேற்ற நல்ல வேலை கிடைக்க வேண்டும்; அதோடு அவர்களுக்கு நல்ல மாப்பிள்ளைகள் கிடைத்துக் கல்யாணம்வேறு நல்லபடியாகச்செய்து முடிக்க வேண்டும். பல சரக்குக் கடை வணிகமும் தற்போது சிரமதிசையில் போய்க்கொண்டிருந்தது; போட்டிக்கு நிறையக் கடைகள் வந்ததனால் நஷ்டக் கணக்கு நாள்தோறும் பெருகிக் கொண்டே இருந்தது.

அந்த ஊரில் பெரிய கோவில் ஒன்று இருந்தது. அக்கோவிலுக்குச் சென்று அங்குள்ள கடவுளை நாள்தோறும் வழிபடும் வழக்கத்தைப் பல்லாண்டுகளாகக் கொண்டிருந்தார் வணிகர். முன்பெல்லாம் வியாபாரம் நன்றாக நடந்துகொண்டிருக்கும் போது, அவருக்கு நிதானமாக நின்று சாமி கும்பிடுவதற்கே நேரம் இருக்காது; ஆனால் இப்போதெல்லாம் கோவிலுக்கு வந்தால் மணிக்கணக்காக நேரத்தைச் செலவழிக்கிறார். தெய்வத்தின்முன் நின்று தன்னுடைய மகள்களின் வேலைவாய்ப்பு, திருமணம், மற்றும் வணிகத்தில் நேர்ந்துவரும் நஷ்டங்கள் ஆகியவை குறித்து நிறையவே புலம்பவும் தொடங்கி விட்டார்.

ஒருநாள் திடீரென அவரது மனதில் ஒரு விபரீத எண்ணம் ஏற்பட்டது. 'நாள்தோறும் கூட்டத்தோடு கூட்டமாய் வந்து சாமிமுன் நின்று நமது துன்பங்களையெல்லாம் புலம்பிவிட்டுச் செல்கிறோமே! உண்மையிலேயே சாமி அதனை முழுமையான கவனத்தோடு கேட்பாரா?. நாம் இப்படிச் செய்தால் என்ன? ஊரில் சில முக்கிய நபர்களைக் கூட்டத்தோடு கூட்டமாகச் சென்று பார்க்காமல், தனியாகச் சென்று தனிப்பட்ட முறையில் பார்த்தால் காரியம் நடந்துவிடுகிறதே!. அதைப்போல நாமும் சாமியை யாருமில்லாத நேரம் பார்த்துச் சென்று, நமது துன்பங்களைச் சொல்லிக் கதறி அழுதால் நிச்சயம் நமது துன்பங்களைக் கடவுள் நீக்கி விடுவாரல்லவா?'.

'சரியான முடிவு!' எனத் தீர்மானித்த வணிகர் அன்று இரவே கோவிலுக்குள் சென்று நடை சாத்தும் நேரத்தில் யார் கண்ணிலும் படாமல் கோவில் மண்டபத்தில் ஒளிந்து கொண்டார். அப்படியே ஒரு தூணில் சாய்ந்து அமர்ந்து சிறிது நேரம் கண்ணயர்ந்து தூங்கவும் தொடங்கிவிட்டார். நள்ளிரவு நேரத்தில் யாரோ பேசிக்கொள்ளும் சத்தம் கேட்டு படக்கென்று விழித்துக்கொண்டார். அந்தக்கோவில் பிரகாரத்தில் இருந்த ஒரு தூணும் ஒரு படிக்கல்லும் பேசிக்கொண்டன. அவை பேசிக்கொண்டிந்ததை எந்தவித ஓசையும் எழுப்பிவிடாமல் அமைதியாகக் கேட்டார் வியாபாரி.

படிக்கல் பேசியது, 'இந்தக் கோவிலில் கருவறையில் சாமியாக இருக்கக் கூடிய சிலையும், தூணாக இருக்கக் கூடிய நீயும், படியாகக் கிடக்கக் கூடிய நானும் ஆகிய நாம் மூவரும் ஒரே மலையில் அருகருகே கிடந்த பாறாங்கற்கள்தானே!. நம்மை வந்து பார்த்த சிற்பியும் கொத்தனாரும் நம்மை இப்படிப் பிரித்துத் தூணாகவும் சாமிசிலையாகவும், படிக்கட்டாகவும் மாற்றி இந்தக் கோவிலில் நம்மை அமைத்து விட்டார்கள். ஆனால் எனக்கு மட்டும் ஏன் இந்த மாதிரி தாங்கமுடியாத துன்பம்?. கோவிலுக்கு வருவோர் போவோர் என்று ஒவ்வொருவரும் மிதித்து மிதித்து நான் படும் வேதனைக்கு அளவே கிடையாது!'.

உடனே தூண் பேசியது, 'உனக்காவது ஆட்கள் வந்து போய் மிதித்தால் மட்டுமே வேதனை! மற்ற நேரத்தில் நீ மிதிபடாமல் இன்பமாக இருக்கலாம்; ஆனால் நான்அப்படியா?. என்னைத் தூணாக நிறுத்தி, என்மீது இந்தக் கோவிலையே தூக்கி நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இரவு பகல் எந்நேரமும் இறக்கி வைக்க முடியாத சுமையைச் சுமந்த வண்ணமே இருக்கும் என் துன்பத்தை நான் எங்குபோய்ச் சொல்வேன்?'.

'ஆமாம்! ஆமாம்! உன் துன்பமும் பெருந்துன்பம்தான். நம்மில் துன்பம் எதுவுமில்லாமல் ஜாலியாக இருப்பது சாமிசிலை மட்டும்தான்' என்றது படிக்கல். உடனே கருவறையிலிருந்து ஒரு விசும்பல் ஒலி கேட்டது; இலேசான வெளிச்சத்தில் வியாபாரி உற்றுக் கவனித்தார்; சாமி சிலை அழுது கொண்டிருந்தது. 'உனக்கென்ன கஷ்டம்?. அன்றாடம் பாலபிஷேகம், பன்னீர் அபிஷேகம், நெய் அபிஷேகம் என்று விதம்விதமான அபிஷேகங்களில் உன்னைக் குளிப்பாட்டி வணங்குகிறார்களே! உனக்கென்ன துன்பம்?' தூண் கேட்டது. 'எல்லாரும் என்னைக் குளிப்பாட்டுகிறார்கள்!, குளிர்விக்கிறார்கள்!, கும்பிடுகிறார்கள்! உண்மை. ஆனால் என் சிலை முன்னால் நின்றுகொண்டு ஒவ்வொரு பக்தரும் அவர்கள் படுகிற துன்பங்களை அடுக்கடுக்காய்ச்சொல்லிஅழும்போது, ஒவ்வொரு துன்பத்தையும் நானே அனுபவிப்பதுபோல் உணர்கிறேன். ஒரு நாளைக்குப் பத்தாயிரம்பேர் வந்து என்னை வழிபட்டாலும், எந்தக் குறையும் சொல்லாமல் மகிழ்ச்சியோடு வந்து என்னை எந்தத் தொந்தரவும் செய்யாமல் வழிபட்டுச் செல்பவர்கள் பத்துப்பேர்கூடத் தேற மாட்டார்கள்; அடுத்தவர் படும் துன்பப் பட்டியல்களிலிருந்து மீண்டு வந்து நான் எப்போது நிம்மதியாக இருக்கப்போகிறேன்? என்று நினைத்துப் பார்க்கிறேன்; அதற்கு வாய்ப்பே இல்லை!; துன்பத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு வாழ்வதிலும் ஒரு இன்பம் இருக்கும்; ஏற்றுக்கொள்வோம்!' என்றது சாமி சிலை. சாமியைத் தனிப்படப் பார்த்துத், துன்பப்பட்டியல் வழங்க வந்திருந்த வணிகருக்குக், கோவிலுக்குள்ளேயே இவ்வளவு புலம்பல்களா? என்று ஆகிப்போனது.

துன்பம் இருக்கும் வரைதான் நிவர்த்திக்கான தேடல்களும் தீர்ப்பதற்கான வேட்கைகளும் இருந்து கொண்டே இருக்கும். மனிதனுக்கு இன்பம் வேண்டும்! ஆனால் துன்பத்தை வென்றால்தான் இன்பம் சாத்தியம். துன்பமில்லாத உலகத்தில் போட்டிகளே இல்லை; போட்டிகள் இல்லையென்றால் வெற்றி ஏது? மகிழ்ச்சி ஏது?.

நம்மில் ஒருவருக்குத் துன்பம் என்றால் துடைக்க வரும் அத்தனை கரங்களும் அன்பின் கரங்கள்; சமூக ஒருங்கிணைவைத் துயரங்களே கயிறுகளாகச் சேர்ந்து பிணைத்து வைக்கின்றன. அடுத்தவர்க்கு உதவுவது அல்லது அடுத்தவரிடம் உதவிக்காகக் காத்து நிற்பது ஆகிய இவ்விரண்டு அன்பின் செயல்களும் துன்பத்தின் நெருக்கடிகளால் சாத்தியமாகின்றன; பிறகு உதவி என்னும் மகிழ்ச்சி மலர்ந்து மணம் பரப்புகிறது.

**சுந்தர ஆவுடையப்பன்**

தொடர்புக்கு- 9443190098

# கோவையில் ரேஸ் கார் ஓட்டிய நடிகர் அஜித்குமார்



கோவை கருமத்தம்பட்டி பகுதியில் உள்ள 111 ஏக்கர் பரப்பளவு மைதானத்தில் 3.8 கிலோ மீட்டர் நீள கார் பந்தய டிராக் உள்ளது. இந்த மைதானம் சர்வதேச தரத்தில் தயார் செய்யப்பட்டு உள்ளது. இதன் மூலம் கோவையில் சர்வதேச அளவிலான கார் பந்தயம், புகழ் பெற்ற பார்முலா 1 வகை கார் பந்தயங்களை நடத்த முடியும்.

இந்த நிலையில் நடிகரும், கார் பந்தய வீரருமான அஜித்குமார் கருமத்தம்பட்டியில் உள்ள சர்வதேச கார் பந்தய மைதானத்தை பார்வையிட்டார். பின்னர் பிரபல கார்பந்தய வீரர் நரேன் கார்த்திகேயனை சந்தித்தார். அங்கு அவர்கள் இருவரும் சிறிது நேரம் உரையாடினர்.

பின்னர் நடிகர் அஜித்குமார் அங்குள்ள கோ கார்ட்டிங் ரேஸ் காரை ஓட்டி பார்த்தார். நடிகர் அஜித்குமாரும், கார் பந்தய வீரர் நரேன் கார்த்திகேயனும் கலந்துரையாடும் வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# 'ஜனநாயகன்' படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் அப்டேட்

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான விஜய், தற்போது எச்.வினோத் இயக்கத்தில் 'ஜனநாயகன்' படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படம், அடுத்த ஆண்டு (2026) பொங்கல் பண்டிகையில் திரைக்கு வருகிறது. இதில் பூஜா ஹெக்டே, மமிதா பைஜூ, பிரியாமணி, பாபி தியோல், கவுதம் மேனன், நரேன் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்து வருகிறார்.

அரசியலில் குதித்துள்ள விஜய் நடிக்கும் கடைசி படம் என்று கருதப் படுவதால், 'ஜனநாயகன்' படத்துக்கு பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இந்த நிலையில், 'ஜனநாயகன்' படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் குறித்த தகவல் கிடைத்துள்ளது.




'ஜனநாயகன்' பர்ஸ்ட் சிங்கிள் தீபாவளிக்கு வெளியாகும் என ரசிகர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் கரூர் சம்பவத்தை தொடர்ந்து 'ஜனநாயகன்' படத்தின் அப்டேட்டை படக்குழுவினர் வெளியிடாமல் இருந்தனர். இந்தநிலையில் 'ஜனநாயகன்' பர்ஸ்ட் சிங்கிளை நவம்பர் முதல் வாரத்தில் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன, இந்த தகவல் விஜய் ரசிகர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கவர்ச்சியில் குதிக்க தயாராகும் 'மாஸ்டர்' பட நடிகை



கேரளத்து தேசத்தில் பிறந்து தமிழ் சினிமாவுக்கு வந்த அழகான நடிகைகளில் கவுரி கிஷனும் ஒருவர். '96' படத்தில் அவர் நடித்த ஜானு கதாபாத்திரம் அவருக்கு பெரியளவில் பெயரை ஏற்படுத்தி தந்தது. 'மாஸ்டர்', 'கர்ணன்', 'அடியே', 'ஹாட் ஸ்பாட்', 'போட்' என பல படங்களில் நடித்துள்ளார். மலையாளம், தெலுங்கிலும் நடித்து கொண்டிருக்கிறார்.

இவரது நடிப்பில் 'அதர்ஸ்' என்ற படம் விரைவில் திரைக்கு வருகிறது. குடும்ப குத்துவிளக்காகவே ஜொலித்து வந்த கவுரி கிஷன், தற்போது கவர்ச்சியாக நடிக்கவும் திட்டமிட்டுள்ளாராம். அதன் ஒருகட்டமாக லேசான கவர்ச்சி காட்டும் தனது புகைப்படங்களை அவர் வெளியிட தொடங்கியுள்ளார். கவர்ச்சியாக நடிக்கவும் ஒரிரு நிபந்தனைகளை விதிக்கிறாராம். வேண்டுவதை செய்துகொடுத்தால் வேண்டியதை குறைவில்லாமல் செய்து தருவாராம் கவுரி கிஷன்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

# வாசகர்கள் வட்டம்!

Dear Sir very informative and interesting news updates, all reader's will be admired to go-through.

Highlights of Kathir Oli from my perception

* Updated political news
* Mouth watering Food Recipes
* International news updates
* Fascinating Cinema news
* Necessary Health Tips especially for women
* Special coverage of Tamilnadu News
* News both from Tamil and English Language

My best wishes to Kathir Oli Media and Team who are creating wow experience in reading newspaper.

Keep up the same spirit Sir!

**Dr. Dennis Amirtharaj P.hd.,**

---

Today Morning 1 hour i have spent time to gothrough our Kathir Oli News paper Had a nice experience of knowing Global news updates.

**Dennis, Chennai**

---

Many thanks Bishop for your really nice and very useful Magazine " Kathiroli " ,
God Bless you , amen

---

கதிரொளி பத்திரிகை படித்தேன் ரசித்தேன் வெளி தேசத்தில் தமிழ் உணர்வுடன் தாங்கள் மிகவும் சிறப்பாக வெளியிட்டு வருகிறதை ஒரு பத்திரிகையாளராக மனதார வாழ்த்துகிறேன். சமூக நீதி குரல் பத்திரிகை சார்பாக எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**பரலோக தொழிலாளி போதகர் விபிஜியார்**

---

கதிர் ஒளியின் ஆங்கில செய்திகளை நான் தொடர்ச்சி யாக படிக்க முடிகிறது. செய்திகளை வெளியிட்டால் என் போன்ற ஆங்கிலம் தெரிந்த வாசகர்கள் ஆங்கில பத்திரிக்கை மட்டுமல்லாமல் நம் கதிர்ஒளியினையும் படித்து பயன் பெறுவார்கள்.

**- டேவிட் ஜான்சன், பாரிஸ்**

---

Thank God for your journal ministry.by monthly.we will get all information about political,general God bless you

**Pastor.victor.india**

---

Super Bishop, your magazine very nice one.

**Bishop. W. S. Vetha. Pollachi, Kovai**

---

அதிக காலத்திற்கு பின் தற்போது பத்திரிகை வாசிக்கிறேன். இது மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது. மிக்க நன்றி Sir.!

-K.R.A

---

நாகபாம்பிடமிருந்து நச்சுப் பற்கள் அகற்றப்பட்டால் அது ஆபத்தை விளைவிக்காது.

தேளிடமிருந்து நச்சு வால் அகற்றப்பட்டால் அது ஆபத்தை விளைவிக்காது. நீ எதை அகற்றினால் மனிதன் தீங்கற்றவனாவான்?

**பேராயர் ஞானாபரணம் ஜான்சன்.**

---

Bishop Your Kathiroli Tamil magazine is somthing special in the Tamil Literacy World , God Bless you ayya.

---

What a wonderful magazine "Kathiroli", Many Thanks Bishop, May God bless and your team, amen

**Bishop W.S. Vetha from Pollachi, Tamil Nadu, India.**

---

**Wonderful. News paper.pastor.**

கதிர் ஒளி பத்திரிக்கை, அருமையான நல்ல செய்திகள். செய்தி துணுக்குகள் மற்றும் இந்தியாவில் கிடைத்திறாத சில தகவல்களும் கொண்ட நல்ல கதிர் ஒளி. எனக்கும் எனது நண்பர்களுக்கும், மிகவும் பயனுள்ளது. பத்திரிகை என்பதை இதன் தெரிவிக்கிறேன். தொடர்ந்து இந்த கதிர் ஒளி பத்திரிக்கை தமிழ்நாட்டிலும் மற்றும் அல்ல. உலகம் முழுவதும் தமிழ் பேசும் மக்களுக்கும் இந்த. பத்திரிகை சென்றடைய எனது விருப்பம். நன்றி. **God bless you Pastor. By.pastor. S DavidRajan, Tamil NADU.**

# Bank of Canada lowers key interest rate to 2.25%, signals no further cuts being considered for now

In its second-last rate announcement of the year, the Bank of Canada decided on Wednesday to give more support to the economy by lowering its key rate by 25 basis points to 2.25 per cent.

Speaking to reporters following the announcement, Bank of Canada governor Tiff Macklem stressed that U.S. tariffs and trade uncertainty have hurt the Canadian economy.

"Canadian businesses and households are feeling the consequences of increased U.S. protectionism," he said. "It is difficult, and ongoing uncertainty is compounding the difficulty."

The impacts of tariffs on the economy are clearer now than they were a few months ago. Gross domestic product (GDP) contracted 1.6 per cent in the second quarter, while the labour market is getting weaker with hiring freezes and layoffs.

The unemployment rate is currently sitting at 7.1 per cent, its highest level since 2016 outside the COVID-19 pandemic.



Macklem suggested that, assuming economic growth and inflation evolve as the bank forecasted, policymakers are not considering further cuts for now.

"Governing council sees the current policy rate at about the right level to keep inflation close to two per cent while helping the economy through this period of structural adjustment," he said.

By "structural adjustment," he means that U.S. tariffs automatically hurt Canada's economic prosperity by adding costs and forcing us to look for other trading partners.

Macklem emphasized that the central bank already lowered its key rate by 50 basis points over the last two announcements and by 100 basis points since the start of the year.

"Our job is never done. The economy is always evolving," he said. "If the outlook changes materially, we're prepared to respond."

Stephen Brown, economist at Capital Economics, saw the comments by Macklem as a "sure sign" that the bank will keep interest rates unchanged at its next meeting on Dec. 10.

"We still think the bank will eventually be forced to cut interest rates by a further 50 basis points later next year," he wrote in a note to clients on Wednesday.

The Bank of Canada is expecting GDP will grow by just 1.2 per cent this year, followed by 1.1 per cent in 2026.

Asked whether central bankers still expect Canada will avoid a recession this year, the governor said it is possible the economy could see two consecutive quarters of negative growth — the definition of a technical recession.

"What we're not forecasting is a sharp downdraft in the Canadian economy with a big rise in the unemployment rate, which is what is typical of recessions," he said.

Macklem also said that while inflation is "slightly higher" than expected, policymakers believe inflationary pressures will come down in the months ahead.

Next Tuesday, federal Finance Minister François-Philippe Champagne will table the budget. The feds are expected to deliver a significant amount of fiscal stimulus to the economy, which is supposed to help growth but could trigger inflation.

"PM Carney is expected to chart out a vision for the economy to offset some of the structural change the (Bank of Canada) is unable to address," Andrew Hencic, economist at TD Bank, wrote in a note to clients.

"The structure and timing of potential outlays could materially affect the medium-term outlook for the economy, and the bank's decision-making."

# Neural Dispatch: Agentic AI's lack of intelligence, a DeepSeek moment and Nvidia's AI supercomputer

Cognitive warmup. Is this another DeepSeek moment for AI to contend with? Chinese tech giants Alibaba says their Alibaba Cloud platform has successfully tested a new compute pooling system called Aegaeon, which has reduced the number of Nvidia H20 GPUs required to serve dozens of models of up to 72-billion parameters, from 1,192 to 213 GPUs. This is according to a research paper presented this week at the 31st Symposium on Operating Systems Principles (SOSP) in Seoul, South Korea."Aegaeon is the first work to reveal the excessive costs associated with serving concurrent LLM workloads on the market," researchers from Peking University and Alibaba Cloud wrote in the paper. This may well be another example of working smarter and not necessarily spending on massive compute infrastructure – exactly something a lot of AI companies are intently talking about the past few weeks. Alibaba's methodology means a single GPU can support up to seven models for users to call upon, compared to a maximum of three models under alternative systems, researchers point out. .Investors will soon begin to realise this.

ALGORITHM

This week, we talk about Microsoft trying to find a more stable AI foundation that doesn't have to rely on OpenAI as much, Nvidia's 'personal AI supercomputer' that costs a pretty penny for your AI obsession, and OpenAI tells us again its concerned about the well-being of humanity in general.

Microsoft is redrawing AI alliances

Microsoft has introduced a new text-to-image model called MAI-Image-1, marking its first generative image system that's been developed in-house. It's a clear move away from reducing reliance on partners such as OpenAI, and perhaps even a signal (among many others; the widening scope of Microsoft's work with Anthropic an indicator too) that the Redmond-based tech giant want to have a stronger foundation to work with, and have more of a stake in the overall creative stack. Early testing has returned impressive results on AI benchmarks, which is always a good sign if generative foundations such as lighting, texture, and realism, aren't completely off from the outset. You'd be surprised how many image generators often fall short, even now. Strategically, it's a big deal — a potential for tighter integration into Copilot which Microsoft is talking up a lot off late, and makes a case for better control of intellectual property. As generative image tools become commoditised, control and quality will separate the winners from the noise.

There was considerable excitement this past week when Nvidia began to ship its compact AI computer, the DGX Spark, meant for developers and researchers. Priced at $3,999 (that'd be around ₹3,82.000 onwards), it packs some serious power with a Grace-Blackwell GB10 superchip and 128 GB unified memory delivering up to a petaflop of inferencing performance. This means models with hundreds of billions of parameters can now be trained or fine-tuned right on a desktop. Powerful AI compute hardware is coming to your desk. But I've been wondering, didn't we already have similar levels of compute available (and therefore Nvidia isn't breaking new ground here) in the form of the Apple Mac Studio with the M1 Max and the Mac Mini with an M4 Pro? Chanced upon a nice graphic by lmsys.org comparing benchmarks, which indicate that an M1 Max Mac Studio (this is priced around $2,000) consistently returns higher output tokens per second than Nvidia's computing foray. Even the really compact form factor of the Mac Mini (this is around $1,400) matches the DGX Spark. Makes one wonder, what the thought was...

AI therapy by day, AI temptation by night?

OpenAI has established what it calls an Expert Council on Well-being and AI. This will consist of eight specialists tasked with studying how constant interaction with AI systems affects human emotion, cognition, and behaviour. The focus is on defining what "healthy AI use" means across contexts, from education to therapy to everyday chatbots. The council will advise on design, ethics, and potential behavioural side effects. Is it a sign that the AI conversation is maturing? Unlikely. But it is clear OpenAI tends to bring us back to the smarter systems and impact conversations quite often, to keep investors, consumers and perhaps even policymakers happy. This is the same company that wants to make AI sexting mainstream, mind you. AGI can wait, porn is the revenue generator for the immediate future?

# ஜாதி தடைகளை தாண்டி கபடியில் எப்படி ஜெயித்தார் துருவ் விக்ரம் என்பது தான் பைசன் கதை




கிராமத்தில் வாழ்ந்து வரும் நாயகன் துருவ் விக்ரம் பள்ளியில் படித்து வருகிறார். இவருக்கு கபடி ஆட மிகவும் பிடிக்கும். கபடி வீரனாக இருந்தால் பிரச்சனைகள் வரும், விரோதம் வரும் என்று அப்பா பசுபதி மறுப்பு தெரிவிக்கிறார். ஆனால் அக்கா ரெஜிசா விஜயன், துருவ் விக்ரமுக்கு ஆதரவாக இருந்து வருகிறார். இதனால் பெரிய கபடி வீரனாக ஆக வேண்டும் என்று துருவ் விக்ரம் ஆசைப்பட்டு வருகிறார்.

அதே ஊரில் வசிக்கும் அமீரும், லால்-லும் இரண்டு ஜாதி தலைவர்களாக இருந்து கொண்டு அடிக்கடி சண்டை போட்டு வருகிறார்கள். இந்த சண்டை துருவ் விக்ரம் கபடி விளையாட்டிற்கு முட்டுக் கட்டியாக இருக்கிறது.

இறுதியில் தடைகளை கடந்து துருவ் விக்ரம் கபடி விளையாட்டில் சாதித்தாரா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை.

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் துருவ் விக்ரம், சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். படத்திற்காக கடுமையான உழைப்பை கொடுத்திருக்கிறார். விளையாட்டு வீரருக்கான உடல் அமைப்பு, உடல் மொழி என கதாபாத்திரத்திற்கு கச்சிதமாக பொருந்தி இருக்கிறார். சாதிக்க முடியாத ஏக்கம், காதல், என நடிப்பில் ஸ்கோர் செய்து இருக்கிறார்.

நாயகியாக நடித்திருக்கும் அனுபமா பரமேஸ்வரன், துருவ் விக்ரமை விடாமல் காதலிப்பது, காதலுக்காக வீட்டை எதிர்த்து சண்டை போடுவது என கவனிக்க வைத்து இருக்கிறார். படத்திற்கு பெரிய பலம் பசுபதியின் நடிப்பு. மகனை நினைத்து வருந்துவது, அடிவாங்குவது, என கிடைக்கும் இடங்களில் எல்லாம் அசத்தி இருக்கிறார். பாசமான அக்காவாக மனதில் பதிந்து இருக்கிறார் ரெஜிசா விஜயன்.

ஜாதி தலைவர்களாக வரும் அமீர் மற்றும் லால் ஆகியோர் அனுபவ நடிப்பை கொடுத்து இருக்கிறார்கள். குறிப்பாக இவர்கள் பேசும் வசனங்கள் கவனிக்க வைத்து இருக்கிறது.

குறிப்பிட்ட சமூகத்தில் பிறந்த ஒருவன், எப்படி வாழ்க்கையில் முன்னேறி வருகிறான் என்பதை படமாக்கி இருக்கிறார் இயக்குனர் மாரி செல்வராஜ். கதாபாத்திரங்களிடையே திறமையாக வேலை வாங்கி இருக்கிறார். ஆனால் திரைக்கதையில் கோட்டை விட்டு இருக்கிறார் இயக்குனர் மாரி செல்வராஜ். ஒரு பிளாஷ்பேக் சொல்லும் போது அதற்குள் இன்னொரு பிளாஷ்பேக் வருவதை தவிர்த்து இருக்கிறார். வழக்கமாக அவருக்கே உரிய குறிப்பிட்ட சமூகத்தை பற்றியே படத்தை இயக்கி இருக்கிறார். படத்தின் நீளமும், மெதுவாக செல்லும் திரைக்கதையும் பலவீனமாக அமைத்து இருக்கிறது.

எழில் அரசுவின் ஒளிப்பதிவு சிறப்பு. நிவாஸ் கே பிரசன்னாவின் இசையில் பாடல்கள் பெரியதாக எடுபடவில்லை. பின்னணி இசையை ஓரளவிற்கு ரசிக்க முடிகிறது.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

## ஜாதி பிடிக்கவில்லை என்று சொல்லுபவர்கள் சாகுங்கள், ஏன் அடுத்தவனை சாக்கடிக்கிறீர்கள் என்பதை இளைய தலைமுறைக்கு ஏற்றவாறு சொல்லி இருக்கிறது இந்த படம்



நாயகன் பிரதீப் ரங்கநாதன் நண்பர்களுடன் சேர்ந்து சர்ப்ரைஸ் டியூட் என்ற பெயரில் பலருக்கு பிறந்தநாள் சர்ப்ரைஸ் செய்து வருகிறார். இவருக்கு உறுதுணையாக தாய் மாமா மகள் நாயகி மமிதா பைஜு இருக்கிறார். இருவரும் நெருங்கிய நண்பர்களாக இருந்து வருகிறார்கள். ஒரு கட்டத்தில் மமிதா பைஜுக்கு பிரதீப் மீது காதல் வருகிறது. ஆனால், பிரதீப், மமிதா பைஜு மீது காதல் வரவில்லை தோழியாக தான் பார்க்கிறேன் என்று கூறி காதலை மறுக்கிறார்.

ஆறு மாதங்கள் ஆன நிலையில் பிரதீப்க்கு மமிதா பைஜு மீது காதல் ஏற்படுகிறது. ஆனால், மமிதா பைஜு வேறொருவரை காதலிப்பதாக சொல்லி காதலை ஏற்க மறுக்கிறார். உடனே பிரதீப் மமிதா பைஜுவை காதலுடன் சேர்த்து வைக்க முடிவு செய்கிறார். அதற்குள் சரத்குமார் பிரதீப் மமிதா பைஜு இருவருக்கும் திருமண ஏற்பாடு செய்து விடுகிறார்.

இறுதியில் பிரதீப் ரங்கநாதன், மமிதா பைஜுவை திருமணம் செய்து கொண்டாரா? மமிதா பைஜுவை காதலருடன் சேர்த்து வைத்தாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் பிரதீப் ரங்கநாதன், தனக்கே உரிய ஸ்டைலில் நடித்து அசத்தி இருக்கிறார். காதல், சோகம், அழுகை என நடிப்பில் ஸ்கோர் செய்து இருக்கிறார். குறிப்பாக பாத்ரூமில் அழும் காட்சியில் கண் கலங்க வைக்கிறார்.

நாயகியாக நடித்திருக்கும் மமிதா பைஜு, துறுதுறு பெண்ணாக நடித்து கவர்ந்து இருக்கிறார். பிரதீப் உடன் செல்ல சண்டை, கோபம், என ரசிகர்களை உற்சாகப்படுத்தி இருக்கிறார். சரத்குமாரின் நடிப்பு படத்திற்கு பெரிய பலம். காமெடி, வில்லன், ஜாதி வெறியன் என அனுபவ நடிப்பை கொடுத்து இருக்கிறார்.

தற்போது இருக்கும் சூழ்நிலையிலும் வேற ஜாதி பிடிக்கவில்லை என்று சொல்லுபவர்கள் சாகுங்கள், ஏன் அடுத்தவனை சாக்கடிக்கிறீர்கள் என்பதை இளைய தலைமுறைக்கு ஏற்றவாறு சொல்லி இருக்கிறார் இயக்குனர் கீர்த்தீஸ்வரன். ஜாதி ஒரு ஒன்லைன் ஆக இருந்தாலும் படம் ஆரம்பம் முதல் இறுதி வரை காதல், நட்பு, காமெடி, சுவாரசியம் என்று விறுவிறுப்பாக திரைக்கதை நகர்த்திருக்கிறார்.

சாய் அபயங்கர் இசையில் பாடல்கள் அனைத்தும் சூப்பர். பின்னணி இசை கூடுதல் பலம்.

நிகேத் பொம்மியின் ஒளிப்பதிவு கண்களுக்கு விருந்து படைத்து இருக்கிறது.

# கச்சா எண்ணெய்யை வைத்து நடக்கும் அரசியல் குறித்த படம்




வடசென்னையின் கடலோர பகுதியில் கடலை ஒட்டி கச்சா எண்ணெய் குழாய் இணைப்பு கொண்டு வரப்படுகிறது. இந்த திட்டத்தால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கும் என அங்குள்ள மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்து போராடி வந்தனர். இதில், சாய்குமாரின் நண்பர்கள் இருவர் உயிரைவிட, கச்சா எண்ணெய்யை திருடி விற்று அதில் வரும் பணத்தில் மீனவ மக்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுக்கிறார்.

இப்படி காலம் போக, ஒரு கட்டத்தில் பெட்ரோல் பங்கு உரிமையாளர் சங்க தலைவராக உயர்கிறார். சாய்குமாரின் வளர்ப்பு மகனான ஹரிஷ் கல்யாண், கச்சா எண்ணெய்யை சரியான முறையில் பிரித்தெடுத்து தனியார் தொழிற்சாலைக்கு அனுப்பி, பின்னர் அங்கிருந்து பெட்ரோல் மற்றும் டீசலாக கொண்டு வந்து பெட்ரோல் பங்குகளுக்கு அனுப்பும் வேலையை செய்கிறார். இவர்களுக்கு போட்டியாக வரும் விவேக் பிரசன்னா, சாய் குமாரின் பெட்ரோல், டீசல் லாரிகளில் இருந்து பாதியை திருடி கலப்படமாக மாற்றுகிறார். இதற்கு போலீஸ் அதிகாரியான வினய் உதவுகிறார். தங்களது பெட்ரோல் மற்றும் டீசல் கலப்படமாக மாற்றுவதை ஹரிஷ் கல்யாண் கண்டுபிடிக்கிறார்.

இதுதொடர்பாக கேட்கும்போது, தனக்கும் குழாயில் இருந்து எண்ணெய் எடுக்க அனுமதி வேண்டும் என விவேக் பிரசன்னா கேட்கிறார். அப்போது, வினய்க்கும் ஹரிஷ் கல்யாணுக்கும் சண்டை வருகிறது. இதனால், ஹரிஷ் கல்யாண் தலைமறைவாகிறார்.

கச்சா எண்ணெயை எடுக்க வினயும், விவேக் பிரசன்னாவும் சதி திட்டங்களை தீட்டுகின்றனர். இதை அறியும் ஹரிஷ் கல்யாண் கடைசியில் என்ன செய்தார்? இருவரையும் எப்படி கையாண்டு, பெட்ரோல், டீசல் பிரச்சனையை தீர்த்தார் என்பது மீதிக்கதை.. ஒரு மாஸ் ஆக்ஷன் திரைக்கதையின் ஹீரோக்கான அத்தனை முயற்சியையும் ஹரிஷ் கல்யாண் முடிந்தவரை செய்திருக்கிறார். படத்திற்கு அவரது பங்களிப்பு சிறப்பு.

படம் திரைக்கதையில் ஆங்காங்கே தொய்வும், ஆங்காங்கே வேகமும் எடுக்கிறது. ஆனால், ஏகப்பட்ட லாஜிக் மீறல்கள் கண் கூடாக தெரிகிறது.

# ஐநா தீர்மானம்: மருத்துவர் மனோகரனின் விழிகள் எங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன..!

T.Thibaharan டிண கட்டுரை

இலங்கை இனப்பிரச்சினை என்பது இலங்கை தீவில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுக்கும், சிங்கள மொழி பேசும் மக்களுக்கும் இடையிலான இன முரண்பாட்டை மட்டும் மையப்படுத்திய ஒரு பிரச்சினை அல்ல. இந்தப் பிரச்சினை இந்து சமுத்திர அரசியல் சார்ந்த பிரச்சினையாகவும், அதே நேரம் இந்திய உபகண்டம் சார்ந்த பிரச்சினையாகவும், உலகம் தழுவிய அரசியல் ஆதிக்கத்தின் செல்வாக்கு உட்பட்ட பிரச்சினையாகவும் அமைந்திருக்கின்றது. அதனாலேதான் இலங்கை இனப்பிரச்சினையை தேசிய இனப் பிரச்சினை என அழைக்க வேண்டியுள்ளது.

இத்தகைய இலங்கைத் தீவின் தேசிய இனப் பிரச்சினையை இலங்கை தீவுக்குள்ளோ அல்லது இந்திய உபகண்டத்துக்குள்ளோ வைத்து தீர்த்து விட முடியாது.

இலங்கையில் பெரும் பொருளாதார முதலீடுகள்

அது உலகம் தழுவிய அரசியலோடும் ஆளுகைப் போட்டியோடும் இந்து சமுத்திர அரசியலோடும் அதன் அழுகையோடும் பொருத்தி சமப்படுத்தியே தீர்க்கப்பட முடியும். எனவே இலங்கையின் இனப் பிரச்சினையை இலங்கை தீவுக்குள் அதிகாரப் பகிர்வின் மூலம் இலகுவாக தீர்த்துவிடப்பட முடியாது. காரணம் இலங்கைத்தீவு உலகம் தளவிய அரசியலின் ஒரு கேந்திர ஸ்தானத்தில் அமைந்துள்ளது.

இலங்கையின் கேந்திரத் தன்மை உலக அரசியலை நிர்ணயிக்கும் சக்திகளுக்கு அவசியமாக உள்ளது. இன்றைய உலகின் அரசியலை தீர்மானிக்கின்ற சக்திகள் அவை பொருளாதாரத்தின் அடித்தளத்தில் மையம் கொண்டுள்ளன.

பொருளாதார கட்டமைப்பு பலத்தின் ஊடாகவே இன்றைய உலக அரசியலை தீர்மானிக்கும் சக்திகள் தம்மை முதன்மைப்படுத்துகின்றன. இந்த அடிப்படையில் கோவிட் தொற்று இடறுக்குப் பின்னர் உலக அரசியலின் போக்கு மாற்றத்தைச் சந்தித்து வருகிறது. இந்த மாற்றம் இலங்கை அரசியலிலும். அதன் போக்கிலும் செல்வாக்கைச் செலுத்த தொடங்கிவிட்டது.

இதன் விளைவுகள்தான் சீனா இலங்கை நோக்கி வந்து இலங்கையில் பெரும் பொருளாதார முதலீடுகளை செய்ய முனைகிறது. அதற்கு ஏட்டிக்குப் போட்டியாக இந்தியாவும் இலங்கைக்குள் பொருளியல் முதலீடுகளைச் செய்ய முண்டியடிக்கிறது. அதே நேரத்தில் அமெரிக்காவும் ஜப்பானும் இலங்கையை நோக்கி தமது பார்வையை திருப்பியிருக்கின்றன.

இலங்கை தீவு இந்தியா உபகண்டத்துக்கு மிக நெருக்கமாக 32 கிலோமீட்டர் இருப்பதனால்அது இந்தியாவின்பாதுகாப்பு வலயத்துக்குள்ளும், வளையத்துக்குள்ளும் இருப்பதனால் இந்தியா இலங்கை நோக்கி எப்போதும் தனது பார்வையை செலுத்தும். இலங்கையின் அரசியல் மாற்றத்தில் அது செல்வாக்கு செலுத்த முனையும்.

இலங்கையின் சர்வதேச உறவையும் அது கவனமாக கண்காணிக்கும், கட்டுப்படுத்த முனையும். அது இயல்பான இந்திய அரசின் வெளியுறவு நடவடிக்கையாகவும் அமையும். இந்த நடவடிக்கைகளுக்குள் ஈழத் தமிழர் பிரச்சினையும் உள்ளடங்கும். ஈழத் தமிழர் பிரச்சனையின் அல்லது ஈழத் தமிழர்களுக்கான உரிமைகள் சார்ந்த விடயத்தில் அது தனது உள்நாட்டு அரசியலையும் கவனத்தில் கொள்ளும்.

இந்தியா உலகளாவிய அரசியல் நலன்

இந்தியா ஒரு பல்தேசிய இனங்களின் அரசு என்ற அடிப்படையில் நூற்றுக்கு அதிகமான தேசிய இனங்கள் உள்ள தனது உள்நாட்டு பிரச்சினையையும் இலங்கை இன பிரச்சினையோடு ஒப்பு நோக்கி பார்க்க முனையும். அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் அது எடை போடும். இந்தியாவைப் பொறுத்தளவில் அது தனது பாதுகாப்பு வளையத்துக்குள் தன்னை பாதுகாப்பதற்கான புவி சார் அரசியலை (Geopolitics) மட்டுமே மையப்படுத்தியதாகவும் அதுவே தனது தேசிய நலனாகவும் கொண்டுள்ளது.

இன்றைய நிலையில் இந்தியா உலகளாவிய அரசியல் நலன்களில் (Global Political Interests) பெரும் பாய்ச்சலை செய்ய வல்ல நிலையில் இல்லை. ஐநா சபையில் வீட்டு அதிகாரம் உள்ள ஐந்து நாடுகளில் சீனா தவிர்ந்த ஏனைய அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நான்கு நாடுகளின் சனத்தொகையிலும் விட இந்தியாவின் சனத்தொகை மிகப் பெரியது.

ஆயினும் இந்தியாவிற்கு ரத்து அதிகாரம் இல்லை. ஆனால் ரத்து அதிகாரம் உள்ள இந்த நான்கு நாடுகளையும் சார்ந்து இந்தியா தனது சர்வதேச நலனையும், அரசியலையும் முன்னெடுக்கிறது. அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய மேற்குலகத்தைச் சார்ந்து தனது உலகம் தழுவிய அரசியல் செல்வாக்கை அது பிரயோகித்து வருகின்றது. அதே நேரத்தில் ரஷ்யாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்த நாடாகவும், எப்போதும் ரஷ்யாவின் அணியில் உள்ள நாடாகவுமே உள்ளது.

இந்த இரட்டை நிலையில் அது இரண்டு துருவங்களையும் ஒரு சம நேர்கோட்டில் வைத்து முகாமைத்துவம் செய்கிறது. இவற்றிற்கு இந்தியாவின் புவிசார் கேந்திர முக்கியத்துவம் (Geo-strategic importance) அதன் பெரிய சனத்தொகையும் இந்துசமுத்திரத்தின் பிராந்திய வல்லரசாக வளர்ந்து வரும் நாடாகவும் இருப்பதுவே காரணமாகும்.




ஆயினும் 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்து சமுத்திர நாடல்லாத சீனா இலங்கைக்குள் அடிக்கட்டுமான அபிவிருத்தி மற்றும் வர்த்தகம் என்ற முறையில் புதிய பட்டுப்பாதை கோட்பாடு(New Skill Route Theory) அதாவது இந்த பட்டுப்பாதை திட்டத்தில் தரைசார் வீதி கடல்சார் வீதி (The Belt And Road Initiative) அபிருத்தி என சீனா ஆரம்பித்திருக்கும் "One belt one road" திட்டத்தில் கேந்திர ரீதியில் சுற்றிவளைப்பது (Encirclement) அதாவது நாடுகளை கிடுக்குப்பிடிக்குள் சிக்குண்ணச் செய்வது (Entanglement) எதிரிக்கான அனைத்து மார்க்கங்களையும் அடைத்து மூடுதல்(Envelopment) என இந்த Encirclement, Envelopment and Entanglement மூன்று ‘‘EN’ களைக் கொண்ட வியூகமான புதிய பட்டுப்பாதை திட்டத்தை அபிவிருத்தி மற்றும் வர்த்தகம் என்ற முறையில் இந்துசமுத்திர நாடுகளில் காலூன்றி அது தனது உலகம் தழுவிய அரசியலை விஸ்தரிப்பதற்கான ஒநடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகம்

உலகளாவிய வர்த்தகத்துக்கு இந்து மாகடல் மிக அவசியமானது. அட்லாண்டிக் சமுத்திரத்தையும் பசுபிக் சமுத்திரத்தையும் இணைக்கும் தொடுகடலாகவும் தாய்க்கடலாகவும் இந்து சமுத்திரம் அமைந்திருக்கிறது. இது 70வீத 5 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட உலகின் மிகப்பெரிய சமுத்திரம். இந்தச் சமுத்திரத்தின் கரைகளில் 36 நாடுகள் உள்ளன. இந்து சமுத்திரக்கரைகளில் உள்ள துறைமுகங்களை அண்டிப் பிழைக்கும் நாடுகளாக 11 நாடுகள் உள்ளன.

ஆகவே இந்த 47 நாடுகள் தவிர்ந்து இந்து சமுத்திரத்தில் ராணுவ தளத்தை கொண்டுள்ள நாடாக 2020 வரை அமெரிக்காவும் பிரித்தானியாவுமே இருந்து வந்தன. ஆனால் கொரோனாவுக்கு பின்னர் சீனா செங்கடலில் ஜிபிட்டியில் ஒரு ராணுவத் தளத்தை அமைத்துக் கொண்டு விட்டது. அதே சமநேரத்தில் மியான்மாவில் கோர்க்கோ தீவு, இலங்கையில் அம்பாந்தோட்டை, பாகிஸ்தானில் குவாதார, கெனியாவில் லாமோ தீவு ஆகிய துறைமுகங்களை நீண்ட கால குத்தகைக்கு பெற்றுக் கொண்டு விட்டது. இந்தப் பின்னணியில் இன்று இந்து சமுத்திரத்திற்கான ஆளுகைப் போட்டி ஆரம்பமாகிவிட்டது. பிரித்தானியாவும் அமெரிக்காவும் கூட்டாக டியாகோ காசியாவில் 1960ம் ஆண்டின் பின்னர் ராணுவ, கடற்படை, விமானப்படை கூட்டுத்தளத்தை அமைத்து இந்து சமுத்திரத்தை கண்காணித்து வந்தனர்.

ஆயினும் இப்போது ஆசிய ஆபிரிக்க கண்ட பகுதிகளை அண்டிய துறைமுகங்களை சீனா பெற்றதனால் இந்து சமுத்திரத்தின் தென்கோடியில் அமைந்திருக்கின்ற டியாகோ காசியாவின் முக்கியத்துவம் சீனாவால் உடைக்கப்பட்டு விட்டது. இந்து சமுத்திரத்தை கண்காணிப்பதற்கு ஏற்ற ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகம் அமெரிக்காவுக்கு தேவைப்படுகின்றது.

இந்த தேவையை நிவர்த்தி செய்யக் கூடியதாக இலங்கைக்கு இருப்பதனால் தற்போது அமெரிக்கா இலங்கை நோக்கி தனது பார்வையை திருப்பி உள்ளது என சர்வதேச அரசியல் ராணுவ ஆய்வுகளைச் செய்ய வல்லவர்களால் கணிக்கமுடியும்.

அமெரிக்காவின் வருகைக்கான முன் ஒத்திகை

அதனை மெய்ப்பிப்பது போலவே அமெரிக்காவின் போர்க்கப்பல் சான்டா பாப்ரா எனப்படும் USS Santa Barbara (LCS 32) 16 ஒகஸ்ட் 2025 அன்று இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் முதன் முறையாக நங்கூரமிட்டு சில நாள் தரித்துச் சென்றது. இதனை அமெரிக்கா–இலங்கை உறவில் முன்னேற்றம் அடைந்து வருகிறது என இலங்கை அரசு குறிப்பிட்டு இருந்தது. அதே நேரத்தில் இலங்கையின் கிழக்குக் கடற்கரை ஓரத்தில் அறுகம்பை என்னுமிடத்தில் அதிக இஸ்ரேயிலியர்கள் வந்தது தங்கச் செல்வதாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் விஷனமடையும் செய்திகள் வெளி வருகின்றன. இஸ்ரேலியர்களின் வருகை அமெரிக்காவின் வருகைக்கான முன் ஒத்திகை என கருதமுடியும். அதனை ஒட்டியே அம்பாறை மாவட்டத்தின் அறுகம்பே அல்லது திருகோணாமலையை பெறுவதற்கான முயற்சிகள் எடுப்பதாகவும் ஊகிக்கலாம்.

இவ்வாறு பிராந்திய வல்லரசுகளும் சர்வதேச வல்லரசுகளும் தமக்கான தளங்களைப் பெறுவதற்கான போட்டியில் முட்டி மோதும் களமாக இலங்கை தீவு எதிர்காலத்தில் மாறப் போன்றது என்பது உண்மைதான். இந்த முட்டி மோதும் களத்துக்குள் ஈழத் தமிழர் சுயநிர்ணயத்திற்க்கான போராட்டமும் அகப்பட்டு பெரும் நெருக்கடிகளை சந்திக்கப் போகின்றது என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இந்தச் சூழமைவில் உலகளாவிய அரசியலையும், சர்வதேச உறவையும் ஈழத் தமிழர் தமது இருப்பியல் சார்ந்து பலப்படுத்த வேண்டிய தேவை தோன்றி வருகிறது.

இந்த நிலையில் இந்துமாகடல் அரசியலில் ஈழத் தமிழர் எத்தகைய பங்கையும் பாத்திரத்தையும் வகிக்க முடியும்? ஈழத் தமிழர்களின் தாயக நிலப்பரப்பின் அமைவிடம் காரணமாக நாம் தவிர்க்க முடியாத இந்து மகாகடல் அரசியலில் பிணைக்கப்பட்டு இருக்கிறோம் என்பதை ஈழத் தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். விருப்பு வெறுப்புகளை கடந்து பிராந்திய, சர்வதேச உறவை வளர்க்கவல்ல ஒரு தெளிவான வெளியுறக் கொள்கையை முதலில் நாம் மறுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

அத்தகைய ஒரு வெளியுறவுக் கொள்கையே ஈழத் தமிழர்களை இந்துமகாகடல் அரசியல் சூறாவளியில் இருந்து பாதுகாக்கவல்ல பாதுகாப்பு கவசமாக அமையும்.

இந்த சமுத்திரத்தில் அமைவிடம் சார்ந்து ஈழத் தமிழர் தாயகம் இத்தகைய பங்கையும், பாத்திரத்தையும் வகிக்க போகிறது என்று பார்க்கின்ற போது இந்து மகாகடலில் எமக்கு இருக்கின்ற ஆளுகைக்கான வாய்ப்புகள் பற்றி பார்ப்பது அவசியமானது. இலங்கைத்தீவின் மொத்த கடற்கரையோர நீளம் 1516.4 கிலோமீட்டர்களாகும். இங்கு14 கரையோர மாவட்டங்கள் உள்ளன அவற்றில் 7 மாவட்டங்கள் தமிழர் தாயத்திற்குள் அடங்கும்.

கொழும்பு-31.2 கிலோமீட்டர் கம்பஹா-34.3 கிலோமீட்டர் களுத்துறை-34.3 கிலோமீட்டர் காலி-79.3 கிலோமீட்டர் புத்தளம்-241.3 கிலோமீட்டர் மாத்தறை-51.2 கிலோ மீட்டர் அம்பாந்தோட்டை-145.5 கிலோமீட்டர் ஆகவே ஸ்ரீலங்காவின் மொத்தம் கடலோரம் 617.1 கி.மீ மட்டுமே. இதில் புத்தளம் மாவட்டத்தின்-241.3 கி.மீ கடற்கரையோரப்பகுதியின் பெரும் பகுதியில் தமிழ்பேசும் மக்களே வாழ்கின்றனர்.

அதே நேரம் தமிழர் தாயக நிலப் பரப்புக்குள்ள அடங்கும் மன்னார்-173.4 கிலோமீட்டர் யாழ்ப்பாணம்/ கிளி -336.6 கிலோமீட்டர் முல்லைத்தீவு-66.8 கிலோமீட்டர் திருகோணமலை-83.9 கிலோமீட்டர் மட்டகளப்பு- 120.6 கிலோமீட்டர்அம்பாறை-118கிலோமீட்டர் என அளவீடுகள் இருப்பதனால் தமிழர் தாயகத்தின் மொத்தம் கடலோரம் 899.3 கி.மீ ஆக உள்ளது.

தரவுகளின் அடிப்படையில் இலங்கை தீவில் தமிழர் தாயகமே அதிக கரையோரப் பகுதியைக் கொண்டதாகவும் இந்து சமுத்திரக்கரையை கொண்டதாகவும் அமைந்திருக்கிறது என்பதனால் தமிழர் தாயகம் இந்து மகா கடல் அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதியாக வரலாற்றில் என்றும் இல்லாத அளவு இன்று முக்கியத்துவம் பெறுகிறது.

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தில் கடற்கரையோரங்கள் பிராந்திய வல்லரசினதும் சர்வதேச வல்லரசுகளினதும் கவனத்தை பெறுவதோடு தமிழர் தாயகத்தின் துறைமுகங்களை தமதாக்குவதற்கு அவை போட்டி போடுகின்றன. இந்நிலையில் ஈழத் தமிழர்கள் தம்மை தேசிய கட்டுமானத்துக்கு உட்படுத்தி பலம் வாய்ந்த உள்ளக அரசியலை மேற்கொள்வதன் ஊடாக சர்வதேச பேரம் பேசல்களில் ஈடுபட முடியும்.

இப்போது தமிழர் தாயகத்தின் கிழக்குக் கடற்கரை ஓரத்தில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள அறுகம்குடா இப்போது அருகம்பே என சிங்கள பெயர் சூட்டப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. ஒரு மக்கள் கூட்டம் பூர்விகமாய் வாழ்ந்த இடத்திலிருந்து இடம்பெயர வைத்தோ அல்லது அவர்களின் சனத்தொகை ஐதாக்கியோ, குறைத்தோ அல்லது இல்லாத ஒழிப்பதோ இனப்படுகொலை என்ற வகைக்குள்ளேயே அடங்குகிறது.

அவ்வாறே ஒரு வாழ்விடத்தின் பெயரை இன, மொழி, மதவாதம் சார்ந்தோ மாற்றுவது என்பவை எல்லாம் இனவழிப்பு என்ற பகுதிக்குள்ளேயே அடக்கப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் தமிழர்களின் பூர்வீக வாழ்விடமான அறுகம்குடா இன்று சிங்களத்தில் இனவாத நோக்கில் அருகம்பே என்ன ஆக்கப்பட்டதும் ஒரு தமிழினப்படுகொலைதான்.

பெருமளவு இனச் சுத்திகரிப்புக்கு உட்பட்டிருக்கும் அம்பாறை மாவட்டம் அதனுடைய கடற்கரை ஓரம் தொடர்ந்து தமிழர்களை வாழ்கிறார்கள். மட்டக்களப்பின் எல்லையிலிருந்து திருக்கோவில் வரைக்கும் முழுமையாக கடற்கரையோரம் தமிழர்களின் கையிலேயே உள்ளது. அதற்கு அப்பால் இப்போது அறுகம்குடா சிங்களமயமாக மாறத் தொடங்கி விட்டது. அதேநேரத்தில் அதற்கு அப்பால் அம்பாறை மாவட்டத்தின் எல்லையான பாணமை சிங்களவர்களும் தமிழர்களும் வாழும் ஒரு கிராமமாக மாறி உள்ளது. தமிழர்களின் அம்பாறை மாவட்டத்தின் தென் எல்லை உகந்தை முருகன் கோவிலுடன் முடிவடைகிறது. உகந்தை முருகன் ஆலய வளாகம்கூட இப்போது சிங்களமயமாகவே காட்சியளிக்கிறது. திருக்கோவிலில் இருந்து குமுக்கன் ஓயா வரையான கடற்கரையோரம் ஆழம் கூடிய கடற்பரப்பவும் அதே நேரத்தில் கடரே கடல் அரிப்புக்கு உட்படும் பகுதியாகவும் உள்ளது. அம்பாறை மாவட்டத்தில் ஏற்கனவே நிந்தவூர் பகுதியில் ஒலுவில் துறைமுகம் அரசியல் காரணங்களுக்காக அமைக்கப்பட்டது.

**பொறுப்பு துறப்பு! இக்கட்டுரையானது T.Thibaharan அவரால் எழுதப்பட்டு, இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. இக்கட்டுரைக்கும் கதிரொளிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.**

# அமெரிக்கத் தூதுவரை விமர்சனம் செய்த டக் ஃபோர்ட்



அமெரிக்க தூதர் பீட் ஹூக்ஸ்ட்ரா (Pete Hoekstra) கனடாவின் வாஷிங்டன் பிரதிநிதி டேவிட் பேட்டர்சனிடம் (David Paterson) மன்னிப்பு கேட்க வேண்டும் என ஒன்டாரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட், வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கா விதித்த இறக்குமதி வரிகளுக்கு எதிரான தொலைக்காட்சி விளம்பரத்தை (anti-tariff TV ad) கடுமையாக விமர்சித்த ஹூக்ஸ்ட்ரா, பேட்டர்சனை ஒரு நிகழ்வில் மரியாதையற்ற வார்த்தைகளால் திட்டியதாக கூறப்படுகிறது.

ஹூக்ஸ்ட்ராவின் நடத்தை முற்றிலும் ஏற்க முடியாதது; அது தூதருக்கு ஏற்ற நடத்தை அல்ல என தெரிவித்துள்ளார்.

ஃபோர்ட் நகைச்சுவையான முறையில் தூதுவரை கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

ஒன்டாரியோ அரசு வெளியிட்ட அந்த விளம்பரத்தில், முன்னாள் அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகனின் (Ronald Reagan) சுதந்திர வர்த்தகத்தை ஆதரிக்கும் உரை இடம்பெற்றது.

இதனால் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடும் கோபமடைந்ததாகக் கூறப்படுகிறது. அந்த விளம்பரத்திற்குப் பிறகு டிரம்ப், கனடாவுடன் நடந்துவரும் வர்த்தக பேச்சு வார்த்தைகளை திடீரென நிறுத்தி, கனடிய பொருட்களுக்கு கூடுதல் 10% சுங்க வரி விதிப்பதாக எச்சரித்திருந்தார்.

www.kathirolimedia.ca

## கனடிய செய்திகள்

# கனடா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்களில் ஏற்பட்டுள்ள மாற்றம்




கனடாவில் இளைஞர்கள் குறைந்தபட்ச ஊதியம் வழங்கும் வேலைகளைப் பெறுவதுகூட நாளுக்கு நாள் கடினமாகி வருகிறது.

நாட்டின் இளைஞர் வேலை இல்லா விகிதம் கடந்த சில ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளதாக கனடா புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின் படி, செப்டம்பர் மாதத்தில் இளைஞர் வேலைஇல்லா விகிதம் 15 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இது 2010க்குப் பிறகு காணப்பட்ட மிக உயர்ந்த நிலையாகும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், நிறுவனங்கள் நிரப்ப முயற்சிக்கும் வேலைவாய்ப்புகள் 15 சதவீதம் குறைந்துள்ளன என அரச புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வேலைவாய்ப்பு சந்தை மிகுந்த நெரிசலாகி வருகிறது. ஒவ்வொரு பதவிக்கும் பல விண்ணப்பங்கள் வருவதால் தேர்வு செய்வது கடினமாகியுள்ளது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

புதிய வேலை தேடுபவர்களுக்கு வாய்ப்புகள் கிடைப்பது கடினமாகியுள்ளது.

நிறுவனங்கள் புதிய பணியாளர்களை நியமிக்காத சூழல் இளைஞர்களுக்குமிகுந்தபாதிப்பைஏற்படுத்துகிறது தெரிவிக்கபப்டுகின்றது.

# கனடாவில் பயங்கரம்; பட்டப்பகலில் வீட்டுக்கு வெளியே சுட்டுக் கொலைப்பட்ட இந்திய தொழிலதிபர்

கனடாவில் இந்தியாவை சேர்ந்த தொழிலதிபர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தொழிலதிபரும், இச்ணச்ட் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் தலைவருமான தர்ஷன் சிங் சாஹ்சி (68), பிரிட்டிஷ் கொலம்பியாவின் அபோட்ஸ்ஃபோர்டில் உள்ள அவரது வீட்டிற்கு வெளியே சுட்டுக் கொல்லப்பட்டார்.




மர்ம நபர் துப்பாக்கிச் சூடு

திங்கட்கிழமை காலை, வீட்டின் வெளியே அவர் தனது காரில் அமர்ந்திருந்தபோது மர்ம நபர் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றதாக கூறப்படுகிறது.

போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தபோது, காரில் இருந்த சாஹ்சி காயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தார்.

அவருக்கு முதலுதவி வழங்கப்பட்டும் எந்த பலனும் இல்லை. அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்றும், விசாரணை ஆரம்ப கட்டத்தில் இருப்பதாகவும் கனடா காவல்துறை தெரிவித்துள்ளது.

தர்ஷன் சிங் சாஹ்சி பஞ்சாபின் லூதியானா மாவட்டத்தில் உள்ள ராஜ்கர் கிராமத்தைச் சேர்ந்தவர். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் 1991 ஆம் ஆண்டு கனடாவுக்கு குடிபெயர்ந்து தொழிலதிபராக உயர்ந்தார்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்




# அல்பர்டாவில் மூன்று வாரங்களின் பின்னர் மீண்டும் திறக்கப்படும் பாடசாலைகள்

அல்பர்ட்டா மாகாணம் முழுவதும் 7.4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் மூன்று வாரங்களாக நீடித்த ஆசிரியர் வேலைநிறுத்தத்திற்குப் பிறகு இன்று வகுப்புகளுக்குத் திரும்ப உள்ளனர்.

அல்பர்டா முதல்வர் டேனியல் ஸ்மித் தலைமையிலான அரசு, ஆசிரியர்களை மீண்டும் பணிக்கு அழைப்பதற்காக கனடாவின் அரசியலமைப்புச் சட்ட உத்தரவினை பயன்படுத்தியது. இதன் மூலம் 51,000 ஆசிரியர்கள் கட்டாயமாக மீண்டும் பணிக்கு திரும்பினர்.

மூன்று வாரங்களாக வகுப்புகள் நிறுத்தப்பட்டிருந்ததால் மாணவர்கள்பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளதாக ஸ்மித் தெரிவித்துள்ளார்.

மேலும், 'இந்த வேலைநிறுத்தம் கல்விமுறைமைக்குதிருத்தமுடியாத சேதத்தை ஏற்படுத்தியுள்ளது; அரசுக்கு இதற்கான வேறு வழியில்லை' எனவும் அவர் கூறினார்.

பள்ளிக் குழுக்கள் பெற்றோர்களுக்கு அனுப்பிய அறிவிப்புகளில், இன்று வகுப்புகள் வழக்கம்போல் தொடங்கும் எனினும், தேர்வுகள், கூடுதல் பாடப் பயிற்சிகள் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளில் சில தாமதங்கள் அல்லது மாற்றங்கள் ஏற்படலாம் என எச்சரித்துள்ளன.

ஆசிரியர்கள் இன்று முதல் வகுப்புகளுக்குத் திரும்பு வார்கள்; எந்தவிதமான ''work-to-rule'' நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டார்கள். ஆனால், notwithstanding clause பயன்படுத்தப்படுவது மோசமான உரிமை மீறல் என அல்பர்டா ஆசிரியர்கள்சங்கம்கண்டித்துள்ளது.

இதனிடையே அல்பர்டாவின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு, அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்க இருப்பதாக அறிவித்துள்ளது.



வேலைநிறுத்தம் போன்ற தொழிலாளர் பிரச்சினைகளை தீர்க்க அரசுகள் இந்த பிரிவைப் பயன்படுத்தத் தொடங்கினால், பேச்சு வார்த்தை நடத்தும் அதிகாரமே தொழிலாளர்களிடமிருந்து பறிக்கப்படும் என அந்த கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

# பிரதமர் ஹரிணி தாக்கல் செய்த அவதூறு வழக்கு

பிரதமர் ஹரிணி அமரசூரிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்த அவதூறு வழக்கு, டிசம்பர் 2 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என கொழும்பு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

2024 ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது, தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் தலதா பெரஹரா நிறுத்தப்படும் என்று அத்தநாயக்க தெரிவித்த கருத்துக்கு 100 மில்லியன் ரூபாய்



இழப்பீடு கோரியே இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் ஒரு தொலைக்காட்சி நிறுவனம் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளன. இது குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர், எங்கள் அரசாங்கம் நேர்மையற்றது என்று எதிர்க்கட்சி தொடர்ந்து கூறி வருகிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் ஆகிறது. உண்மையில் யார் பொய்களைப் பரப்புகிறார்கள்? தலதா பெரஹரா நிறுத்தப்படும் என்ற தவறான பரப்புரை காரணமாக இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அந்த கருத்து பொய்யானது என்பதை நாங்கள் ஏற்கனவே நிரூபித்துள்ளோம் - பெரஹரா வெற்றிகரமாக நடத்தப்பட்டது. நிரூபிக்க எதுவும் இல்லை என்றார்.

இன்று, பிரதிவாதிகள் தங்கள் பதில்களை தாக்கல் செய்த போதிலும், அவர்கள் உண்மையான கேள்விக்கு பதிலளிக்கவில்லை. திஸ்ஸ அத்தநாயக்கவின் பதில் பிரச்சினையைத் தவிர்ப்பதாகத் தெரிகிறது,‘ என்றும் அவர் கூறினார்.

**இலங்கை செய்திகள்**

## யோசித ராஜபக்ச மற்றும் டேசி பொரஸ்ட் ஆகியோருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டியான டேசி பொரஸ்ட் ஆகியோருக்கு எதிரான வழக்கு டிசம்பரில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

யோசித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டியான டேசி பொரஸ்ட் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பணச்சலவை குற்றச்சாட்டின் கீழ் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் குறித்த வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

அதன்போது நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் இருவரும் விசாரணைக்காக முன்னிலையாகியிருந்தனர்.

சந்தேகநபர்களுக்கு குற்றப்பத்திரிகை உள்ளிட்ட வழக்கின் அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்டுள்ளதால், வழக்கின் விசாரணைகளை முன்னெடுக்க முடி யும் என்று சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து எதிர்வரும் டிசம்பர் 10ம் திகதி வழக்கின் விசாரணை நடைபெறும் என்று நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## சட்டவிரோதமாக கொடிகாமத்தில் மணல் அகழ்ந்த இரண்டு உழவு இயந்திரங்கள் மீட்பு

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிளாலிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்த இரண்டு உழவு இயந்திரங்களை கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் இன்று (29) அதிகாலை 3 மணியளவில் கிளாலிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கொடிகாமம் பொலிஸார் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அண்மைக்காலமாக அதிரடி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தப்பியோட முயற்சி

இந்தநிலையில்தான்கடந்தவாரம் பொலிஸாரின் கட்டுப்பாட்டை மீறி பொலிஸாருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் சட்டவிரோத மணலுடன் தப்பியோடிய உழவு இயந்திரம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் பின்னர் கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எஸ்.பி. திஸ்ஸாநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் இன்று அதிகாலை குறித்த பகுதிகளில் விசேட சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போதே சட்டவிரோத மணலுடன் இரண்டு உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் ஒருவரைக் கைது செய்துமுள்ளனர் அதேவேளை ஏனையவர்கள் தப்பியோடியுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## லசந்த விக்ரமசேகர கொலை பின்னணியில் நெருங்கிய நண்பர்: சந்தேகம் வெளியிட்ட பொலிஸார்

பூசா சிறையில் அடைக்கப்பட்டுள்ள மிதிகம ருவான் என்ற பாதாள உலகத் தலைவர் துபாயில் மறைந்திருக்கும் டுபாய் லொக்கா என்ற பாதாள உலகக் குற்றவாளிக்கு வழங்கிய ஒப்பந்தத்தின் பேரில் வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்ரமசேகர சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இரண்டு மில்லியன் ரூபாய் ஒப்பந்தப் பணம், டுபாயில் மறைந்திருக்கும் ‘ரன் பாட்டியா’ என்ற போதைப்பொருள் கடத்தல்காரரால் இந்த கொலையை செய்த சந்தேகநபருக்கு வழங்கப்பட்டதும் தெரியவந்துள்ளது.

வெலிகம பிரதேச சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தாரக நாணயக்காரவின் வீட்டில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவமும் மிதிகம ருவானின் உத்தரவின் பேரில் டுபாய் லொக்காவினால் திட்டமிடப் பட்டமையும் தெரியவந்துள்ளது.

டுபாய் லொக்கா மிதிகம ருவானின் பாதாள உலகக் கும்பலின் சிறந்த உதவியாளராக மாறிவிட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மிதிகம ருவானின் பாதாள உலக நடவடிக்கைகள் மற்றும் போதைப்பொருள் வலையமைப்பை டுபாய் லொக்கா மேற்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மிதிகம ருவானின் அறிவுறுத்தலின் பேரில், டுபாய் லொக்கா தென் மாகாணத்தில் இடம்பெற்ற பல குற்றங்களுக்குப் பின்னால் இருப்பதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

வெலிகம பிரதேச சபை தலைவரின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மிதிகம சூட்டி என்பவர் கொலைக்கு உத்தரவிட்டதாக ஆரம்பத்தில் ஒப்புக்கொண்டார்.

இருப்பினும், மிதிகம சூட்டி தற்போது ஓமான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

## போலி கைத்துப்பாக்கியுடன் நீதிமன்றுக்கு சென்ற பெண்ணின் பின்னணி தொடர்பில் சந்தேகம்

போலி கைத்துப்பாக்கியுடன் அவிசாவளை நீதவான் நீதிமன்ற வளாகத்திற்குள் பிரவேசிக்க முயன்ற பெண்ணொருவர் கைது செய்யப்பட்டு, நவம்பர் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

லக்ச்மி என அழைக்கப்படும் தீபிகா முதலி ஹேரத் என்ற இந்த பெண்ணின் கைப்பைக்குள் இருந்து, கடந்த 27ஆம் திகதியன்று நீதிமன்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நடத்திய வழமையான பரிசோதனையின் போது கைத்துப்பாக்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசாரணை

தற்போது மீகொடவில் வசிப்பதாகக் கூறியபோதும், அவர் தங்காலை நோட்டல்பிட்டியவில் வசிப்பவர் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. போக்குவரத்து வழக்கு தொடர்பாக நீதிமன்றத்திற்கு வந்ததாக அவர் அதிகாரிகளிடம் கூறியதாக



கூறப்படுகிறது.

இருப்பினும், நீதிமன்றப் பதிவேடுகளில் அத்தகைய வழக்கு எதுவும் காணப்படவில்லை, தொடர்ந்து விசாரணை நடத்தியதில், அவர் வைத்திருந்த துப்பாக்கி போலியானது என உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து குறித்த பெண் மேலதிக விசாரணைகளுக்காக அவிசாவளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

பொலிஸாரால் முன்வைக்கப் பட்ட உண்மைகளை பரிசீலித்த அவிசாவளை நீதவான் பிரபுத்த ஜயசேகர, சந்தேக நபரை எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# கூச்ச சுபாவமுள்ள குழந்தைகளை மாற்றுவது எப்படி?

## குழந்தைகள் வாழ்க்கைமுறை

பெற்றோர்கள் பலருக்கும் இருக்கும் ஒரு பொதுவான பயம் குழந்தைகளின் அமைதி, அதாவது கூச்சசுபாவம். கூச்சசுபாவம் என்பது இளம் குழந்தைகளிடம் இருக்கும் ஒரு பொதுவான பண்பாகும். மனோதத்துவ நிபுணர்களின் கூற்றுப்படி 10-20 சதவீதம் குழந்தைகள் பிறக்கும்பொழுதே கூச்ச சுபாவம் கொண்டவையாக இருக்கின்றன. கூச்சம் என்பது அமைதியின் ஒரு வெளிப்பாடே. அவர்கள் எதற்காக அமைதியாக இருக்கிறார்கள் என்பதை முதலில் தெளிவுபடுத்தி, அதிலிருந்து வெளியேக்கொண்டு வாருங்கள். கூச்ச சுபாவமுள்ள குழந்தைகளை மாற்றுவது குறித்த சில யோசனைகளை காணலாம்.

முத்திரை குற்றுவதை நிறுத்துங்கள்

முதலில், என் குழந்தைக்கு கொஞ்சம் கூச்ச சுபாவம் அதிகம் என முத்திரை குத்துவதை நிறுத்துங்கள். இதில் சிலர் பெருமைக்கொள்வார்கள். இதில் பெருமைக்கொள்வதற்கு ஒன்றும் இல்லை. வீட்டில் நம் குடும்பத்தினர் மட்டுமே இருப்போம். அதனால் குழந்தைகள் பெரும்பாலும் மற்ற முகங்களை பார்த்திருக்கமாட்டார்கள். ஒரு பொதுவெளியில் அதாவது ஒரு விழாவிற்கோ, கோயிலுக்கோ செல்லும்போது புதுமுகங்களை பார்ப்பர். தெரியாதவர்கள் என்பதால் சில குழந்தைகள் பேசமாட்டர்கள். ஆரம்பத்தில் இப்படித்தான் இருக்கும். பெற்றோர்கள்தான் இவர்கள் நம் உறவினர், நண்பர் எனக்கூறி அறிமுகப்படுத்தி அவர்களுக்கு அந்த பயத்தை போக்கவேண்டும். புதிய நபர்களை பார்க்கும்போதும் அல்லது பொது இடத்திற்கு செல்லும்போதும் அவர்கள் என்ன உணர்கிறார்கள் என்பதை கேட்டு தெரிந்துகொள்ளவேண்டும். சிலர் இதைவிடுத்து அவன் என்னமாதிரி அமைதியா இருப்பான் என கூறுவார்கள். பின்னர் அவனுக்கு



கூச்ச சுபாவம் அதிகம் என இவர்களே கூறுவர். இதுபோல உங்களுடைய குணாதிசியம் என லேபிளிடாமல் அது கூச்ச சுபாவமா அல்லது சங்கடமா என்பதை கேட்டு தெரிந்துகொள்ளுங்கள். அப்படி பேசுவதற்கு சங்கடம் எனும்போது அதனை விளக்கி சரிசெய்யுங்கள்.

கூச்சத்தை பலவீனமாக பார்க்க வேண்டாம்

முதலில் பள்ளியில் சேர்க்கும்போது குழந்தைகளுக்கு அது புதிதாக இருக்கும். முதல்நாள் பள்ளி வகுப்பறையை கற்பனை செய்துகொள்வோம். ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளே ஓடி, ஓடி விளையாடுவார்கள், சிரிப்பார்கள், அங்குள்ள பொருட்கள், புத்தகங்களை எடுத்து பார்ப்பார்கள், துறுதுறுவென இருப்பார்கள். மற்ற குழந்தைகள் அனைவரும் அமைதியாகத்தான் இருப்பார்கள். நாட்கள் செல்ல செல்ல புதிய முகங்கள் பழக பழக அவர்களும் விளையாட ஆரம்பித்துவிடுவார்கள். பள்ளி மட்டுமின்றி வீட்டிலும் சில குழந்தைகள் அமைதியாக இருப்பார்கள். இதனைப் பார்க்கும் பெற்றோர்கள் பலரும் மந்தமாக இருக்கிறான் எனக் கூறுவார்கள். அது மந்தம் இல்லை. அமைதி. அனைத்து குழந்தைகளும் ஒரே சுபாவத்தை கொண்டிருக்கமாட்டார்கள். அதனால் அமைதியை பலவீனமாக பார்க்கவேண்டாம்.

குழந்தைகளை அவர்களின் சுபாவங்களை வைத்துப்பேசுதல் கூடாது

குழந்தையின் தன்னம்பிக்கையை அதிகரியுங்கள்

கொஞ்சம் தைரியமாக இருக்கும் குழந்தைகள் கூச்ச சுபாவத்திற்கு ஆளாகமாட்டார்கள். மனதில் பயம் இருந்தால்தான் சில குழந்தைகள் பேசமாட்டார்கள். அதனால் குழந்தைகள் எதையாவது எண்ணி பயத்தில் இருக்கிறார்களா என்பதை கேட்டு தெரிந்துகொள்ளுங்கள். பயத்தில் இருப்பது தெரியவந்தால் அவர்களுக்கு நம்பிக்கை தரும் வார்த்தைகளை பேசுங்கள். கோபத்தில் சில பெற்றோர்களே குழந்தைகளை அவர்களின் சுபாவங்களை வைத்துப்பேசுவர். அது அவர்களின் மனதில் ஆழமாக பதிந்துவிடும். அதனால் சுபாவங்களை வைத்து பிள்ளைகளை பேசுவதை தவிர்க்க வேண்டும்.

தனியாக விடவேண்டும்

குழந்தைகளோடு எப்போதும் ஒன்றாக இருப்பதை தவிர்க்க வேண்டும், அதாவது பொதுஇடங்களில். குழந்தைகளை பூங்கா, விளையாட்டு மைதானம் போன்ற இடங்களுக்கு அழைத்து செல்லுங்கள். நிறையபேர் இருக்கும் அந்த இடத்தில் அவர்களை சுதந்திரமாகவிட்டு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை பாருங்கள். அவர்கள் அதில் கவனம் செலுத்த தொடங்கினால் கொஞ்சம் அவர்களை விட்டு தள்ளிச்செல்லுங்கள். தேவைப்பட்டால் திரும்பி பிள்ளைகளிடம் செல்லுங்கள்.

வெளிப்படைத்தன்மையை பாராட்டுங்கள்

குழந்தைகள் அவர்களுக்கு புதிதாக ஒரு விஷயம் தெரியவரும்போது நம்மிடம் வந்து ஆர்வமாக கூறுவார்கள். நமக்கு ஏற்கனவே தெரிந்திருந்தால் சிலர் அதை காதில் போட்டுக் கொள்ளமாட்டார்கள். குழந்தைகள் பேசுவதை ஆர்வமாக கேளுங்கள். அவர்கள் சொல்லும் விஷயங்கள் தவறாக இருந்தாலும், எடுத்தவுடன் கோபப்பட வேண்டாம். அதை வெளிப்படையாக சொல்வதை நினைத்து மகிழ்ச்சி அடையுங்கள். பின்னர் தவறை சுட்டிக்காட்டி திருத்தவேண்டும். திட்டினால் அடுத்தமுறை சொல்லமாட்டார்கள். மறைக்க நினைப்பார்கள். அதனால் அவர்கள் எப்போதும் வெளிப்படைத்தன்மையாய் இருப்பதை பாராட்டி, அப்படியே தொடர அனுமதிக்கவேண்டும்.

# குழந்தைகளை அடிக்கடி குளிப்பாட்டக்கூடாது!

## தோலில் உள்ள இயற்கை எண்ணெய் பசை போய்விடும்

குழந்தைகளின் சருமம் பெரியவர்களைவிட மென்மையானதாகவும், மிருதுவானதாகவும், மிகவும் உணர்திறன் கொண்டதாகவும் இருக்கும். மாசு, வானிலை மாற்றங்கள், குழந்தையின் சருமத்திற்கு நல்லது என நினைத்து நாம் பயன்படுத்தும் சில பொருட்கள் (பாடி லோஷன்கள், க்ரீம்கள்) அவர்களின் சருமத்தை பாதிப்படைய செய்கிறது. குழந்தையின் நலனை எண்ணித்தான் பெற்றோர்கள் அப்படி செய்கிறார்கள். ஆனால் அதுவே அவர்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதாக உள்ளது. குழந்தையின் சருமத்தை பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும், பளபளப்பாகவும் வைத்திருக்க பெற்றோர்கள் தவிர்க்க வேண்டிய செயல்கள்



என்னவென்று பார்ப்போம்.

பெரியவர்களுக்கான தோல் பராமரிப்பு பொருட்களை பயன்படுத்துதல்

சிலர் குழந்தைகளுக்கு பெரியவர்களுக்கான தோல் பராமரிப்பு பொருட்களை பயன்படுத்துவார்கள். இது தவறான ஒன்று. பெரியவர்களுக்கென தயாரிக்கப்பட்ட பொருட் கள் கடுமையான ரசாயனங்கள், ஆல்கஹால், சல்பேட்டுகள் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும். குழந்தைகளின் தோல் மெல்லியதாகவும், அதிக ஊடுருவக்கூடியதாகவும், எளிதில் எரிச்சலுக்கு உள்ளாகக் கூடியதாகவும் இருக்கும். இதனால் அந்தப் பொருட்கள் குழந்தைகளின் தோலை எளிதில் பாதிக்கும். அதனால் குழந்தைகளுக்கு என பிரத்யேகமாக உருவாக்கப்பட்டிருக்கும் தோல் பராமரிப்பு பொருட்களை மட்டுமே தேர்ந்தெடுக்கவேண்டும்.

குழந்தைகளை அதிக நேரம் சூரிய ஒளியில் படுமாறு வைத்திருப்பது பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தும். இது முன்கூட்டியே வயதாவது, தோல் புற்றுநோய் பாதிப்புகள் போன்ற அபாயங்களை ஏற்படுத்தும். மேகமூட்டமாக இருந்தாலும், குறைந்தபட்சம் குகஊ 30 சன்ஸ்கிரீனை பயன்படுத்தவும். குழந்தைகளுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மென்மையான, மணம் இல்லாத சன்ஸ்கிரீனை தேர்ந்தெடுப்பது நல்லது.

அடிக்கடி குளிக்கவைத்தல்

சுத்தம் முக்கியம் என்றாலும், குழந்தைகளை அடிக்கடி குளிப்பாட்டுவது அல்லது வெந்நீரை பயன்படுத்துவது குழந்தையின் சருமத்தில் இருக்கும் இயற்கை எண்ணெய் பசையை எடுத்துவிடும். இது வறட்சி, எரிச்சல், தோலழற்சி போன்ற பாதிப்புகளுக்கு வழிவகுக்கும். குழந்தையின் உடல்நிலையை பொறுத்து வாரத்திற்கு சிலமுறை மட்டுமே வெந்நீரை பயன்படுத்த வேண்டும். வியர்வை மற்றும் அழுக்கு அதிகமானால் குழந்தைகளை தினமும் குளிக்கவைக்கலாம். ஆனால் வெந்நீர் அதிகம் பயன்படுத்தவேண்டாம்.

மாய்ச்சுரைஸர்களை தவிர்த்தல்

குழந்தைகளின் சருமம் இயற்கையாகவே மென்மையாக இருப்பதால், அவர்களுக்கு ஈரப்பதம் தேவையில்லை என நாம் நினைக்கிறோம். ஆனால் குளிர் மற்றும் வெயில் காலங்களில் அவர்களது சருமம் ஈரப்பதத்தை விரைவாக இழந்துவிடும். மாய்ச்சுரைஸர்களை தவிர்ப்பது சருமத்தை இன்னும் பலவீனப்படுத்தும். இதனால் வறட்சி, அரிப்பு, தோல் பிரச்சனைகள் ஏற்படும். குழந்தைகளுக்கென வடிவமைக்கப்பட்டுள்ள மென்மையான, ஒவ்வாமை ஏற்படுத்தாத மாய்ச்சுரைஸர்களை பயன்படுத்துவது நல்லது. குளித்த உடன், சருமம் சற்று ஈரமாக இருக்கும்போதே இதைப் பயன்படுத்துவது, ஈரப்பதத்தை எளிதில் சருமத்தில் தக்கவைக்கும்.

வெந்நீரில் குழந்தைகளை அடிக்கடி குளிப்பாட்டக்கூடாது

பெற்றோர்கள் சிலசமயம் குழந்தைகளின் தோலில் வரும் தடிப்புகள், திட்டுகளை கவனிக்காமல் விட்டுவிடுகின்றனர்.

# 2 வெள்ளி பதக்கம் வென்ற எட்வினா ஜேசனுக்கு ரூ.25 லட்சம் ஊக்கத்தொகை வழங்கிய உதயநிதி

## தமிழக செய்திகள்

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டி பஹ்ரைனில் நடைபெற்றது. இந்த தொடரில் இந்திய வீராங்கனை எட்வினா ஜேசன் பெண்கள் 400 மீட்டர் ஓட்டத்தில் 55.43 வினாடிகளில் பந்த தூரத்தை கடந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.



மேலும் பெண்கள் மெட்லி ரிலே போட்டியில் அவரது இறுதி ஓட்டம் இந்திய அணியை வெள்ளிப் பதக்கத்திற்கு வெல்ல உதவியது.

இந்நிலையில் ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் 2 வெள்ளிப் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த தடகள வீராங்கனை எட்வினா ஜேசனுக்கு ரூ.25 லட்சம் ஊக்கத்தொகையாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

பஹ்ரைனில் நடைபெற்ற 3ஆவது ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் 2 வெள்ளிப் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த தடகள வீராங்கனை தங்கை எட்வினா ஜேசனுக்கு ரூ.25 லட்சம் ஊக்கத்தொகையை இன்று வழங்கினோம்.

சர்வதேச அரங்கில் தமிழ்நாட்டுக்கு பெருமைச் சேர்த்துள்ள தங்கை எட்வினாவை வாழ்த்தினோம். அவரது இந்த சாதனை தொடரட்டும் என பாராட்டியதாக உதயநிதி கூறினார்.

# மூன்று பகுதிகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான முன்-சோதனை

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

2027ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறுவது குறித்து, இந்திய அரசின் அறிவிப்பானது 16.06.2025 தேதியிட்ட மத்திய அரசின் அரசிதழில் (அறிவிப்பு எண். S.O. 2681) வெளியிடப்பட்டு, அது 16.07.2025 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழில் மீண்டும் வெளியிடப்பட்டது.

மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948 பிரிவு 17எ-ன் படி, 16.10.2025 தேதியிட்ட இந்திய அரசிதழ் அறிவிப்பு எண். S.O. 4698(உ) இல் அறிவிக்கப்பட்டுள்ளபடி, இந்திய தலைமைப் பதிவாளர் மற்றும் மக்கள் தொகை கனக்கடுப்பு ஆணையர் அலுவலகம், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி பகுதிகளில் 2027-ஆம் ஆண்டுக்கான இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான முன்-சோதனையை நடத்த இருக்கிறது.

இந்த முன்-சோதனையானது, 2027 ஆண்டு நடைபெறவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு முன்பு நடத்தப்படும் ஒரு முக்கிய முன்னோட்டம் மற்றும் ஆயத்தப் பணியாகும். 2027-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு முன்மொழியப்பட்ட கருத்துக்கள், நடைமுறைகள், கேள்வித்தாள்கள் மற்றும் டிஜிட்டல் செயலிகளை மதிப்பிடுவதற்காக இந்த முன்-சோதனை நடைபெறவுள்ளது.

2027-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பானது இந்தியாவின் முதல் முழுமையான டிஜிட்டல் கணக்கெடுப்பாகும். இந்த முன்-சோதனையின் முடிவுகள், 2027 ஆண்டு நாடு முழுவதும் நடைபெறவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, எதிர்நோக்கவிருக்கும் செயல்பாட்டு சவால்களைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய உதவும்.




முதல் முறையாக, முன்-சோதனையின் போது, மொபைல் செயலிகளைப் பயன்படுத்தி தரவுகள் சேகரிக்கப்படுவதுடன், டிஜிட்டல் லே-அவுட் வரைபடங்களும் வரையப்படும். மக்கள் தொகை கணக்கெடுப்பு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (CMMS) வலைத்தளம் மூலம் இந்த முழு செயல்பாடுகளும் நிர்வகிக்கப்படும். இது நிகழ் நேர மேற்பார்வை மற்றும் முன்னேற்ற கண்காணிப்புக்காக உருவாக்கப்பட்ட வலைத் தளமாகும்.

2027 மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டமான வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பிற்கான முன்-சோதனை 10.11.2025 முதல் 30.11.2025 வரை நடைபெறவுள்ளது, இதனுடன் 01.11.2025 முதல் 07.11.2025 வரை சுய-கணக்கெடுப்பு (Self-enumeration) செய்வதற்கான முன்- சோதனையும் நடைபெறவுள்ளது.

முன்-சோதனைக்காக தமிழ்நாடு மாநில அரசுடன் கலந்தாலோசித்து மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது:

- கிராமப்புற பகுதி - அஞ்செட்டி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம்
- கிராமப்புற பகுதி - ஆர்.கே. பெட் தாலுக்காவின் ஒரு பகுதி, திருவள்ளூர் மாவட்டம்
- நகர்ப்புற பகுதி - மாங்காடு நகராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம்

தமிழ்நாடு மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குனரகம், முன்-சோதனை சுமூகமாக நடைபெறுவதற்கு, தொழில்முறை வழிகாட்டுதல், பயிற்சி மற்றும் மேற்பார்வை உள்ளிட்டவற்றை தமிழ்நாடு அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தும்.

மாநில அரசின் கல்வி, வருவாய், சுகாதாரம், மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைகளிலுள்ள அலுவலர்கள் களப்பணிக்காக கணக்கெடுப்பாளர்களாகவும் மேற்பார்வையாளர்களாகவும் செயல்படுவார்கள்.

களப்பணிகளுக்கு முன் கணக்கெடுப்பாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள், முன்-சோதனையின் போது மக்கள் தொகை கணக்கெடுப்பு களப்பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

களப்பணியாளர்களுடன் துல்லியமான விவரங்களைப் பகிர்ந்து கொண்டால் அது, கணக்கெடுப்பின் போது பயன்படுத்தப்படும் டிஜிட்டல் செயலிகள் மற்றும் செயல்முறைகளைச் செம்மைப்படுத்த உதவும்.

இந்த முன்-சோதனையானது, 2027-ஆம் ஆண்டு வெற்றிகரமான மற்றும் நெறிப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற வழி வகுக்கும். நாடு முழுவதும் நடைபெறவுள்ள 2027 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு அதிக துல்லியம், செயல்திறன் மற்றும் தயார்நிலையை உறுதி செய்ய இந்தப் முன்-சோதனை பயிற்சி உதவும்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# SIR பணி: திமுக-வின் அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு சீமான், விஜய்க்கு அழைப்பு

இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்கம் உள்பட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் பணி மேற்கொள்ள இருப்பதாக அறிவித்தது.




இதற்கு திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இது தொடர்பாக மு.க. ஸ்டாலின் தலைமையில் அவசர ஆலோசனை நடத்தப்பட்டது. அப்போது, அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. வருகிற 2ஆம் தேதி அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற இருக்கிறது.

இந்த நிலையில் சீமானின் நாம் தமிழர் கட்சி, விஜயின் தமிழக வெற்றிக் கழகம் கட்சி ஆகிய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேலும், பாஜக-அதிமுக கூட்டணியில் உள்ள ஜி.கே. வாசன் கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

த.வெக, நாம் தமிழர் கட்சி குஜஙீ பணியை கடுமையான எதிர்ப்பதாக வெளிப்படையாக தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.




உங்கள் வியா-
பாரம் உலகம்
முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில்
விளம்பரம்
செய்யுங்கள்

# கன்னியாகுமா மாவட்டத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான திட்டக்குறிப்பு

பழைமை வாய்ந்த மன்னர் நாடான திருவிதாங்கூரின் தென் பாகங்களாக இருந்த தாலுகாக்களை, குமரித் தந்தை எ. நேசமணியின் வீரத்தலைமையின் கீழ் நின்று போராடிப் பிரித்துதெடுத்து, ‘‘கன்னியாகுமரி மாவட்டம்’’ என்ற பெயரில் 1956 நவம்பர் மாதம் முதல் நாளன்று தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட்டது. தமிழர்கள், குறிப்பாக நாடார் சமூக மக்கள் பெருவாரியாக வாழ்கின்ற இப்பிரதேசங்களைப் பிரித்தெடுப்பதற்கு மூன்று காரணங்களைக் கூறலாம். நாடு சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து நாட்டின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை வகுத்து, அதற்கு ஐந்தாண்டுத் திட்டங்கள் எனப் பெயரிட்டு செயல்படுத்தத் தொடங்கியது மத்திய அரசு. இதன்படி முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் 1950 - 1955 வரை செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் திருவிதாங்கூர் தமிழ்ப் பிரதேச வளர்ச்சிக்கு என வகுக்கப்பட்ட திட்டங்களை, பெருஞ்சாணி அணைத் திட்டம், சிற்றாறு பட்டணம் கால்வாய்த் திட்டம், நெய்யாறு இடதுகரைக் கால்வாய்த் திட்டம், குழித்துறை லிப்டுஇறிகேஷன் (Lift irrigation) திட்டம், போன்ற முக்கிய நீராதாரத் திட்டங்களை சுதந்திர திருவிதாங்கூர் அரசு செயல்படுத்தவில்லை. இதனால் மக்கள் இந்த அரசு மீது வெறுப்படைந்திருந்தனர். இந்த ஐந்தாண்டு திட்டத்தில் வகுக்கப்பட்டிருந்த திட்டங்களில் சிலவற்றையாவது செயல்படுத்துவதற்கும் திருவிதாங்கூர் அரசு சுணக்கம் காட்டியது. மக்கள் தலைவர்கள் பல வேளைகளில் வருந்தி வேண்டிக் கொண்டும், இப்பிரதேச வளர்ச்சித் திட்டங்களுக்காக ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த நிதியை அரசு வேண்டுமென்றே வடதிருவிதாங்கூர் வளர்ச்சிக்கெனத் திருப்பி விட்டது. இதனால் தென்திருவிதாங்கூர் தமிழர்கள் வாழ்கின்ற இடங்களை முற்றிலும். புறக்கணித்தது பட்டம் தாணுபிள்ளையின் அரசு. இத்தகைய தென் மாநில பொருளாதார வளர்ச்சிப் புறக்கணிப்பு, நாட்டைப் பிரிப்பதற்கான முதற்காரணமாக அமைந்தது என்பதும் உண்மை.

திருவிதாங்கூர் நாடு இந்து ஆகம அடிப்படையில் ஆட்சி நடத்தப்பட்டு வந்தமையால் சாதி கோட்பாடுகள் மிகக் கடுமையாக கடைபிடிக்கப்பட்டு வந்தன. உயர் இந்துக்கள், இழிவு இந்துக்கள் என சமுதாயத்தை இருகூறுகளாக்கினர். இழிவு இந்துக்களை தீண்டத்தகாதவர்களாகவும், காணத்தகாதவர்களாகவும் நடமாடத் தகுதியற்றவர்களாகவும் கருதி சமுதாயத்தில் அவர்களை இழிவுப்படுத்தினர். இந்த மானங்கெட்ட வாழ்விலிருந்து முழு விடுதலை வேண்டியும் பிரிந்து செல்வதற்கு தமிழ் மக்கள் தயாராயினர். இதுவும் பிரிவினைக்கு இரண்டாவது காரணமாக அமைந்தது.

இந்த குறிக்கோள்கள் நிறைவேறும்படியாக, தமிழ்மக்கள் குறிப்பாக நாடார் சமுதாய மக்கள், மலையாளி நாயர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தப் பிரிவு சமுதாய மக்களுக்கு எதிராக விடுதலைப் போர் புரிந்தனர். 1948-ல் இப்போர் தீவிரமடைந்தது. பட்டம் தாணுபிள்ளை சுதந்திர திருவிதாங்கூரின் பிரதமராக அன்று செயலாற்றி வந்தார். இழிவு சமூகத்தாரின் பல்வேறு சமுதாய மறுமலர்ச்சியால் பொறாமைத் தீயை நாடார் சமுதாயத்துக்கு எதிராக வளர்த்துக் கொண்டு இவர்களின் மேல் அடக்குமுறைக் கொடுமைகளை அவிழ்த்துவிட்டார் திரு.தாணுபிள்ளை. மங்காட்டில் திரு.தேவசகாயம் நாடாரையும், கீழ்குளத்தில் திரு.செல்லைய்யன் நாடாரையும் மலையாளிக் காவல்துறையினர் சுட்டுக் கொன்றனர். இதனைத் தொடர்ந்து நாடார் சமுதாயத்துக்கும், நாயர் சமுதாயத்திற்கும் முட்டலும், மோதலும் நடந்த வண்ணமிருந்தன. நாயர்களுக்கு பட்டம் தாணுபிள்ளையும் அவர்களின் அரசு இயந்திரங்களும் ஆதரவுக்கரம் அளித்தது. இந்த சுசூழ்நிலையில் 1954 ஆகஸ்டு 11-ம் நாள் திருவிதாங்கூர் தமிழ் பிரதேசங்கள் முழுவதிலும் ‘‘விடுதலைதினம்’’ கடைபிடிக்கப்பட்டது. இத்தருணத்திலும் பட்டம் தாணுபிள்ளைதான் திருவிதாங்கூர் நாட்டின் முதலமைச்சராக இருந்தார். இவரது ஆணையின்டி தமிழர்களான நாடார் மக்கள் மீது இரண்டாவது தடவையாக துப்பாக்கிச் சூடு நடத்தினர் மலையாளி காவல்துறையினர். இதனால் மார்த்தாண்டத்தில் ஆறு பேரும், புதுக்கடையில் ஐவரும் குண்டடிபட்டு உயிர் நீத்தனர். இவர்களில் இருவரைத் தவிர மற்ற அனைவரும் நாடார் சமுதாய மக்களாவர். துப்பாக்கிச் சுட்டுடனே பட்டம் தாணுபிள்ளையின் நாடார் நரவேட்டை நின்றுவிடவில்லை. இதைத் தொடர்ந்து, பட்டம் தாணுபிள்ளையின் வீழ்ச்சி நாள் (14.02.1955) வரை அதாவது 188 நாட்கள் விளவங்கோடு மற்றும் கல்குளம் தாலுகாக்களில் நாடார் மக்கள் மீது போலீஸ்காரர்கள் நரவேட்டையாடினர். அனேகர் சிறைகளில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். இவர்கள் அடைந்த சிறைத் துயரங்களை அறிந்து கொள்வதற்கு அறிவர் டி.பீட்டர் அவர்கள் எழுதி வெளியிட்ட ஆய்வு நூலான ‘‘குமரி மாவட்ட விடுதலை (கல்குளம் – விளவங்கோடு) நாடார் மக்கள் தந்த விலை (1948 – 1954)’’ என்ற நூலைப் படித்து தெளிவடைந்து கொள்ளுங்கள். ஆங்கிலேயர்களின் ஆட்சி காலத்தில், பஞ்சாப்பில் நடந்த ‘‘ஜாலியன் வாலாபாக் படுகொலைதான்’’ மிகவும் கொடுமையானது என்று இந்தியா வரலாறு பறைசாற்றுகிறது. ஆனால் அந்த கொடுமை ஒரே நாளில் முடிந்து விட்டது. அடுத்த நாள் தொட்டு ஆங்கிலப் படை அமைதி காத்தது. ஆனால் சுபட்டம் தாணுபிள்ளை அரசின் காவல்துறையினபர் 11.08.1954 தொட்டு 188 நாட்கள் அதாவது 6 மாதங்களும் 8 நாட்களும் தொடர்ந்து நாடார் சமுதாய மக்களை மட்டும் குறி வைத்து நரவேட்டையாடினர். இது போன்ற நரவேட்டை உலக வரலாற்றில் எங்கும் காண்பது அரிது. இந்த அட்டூழியத்தில் இருந்து விடுபட வேண்டும் என்பது பிரிந்து செல்வதற்கான மூன்றடவது காரணமாக அமைந்தது.

குமரி மாவட்டம் உருவாகி 57 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இந்த மாவட்டம் உருவானதன் நோக்கம் என்ன என்பதை அனேகமாக அனைவரும் மறந்து விட்டனர். குறிப்பிட்டுக் கூறுவதென்றால், இளைஞர் சமுதாயமே இந்த வரலாறை மறந்து விட்டது என்பதை நினைக்கும் போது என்னைப் போன்ற மூத்த குடிமக்களுக்கு வேதனையாக உள்ளது. இம்மாவட்டம் 01.11.1956 அன்று உருவாயிற்று என்றாலும் நாயர்கள் மற்றும் தமிழ் வெள்ளாளர்களின் அடக்கு முறைகளுக்கும், தீண்டாமைக் கொடுமைகளுக்கும் நாடார் சமுதாயம் ஆளாக்கப்பட்டிருந்தது. பெண்களை அரை நிர்வாணமாக்கி, மிருகங்களைவிட கேவலமான நிலையில் வைத்து மகிழ்ச்சியடைந்தனர் உயர் ஜாதியினர். இந்த சூழ்நிலையில் தான் சீர்திருத்த கிறிஸ்தவ இறைத் தூதுவர்கள் கி.பி. 1806-ல் இம்மண்ணில் கால் பதித்தனர். இவ்வமையம், இங்கு வாழ்ந்து இறைத் தூதுவர்கள் விடா முயற்சியால் இந்த தாழ்த்தப்பட சமூகம், குறிப்பாக நாடார் மக்கள், கல்வியிலும், பொருளாதாரத்திலும் நாகரிகத்திலும் எதிர்பாராத வண்ணம் வளர்ச்சியடைந்தனர். அறிவுபூர்வ வளர்ச்சியால், 1822 –ல் புலிப்புனம் இசக்கி மாடன் தண்டல்காரன், மருதூர்குறிச்சி குஞ்சுமாடன் மண்டல்காரன், ஆற்றூர் கருமன், தச்சன்விளை வேதமாணிக்கம் போன்றோர் நாடார் மக்களின் விடுதலை வேண்டி உயிர்த்தியாகம் செய்ய வேண்டியதாயிற்று, எனினும் நாடார்களுக்கு மலையாளி மற்றும் தமிழ் வெள்ளாளர்களின் அடக்கு முறைகளிலிருந்து, முழுமையான விடுதலையைப் பெற்றுத்தந்தவர் விளவங்கோட்டு வீரன் ஏ. நேசமணி ஆவார். எனவே ம.பொ. சிவஞான கிராமணியார் எண்ணுகின்றதைப் போன்று, இது தெற்கெல்லை மீட்பு போராட்டமோ, அல்லது தமிழகத்தின் எல்லை விரிவாக்கத்திற்கான போராட்டமோ, அல்லது தமிழ் மொழியின்பால் உருவான பாசமோ அல்ல. அது மலையாளி ஆதிக்கத்திற்கு எதிராக நாடார்களால் நடத்தப்பட்ட இறுதிப் போராட்டமாகும். அப்போராட்டதை தலைமையேற்று செல்வனே நடத்தி விடுதலையை பெற்றுத் தந்தவர் மார்ஷல் எ. நேசமணி அவர்கள். இதனால் இவரை குமரி மாவட்ட மக்கள் பாசத்தோடு குமரி மாவட்டத்தின் தந்தை என்று அழைக்கின்றனர்.

இவைகளின் தொடர்ச்சியாக 01.11.1956 அன்று கன்னியாகுமரி மாவட்டம் உதயமாகி, தமிழகத்துடனே இணைந்தது. இணைப்பு நாளன்று (01.11.1956) தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள், நாகர்கோவில் கு.ஃ.ஆ கல்வி நிலைய வளாகத்தில் நடந்த ஏற்ப்பு விழாவில் இவ்வாறு ஏற்புரையாற்றினார்.

‘‘நீங்கள் கேரளத்தில் இருந்து வந்திருக்கிறீர்கள். கல்வியிலும் பொருளாதாரத்திலும் வளர்ந்துள்ளீர்கள். ஆரல்வாய்மொழிக்கு கிழக்கே உள்ளவர்கள் இந்த நிலையை எட்டுவதற்கு இன்னும் பல காலம் வேண்டும். அதுவரை உங்களுக்கு எங்களால் ஒன்றும் செய்ய இயலாது. செய்யவும் மாட்டோம். பிரிந்து வந்து தமிழர்களோடு இணைந்துவிட்டோம் என்ற நிறைவோடு மட்டும் இருந்து கொள்ளுங்கள். நீங்கள் விரும்பினால் இன்றே உங்களை மீண்டும் கேரளத்துடனே சேருவதாற்கு நான் ஒழுங்கு செய்யலாம்’’ என்றார்.

குமரி மாவட்டத்தை தமிழ்நாடு அரசு அன்று முதல் புறக்கணிக்கத் தொடங்கியதிலிருந்து, இன்று வரை இதை புறக்கணித்து வரப்படுகிறது. இதற்குப் பிறகு நெல்லைதான் தமிழகத்தின் எல்லையாகிவிட்டது. குமரி மாவட்டத்தில் அரசியல் முறையில் ஆறுசட்டமன்ற உறுப்பினர்களும், ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் உள்ளனர். இவர்களில் ஒருவர் மாண்புமிகு அமைச்சராகவும் உள்ளார். இருப்பினும் இம்மாவட்டத்தின் முழு வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளாமல், முக்கியத்துவமில்லாத காரியங்களை மட்டுமே செய்து வருவதால், இம்மாவட்டம் காலத்திற்கேற்றற்ப் போன்று, மக்கள்த் தொகைக்கு ஏற்றார்ப் போன்று சமச்சீரான வளர்ச்சி அடையவில்லை.

# மாற்றத்துக்கான நேரம் வந்து விட்டது: ராகுல் காந்தி

நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி தனது 'எக்ஸ்' பக்கத்தில் ஒரு பதிவு வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

சில நாட்களுக்கு முன்பு, பீகார் இளைஞர்களுடன் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவை குறித்து உரையாடலில் ஈடுபட்டேன். மேற்கண்ட அனைத்து துறைகளிலும் பீகார் மோசமான நிலையில் இருப்பதற்கு ஒரே ஒரு குற்றவாளி பொறுப்பு என்றால், அது பா.ஜனதா-ஐக்கிய ஜனதாதளம் அரசுதான். பீகார்



இளைஞர்களுக்கும் இது தெரியும். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக, மோடி-நிதிஷ்குமார் அரசு, பீகார் இளைஞர்களின் கனவுகளை நசுக்கி விட்டது. மாநிலத்தை கைவிட்டு விட்டது. ஒவ்வொரு துறையிலும் மாநிலத்தை கீழ்நிலைக்கு தள்ளிவிட்டது.

உதாரணமாக, 9 மற்றும் 10-ம் வகுப்புகளில் படிப்பை பாதியில் நிறுத்துவதை எடுத்துக்கொண்டால், மொத்தம் 29 மாநிலங்களில் பீகார் 27-வது இடத்தில் இருக்கிறது. மாணவர் சேர்க்கை, பெண்கள் எழுத்தறிவு, வேலைவாய்ப்பு, தொழில்துறை வளர்ச்சி, சிசு மரண விகிதம், காப்பீட்டு திட்டங்கள், வீடுகளில் கழிப்பறை வசதி, தனிநபர் வருமானம் என அனைத்திலும் பீகார் கீழ்நிலையில் இருக்கிறது.

இது, இரட்டை என்ஜின் அரசு, மாநிலத்தை எப்படி பின்னுக்கு இழுத்துச் சென்றுள்ளது என்பதை காட்டும் கண்ணாடி. நான் சந்தித்த பீகார் இளைஞர்கள் அறிவுக்கூர்மையானவர்கள். அவர்கள் எங்கு வேண்டுமானாலும் பிரகாசிக்க முடியும். ஆனால், மாநில அரசு, அவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதற்கு பதிலாக, வேலையில்லா திண்டாட்டத்திலும், கவலையிலும் ஆழ்த்தி விட்டது. தற்போது, மாற்றத்துக்கான நேரம் வந்து விட்டது. நீதி கிடைக்க மகா கூட்டணிக்கு ஆதரவு அளியுங்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஏ.டி.எம். எந்திரத்தில் பணம் எடுத்து தருவதாக கூறி முதியவரிடம் ரூ.18 ஆயிரம் 'அபேஸ்'



கர்நாடக மாநிலம் சிவமொக்கா டவுன் பகுதியை சேர்ந்தவர் ராமச்சந்திரா (வயது 65). இவர் கடந்த 10-ந்தேதி பத்ராவதி டவுன் பகுதிக்கு சென்றபோது அங்கு உள்ள ஏ.டி.எம். எந்திரத்தில் அவசர தேவைக்காக பணம் எடுக்க முயன்றுள்ளார். ஆனால், ராமச்சந்திராவுக்கு ஏ.டி.எம். எந்திரத்தில் பணம் எடுக்க தெரியவில்லை. இதனை அருகே நின்ற நபர் பார்த்து தான் பணம் எடுத்து கொடுப்பதாக அவரிடம் கூறியுள்ளார். பின்னர் ராமச்சந்திராவிடம் ஏ.டி.எம். கார்டை வாங்கி பணம் எடுப்பது போல் நடித்து பணம் வரவில்லை என நம்ப வைத்துள்ளார்.

பின்னர், அந்த மர்மநபர் ஏ.டி.எம். கார்டை மாற்றி கொடுத்துள்ளார். இதை கவனிக்காத ராமச்சந்திராவும் அது தனது ஏ.டி.எம். கார்டு என நம்பி அங்கிருந்து சென்று விட்டார். இதையடுத்து சிறிது நேரத்தில் ராமச்சந்திரா செல்போன் எண்ணிற்கு குறுந்தகவல் ஒன்று வந்தது. அதில், தங்களது வங்கி கணக்கில் இருந்து ரூ.18 ஆயிரத்து 600 எடுக்கப்பட்டது என இருந்தது. இதனை பார்த்து அவர் அதிர்ச்சி அடைந்தார்.

பின்னர் ராமச்சந்திரா வங்கிக்கு சென்ற போது தான் ஏ.டி.எம். கார்டில் பணம் எடுத்து கொடுப்பதுபோல் நடித்து ரூ.18 ஆயிரத்து 600-ஐ மர்மநபர் அபேஸ் செய்தது முதியவருக்கு தெரியவந்தது. இது குறித்து ராமச்சந்திரா பத்ராவதி பழைய டவுன் போலீசில் புகார் அளித்துள்ளார். அந்த புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்மநபரை வலைவீசி தேடி வருகின்றனர்.

# 110 கி.மீ வேகத்தில் சூறைக்காற்றுடன் ஆந்திராவில் கரையை கடந்தது 'மோந்தா' புயல்

வங்கக்கடலில் உருவான 'மோந்தா' புயல், ஆந்திராவை நோக்கி நேற்று முன்தினத்தில் இருந்து பயணித்து, நேற்று இரவு கரையை கடக்கத் தொடங்கியது. மணிக்கு 17 கி.மீ வேகத்தில் காக்கிநாடா, மசூலிப்பட்டினம் அருகே 'மோந்தா' புயல் கரையை கடக்க தொடங்கியது. புயல் கரையை கடக்க தொடங்கியதில் இருந்து ஆந்திராவின் கடலோர மாவட்டங்களில் 110 கி.மீ வேகத்தில் சூறைக்காற்று வீசியது. மேலும் அங்கு விடிய, விடிய இடி, மின்னலுடன் கனமழை வெளுத்து வாங்கியது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆந்திராவின் காக்கிநாடா, கிருஷ்ணா, எலுரு, கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி, அம்பேத்கர் கோனசீமா, அல்லூரி சீதாராம ராஜூ உள்ளிட்ட 7 மாவட்டங்களில் கடலோர பகுதிகளில் தங்கியிருந்த 2 லட்சம் பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான பகுதிகளில் தங்கவைக்கப்பட்டனர். மேலும் அந்த 7 மாவட்டங்களுக்கும் காலை 6 மணிவரை அனைத்து வாகன போக்குவரத்துக்கும் தடைவிதிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து கடலோர மாவட்டங்களில் பேரிடர் மீட்புத்துறையினர், போலீசார் உள்பட சுமார் 10 ஆயிரம் பேர் களம் இறக்கப்பட்டனர். அவர்கள் கடலோர பகுதியில் புயல் கரையை கடக்கும் பகுதியில் தீவிர ரோந்து மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். அமராவதியில் உள்ள கண்காணிப்பு மையத்தில் இருந்தவாறு புயல் பாதிப்புகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆந்திர முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு முடுக்கிவிட்டார்.

இந்தநிலையில் நள்ளிரவு சுமார் 1 மணியளவில் காக்கிநாடாவின் தெற்கே மசூலிப்பட்டினம் மற்றும் கலிங்கப்பட்டினம் இடையே 'மோந்தா' புயல் கரையை கடந்தது. புயல் காரணமாக மசூலிப்பட்டினம், கிருஷ்ணா ஆகிய கடலோர பகுதிகளில் மின் கம்பங்கள், ராட்சத மரங்கள் ஆகியவை வேரோடு சாய்ந்தன. மேலும் இடி, மின்னலுடன் விடிய, விடிய கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை அடியோடு முடங்கியது.

புயல் காரணமாக ஆந்திராவில் இருந்து சென்னைக்கு வர இருந்த 6 விமானங்களும், சென்னையில் இருந்து ஆந்திராவுக்கு செல்ல இருந்த 3 விமானங்களும் ரத்து செய்யப்பட்டன. ஆந்திராவில் கனமழை பெய்து வருவதால் 75 ரெயில்கள் ரத்து செய்யப்பட்டன.

புயல் காரணமாக ஆந்திராவில் 3,778 கிராமங்கள் பாதிக்கப்பட்டதாக சந்திரபாபு நாயுடு தெரிவித்தார். மேலும் மோந்தா புயல் காரணமாக 1.76 லட்சம் ஹெக்டர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு அழிந்ததாக அவர் தெரிவித்தார். இந்த புயல் காரணமாக கபுலுபடாவில் 12.5 செ.மீ., விசாகப்பட்டினத்தில் 12 செ.மி மற்றும் ஆனந்தபுரத்தில் 11.7 செ.மீ அளவில் மழை பதிவானது.

'மோந்தா' புயல் காரணமாக ஒடிசாவிலும் கனமழை வெளுத்து வாங்கியது. அங்குள்ள மல்கன்கிரி, கோரபூட், ராயகடா, கஜபதி, கஞ்சம், நபரனங்கபூர்



உள்பட 8 மாவட்டங்களில் கனமழை கொட்டித்தீர்த்தது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கு பேரிடர் மீட்புத்துறையினர், தீயணைப்பு வீரர்கள் என 5 ஆயிரம் பேர் களம் இறக்கப்பட்டு கண்காணிப்பு பணி மேற்கொண்டனர்.

## இந்திய செய்திகள்

### ஸ்ரீஹரிகோட்டாவில் தயார் நிலையில் பாகுபலி ராக்கெட்; 1-ந்தேதி 'கவுண்ட்டவுன்' தொடக்கம்

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து வருகிற 2-ந்தேதி பாகுபலி என்று செல்லமாக அழைக்கப்படும் 'எல்.வி.எம்-3' ராக்கெட் மூலம் 4 ஆயிரத்து 400 கிலோ எடை கொண்ட 'ஜிசாட்-7 ஆர்' என்று அழைக்கப்படும் 'சி.எம்.எஸ்-03' என்ற ராணுவ தகவல் தொடர்பு செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படுகிறது.



இந்த ராக்கெட் முழுமையாக ஒன்று சேர்க்கப்பட்டு செயற்கைக் கோளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளது. தொடர்ந்து, ஏவுதளத்திற்கு முந்தைய நடவடிக்கைகளாக ராக்கெட் கடந்த 26-ந்தேதி ஏவுதளத்திற்கு நகர்த்தப்பட்டு உள்ளது. இதற்கான இறுதிகட்டப்பணியான 'கவுண்ட்டவுன்' வருகிற 1-ந்தேதி தொடங்க வாய்ப்பு உள்ளது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

# கை ரேகைகள்- காதலில் யாருக்கு வெற்றி கிடைக்கும்?

கைரேகை மூலம் ஒருவரின் எதிர்காலத்தை கணிக்க முயற்சிக்கும்போது காதல் ரேகை மிக முக்கியமான ஒன்றாகும். கையில் இருக்கும் திருமணக் கோடு, நீங்கள் எப்போது திருமணம் செய்து கொள்வீர்கள் என்பதைக் கணிப்பது மட்டுமல்லாமல், வாழ்க்கையின் வெவ்வேறு கட்டங்களில் காதல் அல்லது திருமணம் குறித்த உங்கள் அணுகுமுறையை அடி கோடிட்டு காட்டவும் உதவும். காதல் விஷயத்தில் நீங்கள் எப்படிப்பட்ட நபராக இருக்கிறீர்கள் என்பதை புரிந்துகொள்ளவும் இது உதவுகிறது.

ஆண்களுக்கு வலது கட்டை விரலுக்கு கீழே சின்னதாக செங்குத்தான ஒரு கோடு செல்லும் அதான் காதல் ரேகை.

ஒருவருடைய கையில் விதிரேகை நன்றாக அமைந்து, அந்த விதி ரேகையை சந்திர மேட்டிலிருந்து வரும் ரேகை ஒன்று தொட்டு நின்று, திருமண ரேகை நன்கு அமையுமானால் அந்த நபர் கண்டிப்பாக காதல் திருமணம் செய்வார்.

காதல் ரேகை அமைப்புக்கேற்ற பலன்களை அறியலாம். படத்தில் 1,2,3..என 8 வரை குறிப்பிட்டுள்ள ரேகைகளுக்கான பலன்கள் எப்படி என்பதை பார்ப்போம்...

1.நீங்கள் காதல் விவகாரங்களில் சற்று அதிக கூச்ச சுபாவம் கொண்டு இருக்கலாம். நீங்கள் மட்டும் காதல் விவகாரங்களில் துணிச்சலுடன் செயல்பட்டால் உங்களுக்கு அதில் வெற்றி உண்டு.

2.காதல் விவாகரங்களில் நீங்கள் சிக்கினீர்கள் என்றால், அது முற்பகுதியில் உங்களுக்கு சந்தோஷத்தை தரும். ஆனால் பிற்பகுதியில் பலவிதமான அனுபவங்களை தரலாம். ஒரு வேலை உங்கள் சுக்கிர மேடு வலுவாக இருந்தால் பல திருப்பு முனைகளை சந்தித்து இறுதியில் உங்களது காதல் வெற்றி பெறும். காதல் ரேகையும் இல்லை, சுக்கிர மேடும் பலமாக அமையவில்லை எனில் காதலில் கூடுமானவரையில் நீங்கள் ஈடுபடுவதை தவிர்த்து, பெற்றோர்கள் பார்க்கும் திருமணத்திற்கு உடன் பட்டு செல்வது நல்லது.

உங்கள் வியா-
பாரம் உலகம்
முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில்
விளம்பரம்
செய்யுங்கள்!

3.பல தடைகளை கடந்து நீங்கள் காதல் செய்வீர்கள், அப்படி செய்தாலும் கூட உங்களின் காதல் வெற்றி அடையும் என்று உறுதி அளிக்க முடியாது. நீங்கள் பேசாமல் வீட்டில் பார்க்கும் பெண்ணை அல்லது மணமகனை திருமணம் செய்து கொள்வது உங்களுக்கு மிக நல்லது. மீறி காதல் விவகாரங்களில் ஈடுபட்டால் நீங்கள் அதிக ஏமாற்றத்தை சந்திக்க இடம் உண்டு.

4.நல்ல வசதியான நபரை தேடிப் பிடித்து காதல் செய்வீர்கள். பொய்யை கூட உண்மை போலவே சொல்லக்கூடியவர்கள் நீங்கள்.




அதனால் நீங்கள் என்ன சொன்னாலும் காதலிப்பவர் நம்பும் படியாக சொல்வதில் வல்லவர்கள். எனினும் காதலில் உண்மையுடன் தான் இருப்பீர்கள் அல்லது நடந்து கொள்வீர்கள் என்று சொல்வதற்கு இல்லை.

5.நீங்கள் காதல் செய்யும் நபர் எதிர்காலத்தில் பலராலும் அறியப்படும் நபராக இருப்பார். மேலும் நீங்கள் அதிக ரொமேன்டிக்காக செயல் படத் தெரிந்தவர்கள். காதல் விவகாரங்களில் பட்டையை கிளப்புவீர்கள்.

6.நீங்கள் காதல் செய்வதை கூடிய வரையில் தவிர்த்து வீட்டில் பார்க்கும் பெண்ணை அல்லது வாழ்க்கை துணையை திருமணம் செய்து கொள்வது உங்களுக்கு நல்லது. காரணம், நீங்கள் காதல் விவகாரங்களில் இறங்கினால் கண்டிப்பாக அந்தக் காதல் உங்களுக்கு சந்தோஷத்தை தர வாய்ப்பில்லை.

7.நீங்கள் காதலிக்கும் நபர் அதிக நேர்மையான நபராக இருக்க வாய்ப்பில்லை. இதனால் வாழ்க்கையில் சில தொல்லைகளை நீங்கள் சந்திக்க இடம் உண்டு. நீங்கள் பெரும்பாலும் காதல் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது உங்களுக்கு நல்லது.

8.உங்களுக்கே உங்கள் காதல் மீது நம்பிக்கை இல்லாமல் போகலாம். மேலும் நீங்கள் செய்யும் காதல் சமயத்தில் ஒரு தலை காதலாகக் கூட இருக்கலாம். அதனால் சில ஏமாற்றங்களை நீங்கள் சந்திக்க இடம் உண்டு. நீங்களும் கூட காதல் விவகாரங்களில் தலை இடாமல் வீட்டில் பார்க்கும் வாழ்க்கை துணையை திருமணம் செய்து கொள்ளுதல் நலம்.

திருமண ரேகை இரண்டு துண்டுகளாக காணப்பட்டு, அதில் ஒரு துண்டு இருதய ரேகையும், புத்தி ரேகையும் கடந்து நின்றால், அப்படிப்பட்ட நபர் காதலில் தோல்வியை சந்திப்பர். அந்த ரேகை ஆயுள் ரேகையும் கடந்து சென்றால் அப்படிப்பட்ட நபர் காதல் தோல்வியால் தற்கொலை செய்துகொள்வார்.

காதல் ரேகையின் வகைகள் மற்றும் பலன்கள்:

நீளமான காதல் ரேகை:

நீண்ட, நேராக செல்லும் காதல் ரேகை ஒருவரின் ஆழ்ந்த உணர்ச்சிகளையும், காதல் மீதான ஈடுபாட்டையும் குறிக்கிறது. இது ஒரு நிலையான மற்றும் தீவிரமான காதல் வாழ்க்கையை குறிக்கும் என்று கருதப்படுகிறது.

குறுகிய காதல் ரேகை:

குறுகிய காதல் ரேகை கொண்டவர்கள் உணர்ச்சி ரீதியாக வெளிப்படையாக இல்லாமல் இருக்கலாம் அல்லது காதல் விஷயங்களில் அவ்வளவு ஆர்வம் காட்டாமல் இருக்கலாம், குறுகிய காதல் ரேகைகள் உள்ளவர்கள் ஒரு உறவில்தங்களுக்குஎன்னவேண்டும் என்பதை அறிவார்கள், மேலும் தங்கள் சொந்த விருப்பங்களையும் தேவைகளையும் முதலில்வைக்கபயப்படுவதிலை. ஒரு குறுகிய ரேகை, காதல் மற்றும் உறவுகள் என்று வரும்போது ஒருவர் சற்று தனிமையாக இருப்பதையும் குறிக்கலாம்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிளைகள் கொண்ட காதல் ரேகை:

காதல் ரேகையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிளைகள் பிரிந்திருந்தால், இது ஒருவரின் காதல் வாழ்க்கையில் பல உறவுகள் அல்லது குழப்பங்கள் இருப்பதைக் குறிக்கலாம்,

காதல் ரேகை மற்றும் சூரிய ரேகை சந்திப்பு:

காதல் ரேகை சூரிய ரேகையை சந்திக்கும் போது, இது ஒருவரின் காதல் வாழ்க்கையில் பிரபலமான மற்றும் வெற்றிகரமான நபராக இருப்பதைக் குறிக்கலாம் என்று கருதப்படுகிறது,

காதல் ரேகையின் ஆரம்பம் மற்றும் முடிவு:


காதல் ரேகையின் ஆரம்பம் மற்றும் முடிவு எந்த மேட்டிலிருந்து தொடங்குகிறது மற்றும் எந்த மேட்டை அடைகிறது என்பதை வைத்து, ஒருவரின் காதல் வாழ்க்கையின் ஆரம்பம் மற்றும் முடிவு பற்றியும் அறியலாம்,

இருதய ரேகையுடன் தொடர்புடைய காதல் ரேகைகள்

ஒருவருக்கு காதல் ரேகை, இருதய ரேகையை நோக்கி வளைந்திருந்தால், அவர் தனிமரமாகவே இருப்பார். அவருக்கு திருமண வாழ்க்கை அமைந்தாலும், தனியாகவே வாழ வேண்டியிருக்கும். ஒருவேளை அந்த வளைவு சற்று மங்கலாக இருந்தால், அந்த நபர் திருமண வயதை அடையும் போது நாள்பட்ட நோய் பாதிப்பை சந்திக்க வேண்டி வரும். தொடக்கத்தில் கோடு V வடிவமாக இருந்தால், அவர் எந்த காதலிலும் நிரந்தரமாக இருக்கமாட்டார் என்று அர்த்தம். சூரிய ரேகையை வெறும் கோடு தொட்டால், செல்வந்தருடன் திருமணம் நடக்கும் வாய்ப்பு உண்டு. காதல் கோட்டில் கரும்புள்ளி இருந்தால், துணை இறக்கலாம்.




காதல் ரேகையின் மீது பல்வேறு கோடுகள்




காதல் ரேகைக்கு மீது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கோடுகள் இருந்தால், அந்த நபருக்கு பல்வேறு காதல் ஏற்படக்கூடும் என்பதை குறிக்கிறது. அதில் சில காதல்கள் வலுவாக இருக்கும் என்று கைரேகை பலன்கள் கூறுகின்றன. கோடுகள் எதுவும் வலுவாக இல்லாவிட்டால், அந்த நபருக்கு உறுதியான காதல் எதுவும் அமையாது என்று அர்த்தம். இதுபோன்ற கைரேகை கொண்ட நபருக்கு திருமண பந்தமும் நிலைக்காது என்று கைரேகை பலன்கள் கூறுகின்றன.

அ.ச.இராமராஜன்

www.kathiroli-
media.ca

# ஹிட்லர் ஆட்சியில் பறிபோன பெரும் செல்வத்தை வெளிப்படுத்திய 'பழைய சூட்கேஸ்'

சார்லி நார்த்காட் மற்றும் பென் மில்னே

படுக்கையின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு சூட்கேஸில் தொடங்கியது அந்த பயணம்.

அது 2009 ஆம் ஆண்டு.

ஆண்டனி ஈஸ்டனின் தந்தை பீட்டர் மிகச் சமீபத்தில் தான் மரணமடைந்திருந்தார்.

தந்தையின் சொத்துகளை நிர்வகிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஆண்டனி, ஹாம்ப்ஷயர் மாநிலத்தின் லிமிங்டன் என்ற நகரில் உள்ள தந்தையின் பழைய வீட்டில், ஒரு சிறிய பழுப்பு நிற தோல் சூட்கேஸைக் கண்டுபிடித்தார். அந்த சூட்கேஸுக்குள் ஜெர்மன் காசோலைகள், புகைப்பட ஆல்பங்கள், அவரது வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களைப் பதிவு செய்த குறிப்புகள் நிறைந்த உறைகள் மற்றும் ஒரு பிறப்புச் சான்றிதழ் ஆகியவை காணப்பட்டன.

தான் ஒரு 'ஆங்கிலேயர்' என்றும், ஆங்கிலிகன் என்றும் கூறிவந்த பீட்டர் ரோட்ரிக் ஈஸ்டன், உண்மையில் போருக்கு முந்தைய ஜெர்மனியில் பெர்லினில் வாழ்ந்த, பணக்கார யூத குடும்பத்தைச் சேர்ந்த பீட்டர் ஹான்ஸ் ருடால்ஃப் ஐஸ்னர் ஆவார்.

தந்தையின் பின்னணி குறித்து அவ்வபோது கேள்விபட்டிருந்தாலும் , அந்த சூட்கேஸில் இருந்த ஆவணங்கள் ஆண்டனிக்கு முற்றிலும் தெரியாத ஒரு கடந்த காலத்தைப் பற்றி வெளிப் படுத்தின. அந்தக் கண்டுபிடிப்பு, அவரை பத்து ஆண்டுகள் நீண்ட ஒரு பயணத்திற்குள் இட்டுச் சென்றது. அதில், இன அழிப்பால் சிதைந்த குடும்பத்தையும், பில்லியன்கணக்கான பவுண்டு மதிப்புள்ள செல்வம் காணாமல் போனதையும், நாஜி ஆட்சிக்காலத்தில் திருடப்பட்ட கலைப் படைப்புகள் மற்றும் சொத்துகள் பற்றிய உண்மைகளையும் ஆண்டனி கண்டறிந்தார் .

அந்த சூட்கேஸுக்குள் இருந்த கருப்பு-வெள்ளை புகைப்படங்கள் பீட்டரின் சிறு வயது வாழ்க்கையை எடுத்துக் காட்டின.

மெர்சிடீஸ் கார்கள், பணியாட்கள் நிறைந்த மாளிகைகள், தேவதைகளின் படங்களால் செதுக்கப்பட்ட அலங்கார படிக்கட்டுகள் கொண்ட மாளிகை ஆகியவற்றை அவர் கண்டார்.

இவை அனைத்தும் லண்டனில் ஆண்டனி அனுபவித்த எளிய வாழ்க்கையிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை.

அவை ஒருபுறம் இருக்க, ஆண்டனி கண்டெடுத்த ஒரு புகைப்படம் வேறொன்றையும் வெளிப்படுத்தியது. அதில் 12 வயது பீட்டர் ஐஸ்னர், நண்பர்களுடன் சிரித்துக் கொண்டிருக்கிறார், தூரத்தில் ஒரு நாஜி கொடி அசைந்துகொண்டிருக்கிறது.

'அது எனக்கு கடந்த காலத்திலிருந்து நீட்டப்பட்ட ஒரு கையாக தோன்றியது,' என்கிறார் ஆண்டனி.

அவரது தந்தை அமைதியான மனிதராக இருந்தாலும் அடிக்கடி கோபப்படுபவர் என்றும் ஆண்டனி கூறுகிறார். அவர் தனது குழந்தைப் பருவத்தைப் பற்றிப் பேசவே மாட்டார் என்றும் அவரது ஜெர்மன் உச்சரிப்பு குறித்து யாராவது கேட்டால் உடனே உரையாடலை நிறுத்திவிடுவார் என்றும் ஆண்டனி பகிர்ந்து கொண்டார்.

'அவர் மற்றவர்களைப் போல இல்லை என்பதற்கான சில அடையாளங்கள் இருந்தன. அவரைச் சுற்றியிருந்த உலகில் எப்போதும் ஒரு இருள், ஒரு மர்மம் இருந்தது'என்று நினைவுகூர்கிறார் ஆண்டனி.

மகத்தான செல்வம்

ஆண்டனியின்குடும்பவரலாற்றைப் பற்றி தெரிந்து கொள்வதற்கான அடுத்த தடயமாக ஒரு கலைப் படைப்பு அமைந்தது.

ஜெர்மன் மொழியை நன்கு அறிந்த ஒரு நண்பரின் உதவியை நாடிய ஆண்டனி, 'ஹான்ஷே வெர்கே' (Hahn'sche Werke) எனப்படும் நிறுவனத்தைப் பற்றி ஆராயச் சென்னார். அந்த பெயர் சூட்கேஸில் இருந்த பல ஆவணங்களில் காணப்பட்டது. சில நாட்களில் அந்த நண்பர் இணையத்தில் தேடி, ஆண்டனிக்கு ஒரு புகைப்படத்தை அனுப்பினார்.

அந்த புகைப்படத்தில் ஒரு பெரிய எஃகுத் தொழிற்சாலையைச் சித்தரித்த ஓவியம் ஒன்று காணப்பட்டது. அது அந்த நிறுவனத்துக்குச் சொந்தமானதாக இருக்கலாம் என தோன்றியது.

அந்த ஓவியத்தில், உருகிய உலோகம் கன்வேயர் பெல்ட்டில் பிரகாசமாய் பாய்கிறது, அதைச் சுற்றி தீவிரமாக வேலைசெய்யும் தொழிலாளர்களின் முகங்கள் ஒளிர்கின்றன.



இது, போரை நோக்கி விரைந்து கொண்டிருந்த ஜெர்மனியின் தொழில்துறை சக்தியையும் ஆற்றலையும் பிரதிபலிக்கும் காட்சி.

1910 ஆம் ஆண்டு ஓவியர் ஹான்ஸ் பலுஷெக் வரைந்த அந்த ஓவியம் 'ஐசன்வால்ஸ்வெர்க்' (Eisenwalzwerk – இரும்பு ஆலை) எனப்பட்டது.

அது ஹென்ரிச் ஐஸ்னர் என்பவருக்குச் சொந்தமானது.

அவர் ஹான்ஷே வெர்கே எஃகு நிறுவனத்தை மத்திய ஐரோப்பாவின் மிகப் பெரிய, நவீன தொழில்துறை நிறுவனங்களில் ஒன்றாக உருவாக்கியதில் முக்கிய பங்காற்றியவர்.

சூட்கேஸில் இருந்த ஆவணங்களின் படி, அந்த ஹென்ரிச் தான் ஆண்டனியின் கொள்ளுத்தாத்தா என்பது தெரிய வந்தது.

பின்னர் அவர் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின்படி, 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஹென்ரிச் ஜெர்மனியின் தொழிலதிபர்களில் ஒருவராக, இன்றுள்ள பல பில்லியனர்களுக்குச் சமமானவராக இருந்தார் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அவரது நிறுவனம் குழாய் வடிவ எஃகு தயாரித்தது. அதன் தொழிற்சாலைகள் ஜெர்மனி, போலந்து, ரஷ்யா போன்ற நாடுகளில் பரவியிருந்தன.

ஹென்ரிச்சும் அவரது மனைவி ஓல்காவும், பெர்லினிலும் அதைச் சுற்றிய பகுதிகளிலும் பல சொத்துகளை வைத்திருந்தனர்.

அவற்றில் ஒன்று நகர மையத்தில் உள்ள ஆறு மாடி மாளிகை. அது பளிங்கு தரைகளும், வெள்ளை நிற முகப்பும் கொண்ட அழகிய கட்டடமாக இருந்தது.

1900களின் தொடக்கத்தில் எடுக்கப்பட்ட ஒரு பழைய புகைப் படத்தில், தொப்பையுடனும், மீசையுடனும் ஹென்ரிச் காணப்படுகிறார். அதில் அவர் கருப்பு உடை அணிந்துள்ளார்.

அவருக்கு அருகில் ஓல்கா அமர்ந்திருக்கிறார். அவர் ஒரு அழகான தலைப்பாகையை அணிந்து, அரச குடும்பத்தைச் சேர்ந்தவரைப் போல காட்சியளிக்கிறார்.

1918இல் ஹென்ரிச் இறந்த போது, தனது நிறுவன பங்குகளையும் தனிப்பட்ட செல்வத்தையும், முதலாம் உலகப் போரில் போராடி திரும்பிய தனது மகன் ருடால்ஃப் என்பவரிடம் விட்டுச் சென்றார்.

அந்தப் போர் மனித குலத்திற்கு பேரழிவாக இருந்தாலும், அந்தக் காலகட்டத்தில் ஹான்ஷே வெர்கே வளர்ச்சியடைந்து, ஜெர்மன் ராணுவத்தின் எஃகு தேவையை பூர்த்தி செய்தது.

போருக்குப் பிறகு ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் குழப்பத்தையும் ருடால்ஃபும் அவரது குடும்பமும் திறம்பட சமாளித்தனர்.

ஆனால், சில ஆண்டுகள் கழித்து அந்தப் பெரும் செல்வம் நழுவிப்போனது.

அதன் பின் நிகழ்ந்த மாற்றம்

ஆண்டனி கண்டெடுத்த சூட்கேஸில் இருந்த குறிப்புகளில், அவரது தந்தை பீட்டர், தன்னுடைய சிறுவயதில் அவருடைய பெற்றோருக் கிடையேயான உரையாடல்களை மறைமுகமாகக் கேட்டதும், நாஜி அச்சுறுத்தல்கள் குறித்த தகவல்களையும் நினைவுகூர்ந்திருந்தார். அந்த காலத்தில், அடால்ஃப் ஹிட்லரும் அவரது ஆதரவாளர்களும், முதலாம் உலகப் போரில் ஜெர்மனி தோல்வியுற்றதற்கும், பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கும், யூதர்களைக் குற்றம் சாட்டினர்.

ருடால்ஃப் ஐஸ்னர், தனது நிறுவனத்தை நாஜி ஆட்சிக்கு மிகவும் பயனுள்ளதாக மாற்றினால் தான் குடும்பம் பாதுகாப்பாக இருக்கும் என்று நம்பினார்.

சில காலம் இது நன்மை பயப்பதை போல் தோன்றியது.

ஆனால், யூதர்களுக்கு எதிரான சட்டங்கள் தீவிரமடைந்ததும், சுற்றிலும் சிக்கல்களும் வன்முறைகளும் அதிகரித்ததும், அவர் தன்னுடைய நம்பிக்கையை மறுபரிசீலனை செய்யத் தொடங்கினார்.

1938-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், நாஜி அரசு ஹான்ஷே வெர்கே நிறுவனத்தை குறிவைத்தது.

அதிகாரிகளின் கடும் அழுத்தத்தின் கீழ், யூதர்களுக்குச் சொந்தமான அந்த நிறுவனத்தை மிகக் குறைந்த விலையில் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அந்நிறுவனம் , நாஜி ஆதரவாளராக இருந்த தலைமை நிர்வாகி வில்ஹெல்ம் ஜாங்கன் தலைமையிலான மன்னெஸ்மேன் (Mannesmann) எனும் நிறுவனத்துக்கு விற்கப்பட்டது.

'அபகரிக்கப்பட்ட அந்தப் பெரும் செல்வத்தையும், அதன் இன்றைய மதிப்பையும் கணக்கிடுவது கிட்டத்தட்ட சாத்தியமற்றது'என்று நாஜி பில்லியனர்கள் (Nazi Billionaires) என்ற புத்தகத்தின் ஆசிரியர் டேவிட் டி ஜாங் கூறுகிறார்.

அந்த நூல், நாஜி ஆட்சிக்காலத்தில் யூத வணிகங்களை எவ்வாறு சூறையாடப்பட்டன என்பதை வெளிச்சமிட்டு காட்டுகிறது.

பின்னர், 2000ஆம் ஆண்டு, வோடஃபோன் (Vodafone) நிறுவனம் மன்னெஸ்மேனை 100 பில்லியன் டாலருக்கும் அதிகமான மதிப்பில் கையகப்படுத்தியது.

அந்த நேரத்தில் இது உலகின் மிகப் பெரிய வணிக ஒப்பந்தமாக இருந்தது.

அந்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்ட தொழில்துறை சொத்துகளில், குறைந்தபட்சம் ஒரு பகுதி ஐஸ்னர் குடும்பத்தின் நிறுவனத்திலிருந்து வந்தவையாக இருந்திருக்கலாம்.

ஹான்ஷே வெர்கே கலைக்கப்பட்டதும், அதன் நிர்வாக உறுப்பினர்கள்கைது செய்யப்பட்டதும், ஐஸ்னர் குடும்பம் தப்பி ஓட வேண்டிய அவசியத்தை உணர்ந்தது. ஆனால், 1937க்குள், ஜெர்மனியை விட்டு வெளியேற முயன்ற எந்த யூதரும் தங்களுடைய சொத்துகளில் 92% வரை அரசுக்கு ஒப்படைக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர்.

இதை ரீச்ஃப்லூக்ஸ்டுயர் (Reichsfluchtsteuer) அல்லது 'புலம்பெயர்வோரின் சொத்துகள் மீதான வரி' என்று அழைத்தனர்.

இதனால், ஐஸ்னர் குடும்பம் தங்களிடம் எஞ்சியிருந்த செல்வத்தையும் இழக்க நேரிட்டது.

ஒப்பந்தம்

இந்த நெருக்கடியின் உச்சத்தில், மார்ட்டின் ஹார்டிக் என்ற ஒருவரின் பெயர், ஐஸ்னர் குடும்பத்தினரிடையே அடிக்கடி ஒலித்தது.

பெர்லினில் உள்ள ஆவணங்களின் படி, அவர் ஒரு பொருளாதார நிபுணரும் வரி ஆலோசகரும் ஆவார்.

1930களில், ஹார்டிக்கின் பெயர் ஐஸ்னர் குடும்பத்தின் விருந்தினர் புத்தகத்தில் மீண்டும் மீண்டும் இடம்பெற்றது.

அதில் அவர், அவர்களது தாராளமான விருந்தோம்பலுக்கு நன்றி தெரிவித்து எழுதியிருந்தார்.

யூதர் அல்லாத ஹார்டிக், நாஜிகள் அவர்களின் சொத்துகளை பறிமுதல் செய்யத் திட்டமிட்டிருந்த சூழலில் அந்தக் குடும்பத்துக்கு ஒரு தீர்வை முன்வைத்ததை போல தெரிகிறது. ஐஸ்னர் குடும்பம், தங்களின் தனிப்பட்ட செல்வத்தின் முக்கியமான பகுதிகளை அதாவது பல சொத்துகளை அவரிடம் ஒப்படைத்தனர்.

இதன் மூலம், அவர்கள் யூதர்களை குறிவைக்கும் நாஜி சட்டங்களிலிருந்து தற்காலிகமாக தப்பிக்க முடிந்தது.

ஆண்டனியின் தாத்தாவும் பாட்டியும் ஹார்டிக் ஒருநாள் அந்தச் சொத்துகளை திருப்பித் தருவார் என்று நினைத்திருக்க வேண்டும் என ஆண்டனி கருதுகிறார்.

ஆனால் அவர்களின் நம்பிக்கை பொய்த்துப் போனது.

ஹார்டிக், அந்தச் சொத்துகளை நிரந்தரமாக தனது பெயருக்கு மாற்றிக்கொண்டார்.

பிபிசி, ஜெர்மனியின் ஆவணக் காப்பகங்களில் இருந்து அசல் விற்பனை ஆவணங்களின் நகல்களை கண்டுபிடித்து, அவற்றை மூன்று சுயாதீன நிபுணர்களிடம் பகிர்ந்தது.

மூவரும் இதை ஒருமனதாக 'கட்டாய விற்பனை' (Forced Sale) செய்யப்பட்டிருக்கிறது என முடிவு செய்தனர்.

**– இது, பிபிசிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு**

**நன்றி: பிபிசி**

# டொனால்ட் டிரம்ப் 3வது முறையாக அமெரிக்க அதிபராக முடியுமா?

**கிரேம் பேக்கர்**

டொனால்ட் டிரம்ப், மூன்றாவது முறையாக அதிபராக பதவி வகிப்பதற்கான வாய்ப்பை மறுக்கவில்லை. ‘அதை நான் மிகவும் விரும்புகிறேன்‘ என்று தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, டிரம்ப் அமைப்பு ‘டிரம்ப் 2028‘ என்று எழுதப்பட்ட சிவப்பு நிற தொப்பிகளை விற்பனை செய்து வருகிறது. இந்நிலையில், அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடப்போவதற்கான ஒரு சைகையாக இது பார்க்கப்படுகிறது.

ஆனால், அந்த நேரத்திற்குள் டிரம்ப் அமெரிக்கா அதிபராக இரண்டு முறை பதவி வகித்து முடித்திருப்பார். இது அமெரிக்க அரசியலமைப்பில் அனுமதிக்கப்பட்ட உச்ச வரம்பாகும்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், 50 டாலர் விலையுள்ள அந்த தொப்பிகள் வெளியிடப்பட்டன. அப்போது டிரம்ப், மூன்றாவது முறை பதவி வகிக்க விரும்புவது பற்றி ’நகைச்சுவையாகச் சொல்லவில்லை’ என்று கூறியிருந்தார்.

அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம், ‘யாரும் இரண்டு முறைக்கு மேல் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது‘ என்று தெளிவாகக் கூறுகிறது.

ஆனால், டிரம்ப் ஆதரவாளர்கள் சிலரும், டிரம்பும் அதற்கு வேறு சில வழிகள் இருக்கலாம் எனக் கூறி வருகின்றனர்.

டிரம்ப் ஏன் மூன்றாவது முறை பற்றிப் பேசுகிறார்?

அக்டோபர் 27 அன்று ஆசிய பயணத்தின் போது, மூன்றாவது முறையாக அதிபராகப் பதவி வகிப்பதற்கான வாய்ப்பு பற்றி செய்தியாளர்கள் டொனால்ட் டிரம்பிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், ‘அதைப்பற்றி நான் உண்மையில் யோசிக்கவில்லை. ஆனால் எனக்கு இதுவரை கிடைத்ததிலேயே மிகச்சிறந்த கருத்துக் கணிப்பு முடிவுகள் இப்போது உள்ளன,‘ என்று பதிலளித்தார்.

79 வயதான அதிபரான டிரம்ப் மீண்டும் ஒரு அதிபராக வருவதற்கான ஒரு ‘திட்டம்‘ தயாராகி வருகிறது என டிரம்பின் முன்னாள் ஆலோசகர் ஸ்டீவ் பானன் கூறிய சில நாட்களுக்குப் பிறகு இந்தக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

முந்தைய என்பிசி நேர்காணலில், ‘அதைச் செய்யக்கூடிய சில வழிகள் இருக்கின்றன‘ என்று டிரம்ப் கூறியிருந்தார்.

மேலும் அவர், ‘நான் நகைச்சுவையாகச் சொல்லவில்லை... பலரும் நான் அதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், நான் அவர்களிடம் இது இன்னும் தொடக்க நிலையில்தான் இருக்கிறது, நிறைய தூரம் செல்ல வேண்டியுள்ளது என்று சொல்கிறேன்‘ என்றார்.

இரண்டாவது பதவிக்காலத்தின் முடிவில் டிரம்ப் 82வது வயதை எட்டியிருப்பார். அவரிடம், ‘நாட்டின் மிகவும் கடினமான வேலையில்‘ தொடர்ந்து இருக்க விரும்புகிறீர்களா என்று கேட்கப்பட்ட போது, ‘எனக்கு வேலை செய்வது பிடிக்கும்,‘ என்று சிரித்தபடி பதிலளித்தார்.

இது குறித்து டிரம்ப் கருத்து தெரிவிப்பது முதல் முறையல்ல. ஜனவரி மாதத்தில் அவர் ஆதரவாளர்களிடம், ‘ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்லது மூன்று முறை அல்லது நான்கு முறை அதிபராக பணியாற்றுவது என் வாழ்க்கையின் மிகப்பெரிய மரியாதையாக இருக்கும்,‘ என்று கூறினார்.

ஆனால் பின்னர், அது ‘போலி செய்தி ஊடகங்களுக்காக‘ சொல்லப்பட்ட நகைச்சுவை என விளக்கம் அளித்தார்.

ஏப்ரல் மாதத்தில், டிரம்பின் அதிகாரப்பூர்வ ஆன்லைன் வணிகக் கடை ‘டிரம்ப் 2028‘ என்ற வாசகத்துடன் தொப்பியை 50 டாலருக்கு விற்பனை செய்யத் தொடங்கியது. அதற்கான விளம்பரப் படத்தில் அவரது மகன் எரிக் டிரம்ப் அந்தத் தொப்பியை அணிந்திருந்தார். அந்தப் பக்கத்தில் ‘எதிர்காலம் பிரகாசமாகத் தெரிகிறது’’ என்ற வாசகமும் இடம் பெற்றிருந்தது.




அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் என்ன சொல்கிறது?

அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் யாரும் மூன்றாவது முறையாக அதிபராகப் பதவி வகிக்க முடியாது என்று தெளிவாகக் கூறுகிறது.

‘யாரும் இரண்டு முறைக்கு மேல் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது. வேறு ஒருவர் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிக்காலத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் அதிபராக இருந்தவரும் அடுத்த ஒரு முறைக்கு மேல் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது‘ என அதன் 22வது திருத்தம் கூறுகிறது.

அரசியலமைப்பை மாற்ற வேண்டும் என்றால், செனட் மற்றும் பிரதிநிதிகள் சபையில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஒப்புதலும், மாகாண அரசுகளில் முக்கால்வாசி அரசுகளின் ஒப்புதலும் தேவைப்படும்.

டொனால்ட் டிரம்ப்பின் குடியரசுக் கட்சி தற்போது நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் கட்டுப்படுத்தி வந்தாலும், அரசியலமைப்பை மாற்றத் தேவையான அளவுக்கு அதனிடம் பெரும்பான்மை இல்லை. மேலும், 50 மாகாணங்களில் 18 மாகாண சட்டமன்றங்கள் ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளன.

டிரம்ப் எப்படி மூன்றாவது முறையாக அதிபராக முடியும்?

அரசியலமைப்பில் ஒரு ஓட்டை இருப்பதாகவும், அது இதுவரை நீதிமன்றத்தில் சோதிக்கப்படவில்லை என்றும் டிரம்பின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

22வது திருத்தம் ஒருவரை இரண்டு முறைக்கு மேல் அதிபர் பதவிக்கு ‘தேர்ந்தெடுக்கப்படுவதை‘ மட்டுமே வெளிப்படையாகத் தடை செய்கிறது. ஆனால், ‘அதிபர் பதவி விலகிய பின் மற்றொருவர் பதவி ஏற்பது‘ பற்றி எதுவும் கூறவில்லை என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

அந்தக் கோட்பாட்டின்படி, 2028 தேர்தலில் டொனால்ட் டிரம்ப் மற்றொரு வேட்பாளரின், ஒருவேளை தற்போதைய துணை அதிபர் ஜே.டி. வான்ஸின்துணைஅதிபர்வேட்பாளராக தேர்தலில் நிற்கலாம். அவர்கள் வெற்றி பெற்றால், புதிய அதிபர் பதவியேற்று உடனடியாக ராஜினாமா செய்யலாம். அதனால், டிரம்ப் மீண்டும் அதிபராக பொறுப்பேற்கலாம்.

டிரம்பின் முன்னாள் ஆலோசகரும் பாட்காஸ்டருமான ஸ்டீவ் பானன் ’தி எகானாமிஸ்ட்’ இதழுக்கு அளித்த பேட்டியில், ‘டிரம்ப் 2028-இல் மீண்டும் அதிபராக இருப்பார். மக்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்‘ என்றார்.

மேலும், ‘சரியான நேரத்தில் அந்தத் திட்டம் என்ன என்பதை நாங்கள் வெளிப்படுத்துவோம்,‘ என்றும் கூறினார்.

ஆனால், டிரம்ப் தான் அந்த யோசனையை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

‘மக்கள் அதை விரும்புவார்கள் என நினைக்கவில்லை. அது சரியாக இருக்காது‘ என்று டிரம்ப் கூறினார்.

மூன்றாவது முறையாக அதிபர் பதவி வகிப்பதற்கான வாய்ப்பை டிரம்ப் திறந்து வைத்திருந்தாலும், அதை எப்படிச் செய்வார் என்பதற்கு டிரம்ப் இதுவரை தெளிவான விளக்கம் தரவில்லை.

டிரம்ப் மூன்றாவது முறையாக பதவியேற்பதை யார் எதிர்க்கிறார்கள்?

ஜனநாயகக் கட்சியினர் இதனை கடுமையாக எதிர்த்துள்ளனர்.

‘அரசாங்கத்தைக் கைப்பற்றி நமது ஜனநாயக அமைப்பை அழிப்பதற்கான அவரது தெளிவான முயற்சியில் இது மற்றொரு ஆபத்தான படி‘ என்று நியூயார்க் நாடாளுமன்ற உறுப்பினர் டேனியல் கோல்ட்மேன் கூறினார். அவர், டிரம்பின் முதல் பதவி நீக்க விசாரணையில் தலைமை வழக்கறிஞராக பணியாற்றியவர்.

‘அமெரிக்க நாடாளுமன்றத்தில் உள்ள குடியரசுக் கட்சியினர் உண்மையாக அரசியலமைப்பை மதிப்பவர்களாக இருந்தால், மூன்றாவது முறையாக பதவி வகிக்க வேண்டும் என்ற டிரம்பின் ஆசையை வெளிப்படையாக எதிர்க்க வேண்டும்,‘ என்றும் அவர் வலியுறுத்தினார்.

டிரம்பின் சொந்தக் கட்சிக்குள்ளும் இதைப் பற்றிய எதிர்மறையான கருத்துகள் உள்ளன.

குடியரசுக் கட்சி செனட்டர் மார்க்வேன் முல்லின், பிப்ரவரி மாதத்தில், டிரம்பை மீண்டும் வெள்ளை மாளிகைக்கு கொண்டுவரும் முயற்சியை ஆதரிக்க மாட்டேன் என்றார்.

‘அமெரிக்க மக்கள் முடிவு செய்யாவிட்டால், நான் அரசியலமைப்பை மாற்றப் போவதில்லை‘ என்று அவர் என்பிசியிடம் தெரிவித்தார்.

அதேபோல், குடியரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாம் கோல், இந்த யோசனை ‘தீவிரமாக பேசக்கூடிய அளவுக்கு யதார்த்தமானதல்ல, மிகவும் கற்பனையானது‘ என்று குறிப்பிட்டார்.

சட்ட வல்லுநர்கள் என்ன சொல்கிறார்கள்?

நோட்ரேடேம்பல்கலைக்கழகத்தின் தேர்தல் சட்டப் பேராசிரியரான டெரெக் முல்லர், அரசியலமைப்பின் 12வது திருத்தம் ‘அரசியலமைப்புச் சட்ட ரீதியாக அதிபர் பதவிக்கு தகுதியற்ற எந்தவொரு நபரும் அமெரிக்காவின் துணை அதிபர் பதவிக்கு தகுதி பெற முடியாது‘ எனக் கூறுகிறது என்றார்.

அதாவது, ஒரு நபர் இரண்டு முறை அதிபராகப் பதவி வகித்திருந்தால், அவர் துணை அதிபர் வேட்பாளராகப் போட்டியிட முடியாது என்று அவர் விளக்கினார்.

‘அதிபர் பதவிக்கால வரம்புகளை மீறுவதற்கு ’ஒரு வித்தியாசமான வழி’ எதுவும் இருப்பதாக நான் நினைக்கவில்லை‘ என்றும் முல்லர் கூறினார்.

அதேபோல், பாஸ்டனில் உள்ள நார்த்ஈஸ்டன் பல்கலைக்கழகத்தின் அரசியலமைப்புச் சட்ட பேராசிரியர் ஜெரமி பால், சிபிஎஸ் நியூஸுக்கு அளித்த பேட்டியில், ‘மூன்றாவது முறையாக அதிபர் பதவியேற்க எந்த நம்பகமான சட்ட வாதங்களும் இல்லை‘ என்று குறிப்பிட்டார்.

யாராவது இரண்டு முறைக்கு மேல் பதவி வகித்திருக்கிறார்களா?

அமெரிக்காவில் நான்கு முறை அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே நபர், பிராங்க்ளின் டெலானோ ரூஸ்வெல்ட்.

ஆனால், தனது நான்காவது பதவிக்காலம் தொடங்கிய மூன்று மாதங்களுக்குப் பிறகு, 1945 ஏப்ரல் மாதத்தில் அவர் மரணமடைந்தார்.

ரூஸ்வெல்ட் தலைமையிலான காலம், பெரும் பொருளாதார மந்தநிலை மற்றும் இரண்டாம் உலகப் போர் ஆகிய இரு முக்கியமான நிகழ்வுகள் நடந்தன. இவைதான் அவர் நீண்டகாலம் பதவியில் இருந்ததற்கான முக்கியக் காரணங்களாகச் சொல்லப்படுகின்றன.

அந்த நேரத்தில், அமெரிக்க அதிபர்கள் இரண்டு முறை மட்டுமே பதவி வகிக்க வேண்டும் என்ற சட்ட வரம்பு இல்லை. அது ஜார்ஜ் வாஷிங்டன் 1796-ல் மூன்றாவது முறை போட்டியிட மறுத்ததிலிருந்து தொடங்கிய பாரம்பரியம் மட்டுமே.

ரூஸ்வெல்ட்டின் நீண்டகால ஆட்சியால், இந்தப் பாரம்பரியம் சட்டமாக்கப்பட்டது. 1951-ல் 22வது திருத்தம் இயற்றப்பட்டு, இரண்டு முறைக்கு மேல் அதிபராக முடியாது என்று சட்டமானது.

**– இது, பிபிசிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு**

**நன்றி: பிபிசி**

# ரெஸ்டாரண்ட் சுவையில் இறால் வறுவல்! வீட்டிலேயே ‘பட்டர் கார்லிக் பிரான்’ செய்யலாம்!

சமையல் என்பது ஒரு கலை. அதுவும் புதுப்புது உணவு கலவைகளை உருவாக்கி, சுவைகளில் புரட்சி செய்வதென்பது ஒரு அசாத்தியமான திறன். அப்படி, சீன, மேற்கத்திய சமையல் முறைகளின் கலவையில் பிறந்த ஒரு உணவுதான் 'பட்டர் கார்லிக் பிரான்' (Butter Garlic Prawn). உணவகங்களில் மட்டுமே கிடைத்துவந்த இந்த சுவையான இறாலை, வீட்டிலேயே எளிதாகவும், குழந்தைகள் விரும்பும் வகையிலும் எப்படிச் செய்வது என்பதை ஃபரோஸ் ஹோட்டலின் செஃப் தியாகு செய்து காட்டுகிறார்.

செய்முறை



★ முதலில் அடுப்பில் ஒரு வாணலியை வைத்து சூடாக்கவும்.

★ வாணலி சூடானதும், வெண்ணெயைச் சேர்த்து உருக விடவும். வெண்ணெய் அதிகம் சேர்த்தால் சுவை இன்னும் சிறப்பாக இருக்கும்.

★ வெண்ணெய் உருகியதும், பொடியாக நறுக்கிய பூண்டுத் துண்டுகளைச் சேர்க்கவும். வெண்ணெய் மற்றும் பூண்டின் கலவை சேர்ந்து சமைக்கும்போது, சுவை பல மடங்கு அதிகரிக்கும்.

★ பூண்டு பொன்னிறமாக வந்தவுடன், முழு சின்ன வெங்காயம் மற்றும் நறுக்கிய குடைமிளகாயைச் சேர்த்து வதக்க வேண்டும். வெண்ணெயில் சமைக்கும்போது அடுப்பின் தீயைக் குறைத்துக்கொள்வது முக்கியம், இல்லையென்றால் வெண்ணெய் கருகிவிடும்.

★ இப்போது சுத்தம் செய்து வைத்திருக்கும் இறால்களைச் சேர்க்கவும். இறால்களைச் சேர்த்த உடனேயே, தேவையான அளவு உப்பையும் சேர்த்து நன்கு கிளறவும். உப்பு சேர்த்த பின்னர்தான் இறால், சுவையை நன்கு உறிஞ்சும்.

★ காரத்துக்கு மிளகாய் தூளைச் சேர்க்கவும். இந்த உணவு தயாராக 5 முதல் 10 நிமிடங்களே ஆகும். இறாலை நீண்ட நேரம் சமைத்தால் ரப்பர் போன்று இறுகிவிடும் என்பதால் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

★ இப்போது சிறிதளவு தண்ணீர் சேர்த்து, அதனுடன் சோயா சாஸ் மற்றும் கூடுதல் காரத்துக்குத் தேவையான மிளகாய் தூளையும் சேர்க்கவும். வெண்ணெய் மற்றும் பூண்டுடன் சேர்ந்து சோயா சாஸ் ஒரு அற்புதமான குழம்புப் பக்குவத்தைக் கொடுக்கும்.

★ இறுதியாக, பொடியாக நறுக்கிய வெங்காயத் தாளைத் தூவி அடுப்பை அணைக்கவும். இது உணவின் சுவையை மேலும் அதிகரிக்கும்.

இந்த உணவில் உள்ள நன்மைகள்

★ இறாலில் புரதம் அதிக அளவில் உள்ளது. இது உடலின் திசுக்கள் மற்றும் தசைகளின் வளர்ச்சிக்கு அவசியமானது. மேலும், இதில் உள்ள ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் மூளை மற்றும் கண் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. இது இதய நோய்கள் வராமல் தடுக்கவும் உதவுகிறது.

★ பூண்டு ஒரு இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட உணவு. இதில் உள்ள அல்லிசின் என்ற கலவை இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும், கொழுப்பின் அளவைக் குறைக்கவும் உதவுகிறது. இது செரிமானத்திற்கும் துணை புரிகிறது.

★ வெங்காயத்தில் பல ஊட்டச்சத்துக்கள் உள்ளன. அதில் உள்ள குவெர்செடின் என்ற ஆன்டிஆக்ஸிடன்ட், உடலில் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கும் ஆற்றல் கொண்டது. இது எலும்புகளின் ஆரோக்கியத்திற்கும் நல்லது.

இப்படி ஆரோக்கியமான பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் 'பட்டர் கார்லிக் பிரான்', சுவையுடன் சேர்த்து உங்கள் உடலுக்கும் பல நன்மைகளை வழங்குகிறது. அதே சுவையை வீட்டிலேயே அனுபவிக்க இந்த ரெசிபி சிறந்த தேர்வாக இருக்கும். இது குடும்பத்தினருக்கும், குறிப்பாக குழந்தைகளுக்கும் பிடித்தமான ஒரு உணவாக நிச்சயம் அமையும்.

# ஜூஸியான கலாகண்ட் செய்வது எப்படி?

தீபாவளிக்கு முறுக்கு, அதிரசம், குலாப் ஜாமூன், லட்டு என எண்ணெய் பலகாரங்கள் நிறைய செய்திருப்போம், சாப்பிடிருப்போம். ஆனால் பலரும் இந்தியாவின் பிரபலமான இந்த இனிப்பை மறந்திருப்போம். அப்படி தீபாவளிக்கு கலாகண்ட் செய்ய மறந்தவர்களுக்கான பதிவு தான் இது. சுவையான கலாகண்ட் செய்வது எப்படி என பார்ப்போம். கலாகண்ட் செய்வதற்கு பால், பன்னீர், நெய், சர்க்கரை, ஏலக்காய் உள்ளிட்டவை அவசியம். இதில் பன்னீரை கடையில் வாங்கமல், வீட்டில் இருக்கும் பாலை வைத்து நாமே செய்தால் கலாகண்ட் நன்றாக வரும்.

தேவையான பொருட்கள்...

பால் - 1 லிட்டர்

நெய் - 1/2 கப்

சர்க்கரை - 1 கப்

குங்குமப்பூ - (வேண்டுமென்றால்)

ஏலக்காய்த்தூள் - 1 டீஸ்பூன்

பிஸ்தா - (வேண்டுமென்றால்)

பாதாம் - (வேண்டுமென்றால்)

எலுமிச்சை பழச்சாறு - 1 பழம்

ருசிக்க தயாராக கலாகண்ட் இனிப்பு

செய்முறை

முதலில் பன்னீர் செய்வது எப்படி என பார்ப்போம். பன்னீர் செய்வதற்கு 500மிலி பால் எடுத்துக்கொள்வோம். பாலை நன்கு காய்ச்சவேண்டும். பால் நன்கு கொதித்தபின்பு, அதில் ஒரு எலுமிச்சைப்பழத்தை பிழிந்து விடவேண்டும். பால் முழுவதுமாக திரிந்து வரும்வரையில் அடுப்பை நிறுத்தவேண்டாம். பின்னர் தண்ணீர் தனியாக பிரிந்த உடன், அதனை எடுத்து வடிகட்டி கொள்ளலாம். பின்னர் பன்னீர் மீது தண்ணீர் ஊற்றவேண்டும். அப்போதுதான்



பன்னீரில் எலுமிச்சைப் பழத்தின் புளிப்பு தெரியாது.

பின்னர் ஒரு லிட்டர் பால் எடுத்துக்கொண்டு, அதனை நன்கு கொதிக்கவிடவேண்டும். கொதிக்கும்போது கிண்டிவிட்டுக் கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் பாத்திரத்தில் அடிபிடிக்காது. பால் நன்கு வற்றி, க்ரீம் பதத்திற்கு வரும்வரை கிண்டவேண்டும். இந்தப்பதம் வரும்போதே பாலில், செய்து வைத்த பன்னீரை எடுத்துக்கொட்டி கிண்டுங்கள். தொடர்ந்து கிண்டியபிறகு பாலில் உள்ள ஈரம் வற்றியபிறகு, அதில் அரை கப் நெய் ஊற்றவேண்டும். நெய் ஊற்றி 5 நிமிடம் நன்றாக கிண்டியபின், 1 கப் வெள்ளை சர்க்கரையை சேர்க்கவேண்டும். இனிப்பு கூடுதலாக வேண்டுமென்றால், கூடுதல் சர்க்கரை சேர்த்துக்கொள்ளலாம்.

கடைசியில் ஏலக்காய்தூள் போட்டு கிண்டவேண்டும். பின்னர் கலாகண்ட் நன்கு கெட்டி பதத்திற்கு வந்தபின் இறக்கிக்கொள்ளலாம். நன்கு நிறம்வேண்டும் என்பவர்கள் கூடுதல் நேரம்வைத்து கிண்டலாம். பின்னர் ஒரு பாத்திரத்தில் நெய் தடவி, கலாகண்ட் கலவை சூடாக இருக்கும்போதே அதனை கொட்டி அழுத்திவிடவேண்டும். வேண்டுமானால் அதன்மேல் முந்திரி, பாதாம், என உங்களுக்கு பிடித்த பருப்பு வகைகளை சேர்த்துக்கொள்ளலாம். ஒரு இரண்டுமணிநேரம் கழித்து கலாகண்ட் கலவையை எடுத்துப் பார்த்தால் நன்கு ஆறி, கெட்டியாக இருக்கும். அருமையான கலாகண்ட் இனிப்பு தயார்.

# அசத்தலான சிக்கன் ஈரல் வறுவல்

தேவையான பொருட்கள்:

கோழி ஈரல் - அரைக் கிலோ

சின்ன வெங்காயம் - 50 கிராம்

பூண்டு - 8 பல்

பட்டை - 2

இஞ்சி - 1 துண்டு

தேங்காய்த் துருவல் - 3 தேக்கரண்டி

கிராம்பு - 4

சோம்பு - 1 தேக்கரண்டி

எலுமிச்சம் பழச்சாறு - 1 மேசைக்கரண்டி

எண்ணெய் - 1 மேசைக்கரண்டி

மிளகாய்த்தூள் - 2 தேக்கரண்டி

தனியா தூள்- 1 தேக்கரண்டி

மஞ்சள் தூள் - ½ தேக்கரண்டி

கொத்தமல்லித் தழை, கறிவேப்பிலை - சிறிதளவு

உப்பு- தேவையான அளவு

செய்முறை:

★ இஞ்சி, பூண்டு ஆகியவற்றை விழுதாக அரைத்துக்கொண்டு, தேங்காய்த் துருவலுடன் கிராம்பு, சோம்பு, பட்டை ஆகியவற்றைச் சேர்த்து நீர் தெளித்து அரைத்துக் கொள்ளுங்கள்.

★ ஈரலைச் சுத்தம் செய்து துண்டுகளாக நறுக்கிக் கழுவிப் பிழிந்து கொள்ளுங்கள்.

★ அந்த துண்டுகளை ஒரு பாத்திரத்தில் போட்டு இஞ்சி விழுது, பூண்டு விழுது, மஞ்சள் தூள், எலுமிச்சம்பழச் சாறு ஆகிய வற்றைச் சேர்த்துப் பக்குவமாகப் புரட்டிவிட்டு ஊற வையுங்கள்.

★ வெங்காயத்தைத் தோலுரித்துக்கொள்ள வேண்டும்.

★ அடுப்பில் இருப்புச் சட்டியை வைத்து எண்ணெய் ஊற்றி அது காய்ந்ததும், வெங்காயத்தைத் தட்டிப் போட்டு வதக்குங்கள்

★ பிறகு ஈரல் துண்டுகளை மசாலாவுடன் கொட்டி, அரைத்து வைத்திருக்கும் தேங்காய்க் கலவையைப் போட்டு உப்பு சேர்க்கவும். அரை கப் நீர் ஊற்றி, ஒரு தட்டால் மூடி வைத்து வேகவிடுங்கள்.

★ ஈரல் துண்டுகளை அதிக நேரம் வேக வைக்கக்கூடாது. ஆகையால் அவை வெந்ததும் உடனே அடுப்பிலிருந்து இறக்கிவிட வேண்டும்.

**சுவையான ஈரல் வறுவல் ரெடி!**

# ஆப்கானிஸ்தானும் பாகிஸ்தானுக்கான நதிநீரை நிறுத்த திட்டம்



பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பிறகு இந்தியா பாகிஸ்தானுக்கு எதிராக பல்வேறு அதிரடி நடவடிக்கைளை மேற்கொண்டது. குறிப்பாக சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாக அறிவித்தது. இந்தியாவின் திடீர் அறிவிப்பு பாகிஸ்தானுக்கு தலைவலியை ஏற்படுத்தியது.

பாகிஸ்தானின் தண்ணீர் பிரச்னையை தீர்க்கும் முக்கிய காரணியாக இருக்கும் சிந்து நதி நீர், நிறுத்தப்பட்டதை போர் நடவடிக்கையாகவே எடுத்துக்கொள்வோம் என்று அறிவித்தார் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஷ் ஷெரிப்.

இந்த நிலையில், இந்தியாவைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானும் பாகிஸ்தானுக்கான நதிநீரை நிறுத்த திட்டம் என தகவல் வெளியாகி உள்ளது. அண்மையில் பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் இடையிலான மோதலில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்த நிலையில் ஆப்கானிஸ்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

குனார் ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டுவதன் மூலம் பாகிஸ்தானுக்கு நீர் செல்வதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப் படுகிறது.

இந்தியா- பாகிஸ்தானுக்கு இடையே இருக்கும் சிந்து நதி நீர் ஒப்பந்தம் போல ஆப்கானிஸ்தானுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையே எந்தவித ஒப்பந்தமும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

## ரஷியா மீது மேலும் அழுத்தத்தை அதிகரிக்க வேண்டும் - டிரம்புக்கு உக்ரைன் அதிபர் கோரிக்கை

உக்ரைன் மீது ரஷியா ராணுவம் போர் தொடங்கி 3½ ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இந்த போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உள்ளிட்ட உலக தலைவர்கள் முயற்சித்து வருகிறார்கள். இருப்பினும் போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.



இந்தநிலையில் நிதி மற்றும் ராணுவ உதவி வேண்டி உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி நேற்று இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டார். இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தலைமையில் நடந்த கூட்டத்தில் உக்ரைனுக்கு தேவையான ஆயுதங்கள் வழங்க ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகள் சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. அப்போது பேசிய ஜெலன்ஸ்கி, ரஷியா அதிபர் புதின் மீது மேலும் அழுத்தத்தை அதிகரிக்க வேண்டும்.

அங்குள்ள எண்ணெய் நிறுவனங்கள் அனைத்தின் மீதும் பொருளாதார தடை விதிக்க வேண்டும். டோமாஹோங்க்ஸ் மற்றும் அதிநவீன ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்க வேண்டும்'' என அமெரிக்க ஜனாதிபதி டிரம்புக்கு கோரிக்கை வைத்தார். இதனிடையே நேற்று உக்ரைன் மீது ரஷியா ராணுவம் நடத்திய தாக்குதலில் 4 பேர் பலியாகினர்.

## புதிய பொருளாதார தடை: ரஷியா மீது டிரம்ப் போர் தொடுக்கிறார் - ரஷிய முன்னாள் அதிபர் சாடல்

உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வராததால் ரஷியா மீது கடுமையான கோபத்தில் இருக்கும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், அந்த நாட்டுக்கு எதிராக புதிய பொருளாதார தடைகளை அறிவித்து உள்ளார். மேலும் புதாபெஸ்டில் ரஷிய அதிபர் புதினை சந்திக்கும் நிகழ்ச்சியையும் ரத்து செய்துவிட்டார்.

டிரம்பின் இந்த நடவடிக்கைகளை ரஷிய முன்னாள் அதிபரும், தேசிய பாதுகாப்பு கவுன்சில் துணைத்தலைவருமான டிமித்ரி மெத்வதேவ் கடுமையாக சாடியுள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், 'டிரம்ப் பெண்டுலம் தற்போது தெளிவான தலைகீழ் மாற்றத்தைக் கொண்டுள்ளது. தேவையற்ற பேச்சுவார்த்தைகளைப் பொருட்படுத்தாமல் உக்ரைனை இப்போது தாக்க முடியும். மேலும் அது உண்மையிலேயே சாத்தியமான வெற்றியை அடைய முடியும். அது களத்தில், மேசைக்குப் பின்னால் அல்ல' என தெரிவித்தார்.

மேலும் அவர், 'புதிய பொருளாதார தடைகளும், புதாபெஸ்ட் நிகழ்வை ரத்து செய்திருப்பதும் பிரதான அம்சத்தை மாற்றாது. மாறாக இது ரஷியாவுக்கு எதிரான போர் நடவடிக்கை ஆகும். தற்போது டிரம்பும் பைத்தியக்கார ஐரோப்பாவுடன் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டுள்ளார்' என்றும் சாடினார்.



# உலக செய்திகள்

## கனடா மீதும் மேலும் 10 சதவீத வரி விதிப்பு - டிரம்ப் அறிவிப்பு

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், சில மாதங்களுக்கு முன்பு இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் மீது வரி விதிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதில் அண்டை நாடான கனடாவில் இருந்து அமெரிக்கா வுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிக வரியை விதித்தார்.



இதனையடுத்து, அமெரிக்கா -கனடா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளும் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வந்தன. இதற்கிடையே டிரம்பின் வரி விதிப்பு நடவடிக்கையை விமர்சித்து கனடாவின் ஒண்டாரியோ மாகாண அரசு விளம்பரம் ஒன்றை வெளியிட்டது. அதில் மறைந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரோனல்டு ரிகன், வரி விதிப்பால் அமெரிக்கா பாதிக்கப்படும்'என கூறும்வீடியோஇடம்பெற்றிருந்தது. இதனால் ஆத்திரம் அடைந்த டிரம்ப், கனடாவுடனான அனைத்து வர்த்தக பேச்சுவார்த்தைகளும் முடிவுக்கு வருவதாக அறிவித்தார்.

# சவுதியில் ஒட்டகம் மேய்க்கும் உ.பி. இளைஞர் ; மீட்கக்கோரி வெளியிட்ட வீடியோ

இந்தியாவை சேர்ந்த லட்சக் கணக்கானோர் சவுதி, கத்தார் உள்பட அரபு நாடுகளில் வேலை செய்து வருகின்றனர். இதில் பலரும் கொத்தடிமைகளாக நடத்தப் படுவதாக குற்றச்சாட்டு



எழுந்துள்ளது. மேலும், இந்தியர்களை வேலைக்கு சேர்த்த வர்கள் பாஸ்போர்ட்டு உள்ளிட்ட ஆவணங்களை பறித்துக்கொண்டு துன்புறுத்தும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில், உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த இளைஞர் சவுதி அரேபியாவிற்கு சென்றுள்ளார். அவரை வேலைக்கு சேர்த்த நபர் அவரது பாஸ்போர்ட்டு உள்ளிட்ட ஆவணங்களை பறித்துக் கொண்டு பாலைவனத்தில் ஒட்டகம் மேய்க்க விட்டுள்ளார்.

இதையடுத்து தன்னை மீட்கக்கோரி, உதவிகேட்டு வீடியோ வெளியிட்டுள்ளார். தன்னை வேலைக்கு சேர்த்தவர் தன்னை கொலை செய்யப்போவதாக மிரட்டல் விடுத்துள்ளதாகவும் தான் இந்தியாவுக்கு திரும்ப பிரதமர் மோடி உதவ வேண்டும் என்றும் அந்த இளைஞர் வீடியோவில் தெரிவித்துள்ளார். இந்த வீடியோ சமூகவலைதளத்தில் வைரலான நிலையில் இதுதொடர்பாக சவுதி போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில் உதவிகேட்டு வீடியோ வெளியிட்ட இளைஞருக்கும் அவருக்கு வேலை வழங்கிய நபருக்கும் எந்த பிரச்சினையும் இல்லை என்றும் சமூகவலைதளத்தில் வைரலாகவே இளைஞர் இவ்வாறு வீடியோ வெளியிட்டதாகவும் சவுதி போலீசார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, வைரல் வீடியோவில் இடம்பெற்றுள்ள நபரை தொடர்புகொள்ள முயற்சி நடைபெற்று வருவதாகவும், அவரது இருப்பிடம் குறித்த தகவல் இதுவரை தெரியவில்லை என்றும் சவுதியில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

www.kathiroli-media.ca

# 40,000 பேர் மட்டுமே வாழும் ஒரு ஏர்போர்ட் கூட இல்லாத நாடு எப்படி உலகின் பணக்கார நாடாக மாறியது தெரியுமா?

நம் உலகில் மொத்தம் 195 ஆண்டுகள் உள்ளன. ஒவ்வொரு நாடும் அளவிலும், மக்கள் தொகையிலும் வேறுபட்டாலும் அதற்கென தனிப்பட்ட வரலாறும், நாணயமும், கொடியும் மற்றும் அரசியலமைப்பு இருக்கும். ஒரு நாட்டின் வெற்றி பெரும்பாலும் அதன் இராணுவ வலிமை, எல்லை விரிவாக்கம் அல்லது பொருளாதார சுதந்திரத்தால் அளவிடப்படுகிறது.

ஆனால் இதுபோன்ற எந்த வரைமுறைகளுக்குள்ளும் வராத, அதேசமயம் உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாக இருக்கும் நாடு பற்றி உங்களுக்கு தெரியுமா? சிறிய ஐரோப்பிய நாடான லிச்சென்ஸ்டீன் வளர்ந்த நாடுகளுக்கான அனைத்து அளவீடுகளையும் மாற்றியுள்ளது. இந்த நாட்டில் மிகவும் குறைவான வளங்கள் இருந்த போதிலும், உலகின் மிகவும் நிலையான மற்றும் செல்வந்த நாடுகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

நம்புவதற்கு கடினமாக இருந்தாலும் இது உண்மைதான். இந்த நாட்டுக்கென்று தனிப்பட்ட நாணயம் இல்லை, மேலும் இந்த பணக்கார நாட்டில் ஒரு சர்வதேச விமான நிலையம் கூட இல்லை, ஆனால் இந்த நாட்டின் தனிநபர் வருமானம் உலகிலேயே மிகவும் அதிகமான ஒன்றாகும். லிச்சென்ஸ்டீனின் வெற்றியின் ரகசியம் என்பது அது எல்லாவற்றையும்



உருவாக்கியது அல்ல, ஆனால் அது தன்னிடம் இருந்ததை சிறப்பாகப் பயன்படுத்தியதுதான்.

லிச்சென்ஸ்டீன் உத்தி

பெரும்பாலான நாடுகள் தங்கள் இறையாண்மையின் சின்னங்களான நாணயம், மொழி மற்றும் தேசிய விமான நிறுவனம்போன்றவற்றை கவனமாகப் பாதுகாக்கின்றன. ஆனால் லிச்சென்ஸ்டீன் தனித்துவமான பாதையை எடுத்துள்ளது. அதன் அண்டை நாடாக சுவிட்ஸர்லாந்து இருப்பதால் அது ஒரு தனித்துவமான முடிவை எடுத்துள்ளது. அதன் சொந்த நாணயத்தை உருவாக்குவதற்குப் பதிலாக, அந்த நாடு சுவிஸ் பிராங்கை ஏற்றுக்கொண்டது, இது லிச்சென்ஸ்டீனுக்கு வலுவான மற்றும் நிலையான பொருளாதார கட்டமைப்பை வழங்குகிறது.இந்த நடவடிக்கை லிச்சென்ஸ்டீனை அதிக செலவை ஏற்படுத்தும் மத்திய வங்கியின் தேவையிலிருந்தும், நாணய மேலாண்மையின் சுமையிலிருந்தும் காப்பாற்றியது. இதேபோல், ஒரு விமான நிலையத்தை கட்டுவதற்கு பதிலாக, அது சுவிட்சர்லாந்து மற்றும் ஆஸ்திரியாவின் போக்குவரத்து நெட்வொர்க்குகளைப் பயன்படுத்தி, பில்லியன் கணக்கான டாலர்களைச் சேமித்துள்ளது.

லிச்சென்ஸ்டீனின் உண்மையான பலம் என்ன?

லிச்சென்ஸ்டீனை ஒரு பணக்கார ஐரோப்பிய நாடு என்று கூறும்போது பொதுவாக திரைப்படங்களில் வரும் சமூக விரோத செயல்கள்தான் நினைவிற்கு வரும். ஆனால் லிச்சென்ஸ்டீனின் உண்மையான பலம் தொழில் மற்றும் புதுமைகளில் உள்ளது. பல் மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் மைக்ரோ- டிரில்கள் முதல் விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் ஆட்டோமொபைல் பாகங்கள் வரை அனைத்தையும் உற்பத்தி செய்யும் துல்லியமான தொழில்நுட்பத்தில் லிச்சென்ஸ்டீன் முக்கியமான இடத்தில் உள்ளது.

கட்டுமான உபகரணங்களில் உலகளாவிய தலைவராக இருக்கும் Hilti, லிச்சென்ஸ்டீனின் தொழில்துறை வலிமையின் ஒரு முக்கிய அடையாளமாகும். இங்கு பல பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் இருப்பதால், இங்கு மக்கள் தொகையை விட அதிகமான பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் உள்ளன. இதன் விளைவாக, வேலையின்மை என்ற பிரச்சினையை இங்கு கிடையாது, மேலும் குடிமக்களின் வருமானம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடன் சுமை மற்றும் குற்றம் இல்லாத நாடு

லீச்சென்ஸ்டீன் பொருளாதாரரீதியாக மட்டும் வளமானநாடு இல்லை, சமூகரீதியாகவும் நிலையானதாகவும் உள்ளது. இந்த நாட்டிற்கு கடன் பிரச்சினை இல்லை, மேலும் அரசாங்கம் உபரி வருமானத்தை ஈட்டுகிறது. இதில் கூடுதல் சுவாரஸ்யம் என்னவென்றால் ஒட்டுநாட்டிலும் ஒரு சில கைதிகள் மட்டுமே உள்ளனர். இது செல்வத்தின் அடையாளம் மட்டுமல்ல, இந்த நாட்டில் உள்ள பாதுகாப்பு மற்றும் அமைதியின் அடையாளமாகும்.

# பாகிஸ்தானின் ரகசிய ’பெண்கள் சந்தையில்’ இளம் பெண்கள் சொற்ப விலைக்கு சீனாவுக்கு விற்கப்பட காரணம் என்ன தெரியுமா?

சீனாவிடமிருந்து பெற்றுள்ள மிகப்பெரிய கடனால் பாகிஸ்தான் சீனாவுக்கு சகல விதங்களிலும் நட்பு நாடாக மாறிவருகிறது. சீனாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள உறவு உலகம் முழுக்க நன்கு அறிந்ததுதான். இந்த உறவால் குவாதர் துறைமுகம் போன்ற முக்கியமான பகுதிகளின் கட்டுப்பாட்டை இஸ்லாமாபாத் சீனாவிடம் ஒப்படைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

சீனாவை பாகிஸ்தான் அதிகம் சார்ந்திருப்பதற்கு பின்னால் நம்ப முடியாத காரணம் ஒன்றும் உள்ளது. இளம் பாகிஸ்தானிய பெண்கள், சீன ஆண்களுக்கு ’மணமகள் சந்தையில்’ $700 வரை மிகக்குறைந்த விலைக்கு விற்கப்படுகிறார்கள். கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் கிட்டத்தட்ட 600-க்கும் மேற்பட்ட ஏழை பாகிஸ்தானிய சிறுமிகளும், பெண்களும் சீன ஆண்களுக்கு மணப்பெண்களாக விற்கப்பட்டுள்ளனர்.

ஊடக அறிக்கைகளின் படி, பாகிஸ்தானில் ’மணமகள் சந்தை’ என்று அழைக்கப்படும் குறிப்பிட்ட இடம் இல்லை என்றாலும், பாகிஸ்தான்-சீனாவின் எல்லை கிராமங்களில் இந்த நடைமுறை பரவலாக உள்ளது, ஏனெனில் பாகிஸ்தானிய மற்றும் சீன தரகர்கள் பெரும்பாலும் இந்த தொலைதூர குக்கிராமங்களுக்குச் சென்று, வறுமையில் வாடும் குடும்பங்களிலிருந்து இளம் பெண்களை $700-3,200 (பாகிஸ்தான் மதிப்பில் 2-9 லட்சம்)க்கு வாங்குகிறார்கள்.

பெண்களின் ’விலை’ அவர்களின் வயது மற்றும் தோற்றத்தைப் பொறுத்தது, மேலும் இளமையான மற்றும் அழகான பெண்கள் பெரும்பாலும் அதிக விலைக்கு வாங்கப்படுகிறார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த இளம் பெண்கள் பின்னர் ’திருமணம்’ என்ற பெயரில் ’மணமகள்களாக’ பணக்கார சீன ஆண்களுக்கு விற்கப்படுகிறார்கள், ஆனால் உரிமைகள் குழுக்கள் இந்த நடைமுறை அடிப்படையில் பாலியல் மற்றும் மனித கடத்தலின் ஒரு வடிவம் என்று கூறுகிறார்கள், ஏனெனில் இப்படி விற்கப்படும் பெண்கள் பெரும்பாலும் தங்கள் ’உரிமையாளரின்’ வீட்டில் பாலியல் அடிமையாக வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புகளின் கூற்றுப்படி, பாகிஸ்தானில் மோசமடைந்து வரும் பொருளாதார நிலைமை இதற்கு முக்கிய காரணமாக உள்ளது. தொலைதூர எல்லை கிராமங்களில் வறுமை மற்றும் இங்குள்ள கடுமையான பாலின ஏற்றத்தாழ்வு பெரும்பாலும் குடும்பங்கள் தங்கள் மகள்களை பணக்கார சீன ஆண்களுக்கு சொற்ப தொகைக்கு ’திருமணம்’ செய்து விற்க கட்டாயப்படுத்துகின்றன.

‘ரூ. 1.5 லட்சத்திற்கு மனைவி‘ என்ற வைரலான சமூக ஊடக கூற்றுகள் இந்த துரதிர்ஷ்டவசமான மக்களை ட்ரோல் செய்ய பயன்படுத்தப்படுகின்றன, ஆனால் இதற்குப் பின்னால் இருக்கும் உண்மை மிகவும் கடுமையானது. வறுமையின் காரணமாக தொலைதூர எல்லைப் பகுதிகளில் உள்ள மக்கள், குறிப்பாக கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள், தங்கள் இளம் மகள்களை சீன ஆண்களுக்கு விற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

பணத்தைத் தவிர, குடும்பங்கள் பெண்ணின் உடன்பிறப்புகளையும் சீனாவிற்கு அனுப்புகின்றன, மேலும் பெரும்பாலும் நோய்வாய்ப்பட்ட பெற்றோரும் மணமகளுடன் சீனாவிற்குச் செல்வது, பிரச்சினையை மேலும் அதிகரிக்கிறது.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் 12-18 வயதுக் குட்பட்டவர்கள் மற்றும் கிறிஸ்தவ பின்னணியைச் சேர்ந்தவர்கள், இது பாகிஸ்தானில் சிறுபான்மையினரின் மோசமான நிலையை பிரதிபலிக்கிறது. 2019 ஆம் ஆண்டில், இந்த கும்பல் இளம் பெண்களை ’திருமணம்’ என்ற பெயரில் சீனாவிற்கு அனுப்பிய 629 க்கும் மேற்பட்ட வழக்குகளை பாகிஸ்தான் புலனாய்வாளர்கள் உறுதிப்படுத்தினர்.



இந்த ’மணமகள் சந்தை’ எப்படி செயல்படுகிறது?

இதுபற்றிய நடத்தப்பட்ட விசாரணையில், சீன மற்றும் பாகிஸ்தானிய தரகர்கள், தொலைதூர கிராமங்களில் உள்ள ஏழை குடும்பங்களிலிருந்து இந்த இளம் பெண்களை குறைவான தொகைக்கு வாங்கி, போலி விசாக்கள் மற்றும் பாஸ்போர்ட்களைப் பயன்படுத்தி நேரடியாக சீனாவிற்கும், சில சமயங்களில் அஜர்பைஜான் போன்ற பிற நாடுகள் வழியாகவும் கடத்தினர். இந்த நடைமுறை பெரும்பாலும் இந்த இளம் பெண்கள் கடுமையாக சுரண்டப்படுவதற்கு வழிவகுக்கிறது என்றும் மனித உரிமைக் குழுக்கள் குறிப்பிடுகின்றன. சீனாவில் உள்ள ஒரு குழந்தை கொள்கையும் இதற்கு முக்கிய காரணமாக உள்ளது, இந்த கொள்கையால் சீனாவில் 35 மில்லியன் ஆண்கள் கூடுதலாக உள்ளனர்.

# இந்திய செய்திகள்

## கேரளாவில் 2½ மாத ஆண் குழந்தையை ரூ.50 ஆயிரத்திற்கு விற்க முயற்சி: தந்தை உள்பட 3 பேர் கைது

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் கும்மணம் பகுதியில் தனியார் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இங்கு அசாம் மாநிலத்தை ஒரு தம்பதி வேலை பார்த்து வந்தனர். இவர்களுக்கு பிறந்து 2½ மாதமே ஆன ஆண் குழந்தை உள்ளது.

இதேபோல் ஈராட்டுப் பேட்டையை சேர்ந்த தனியார் தொழிற்சாலை ஒன்றில் உத்தரபிரதேசத்தை சேர்ந்த தம்பதி வேலை பார்த்து வந்தனர். இந்த தம்பதிக்கு குழந்தை இல்லை. இதனால் அவர்கள் குழந்தையை தத்தெடுக்க முடிவு செய்தனர். இதைத்தொடர்ந்து அவர்களுக்கு அறிமுகமான ஒருவர், தனக்கு தெரிந்த கும்மணம் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் வேலை பார்க்கும் அசாம் மாநில தம்பதியிடம் ஆண் குழந்தை உள்ளது, அவர்களிடம் பேசி பணம் கொடுத்து அந்த குழந்தையை வாங்கி கொள்ளலாம் என்று கூறியுள்ளார்.



இதையடுத்து அந்த நபர், அசாம் மாநில தம்பதியிடம் பேசி குழந்தையை பணம் கொடுத்து வாங்க முயற்சித்தார். ஆனால் அதற்கு குழந்தையின் தாய் சம்மதம் தெரிவிக்கவில்லை. இருப்பினும் அவரது கணவர், குழந்தையை விற்க முடிவு செய்தார். இதனால் கணவன்-மனைவி இடையே தகராறு ஏற்பட்டு வந்தது. தொடர்ந்து ரூ.50 ஆயிரத்திற்கு குழந்தையை விற்க அதன் தந்தை பேரம் பேசினார். பின்னர் அதற்கு முன்பணமாக ரூ.1,000-த்தை குழந்தையின் தந்தை பெற்றுக்கொண்டார்.

இதையறிந்த குழந்தையின் தாய், கணவருடன் மேலும் தகராறு செய்ததுடன் நடந்த சம்பவங்களை தன்னுடன் வேலை பார்க்கும் சக தொழிலாளர்களிடம் கூறினார். இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த அவர்கள், உடனடியாக குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புக்கு தகவல் தெரிவித்தனர். தொடர்ந்து கோட்டயம் கிழக்கு போலீசாரிடம் புகார் அளிக்கப்பட்டது.

இதையடுத்து கோட்டயம் போலீசார் விசாரணை நடத்தி, ரூ.50 ஆயிரத்திற்கு 2½ மாத ஆண் குழந்தையை விற்பனை செய்ய முயன்ற தந்தை, இடைத்தரகராக செயல்பட்ட நபர் மற்றும் அந்த குழந்தையை விலைக்கு வாங்க முயன்ற உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த தொழிலாளி என 3 பேரையும் கைது செய்தனர். தொடர்ந்து அவர்கள் 3 பேர் மீதும் போலீசார் வழக்குப்பதிவு செய்து மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

## முன்னாள் காதலனுடன் சேர்ந்து லிவ்-இன் காதலனை கொலை செய்த இளம்பெண் - டெல்லியில் பரபரப்பு

தலைநகர் டெல்லியின் காந்தி விகார் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் 4-வது மாடியில் கடந்த 6-ந்தேதி இரவு தீ விபத்து ஏற்பட்டது. இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற தீயணைப்புத்துறையினர், நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். பின்னர் தீ விபத்து ஏற்பட்ட வீட்டிற்குள் சென்று பார்த்த போது, அங்கு ராம்கேஷ் மீனா(வயது 32) என்பவரின் சடலம் எரிந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். அந்த அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள சி.சி.டி.வி. கேமராக்களை ஆய்வு செய்தபோது, தீ விபத்து ஏற்படுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு முகமூடி அணிந்த 2 நபர்கள் ராம்கேஷ் மீனாவின் வீட்டிற்குள் செல்வதும், பின்னர் சிறிது நேரம் கழித்து அவர்கள் வெளியே வருவதும் பதிவாகி இருந்தது. மேலும், அவர்களுடன் ஒரு பெண்ணும் வெளியே வந்தார்.

அந்த பெண் யார் என்பது குறித்து விசாரணை நடத்தியபோது, அவர் ராம்கேஷ் மீனாவின் லிவ்-இன் காதலி என்பது தெரியவந்தது. இதையடுத்து அந்த பெண்ணை தேடிப்பிடித்து போலீசார் அவரிடம் விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில், ராம்கேஷ் மீனாவை தனது முன்னாள் காதலனுடன் சேர்ந்து கொலை செய்ததாக அந்த பெண் ஒப்புக்கொண்டார்.



முன்னதாக ராம்கேஷ் மீனா தனது அந்தரங்க புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை எடுத்து வைத்துக் கொண்டு தன்னை மிரட்டி வந்ததாக அந்த பெண் கூறியுள்ளார். இந்த விவகாரம் குறித்து தனது முன்னாள் காதலரிடம் கூறியபோது, அவர்தான் ராம்கேஷ் மீனாவை தீர்த்துக் கட்ட வேண்டும் என ஆலோசனை வழங்கியதாகவும், திட்டமிட்டபடி சம்பவத்தன்று ராம்கேஷ் மீனாவை கழுத்தை நெரித்து கொலை செய்துவிட்டு, பின்னர் வீட்டில் இருந்த கியாஸ் சிலிண்டரை திறந்து விட்டு தீ விபத்து ஏற்படுத்தியதாகவும் அந்த பெண் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், போலீசார் அந்த பெண்ணின் முன்னாள் காதலர் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த மற்றொரு நபர் ஆகிய இருவரை கைது செய்தனர். தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## உத்தர பிரதேச மருத்துவமனையில் பெண் நோயாளியை பாலியல் வன்கொடுமை செய்த தூய்மை பணியாளர் கைது

உத்தர பிரதேச மாநிலம் ஷாஜகான்பூரில் உள்ள மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளி ஒருவருக்கு உதவியாக அவரது குடும்பத்தைசேர்ந்த 35வயது பெண் ஒருவர் உடன் இருந்துள்ளார். இந்நிலையில் நேற்றைய தினம்,



மருத்துவமனைக்கு அருகில் உள்ள மதுக்கடையில் அந்த பெண் மது வாங்கி குடித்ததாக கூறப்படுகிறது.

மதுவை குடித்துவிட்டு சிறிது நேரத்தில் அந்த பெண் மயங்கி விழுந்துள்ளார். இதனால் அங்கிருந்தவர்கள் உடனடியாக அந்த பெண்ணை மீட்டு, அவரது உறவினர் இருந்த அதே மருத்துவமனையில் சேர்த்தனர். அதனை தொடர்ந்து இன்று காலை அந்த பெண் கண்விழித்துள்ளார். அப்போது அங்கிருந்த தூய்மை பணியாளர் ஜெய்சங்கர்(வயது 25) என்பவரிடம், தனது உறவினர் அனுமதிக்கப்பட்டிருக்கும் அறைக்கு தன்னை அழைத்து செல் லுமாறு கூறியிருக்கிறார்.

ஆனால்தூய்மைபணியாளர்அந்த பெண்ணை மருத்துவமனையின் 3-வது மாடியில் உள்ள கழிவறைக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் போலீசில் புகார் அளித்தார். அந்த புகாரின் அடிப்படையில், போலீசார் விசாரணை நடத்தி தூய்மை பணியாளர் ஜெய்சங்கரை கைது செய்துள்ளனர்.

## 14 வயதுக்கு கீழ் உள்ள சிறுவர்களை தொழிலாளர்களாக பயன்படுத்த ராஜஸ்தான் அரசு தடை

14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தொழிலாளர்களாக பணியமர்த்துவதைத் தடைசெய்யும் ‘ராஜஸ்தான் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் (திருத்தம்) அவசரச் சட்டம், 2025’-க்கு அந்த மாநிலத்தின் முதல்-மந்திரி பஜன்லால் சர்மா ஒப்புதல் அளித்துள்ளார். இந்த தடை உத்தரவு தொடர்பாக ராஜஸ்தான் அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த சட்டமானது, தொழிலாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், வணிக நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக ராஜஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. இந்த அவசரச் சட்டத்தின் கீழ், தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச வயது 12-ல் இருந்து 14 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் 14-18 வயதுடைய இளம் பருவத்தினர் இனி இரவு நேரங்களில் வேலை செய்ய



அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திருத்த சட்டம் குழந்தைகளுக்கு சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் கல்வியை சிறப்பாகக் கிடைப்பதை உறுதி செய்யும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சட்டம் தொழிலாளர்களுக்கான அதிகபட்ச தினசரி வேலை நேரத்தை 9 மணி நேரத்தில் இருந்து 10 மணி நேரமாக அதிகரிக்கிறது, அதே நேரத்தில் கூடுதல் வேலை நேர வரம்பு ஒரு காலாண்டிற்கு 144 மணி நேரமாக உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# டெங்கு எனும் வில்லன்!

'கொசுத்தொல்லை தாங்க முடியலப்பா!'

என்ற நகைச்சுவையை எல்லோரும் கேட்டு இருப்பீர்கள்.

இப்போது இருக்கும் இந்த பருவநிலை, வெயிலும் மழையுமாக, கொசுவுக்கு கொண்டாட்டமாக இருக்கிறது.

கொசு பெருகும் போது கொசுவால் பரவும் எல்லா நோய்களும் அதிகமாகும். 1897வது வருடம் டாக்டர் ரோனால்ட் ராஸ் என்பவர் தான் மலேரியா நோய் கொசுவால் தான் பரவுகிறது, கொசுவை ஒழித்தால் மலேரியா நோயை கட்டுப்படுத்தலாம் என்பதை கண்டுபிடித்தார். அதைத்தொடர்ந்து கொசுவால் பரவும் மற்ற நோய்கள் டெங்கு, சிக்கன் குனியா, யானைக்கால் நோய், எல்லோ ஃபீவர், ஜிக்கா போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன. டெங்கு காய்ச்சல் எப்படி ஒருவருக்கு வந்தது என்பதை கீழே படியுங்கள்.

மோகனாவிற்கு திடீரென தலைவலி அதிகமாக இருந்தது. அடிக்கடி வருவது தானே தலைவலி என்று தன்னுடைய வேலைகளை தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். இரவில் காய்ச்சல் அதிகமானது. தன்னிலை மறந்து முனகத் தொடங்கினார். உடல் வலி மற்றும் வயிற்று பிரட்டல், வாந்தி. எதுவும் சாப்பிட முடியவில்லை. காய்ச்சல் மாத்திரை எடுத்தால் சரியாகிவிடும் என்று மாத்திரையை போட்டுக் கொண்டார். அன்று இரவு காய்ச்சல் கடுமையானது. உடல் வலி மிக அதிகம். எழும்பவே முடியவில்லை. கண்களை திறக்க முடியாத அளவுக்கு கண்ணுக்கு பின்னே கடும் வலி. அவரை மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றனர். மூன்று நாட்கள் கழித்த பின் பரிசோதனையில் டெங்கு காய்ச்சல் உறுதியானது.

அதே நேரத்தில் ரத்த தட்டுகளும் குறைய ஆரம்பித்தன. வயிற்றில் ஸ்கேன் செய்ததில் வயிற்றில், நெஞ்சுக்கூட்டில் நீர் சேர்ந்து இருந்தது மற்றும் இருதயத்தை சுற்றியும் நீர் சேர்ந்து இருந்தது.




கல்லீரல் என்சைம்கள் ஆயிரத்தை கடந்திருந்தன. பொதுவாக முப்பது நாற்பது தான் இருக்கும்.

முழு உடல் பாதிப்பாக டெங்கு காய்ச்சல் பாதித்திருந்தது. ஆனால் அவருடைய அதிர்ஷ்டம் ரத்த தட்டுகள் மிகவும் குறையவில்லை.




மோகனாவிற்கு டெங்குவிலிருந்து வெளியே வர இரண்டு வாரங்கள் ஆனது.

எப்படி வருகிறது?

டெங்கு ஒரு வைரஸ் காய்ச்சல். டெங்கு காய்ச்சல் உள்ள ஒருவரை கொசு கடிக்கும் போது கொசுவுக்குள், வைரஸ் செல்கிறது. கொசுவுக்குள் வைரஸ் பல மடங்காக பெருகிறது. இதே கொசு இன்னொரு வரை கடிக்கும் போது அவர் உடம்புக்குள் வைரஸ் எளிதாக நுழைந்து விடுகிறது. 3 -14 நாட்களுக்குள் அவருக்கு டெங்கு காய்ச்சல் உண்டாகிறது.

என்னன்னு அறிகுறிகள்?

பொதுவான அறிகுறிகள் -

கடுமையான காய்ச்சல்(104★)

தாங்க முடியாத தலைவலி

கண்களுக்கு பின்னால் வலி மூட்டு வலி, தசை வலி வாந்தி, தலைசுற்றல், சோர்வு உடல் முழுவதும் தடிப்புகள். இது எல்லாமே எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்பதில்லை. எந்த அளவுக்கு இந்த அறிகுறிகள் தீவிரமாக இருக்கும் என்பது மாறுபடும்.

மருத்துவமனையில் சேர வேண்டுமா? அல்லது வீட்டில் இருந்தே சிகிச்சை பெறலாமா?

முதல் மூன்று நாட்கள் கடும் காய்ச்சல் இருக்கும். பிறகு காய்ச்சல் குறைய ஆரம்பிக்கும். மிகவும் கடுமையான காய்ச்சல் இருந்தால் மருத்துவமனையில் சேரலாம். ஆனால் உண்மையில் மிகவும் பிரச்சினையான காலம், காய்ச்சல் குறையும் போது தான். அதாவது மூன்று நாட்களுக்கு பிறகு. ரத்த தட்டுகள் குறைய ஆரம்பிக்கும். (பிளேட்லட்ஸ்) அந்த சமயத்தில் மருத்துவமனையில் இருப்பது நல்லது.

எப்படி நம்மை பாதுகாத்துக் கொள்வது?

முதலில் நம்மைச் சுற்றியுள்ள இடங்களில் கொசு வளராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கொசுப்பழுக்களை கண்டுபிடிக்க. குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுங்கள். கொசு புழுக்களை கண்டால் உடனே அழித்து விடுங்கள். எங்கு தண்ணீர் தேங்கி இருந்தாலும் அதில் நெளிவதை காணலாம். குடிக்கும் நீர் எனில் மூடி வையுங்கள். சங்கு பூக்களை போட்டு வைத்தாலும் கொசுப்புழுக்கள் வராது (என் பாட்டி சொல்லிக் கொடுத்தது). கொசு வலை தான் கொசுக்கடியில் இருந்து தப்பிப்பதற்கான மிகச் சிறந்த வழி.

குழந்தைகளுக்கு வந்தால் எப்படி?

நான்கு வயதான சூர்யாவுக்கு இரண்டு நாட்களாக காய்ச்சல். குழந்தை மருத்துவரை பார்த்து விட்டு, உடலில் நீர்ச்சத்து குறைந்ததால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். மூன்று நாட்களில் காய்ச்சல் குறைந்து, வீட்டிற்கு அனுப்பலாம் என்று முடிவு. அன்று குழந்தை அரக்கு கலரில் வாந்தி எடுத்தது. அது வயிற்றில் ரத்தம் கசிவதற்கான அறிகுறி. ரத்த பரிசோதனைகளில் டெங்கு காய்ச்சல் உறுதியானது. உடல் முழுவதும் எங்கும் ரத்த தடிப்புகள் இருந்தது. ரத்த தட்டுகள் மிகவும் குறைய ஆரம்பித்தது. ரத்தத் தட்டுகள் ஏற்றப்பட்டன. குழந்தைக்கு நீர்ச்சத்து சிகிச்சை அளிக்கப்பட்டு ஒரு வாரத்தில் டெங்குவின் தீவிரம் குறைந்து நல்வாய்ப்பாக குழந்தையின் உயிருக்கு ஆபத்து இல்லை. குழந்தைகளுக்கு வயதானவர்களுக்கு, இணை நோய் உள்ளவர்களுக்கு டெங்கு வந்தால் மிகவும் தீவிரமாகி இறந்து போக வாய்ப்பு உண்டு. காய்ச்சல் வந்தால் இவர்களை உடனே கவனிப்பது நல்லது. கொசு வலையை பயன் படுத்துங்கள்.

மற்றவருக்கு பரவுமா?

ஒரு மனிதனிடமிருந்து இன்னொரு மனிதனுக்கு பரவாது. கொசுவினால் மட்டுமே பரவும்.


டெங்குவினால் ஏன் இறந்து போகிறார்கள்?

பெரும்பாலானவர்களுக்கு டெங்கு காய்ச்சல் மற்ற வைரஸ் காய்ச்சலை போல வந்துவிட்டு சென்று விடும். ஆனால் நூறில் ஒருவருக்கு 'டெங்கு ஷாக் சின்றோம் 'அல்லது 'டெங்கு ஹெமரேஜிக் டிசீஸ்', எனப்படும் கடும் டெங்குவால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ரத்தம் மற்றும் உடலில் உள்ள எல்லா உறுப்புகளும் பாதிக்கப்படுவதால் மரணம் ஏற்படுகிறது.

ஒருமுறை வந்தால் மீண்டும் வருமா?

அவரவர் உடலினுடைய எதிர்ப்பு சக்தியை பொறுத்து மீண்டும் வரலாம்.

தடுப்பூசி உண்டா?




இதுவரை தடுப்பூசி இல்லை. டெங்கு வைரஸை நேரடியாக கொல்லும் மருந்துகள் இல்லை. சப்போர்ட்டிவ் ட்ரீட்மென்ட் எனப்படும் குளுக்கோஸ் ஏற்றுவது, காய்ச்சலை குறைப்பது மற்றும் பிளேட்லெட்ஸ் அளவை கண்காணிப்பது போன்ற சிகிச்சைகள் மட்டுமே செய்கிறோம்.

நிலவேம்பு கஷாயம் பயன் தருமா? பப்பாளி இலை பயன்படுமா?

சித்த மருத்துவத்தில் நிலவேம்பு கஷாயம் பரிந்துரைக்கப்படுகிறது எல்லா வகையான வைரஸ் காய்ச்சலுக்கும். மருத்துவரின் அறிவுரையின் படி எடுத்துக் கொள்ளுங்கள். அதற்கும் பக்க விளைவுகள் உண்டு. பப்பாளி இலை சாற்றில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து ரத்தத்தில் உள்ள பிலைட் லிஸ்ட் அளவை மிகவும் கீழே போகாமல் காப்பது ஆராய்ச்சியில் நிரூபிக்கப்பட்டது. அதிலிருந்து தயாரிக்கப்படும் சிரப் கொடுக்கப்படுகிறது.

காய்ச்சல் வந்தால் என்ன செய்யக்கூடாது?

காய்ச்சல் டெங்குவா? என்று தெரியாத வரை வலி மாத்திரைகளை எடுக்கக்கூடாது. எந்த ஒரு ஊசியும் போட்டுக் கொள்ளக் கூடாது. மருத்துவமனையில் சென்று ரத்தத்தில் ஏற்றும் ஊசிகளை மட்டுமே எடுக்கலாம். இதை எல்லோரும் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். அதுபோல காய்ச்சல் அதிகமாகும் போது தண்ணீர் குடிக்காமல் இருக்க கூடாது. இப்போது தமிழ்நாட்டில் வெகுவேகமாக டெங்கு பரவி வரும் நிலையில், இதைப் பற்றி மக்கள் தெரிந்து கொண்டால்தான், நோய் பரவுதலை கட்டுப்படுத்த முடியும்.

ஜெயஸ்ரீ சர்மா

வாட்ஸ்அப்: 8925764148

www.kathiroli-media.ca

## அந்தரங்க சிந்தனைக்களம்

# ஒருவருடனும் தவறான வழியில் நடக்கவில்லை. ஆனால் முதலிரவன்று...?!

**நான் பணியாற்றுகிறேன். எனது கணவருக்கு வயது 30. அவரும் பணியாற்றுகிறார். திருமணமாகி 5 வருடங்கள். ஒரு ஆண் குழந்தையும் உண்டு. நான் இளம் வயதில் பல ஆண்களுடன் தொலைபேசியில் பழகியிருக்கிறேன். ஆனால் ஒருவருடனும் தவறான வழியில் நடக்கவில்லை. ஆனால் முதலிரவன்று நான் கன்னிதான் என்பதை என்னால் நிரூபிக்க முடியவில்லை. அதை அவர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. சந்தோஷமாகத்தான் செல்கிறது வாழ்க்கை. ஆனால், எமக்கிடையே ஏதும் பிரச்சினை வரும் சமயங்களில் அதைச் சுட்டிக் காட்டிப் பேசுகிறார். அது மிகுந்த வேதனை தருகிறது. இந்த நிலையை எப்படி மாற்றுவது?**

கன்னிப் பெண்கள் இரத்தக்கசிவின் மூலம்தான் தமது கன்னித்தன்மையை உறுதிப்படுத்த முடியும் என்பதில்லை. சில பெண்களுக்குப் பல்வேறு காரணங்களால் கன்னித்திரை பாதிப்படைந்திருக்கலாம்.

ஆனால், இதை விஞ்ஞான ரீதியாக உங்கள் கணவருக்கு விளக்குவதில் அர்த்தமே இல்லை. அந்த விளக்கங்களைக் கேட்கும் நிலையிலும் அவர் இருக்கமாட்டார். காரணம் உங்கள் இருவரதும் வயது.

இந்த வயதில் பெரும்பாலான ஆண்களிடம் தாம் நினைத்ததுதான் சரி என்ற எண்ணம் இருக்கும். அதைத் தவறு அவர்களிடம் நிரூபிக்க முயற்சி செய்தால் பிரச்சினை தீவிரமாகுமே தவிர தீராது.

நீங்கள் இன்னும் இளம் பருவத்தில் இருப்பவர் என்பதால், உங்களை இதுபோன்ற வார்த்தைகளால்தான் காயப்படுத்த முடியும் என்பதையும் அவர் அறிந்து வைத்திருப்பார். அதனால்தான் சண்டைகளின்போது அந்த வார்த்தைகளைத் தனது ஆயுதமாகப் பயன்படுத்தி உங்கள் வாயை மூடி மௌனியாக்கிவிடுகிறார்.

இன்னொரு சாத்தியமான காரணமும் இருக்கிறது. நீங்கள் ஒரு ஆசிரியை. அவர் ஒரு ஆட்டோ சாரதி. வெளியே சொல்லா விட்டாலும் சொல்ல முடியா விட்டாலும், நான் என் மனைவியை விடவும் உத்தியோக ரீதியில் தாழ்ந்தவன் என்ற அர்த்தமற்ற, உண்மையற்ற எண்ணம் அவர் மனதை அரித்துக்கொண்டிருக்கலாம். முதலிரவுப் பிரச்சினையை அடிக்கடி நினைவுபடுத்துவதன் மூலம், உங்களுக்கும் அவருக்குமான அந்தஸ்து இடைவெளியைக் குறைக்க அவர் முயற்சிக்கலாம்.

சுருக்கமாகச் சொன்னால், தன்னுடைய நிலையைத் தாழ்வாக நினைத்து, உங்களையும் அந்தத் தாழ்நிலைக்குக் கொண்டுவந்து 'நீயும் நானும் ஒரே நிலையில்தான் இருக்கிறோம்' என்று உங்களுக்கு உணர்த்த விரும்புகிறார்.

இந்தப் பிரச்சினைக்குப் பேசி தீர்ப்பதற்கு ஒன்றுமில்லை. பிரச்சினைகள் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். அப்படிப் பிரச்சினைகள் வந்தாலும் அவர் இவ்வாறு பேசுவதை சட்டை செய்யாதீர்கள். இது சிரமமானதுதான் என்றாலும், இதைக் கடைப்பிடித்தீர்கள் என்றால் தனது ஆயுதம் கூர் மழுங்கிவிட்டது என்பதைப் புரிந்துகொண்டு அதை உங்கள் மீது பிரயோகிக்க மாட்டார்.

**காதலர்களான நாங்கள் பரஸ்பரம் அதீத அன்பு வைத்திருக்கிறோம். ஆனால், நமக்குள் அடிக்கடி சிறு சிறு சண்டைகள் ஏற்பட்டு மறையும். அன்பென்றாலும் ஆத்திரமென்றாலும் என் காதலர் அளவுக்கு அதிகமாகவே தருகிறார். ஆனால் அவரது கோபம் இரண்டு நாட்களுக்கு மேல் நீடிப்பதில்லை. நானும் கோவக்காரிதான். இப்படியே இருந்தால், திருமணத்தின் பின் என்னவாகும் என்ற பயமும் இருக்கிறது. எனது பயத்தைத் தீர்ப்பீர்களா?**

பொதுவாகவே காதலர்களுக்கிடையே அடிக்கடி சிறு சிறு உரசல்கள் தோன்றத்தான் செய்யும். பலரும் அதைக் கண்டுகொள்வதில்லை. திருமணத்தின் பின் அதே பிரச்சினை பூதாகாரமாகத் தோன்றும். காரணம், காதலின்போது நாம் காட்டும் கோபத்தால், எங்கே நம்மவர்/ள் பிரிந்துவிடுவாரோ/ளோ என்கிற பயம்தான். திருமணத்தின் பின், என்ன பிரச்சினையானாலும், வீட்டுக்குள்ளே தானே இருக்க வேண்டும் என்பதால் அதை அசட்டையாக விட்டுவிடுகிறார்கள்.

சண்டை சச்சரவு இல்லாத குடும்பங்கள் இல்லைதான் என்றாலும், இன்றைய காலத்தில், சிறு சிறு காரணங்களும், பெரும் பிரிவுக்குக் காரணமாகிவிடுகிறது. எந்தக் காரணம், எப்போது அந்தப் பிரிவை ஏற்படுத்திவிடும் என்பதை யாராலும் சொல்லிவிட முடியாது.

எனவே, மேகம் கருக்கிறது என்றால், அதாவது, பிரச்சினை மூளப்போவதாகத் தெரிந்தால், உடனே பேச்சை மாற்றிவிடவோ அல்லது ஏதேனும் காரணத்தைக் காட்டி பேசுவதை அப்போதைக்கு நிறுத்திவிட்டு, சற்று நேரம் கழித்து மீண்டும் தொடரலாம். கோபம் என்பது அவ்வப்போது தோன்றி மறையும் ஒரு உணர்வே என்பதை உண்மையான அன்பு அறியும். அந்த அன்புக்கு, விட்டுக்கொடுக்கும் பண்பும், மன்னிக்கும் பண்பும் இயல்பாகவே இருக்கும். உங்கள் அன்பும் அத்தகையதானால் பிரச்சினை ஏதும் இல்லை.

**எனக்கு 18 வயது ஆகிறது. என் மார்பகங்களில் இருந்து ஒரு திரவம் சுரக்கிறது. இது என்ன பிரச்னை? இது ஏதாவது மார்பகப் புற்று நோயின் அறிகுறியா?**

உங்களுக்கு வந்திருக்கும் நிலைக்கு ஆங்கிலத்தில் Galactorrhea என்று சொல்வார்கள். உங்களுக்கு வலியோ, மிகக் குறைந்த அளவில் பாலோ, அல்லது நீரோ கசிந்தால் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. இருந்தாலும் நீங்கள் மருத்துவரிடம் காட்டி விடுவது நல்லது.

பால் சுரக்கும் செல்கள் பிட்யூட்டரி சுரப்பியில் (pituitary gland) உள்ளன. சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் இந்த சுரப்பிக்கும் ஹைபோதலமஸ் (hypothalamus) என்ற பகுதிக்கும் தொடர்பு பாதிக்கப் படுவதால் ஏற்படும் நிகழ்வே இது. இதற்கு பல காரணங்கள் உண்டு.

பிட்யூட்டரி சுரப்பியில் கட்டி (tumor) இருத்தல். தைரொய்ட் சுரப்பியில் ஏற்படும் மாற்றங்கள் மற்ற மருந்துகளை உட்கொள்வதால் உடலில் ஏற்படும் மாற்றங்கள். கருத்தடை மாத்திரைகளை அதிகம் உட்கொண்டாலும் இது போல பால் கசிய வாய்ப்பு உள்ளது. இப்போது இது ஒரு சாதாரணமான நிகழ்வே.

**என் அம்மா நான் பெண்டாட்டி தாசனாகிவிட்டேன் என்கிறார். என் மனைவியோ, நான் அம்மா சொல்லை மட்டுமே கேட்டு நடப்பதாகச் சொல்கிறார். என்னைப் பெற்ற அம்மாவுக்கு முன்னுரிமை அளிப்பதா? எனக்காக பிள்ளை பெற்ற என் மனைவிக்கு முன்னுரிமை அளிப்பதா?**

ஒரு பெண்ணின் மன ஆழத்தை, அதில் தோன்றும் எண்ணங் களை, ஆசைகளை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. அப்படியிருக்கையில், இரண்டு பெண்களின் மனங்களை எப்படிப் புரிந்து கொள்வது? உங்களது கேள்வி, இன்றைய, திருமணமான பல ஆண்கள் மனங்களிலும் இருக்கிறது. இதற்கான பதில் என்ன தெரியுமா? சும்மா இருந்து விடுவதுதான்!

இந்த பதில் உங்களுக்குத் திருப்தி அளிக்காமல் இருக்கக்கூடும். ஆனால், அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி செய்து பார்த்தால் புரியும், சும்மாவே இருந்திருக்கலாம் என்று!

ஒவ்வொரு தடவையும் உங்கள் தாயோ, உங்கள் மனைவியோ - பரஸ்பரம் ஒருவரைப் பற்றி ஒருவர் குறை கூறும்போதும், காது கொடுத்துக் கேளுங்கள். முடிந்தால், ஆர்வத்துடன் கேட்பது போல் நடிக்கவாவது செய்யுங்கள். ஆனால், அவர்கள் சொன்ன விடயங்களை சம்பந்தப்பட்டவரிடம் சொல்லி விடாதீர்கள். அதேநேரம், அவர்கள் சொன்ன விடயங்களை வைத்து, அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முற்படாதீர்கள். அப்படி முயற்சிக்கும்போதுதான் நீங்களும் பிரச்சினைக்குள் மாட்டிக்கொள்கிறீர்கள். கூடியவரையில் மௌனம் காப்பதே நல்லது.

**நான் ஒருவரை விரும்புகிறேன். அவரும்தான்! எமது விவகாரம் இருவர் வீடுகளிலும் தெரிந்துவிட்டது. இரு வீட்டாருமே பலத்த எதிர்ப்பு காட்டுகிறார்கள் எமது காதலுக்கு! என்னால் அவரைப் பிரிந்து வாழ முடியாது என்பதால், வேறெங்காவது போய் வாழ்க்கையைத் தொடரலாம் என்றேன். ஆனால் அவரோ இருவீட்டார் சம்மதத்துடன்தான் திருமணம் என்பதில் உறுதியாக இருக்கிறார். எமது திருமணத்துக்குப் பெற்றோரைச் சம்மதிக்கவைப்பது எப்படி என்று தெரியவில்லை. இதற்கு ஒரு வழி சொல்வீர்களா?**

சிறு வயதில் விளையாடுவதும், இளம் வயதில் சிறப்பான முறையில் கல்வியைப் பெறுவதும் வாலிப வயதில் பணம் உழைக்கத் தொடங்குவதும் (இன்று இருபாலாருக்கும் இது பொதுவாகிவிட்டது) மத்திய வயதில் திருமணம் புரிவது, குழந்தை பெறுவது என்று அது ஒரு பட்டியலே இருக்கிறது. அந்தந்தப் பருவத்திற்கு உண்டான கடமையைச் செய்பவர்கள் எடுக்கும் முடிவுகளுக்கு எதிர்ப்புகள் வரும் வாய்ப்புகள் குறைவு. அப்படியே வந்தால் கூட, அதை எளிதாக மாற்றிவிடலாம்.

நீங்கள் இப்போது கல்வியைப் பூரணமாகக் கற்றுத் தேறும் பருவத்தில் இருக்கிறீர்கள். இப்போது உங்கள் கடமை கல்வி பயில்வதேயன்றிக் காதலிப்பதல்ல.

காதலில் காட்டும் கரிசனத்தைக் கல்வியில் காட்டுங்கள். நீங்கள் முழுமனதுடன் தயாரானால் கல்வியில் சாதனையே படைக்கலாம்.

இங்கு கல்வி என்பது உயர்தரத்தைக மட்டும் குறிப்பதல்ல. ஒரு தொழிற்கல்வியைக் கூடச் சிறப்பாகக் கற்றுத் தேறலாம்.

அந்தக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு ஒரு வேலை வாய்ப்பைப் பெறுங்கள். அதில் நீங்கள் ஈட்டும் வருமானத்தை நியாயமான முறையில் செலவிடவோ, சேமித்துவைக்கவோ முயற்சி செய்யுங்கள்.

'என் பிள்ளை நேரான வழியில் செல்கிறாள். அவளது வயதுக்கேயுரிய கடமைகளைச் செவ்வனே செய்கிறாள்' என்பதை ஒரு தாயோ, தகப்பனோ உணர்ந்தால், அவள் எடுக்கும் முடிவுகளை எதிர்க்க நினைக்க மாட்டார்கள். அதற்குப் பதிலாக உங்களைப் பற்றிய பிம்பம் அவர்கள் மனதில் விஸ்வரூபம் எடுக்கும்.

அந்த நேரத்தில் உங்கள் காதலைப் பற்றிப் பேசுங்கள். அப்போது அவர்கள், 'தன் வாழ்க்கையைத் தனக்குப் பிடித்த மாதிரி தெரிவுசெய்திருக்கிறாள். நிச்சயமாக அவளது தெரிவு சரியாகத்தான் இருக்கும்' என்றே நினைப்பார்கள்.

நீங்களோ, உங்கள் காதலரோ - எப்போது இந்தவொரு நிலைக்கு உங்கள் பெற்றோரைக் கொண்டு வருகிறீர்களோ அப்போது உங்களது காதல் கைகூடும்.

# நீங்கள் உங்கள் மரபின் பொருட்டுக் கடவுளின் கட்டளையை மீறுவது ஏன்?

*( மத்தேயு 15 : 3 )*

யூதர்கள் சட்டங்களுக்கும், மரபுகளுக்கும் மிக அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள். அதற்கு ஒரு காரணம் உண்டு. கடவுளின் கட்டளைகளை மீறி நடந்ததால் தான் அவர்கள் நாட்டை விட்டுஅடிமைகளாய்வெளியேற்றப் பட்டார்கள் என்றும், இஸ்ரேலின் அழிவுக்கும் சிதைவுக்கும் காரணம் கடவுளின் கட்டளைகளை மீறி நடந்ததே என்றும் அவர்கள் புரிந்து கொண்டார்கள். எனவே மோசேயின் கட்டளைகளை விட அதிகமான கட்டளைகளை அவர்கள் தங்களுக்குள் இட்டுக் கொண்டார்கள். காலப் போக்கில் அவை அர்த்தமிழந்து வெறும் சடங்குகளாய் மாறிப் போயின.

அதன் ஒரு உதாரணம் கைகளைக் கழுவி விட்டு உண்ணும் மரபு. மோசே கைகளைக் கழுவ வேண்டும் எனும் கட்டளையைக் கொடுத்தார். கூடாரங்களில் வாழும் மக்கள் நோய் நொடியில்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அந்தச் சட்டத்தை அவர் கொண்டு வந்தார். அந்தச் சட்டத்தின் படி தீட்டான எதையாவது தொட்டால் அவர்கள் தங்களைச் சுத்திகரிக்க வேண்டும். அப்படி தூய்மைச் சடங்குகளுக்காய் வைத்திருந்த தொட்டியில் தான் இயேசு தண்ணீரைத் திராட்சை இரசமாய் மாற்றி அவர்களின் சடங்குகளுக்கு சம்மட்டி அடி கொடுத்திருந்தார்.

தானாக இறந்து கிடக்கும் விலங்குகளில் தீய ஆவி புகுந்து கொள்ளலாம், அதை உண்பவர்களை அது ஆக்கிரமித்துக் கொள்ளும் என்று அவர்கள் நம்பினார்கள். விலங்குகளை வெட்டி அதன் இரத்தம் முழுமையாய் வடியவேண்டும், அதன்பின்பே உண்ண வேண்டும் என்றார்கள். காரணம் இரத்தத்தில் உயிர் இருக்கிறது என நம்பினார்கள். பன்றி, முயல் போன்றவற்றை அவர்கள் உண்பதில்லை. பன்றியின் இறைச்சியை உண்பதும், கொடுமையான விபச்சாரப் பாவமும் ஒரே அளவையால் அளவிடக் கூடியது என அவர்கள் நம்பினார்கள். அதே போல எகிப்து போன்ற இடங்களில் புனித விலங்குகளாய் இருக்கும் பூனை, முதலை போன்ற விலங்குகளை இவர்கள் தீட்டாகவே கருதினார்கள்.

தீட்டானது என்று சொல்லும் போது இறந்து போன உடல்கள், இரத்தப்போக்குடைய பெண்கள், பிரசவம் முடிந்த சில நாட்களே ஆன பெண்கள் என பலவற்றை அவர்கள் வைத்துக் கொண்டார்கள். இந்தப் பட்டியல் காலப் போக்கில் அதிகமானது. பிற இன மக்களைத் தொடுவது, அவர்களைத் தொட்டவர்களைத் தொடுவது என பல அடுக்குகளாய் விரிவடைந்தது. உதாரணமாக ஒரு எலி ஒரு பாத்திரத்தைத் தொட்டு விட்டால், அது எவ்வளவு பெரிய பாத்திரமாய் இருந்தாலும் அது தீட்டானதாகி விடுகிறது. அதில் இருக்கின்ற பொருட்கள் எல்லாம் தீட்டாகி விடுகின்றன. அந்தப் பொருட்களைத் தொடுபவர்கள் எல்லோரும் தீட்டாகி விடுகின்றனர். அப்படித் தீட்டானவர்களைத் தொடுபவர்கள், அவர்களைத் தொடுபவர்கள் என எல்லோரும் தீட்டாகிவிடுகின்றனர்.

அவ்வளவும் ஏன், தீட்டான மக்கள் நடந்து செல்லும் புழுதியில் நடந்து செல்பவர்கள் கூட தீட்டாகி விடுகின்றனர். இப்படியெல்லாம் சட்டத்தை அடுக்கடுக்காய் போட்டு அவற்றை கடவுளின் கட்டளைக்கு மேலாகவே வைத்தார்கள். அப்படிப் பார்த்தால், பொது வெளியில் சென்று வருகின்ற எவரும் தங்களைத் தூய்மைப்படுத்த வேண்டும். ஏதோ ஒரு தூசு தீண்டத்தகாதவரைத் தீண்டிவிட்டு நம்மைத் தீண்டியிருக்கலாம் எனும் சிந்தனையே அதன் காரணம். இவையெல்லாம் கடவுளின் கட்டளையல்ல, மக்கள் உருவாக்கிய மரபு.

அதன் அடிப்படையில் உணவு உண்ணும் முன் எல்லோரும் கை கழுவ வேண்டும். கை கழுவுவதற்கும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட வழியை வைத்திருந்தார்கள். இரண்டு கைகளையும் குவித்து, பத்து விரல்களும் வான் நோக்கி இருக்குமாறு வைக்க வேண்டும். தண்ணீரை எடுத்து விரல்களின் நுனியில் ஊற்ற வேண்டும். அந்த தண்ணீர் வழிந்து, உள்ளங்கை வழியாய், மணிக்கட்டை நனைத்து முட்டியின் வழியாய் வெளியேறும். அத்துடன் முடிந்து விடாது. விரலின் நுனியிலுள்ள தீட்டு, தண்ணீரில் கலந்து கைகளில் இப்போது வந்திருக்கும். எனவே விரல்களை பூமியை நோக்கி நீட்டி விட்டு, மீண்டும் ஒரு முறை தண்ணீரை ஊற்ற வேண்டும். அதன் பின் இரண்டு கை முட்டிகளால் துடைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த மரபைத் தான் இயேசுவின் சீடர்கள்பின்பற்றவில்லை. அவர்கள் வந்தார்கள், சாப்பிட அமர்ந்தார்கள், சாப்பிட்டார்கள். எப்படியாவது இயேசுவைப் பொறிவைத்துப் பிடிக்க வேண்டும் என வந்திருந்த பரிசேயரும் மறைநூல் அறிஞர்களும் இயேசுவுக்கு நேராய் குற்றச்சாட்டை நீட்டினார்கள். இவர்கள் எருசலேமிலிருந்து கலிலேயாவிற்கு நீண்ட தொலைவு நடந்து இயேசுவைக் குற்றம் சாட்ட வந்திருந்தவர்கள். அவர்கள் சீடர்களிடம், 'நீங்கள் ஏன் கை கழுவவில்லை' என கேட்கவில்லை. இயேசுவிடம் கேட்டார்கள். ஏன் 'உமது சீடர்கள்' கைகளைக் கழுவுவதில்லை. அவர்கள் ஏன் மூதாதையரின் மரபுகளை மீறுகிறார்கள் !

இது இயேசுவுக்கும், பரிசேயர்களுக்கும் இடையேயான நேரடி மோதல். இது சட்டத்தின் பார்வைக்கும், கடவுளின் பார்வைக்கும் இடையேயான நேரடிச் சவால். இது மரபுகளுக்கும், இறைமைக்கும் இடையேயான மல்யுத்தம். இயேசுவின் சீடர்கள் செய்தது தவறு என பரிசேயர்கள் மிகக் கடுமையாய் கூறுகிறார்கள். மரபு என்பது அவர்களுடைய மரபணுக்களில் கல்வெட்டு போல பதிந்துள்ளவிஷயம். அதைஅவர்கள் எதற்காகவும் தளர்த்துவதில்லை. இரண்டு பார்வைகளில் ஒன்று தான் நிலைக்க முடியும், இரண்டுமே நிலைக்க முடியாது.

மரபுகளால் பூசப்பட்டவர்கள் கை கழுவுவது தூய்மையாய் சாப்பிடுவதற்கு அல்ல. சடங்குகளை நிறைவேற்றுவதற்காக. நல்ல சமாரியன் உவமையில் ஏன் குருவும் லேவியும் விலகிப் போனார்கள் ? அவர்கள் மரபுகளை மீற விரும்பவில்லை. மரபுகளை மீறினால் மீண்டும் தூய்மையாக்கும் முன் அவர்கள் ஆண்டவரைத் தொழ முடியாது ! இந்தத் தீண்டாமையின் பல வடிவங்களை நாமும் நமது வரலாற்றிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

பரிசேயர்களின் கேள்வி ஆத்மார்த்தமானது. தாங்கள் நம்பியிருக்கும் மரபை எப்படி இவர்கள் மீறலாம். மீறினால் எப்படி இவர்கள் ஆன்மிக வாதிகளாய் இருக்க முடியும் என்பதே அதன் தொனி. இயேசு அவர்களுக்கு பதில் சொல்லவில்லை. ஏன் கை கழுவவில்லை தெரியுமா ? என விளக்கம் கொடுக்கவில்லை. அப்படித் தான் செய்வோம் என எதிர்த்துப் பேசவில்லை. மாறாக ஞானத்தினால் அவர்களை துவைத்து எடுக்கிறார்.

உங்கள் மரபின் பொருட்டு, கடவுளின் கட்டளையை ஏன் மீறுகிறீர்கள் ? தந்தையும் தாயையும் மதித்து நட என்பது கடவுளின் கட்டளை. தந்தையையோ, தாயையோ பார்த்து உமக்குத் தரவேண்டியது கடவுளுக்குக் காணிக்கையாயிற்று என்று சொன்னால் தாய் தந்தையரைக் கவனிக்க வேண்டாம் என மரபை உருவாக்குகிறீர்கள். உங்கள் மரபினால் ஏன் இறைவனின் கட்டளையை மீறுகிறீர்கள் ? என்று கேட்டார். அவர்கள் திணறிப் போனார்கள். அவர்களிடையே அந்தப் பழக்கம் இருந்தது. உமக்கானது கடவுளுக்குக் காணிக்கையாகிவிட்டது என அவர்கள் சொல்வதை கடவுளோடு கொள்ளும் நேர்ச்சையாய்க் கருதினார்கள். நேர்ச்சையை உடைக்கக் கூடாது எனும் இறைவார்த்தையை துணைக்கு அழைத்தார்கள். இயேசு அவர்களுடைய சுயநல சிந்தனைகளையும், சித்தாந்தங்களையும் அறிந்திருந்தார். எனவே அந்த மரபை உடைத்தெறிந்தார்.

மரபுகளை உடைத்த அவர், 'மனிதனின் உடலுக்குள் செல்வது அவனை தீட்டுப்படுத்தாது, அவனது வாயினின்று வெளிவரும் உள்ளத்தின் தீய எண்ணங்களே அவனை தீட்டுப்படுத்தும்' என்றார். இதன் மூலம் மோசே சொன்ன பட்டியல் கணக்கான உணவுச் சட்டங்களையும் அவர் செல்லாக் காசாக்குகிறார். லேவியராகமத்தின் பல பக்கங்களைக் கிழித்து எறிகிறார். காகிதத்தில் எழுதப்பட்டவற்றுக்கும், இதயத்தில் எழுதப்படவேண்டியதற்குமான போராட்டமாய் அவரது பதில் இருந்தது. வெறும் சட்டங்களைப் பிடித்துத் தொங்காதே, வெறும் மரபுகளின் மடியில் வாழாதே, இதயத்தால் அனைத்தையும் உணர்ந்து வாழ் எனும் புதிய சிந்தனையை அவர் தருகிறார்.

தினமும் கோயிலுக்குப் போவது, பைபிளை வாசிப்பது, பைபிள் வகுப்பில் கலந்து கொள்வது, பாடகர் குழுவில் கலந்து கொள்வது, சர்ச் குழுக்களில் இருப்பது, ஒரு குறிப்பிட்ட வகையில் ஆடை அணிவது, ஒரு குறிப்பிட்ட ஆராதனை முறையை வைத்திருப்பது, குறிப்பிட்ட விழாக்களை நடத்துவது, குறிப்பிட்ட பெயர்களால் அழைத்துக் கொள்வது, குறிப்பிட்ட முறையில் திருமுழுக்கு பெறுவது இப்படி நாம் கொண்டிருக்கும் மரபுகள் எக்கச்சக்கம். எல்லாவற்றையும் விட முக்கியமானது நமக்கும் கடவுளுக்குமான உறவுப் பிணைப்பு தான். அவர் கற்றுக் கொடுத்த மனித நேயப் பண்புகள் தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மரபுகள் வெளிப்படையான சடங்குகளின் அடையாளம். அவற்றைக் கொண்டு இதயத்தை அளவிட முடியாது. இதயத்தில் தூய்மையுடையவர்களே பாக்கியவான்கள், அவர்களே கடவுளைக் காண்பார்கள். அவர்களே கடவுளுக்கு ஏற்புடைய வாழ்க்கையை வாழ்வார்கள். மற்றவர்கள் வெளிப்படையாய் எல்லாவற்றையும் செய்து விட்டு, உள்ளுக்குள் வன்மத்தையும் வெறுப்பையும் பகையையும் வளர்க்கும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாய் மாறிப் போவார்கள்.

நாம் மரபுகளைப் பின்பற்றுவது முக்கியமல்ல, இறைவனின் கட்டளையான இதயத்தில் தூய்மையைக் கொண்டிருப்பதே முக்கியமானது ! இறைவனை நெருங்கத் தடையாக இருக்கும் மரபுகளை நிராகரிப்போம், இறைவனை நெருங்குவோம்.

★

சேவியர்

# காசா ஒப்பந்தம்: அமைதிக்கான அனைத்து முயற்சி-களுக்கும் ஆதரவு - ஐ.நா. கூட்டத்தில் இந்தியா உறுதி



ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் மத்திய கிழக்கின் நிலைமை குறித்த விவாதத்தில் ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி பர்வதனேனி ஹரிஷ் பேசியதாவது:-

சமீபத்தில் கையெழுத்தான வரலாற்று சிறப்பு மிக்க காசா அமைதி ஒப்பந்தம் மத்திய கிழக்கில் ஸ்திரத்தன்மையை நோக்கி பயணிக்க ஒரு மைல்கல் ஒப்பந்தம். இதனை இந்தியா வரவேற்கிறது. மத்திய கிழக்கில் அமைதிக்கான அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவு அளிக்கும்.

இந்த ஒப்பந்தத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்ததற்காக அமெரிக்காவுக்கு, குறிப்பாக ஜனாதிபதி டிரம்புக்கு எங்கள் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். இந்த இலக்கை அடைவதில் எகிப்து மற்றும் கத்தாரின் பங்கையும் இந்தியா பாராட்டுகிறது. இரு நாடுகளின் தீர்வு மட்டுமே நடைமுறைக்கு ஏற்ற பாதை. அனைத்து தரப்பினரும் இந்த விஷயத்தில் தங்கள் கடமைகளை கடைப்பிடிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட தரப்பினரின் எந்தவொரு ஒரு தலைப்பட்ச நடவடிக்கைகளையும் இந்தியா உறுதியாக எதிர்க்கிறது.

அமெரிக்காவின் வரலாற்று சிறப்புமிக்க முயற்சி அமைதியை நோக்கிய உத்வேகத்தை உருவாக்கியுள்ளது. 2023-ம் ஆண்டு அக்டோபரில் மோதல் தீவிரம் அடைந்ததில் இருந்து, பாலஸ்தீன பிரச்சினையில் இந்தியா பயங்கரவாதத்தை கண்டித்தது. பிணைக்கைதிகளை உடனடியாக விடுவிக்க கோரியது. மேலும் காசாவுக்கு தடையற்ற மனிதாபிமான உதவியின் அவசியத்தை வலியுறுத்தியது. கடந்த 2 ஆண்டுகளில் பாலஸ்தீனத்துக்கு இந்தியா ரூ1,491 கோடிக்கு மேல் நிவாரணம் வழங்கி உள்ளது. இதில் ரூ.351 கோடியில் 135 டன் மருந்துகள் மற்றும் நிவாரண பொருட்கள் அடங்கும்.

மனிதாபிமான உதவி அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அது அனைத்து பொதுமக்களையும் சென்றடைய வேண்டும். ஏமனில் உள்ள இந்திய குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் முன்னுரிமை அளிக்க வேண்டும். சர்வதேச சமூகத்தின் ஆதரவு இல்லாமல் பாலஸ்தீன மக்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. சிரியா, லெபனான், ஏமன் உள்ளிட்ட பிராந்திய பிரச்சினைகளிலும் இந்தியா தொடர்ச்சியான மனிதாபிமான மற்றும் அமைதி காக்கும் பங்களிப்பை செய்து வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

# தொழில்நுட்ப கோளாறு:

## அமெரிக்காவில் 40 விமானங்கள் ரத்து

அமெரிக்காவின் மிகப்பெரிய விமான நிறுவனங்களுள் ஒன்று அலாஸ்கா ஏர்லைன்ஸ். சியாட்டிலை தளமாக கொண்டு இந்த நிறுவனம் செயல்படுகிறது. இந்தநிலையில் அலாஸ்கா ஏர்லைன்ஸ் வலைதளத்தில் திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. எனவே அந்த நிறுவனத்துக்கு சொந்தமான அனைத்து விமானங்களும் உடனடியாக தரையிறங்க அறிவுறுத்தப்பட்டது.

அதன் துணை நிறுவனமான ஹாரிசன் ஏர் விமானங்களும் உடனடியாக தரையிறங்கின. இதனால் சுமார் 40 விமான சேவை ரத்து செய்யப்பட்டது. 240-க்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாக சென்றன.






உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

# உலக செய்திகள்



தாய்லாந்தில் மன்னராட்சி முறை அமலில் உள்ளது. அந்நாட்டின் மன்னராக மஹா வஜிரலொங்கொர்ன் செயல்பட்டு வருகிறது. இவரது தாயார் சிரிகிட் கிடியாகரா (வயது 93). இவர் தாய்லாந்து ராணியாக செயல்பட்டு வந்தார்.

# தாய்லாந்து ராணி காலமானார் - தலைவர்கள் இரங்கல்

இந்நிலையில், உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட ராணி சிரிகிட் கிடியாகரா நேற்று உயிரிழந்தார். அவரது மறைவிற்கு பல்வேறு நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ராணி சிரிகிட் மறைவையடுத்து மலேசியாவில் நாளை நடைபெற உள்ள ஏசியான் உச்சிமாநாட்டில் தாய்லாந்து பிரதமர் அனுடின் சருன்விரகுல் பங்கேற்கமாட்டார் என்று அந்நாட்டு பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. ராணி சிரிகிட் கிடியாகராவின் கணவரான தாய்லாந்து முன்னாள் மன்னர் அதுல்யடிஜ் கடந்த 2016ம் ஆண்டு உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

www.kathirolimedia.ca




# இங்கிலாந்து: சிறையில் கைதியுடன் உல்லாசம்; 2-வது பெண் அதிகாரி சிக்கினார்




இங்கிலாந்து நாட்டின் ஸ்டாபோர்டுஷைர் பகுதியில் உட்டாக்டர் என்ற இடத்தில் உள்ள சிறையில் ஆயுள் தண்டனை உள்ளிட்ட தண்டனை பெற்ற கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர். இந்நிலையில், சாரா பார்னெட் (வயது 31) என்ற பெண் அதிகாரி அந்த சிறையில் பணி புரிந்தபோது, கைதி ஒருவரிடம் உல்லாசத்தில் ஈடுபட்ட அதிர்ச்சி தகவல் வெளிவந்து உள்ளது.

2023-ம் ஆண்டில் ஆகஸ்டு 11-ந்தேதி முதல் ஆகஸ்டு 24-ந்தேதி வரையிலான நாட்களில் இந்த சம்பவம் நடந்துள்ளது. எனினும், அவர் சிறை துறைக்கான பணியில் இருந்து விலகி, ஸ்டாபோர்டுஷைரின் ரூகிளே என்ற சொந்த ஊரிலேயே அழகு நிலையம் ஒன்றை வைத்து நடத்தி வருகிறார். சமீபத்தில் இதே சிறையில் மற்றொரு பெண் அதிகாரி ஒருவ சட்டவிரோத சம்பவத்தில் ஈடுபட்டு இருக்கிறார்.

அந்த சிறையில் ஜோசப் ஹார்டி (வயது 31) என்பவர் அடைக்கப்பட்டு இருக்கிறார். அவர், 2017-ம் ஆண்டு நபர் ஒருவரை கடுமையாக தாக்கியுள்ளார். இந்த சம்பவத்தில் உடல் ரீதியாக காயப்படுத்திய குற்றத்திற்காக அவருக்கு 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இந்நிலையில், 2023-ம் ஆண்டு பிப்ரவரி 15-ந்தேதி முதல் மார்ச் 4-ந்தேதி வரையிலான நாட்களில் ஹீதர் பின்ச்பெக் (வயது 28) என்ற பெண் அதிகாரி சிறை கைதியான ஜோசப்பிடம் சட்டவிரோத வகையில், தொலைபேசி வழியே பேசியுள்ளார்.

இதற்காக, சமீபத்தில் பிர்மிங்காம் கிரவுன் கோர்ட்டில் பின்ச்பெக் ஆஜரானார். அதில், அவர் அரசு அலுவலகம் ஒன்றில் தவறாக நடந்து கொண்ட விசயங்களை ஒப்புக்கொண்டிருக்கிறார். அவருக்கான தண்டனை விவரம் அடுத்த ஆண்டு ஜனவரி 9-ல் வெளியிடப்படும். அதுவரை அவருக்கு நிபந்தனை ஜாமீன் அளிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், நவம்பர் 6-ந்தேதி கிரவுன் கோர்ட்டில் பார்னெட் அடுத்து ஆஜராக இருக்கிறார். இதற்கு முன், சிறையின் முன்னாள் காசாளரான யோலண்டா பிரிக்ஸ் (வயது 52) என்பவர் சிறை கைதியுடன் உல்லாசத்தில் ஈடுபட்டு உள்ளார். இதனை அந்த கைதி பெருமையுடன் மற்றவர்களிடம் கூறியிருக்கிறார். இந்த தகவலை சக கைதி ஒருவர் மற்றவர்களிடம் கூறியிருக்கிறார். லிங்கன் கிரவுன் கோர்ட்டில் அவருக்கு 8 மாத கால சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதனை அடுத்து கடந்த மாதம் அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

# மறதியை மறப்போம்!

'மறதி' மனிதர்க்கு வரமா? சாபமா? என்பதை அறிந்துகொள்வதற்கு ஆவலாய்க் காத்திருக்கும் வாசகப் பெருமக்களே! வணக்கம்!.

அன்றாடம் நொடிகள்தோறும் நாம் சந்திக்கின்ற ஒவ்வொரு நிகழ்வும், அல்லது ஒவ்வொரு அனுபவமும் நமது மூளையில் சேமித்து வைக்கப்படுகின்றன. சேமித்து வைக்கப்படும் தகவல்கள் நினைவுகளாக மாற்றப்பட்டு, நாம் நினைக்கும்போது, மறந்துபோகாமல் நினைவில் வந்து தோன்ற வேண்டும். அவ்வாறு அவை தோன்றாமல், மறைந்துபோக நேரிட்டால் அது 'மறதி' என்று ஆகிவிடும். வாழ்க்கையின் எல்லா நிகழ்வுகளையும் மூளை சேமித்து வைக்கக் கூடிய ஆற்றல் உடையதுதான். என்றாலும், ஒவ்வொன்றையும் மறந்துபோகாமல் நினைவில் வைத்திருந்தால் அது வீண் குழப்பங்களுக்கும் மன உளைச்சல்களுக்கும் நம்மை ஆளாக்கி விடும். அந்த வகையில் மறதியை ஒரு மாபெரும் வரப்பிரசாதம் என்று குறிப்பிடுவர். ஆனால் மறக்கக் கூடாததையும் சேர்த்து மறந்துவிட்டால், பிறகு நாம் நன்றிகெட்டவர்கள் ஆகி விடுவோம். அதனால்தான் திருவள்ளுவர், வாழ்க்கையில் சிலவற்றை நெடு நாட்களுக்கு நினைவில் வைத்திருக்க வேண்டும் என்றும், சிலவற்றை உடனே மறந்துவிட வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார்.

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று'

பிறர் நமக்குச் செய்த உதவிகளையும் நன்மைகளையும் மறக்காமல் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்; பிறர் நமக்குச் செய்த தீமைகளையும் கெடுதல்களையும் கால தாமதப்படுத்தாமல் அப்போதே மறந்து விடுவது நல்லது என்கிறது வள்ளுவம். ஆனால் இன்று இதை அப்படியே தலைகீழாகத் திருப்பிப் போட்டுக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோம். அடுத்தவர் செய்த நன்மைகளை உடனே மறந்துபோய் செய்ந்நன்றி கொன்றவர்களாக வாழ்கிறோம்; அடுத்தவர் செய்த தீமைகளை எப்போதும் நெஞ்சில் சுமந்துகொண்டு பழிவாங்கும் பாதகர்களாக அலைந்து கொண்டிருக்கிறோம்.

அடுத்தவர்கள் நமக்குச் செய்யும் கொடுமைகளை உடனே மறந்துபோவதன் மூலமாக, நம் மனம் துன்பமில்லாத மனமாகத், தெளிந்த பளிங்குபோலக் குழப்பமின்றி எப்போதும் தெளிவாகவும் அமைதியாகவும் இருக்கும். அடுத்தவர் செய்த நன்மைகளை நினைத்துப் பார்க்க நினைத்துப் பார்க்க, நம்முடைய மனமும் எப்போதும் அடுத்தவர்களுக்கு உதவி செய்வதிலேயே அக்கறையாய் இருக்கும்.

மறதி என்பது பலருக்கு நோய் போலப் பேசப்படுகிறது. வீட்டைவிட்டுக் கிளம்பி வாசலுக்கு வந்தவுடனேயே நாம் எதற்காக வெளியே வந்துள்ளோம் என்பதுகூடச் சிலருக்கு மறந்து போகிறது. சரியான உடற்பயிற்சியின்மை, மனப் பயிற்சியினமை, போதிய உறக்கமின்மை, சத்தான ஆகாரமின்மை போன்ற குறைபாடுகள் மறதி நோய் வருவதற்கு மருத்துவக் காரணங்களாகக் கூறப்படுகின்றன. 'மறதி' யுடையவர்கள் வாழ்க்கையில் விரைவில் கெட்டழிவார்கள் என்று திருவள்ளுவர் எச்சரிக்கவும் செய்கிறார்.

'நெடுநீர் மறவி மடி துயில் நான்கும்

கெடுநீரார் காமக் கலன்'

எந்தச் செயலையும் உடனே செய்யாமல் காலம் தாழ்த்தித் தள்ளிப் போடுவது (நெடுநீர்), மறந்து போவது (மறதி), சோம்பல்(மடி), அளவுகடந்த தூக்கம் (துயில்) ஆகிய நான்கும் விரைவில் கெட்டுப்போகிறவர்கள் விரும்பிக் கட்டி ஏறுகிற வாகனங்கள் ஆகும் என்கிறார் திருவள்ளுவர். எனவே மறந்து போகாமல் நினைவுகளை மூளையில் சேமித்து வைப்பது எப்படி?.

நம்முடைய அனுபவங்களையும், நாம் சந்திக்கும் சம்பவங்களையும் தகவல்களாக நாம் நமது மூளைக்கு அனுப்புகிறோம்; அந்தத் தகவல்களை மூளை, நினைவுகளாக மாற்றி நமது மூளையில் சேமித்து வைத்துக் கொள்கிறது. தேவைப்படும் நிகழ் தருணங்களில், தேவையான விஷயங்களை மறப்பின்றி நினைப்பூட்டிப் பொருத்தமாக, நம் செயலுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கின்றன. நம் மூளைக்குச் செல்லுகின்ற எல்லாத் தகவல்களும் நினைவுகளாக நிலைத்துத் தங்குவதில்லை; எந்த அனுபவம் அல்லது சம்பவம் முக்கியமானவையாக அல்லது மதிப்புடையனவாக இருக்கிறதோ அது மட்டுமே முன்னுரிமை அடிப்படையில் நினைவில் சென்று அமர்ந்து கொள்ளும்; அந்தத் தகவல் இனிமையானதோ அல்லது கசப்பானதோ எதுவாக இருந்தாலும் நாம்தரும் முக்கியத்துவத்தைப் பொறுத்து அழியாத நினைவுகளாக அவை உருமாறிக் கொள்கின்றன.

ஒரு செய்தி அல்லது தகவலின் மீது நாம் செலுத்தும் அக்கறையைப் பொறுத்தே அது அழியாத நினைவாக நம் மூளையில் மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அக்கறை காட்டாத எந்த அனுபவமும், கண்ணோடு வந்து இமையோடு கரைவது போலவும், காதோடு வந்து காதோடு கடப்பது போலவும் காணாமல் போய்விடும். மாணவர்களைப் பொறுத்த வரை கற்றல் திறனில் மறதி என்பது கூடாத தீய சக்தியாகவே பார்க்கப்படுகிறது. எவ்வளவுதான் பலதடவை மனப்பாடம் செய்தாலும், பரீட்சை அரங்குக்குள் நுழைந்தவுடன் சுத்தமாகக் கழுவி விட்டதுபோல அனைத்தும் மறந்துவிடுகிறதே! ஏன்? என்று பல மாணவர்கள் அனுபவக் கேள்வியோடு வந்து நிற்கிறார்கள். எல்லாப்பாடமும் புரிகிறது!; கணக்குப் பாடம் மட்டும் காததூரம் தள்ளி நிற்கிறதே! ஏன்? என்று சிலர் கணக்காகக் கேட்கிறார்கள். போன வாரம் ரயிலில் சந்தித்து உரையாடிய நபரை இந்த வாரம் பார்த்தவுடன் சட்டென்று பெயர்கூட நினைவில் வர மறுக்கிறதே! ஏன்? என்று சிலர் தனது ஞாபகப் பிசகைக் கேள்வியாகக் கேட்கிறார்கள்.

இவர்களுக்கெல்லாம் ஒரே ஒரு பதில்தான். எதையும் விருப்பத்தோடும் ஆர்வத்தோடும் அக்கறையோடும் செய்தால் அது நிச்சயம் நினைவை விட்டு அகலவே அகலாது. மாணவர்கள் எந்த வகையிலாவது தங்களுக்கும் படிக்கும் பாடத்திற்குமுள்ள தூரத்தை குறைத்து அந்நியோன்யப் படுத்திக்கொள்ள வேண்டும். கற்பிக்கும் ஆசிரியரோடு அன்பின் நெருக்கத்தை உருவாக்கிக் கொண்டால், அந்தப் பாடம் வெல்லக் கட்டியாய் இனிக்கும்; ஆசிரியர் மீது மரியாதை, கற்கும் பாடத்தின்மீது மதிப்பு, கல்வியின்மீது அக்கறை இவை ஒன்றுகூடிவிட்டால் புரிகிறவரை கற்க வேண்டும் என்கிற ஆர்வம் பெருகும்; பெருகிய ஆர்வத்தில் புரிந்து படித்தால் அந்தப் பாடம் அதன்பிறகு எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மறக்கவே மறக்காது. அதைப் போல நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதர் மீதும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலின்மீதும் ஆர்வத்தோடும் அக்கறையோடும் இருந்தால் எல்லாமே நினைவுச் சேமிப்பில் கல்லில் எழுத்தாய் நிலைத்து நிற்கும்.

ஓர் அலுவலகத்தில் ஓர் எழுத்தர் பணிபுரிந்து வந்தார்; அவரிடம் எப்போதும் ஒரு மாறாத பழக்கம் இருந்தது. அலுவலகம் சென்றாலும், வங்கிக்குச் சென்றாலும் அஞ்சல் நிலையம், ரயில் நிலையம் என்று எங்குச் சென்றாலும் தன்னுடைய பேனாவைப் போகிற இடத்தில் மறந்து



வைத்துவிட்டு வந்துவிடுவார். அதனால் எப்போதும் அவரது சட்டைப் பை, கால்சட்டைப் பை, ஜோல்னாப் பை என்று எல்லாவற்றிலும் இரண்டிரண்டு பேனாக்கள் இருக்கும். ஆனாலும் மாலையில் வீடு திரும்பும்போது அவரிடத்தில் ஒரு பேனாவும் இருக்காது.

ஒருநாள் மனநல மருத்துவரிடம் சென்று, தான் அன்றாடம் பேனாவை மறந்து விட்டு வருவதை நிறுத்த ஒரு மார்க்கம் சொல்லுங்கள்; அல்லது ஏதாவது மருந்தாவது கொடுங்கள்! என்று பாவமாகக் கேட்டார். மருத்துவர் அவரிடம் இதுவரை என்ன மாதிரிப் பேனாக்களை உபயோகிக்கிறீர்கள்? என்று கேட்டுவிட்டு, 'இனிமேல் ஒரே பேனாவை உபயோகியுங்கள்!; அதுவும் விலை உயர்ந்த பேனாவாக இருக்கட்டும்!; தங்கத்தால் செய்யப்பட்ட பேனாவாக இருந்தால் இன்னும் சிறப்பு!. வாங்கிப் பயன்படுத்திப் பாருங்கள்; ஒரு மூன்று மாதம் கழித்து வாருங்கள்!' என்று சொல்லி அனுப்பினார் மனநல மருத்துவர்.

எழுத்தர் 22 காரட் தங்கத்தாலான பேனாவை வாங்கிப் பயன்படுத்தத் தொடங்கினார். மூன்றுமாதம் கழித்து மருத்துவரைக் காணச் சென்றார். 'என்ன ஆயிற்று? இப்போதும் பேனாக்களை மறந்து வைத்துவிட்டு வந்து விடுகிறீர்களா? பேனாக்கள் தொலைகின்றனவா?' கேட்டார் மருத்துவர். 'அதெப்படித் தொலையும்? இப்போதுநான்பயன்படுத்துவதுவிலை உயர்ந்த தங்கப் பேனா ஆயிற்றே!; கவனமாகக் கையாளுகிறேன்; யாரிடம் எழுதக் கொடுத்தாலும் மறக்காமல் கையோடு கேட்டுவாங்கிப் பையோடு வைத்துக்கொள்கிறேன்!. தங்கப் பேனா மந்திரத்தின்மூலம் என் பேனாமறதியை நிறுத்தியதற்கு மிக்க நன்றி!' என்றார் எழுத்தர்.. 'அதில் எந்த மந்திரமும் இல்லை!; மனித மூளைக்கு ஒரு குணம் உண்டு; அது எதை மதிப்புமிக்கதாகக் கருதுகிறதோ அதை மறக்கவே மறக்காது!' என்றார் மனநல மருத்துவர்.

நமது வாழ்க்கையின் ஒவ்வொரு தருணங்களையும் மதிப்புமிக்க தருணங்களாக ஆக்கிக் கொண்டு மதிப்போடு வாழக் கற்றுக்கொண்டால், மறதியில்லாமல் வெற்றிகாணலாம். வாழ்வின்மீது அக்கறையும் ஆர்வமும் கொண்டு வாழ்பவர்களின் வாழ்வு அவர்களுக்கு மட்டுமல்ல; மற்ற எல்லாருக்கும் நினைவில் நிற்கும் வாழ்வாகப் பளிச்சிடும். எல்லாமே ஓர் எல்லைக்குள் இருக்க வேண்டும். அளவுக்குமீறிய மிதமிஞ்சிய மகிழ்ச்சி மயக்கத்தில் மனிதனுக்கு மறதிநோய் ஏற்படுவதாகத் திருவள்ளுவர் கூறுகிறார். இதற்காக, மனிதனுக்கு மறதி கூடாது! என்பதை வலியுறுத்திக் கூறுவதற்காகவே 'பொச்சாவாமை' என்கிற அதிகாரத்தையும் படைத்திருக்கிறார்.

'இறந்த வெகுளியின் தீதே சிறந்த

உவகை மகிழ்ச்சியிற் சோர்வு'

கோபம், கொண்டவரையும் கொல்லும் கொடுமை வாய்ந்தது; அது அளவு கடந்து வந்தால் இன்னும் கடுமையான கொடுமையானதாக இருக்கும். அந்தக் கோபத்தைவிடத் தீமையானது அளவுக்கு மீறிய மகிழ்ச்சி மயக்கத்தில், அடுத்தவர் செய்த நன்மைகளை மறந்துவிடுவதாகும் என்கிறார் வள்ளுவர்.

மறதி நம்மைத் தாழ்வு மனப்பான்மைக்குள் தள்ளித், தோல்வி நிலைக்குள் எளிதாகப் புகுத்திவிடும். மறதி ஓர் நோயாக வயதானவர்களுக்கு வரும் என்பதை நம்பி விடாதீர்கள். முறையான உடற்பயிற்சிகள் மூலம் நமது உடலை எப்போதும் இயங்கு நிலையில் வைத்திருந்தால், உடல் எப்போதும் விழிப்புணர்வோடு செயல்படும்; அதே போல மனத்தையும் தனிமையில் தள்ளிவிடாமல், ஏதாவது ஒரு வேலையில் ஈடுபடச் செய்து வந்தால் மனமும் எப்போதும் கூர்மையாக இருக்கும். குறுக்கெழுத்துப் போட்டியில் ஈடுபடுவது, மூளைக்கு வேலைகொடுக்கும் விளையாட்டுகளில் ஆர்வம் காட்டுவது, நல்ல இசையை ரசிப்பது, பழைய அல்லது பக்திக் கவிதைகளை மனப்பாடம் செய்து, திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்ப்பது போன்றவை மனம் பழக்கும் மகத்துவச் செயல்களாகும். ஒரு வேலையில் ஈடுபட்டால் அதில் மட்டுமே கவனம் செலுத்துவது; ஒரு சிந்தனையில் ஈடுபட்டால் பிற சிந்தனைகளைத் தவிர்த்து அதைமட்டுமே கூர்ந்து சிந்திப்பது ஆகியவை நமது நினைவுகளைச் செழுமைப்படுத்தும். போதிய தூக்கம், தேவையான உணவு, அமைதியான மனநிலை ஆகியவை நமது நினைவுகளை ஒருங்கிணைத்து, மறதிகளே இல்லாமல் செய்துவிடும்.

சுந்தர ஆவுடையப்பன்
தொடர்புக்கு 944319098

உங்கள் வியாபாரம்
உலகம் முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில்
விளம்பரம்
செய்யுங்கள்!

# பெண்களும் செல்லலாம் நீண்டதூர பயணம்! மனது பாரம் குறையும்!

பெண்கள் வாழ்க்கைமுறை

நண்பர்கள், உறவினர்கள் அல்லது தெரிந்தவர்களிடம் சென்றுமனது கொஞ்சம்கவலையாக இருக்கிறது எனக்கூறினால், பலரின் அறிவுரை 'வெளியே சென்று வாருங்கள். எல்லாம் சரியாகிவிடும்' என்பதுதான். பலரும் இவ்வாறு கூறுவதற்கான காரணம் என்னவென்று தெரியுமா? நீண்ட தொலைவு பயணம் செய்வது மனதுக்கும், உடலுக்கும் பல்வேறு நன்மைகளை வழங்குகிறது. அந்தவகையில், ஆண்களைவிட அதிக மன அழுத்தத்திற்கு உள்ளாகும் பெண்கள் அடிக்கடி பயணம் செல்வது அவர்களுக்கு நல்ல ஆறுதலையும், ஆரோக்கியத்தையும் தருமாம். தொலைதூர பயணம் மனதை இதப்படுத்தி பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குமாம். தொலைதூர பயணத்தால் நாம் பெறும் பலன்கள் குறித்து பார்ப்போம்.

குறையும் மன அழுத்தம்

வேலைக்கு செல்வோர் அல்லது குடும்பத்தை விட்டு வெளியூர்களில் இருப்போர், நகரத்தில் வாழ்பவர்களுக்கு அதிகளவு மன அழுத்தம் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. காரணம் அவர்களின் வாழ்க்கைச்சூழல்... ஒரே இடத்தில் அதிக நேரம் இருப்பது, வெளியில் அதிகம் செல்லாதது, வேலையைவிட்டு வந்தால் வீடு, வீட்டைவிட்டால் அலுவலகம், மற்ற வேலைகளை பார்ப்பது, சாப்பிடுவது இதற்கே நேரம் சரியாக இருக்கும். மனிதர்களிடம் அதிகம் பேச நேரம் இருக்காது. ஒருவரிடம் பேசும்போது நம் மனதில் இருக்கும் எண்ணங்களை, உணர்ச்சிகளை வெளிப்படுத்துவோம். பேசாத போது அந்த உணர்ச்சிகள் உள்ளுக்குள்ளே இருக்கும். மேலும் சோகமான நிகழ்வு என்றால் அதை மீண்டும் மீண்டும் நினைத்து நம்மை நாமே அழுத்தத்திற்கு உள்ளாக்கி கொள்வோம். உணர்ச்சிரீதியான அதிகப்படியான சுமையை சுமப்போம். இதன் விளைவாக பதற்றம் மற்றும் மன சோர்வு ஏற்படலாம்.

மேலும் அதிகப்படியான தனிமை ஒருவித வெறுப்பு உணர்வை ஏற்படுத்தும். எதன்மீதும் ஆர்வம் இருக்காது. இந்த மனநிலையில் இருந்து மாற்றம் தேவை என்றால், இந்த அழுத்தத்திலிருந்து வெளிவர வேண்டுமென்றால் ஒரு பயணம் அவசியம். அது சொந்த ஊர்களுக்கு செல்வதாக இருக்கலாம், செல்லாத



ஊர்களுக்கு செல்வதாக இருக்கலாம் அல்லது நீண்ட தொலைவு பயணம் மேற்கொள்வதாகவும் இருக்கலாம். பயணத்தில் மனிதர்கள் இல்லையென்றாலும் நாம் இயற்கையில் இருக்கும் எதையாவது வேடிக்கை பார்த்துக்கொண்டே செல்வோம். இயற்கை சூழலில் நமது மனமும், உடலும் ஒய்வெடுக்கின்றன என ஆய்வுகள் கூறுகின்றன. இதனால் மன அழுத்தம் குறையும். மேலும் பயணம் மகிழ்ச்சியான உணர்ச்சிகளை அதிகரிக்கும். இது வேலையில் கவனம் செலுத்த உதவும்.

படைப்பாற்றல் திறன் அதிகரிக்கும்

அனுபவங்களைப் போலவே இயற்கையும் நிறைய பாடங்களை கற்றுக்கொடுக்கும். நீங்கள் கவனித்திருப்பீர்களா? என தெரியவில்லை. பூங்காவிற்கோ அல்லது பசுமையான, பசுமை நிறைந்த இடத்திற்கோ நாம் சென்றால் மனதில் என்ன கவலைகள் இருந்தாலும் அது நினைவில் வராது. அதாவது எந்த எண்ண ஓட்டமும் மனதில் இருக்காது. வெற்றிடமாக எதுவும் தோன்றாது. அமைதியாக உட்கார்ந்திருப்போம். வெளியில் இருப்பது நம் மனதில் நிம்மதியான விளைவுகளை ஏற்படுத்தும். அன்றாட வாழ்க்கையின் தேவைகளிலிருந்து தற்காலிகமாக தப்பிக்க இயற்கை நமக்கு மன அமைதியை அளிக்கும். ஒரு தெளிவு கிடைக்கும். மனம் தெளிவாக, அமைதியாக இருக்கும்போது பிரச்சனைகளுக்கான தீர்வு எளிதில் கிடைக்கும். நிறைய தோன்றும். படைப்பாற்றல் அதிகரிக்கும். எழுத்தாளர்கள் பலரும் அமைதியான, பசுமையான சூழலைத்தான் விரும்புவார்கள்.

உடல்நலன் மேம்படும்

இயற்கை சூழலில் இருக்கும் போது கார்டிசோல் அளவு குறைகிறது. கார்டிசோல் அளவு குறைந்தால் மனஅழுத்தம் குறையும். அடிக்கடி வெளியே இருப்பது இதய நோய் விகிதங்களைக் குறைக்க வழிவகுக்கும். மேலும் எலும்புகள், இரத்த அணுக்கள் மற்றும் நோயெதிர்ப்பு அமைப்புக்கு முக்கியமான வைட்டமின் டி அளவு சூரிய ஒளியால் அதிகரிக்கும்.

மன ஆரோக்கியம்

இயற்கை, மன அழுத்தம் மற்றும் கோப உணர்வுகளைக் குறைக்க உதவும். உடற்பயிற்சியும் இதற்கு உதவும், ஆனால் நீங்கள் வெளியில் இருக்கும்போது இது இன்னும் சிறந்தது. பசுமையான இடங்களுக்குத் தொடர்ந்து செல்வது மனச்சோர்வு அபாயத்தைக் குறைப்பதோடு, செறிவு மற்றும் கவனத்தை மேம்படுத்துகிறது. வெளியில் இருப்பது சமூகத்தோடு இணங்கச்செய்யும். எடுத்துக்காட்டாக கூறவேண்டுமென்றால், ஒரு பூங்காவுக்கு செல்கிறோம் என்றால் அங்கு நமக்கு தெரியாதவர்கள் சிலரைபார்ப்போம். இரண்டு, மூன்று நாட்கள் பூங்காவிற்கு சென்றால் அவர்களுடன் ஒன்றிணைவோம். வெளியூர்களுக்கு செல்லும்போது முகம் தெரியாதவர்களோடு பேசுவோம்.

பல கவலைகளுக்கு ஒரேமருந்து பயணம்

இது மனிதர்களிடம் எளிதில் ஒன்றாக உதவும். கூடுதலாக, நீங்கள் தொடர்ந்து வெளியே இருக்கும் போது நன்றாக தூங்குவதைக் காணலாம். இயற்கை ஒளியில் தினமும் படுவது தூக்கம்/விழிப்பு சுழற்சிகளை சீராக்க உதவுகிறது. ஒவ்வொரு நாளும் சூரிய ஒளியில் வெளியே செல்வதை உறுதி செய்வதன் மூலம், இரவில் தூங்கும் திறனை மேம்படுத்தலாம். பூங்காக்கள் மற்றும் பசுமையான இடங்களுக்கு அருகில் வசிக்கும் மக்கள் குறைவான மன உளைச்சலைக் கொண்டுள்ளனர். அதிக சுறுசுறுப்புடன் செயல்படுகின்றனர். மேலும் நீண்ட ஆயுட்காலத்தை கொண்டுள்ளனர். இயற்கையின் மீதான வெளிப்பாடு நாள்பட்ட நோயால் ஏற்படும் இறப்பைக் குறைக்கும்.

பயணம் செல்லவில்லையென்றால், என்ன செய்யலாம்?

ஒருநாளைக்கு குறைந்தது 5 நிமிடமாவது சூரிய ஒளியில்படுங்கள். காலில் இருக்கும் செருப்பை கழற்றிவிட்டு கொஞ்சநேரம் புல்வெளியில் நடந்து செல்லுங்கள். பூங்காக்கள் அல்லது வெளியில் மதிய உணவை சாப்பிடுங்கள். தொலைபேசியில் பேசினால் வெளியே நின்று பேசுங்கள். குடும்பத்துடன் சுற்றுலா செல்ல முடியாவிட்டாலும், பூங்காவிற்கு செல்லுங்கள். உங்கள் சைக்கிளில் தூசியைத் தட்டிவிட்டு, அக்கம் பக்கத்தைச் சுற்றி வாருங்கள். ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு, ஒரு நிழல் தரும் மரத்தடியில் உட்காருங்கள். வீட்டு முற்றத்திலோ, முன்புறமோ செடி, கொடிகளை நடுங்கள். வாரத்திற்கு ஒருமுறையாவது மனதுக்கு நெருக்கமானவரிடம், யாராக இருந்தாலும் சரி மனம்விட்டு பேசுங்கள்.

# பெண்களின் பிறப்புறுப்பு அரிப்புக்கு உண்மையான காரணம்?

மாதவிடாய் காலங்களிலோ, அந்தரங்க பகுதியில் உள்ள முடிகள் அதிகமாகும்போதோ அல்லது பலநேரங்களில் நமக்கு பிறப்புறுப்பில் அரிப்பு ஏற்படும். அந்த இடத்தில் சொரியும்போது சிலநேரங்களில் காயமாகவும் மாறக்கூடும். சிலர் இதற்கு மஞ்சள் தடவுவது, தேங்காய் எண்ணெய் தடவுவது என சில வைத்தியங்களை செய்வர். ஆனால் இந்த இடத்தில் அரிப்பு ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து அதை சரிசெய்ய வேண்டும். பிறப்புறுப்பில் அரிப்பு ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்து பார்ப்போம்.

பிறப்புறுப்பு அரிப்பு

பிறப்புறுப்பு அரிப்பு என்பது பிறப்புறுப்புப் பகுதியில் ஏற்படும் அரிப்பு, எரிச்சல் மற்றும் அசௌகரியம் ஆகும்.

பிறப்புறுப்பில் அரிப்பு ஏற்பட காரணங்கள்

சுத்தமாக இல்லாதது

இது பெண்களின் பிறப்புறுப்பு அரிப்புக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும். மலம் கழித்த பிறகு அல்லது சிறுநீர் கழித்த பிறகு பிறப்புறுப்பை ஒழுங்காக சுத்தம் செய்யவில்லை என்றால் அரிப்பு ஏற்படும். மாதவிடாய் காலத்தில் சானிட்டரி நாப்கின்களை அடிக்கடி மாற்றவேண்டும். அதுபோல உடலுறவுக்குப் பிறகும் சுத்தம் செய்யவேண்டும். வியர்வை மற்றும் சிறுநீர், முறையாக சுத்தம் செய்யப்படாவிட்டால், பிறப்புறுப்பு பகுதியில் பாக்டீரியா உருவாகி வீக்கத்தை ஏற்படுத்தும். இது நீண்ட நாட்கள் தொடர்ந்தால், அது வஜினிடிஸாக உருவாகலாம். அந்த நேரத்தில் பிறப்புறுப்பு பகுதி பச்சை அல்லது மஞ்சள் சளியை சுரக்கக்கூடும்.

மேலும் பெண்கள் தங்கள் அந்தரங்க பகுதியில் இருக்கும் முடியை அடிக்கடி சுத்தம் செய்யக்கூடாது. ஏனெனில் இந்த முடி பிறப்புறுப்பு பகுதியை பாக்டீரியாவிலிருந்து பாதுகாக்கிறது. மேலும் முடியை நீக்குவது கீறல்கள் மற்றும் அசௌகரியத்தை ஏற்படுத்தும். வேண்டுமானால் அவ்வப்போது முடியை வெட்டிக்கொள்ளலாம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வாமை

பெண்கள் அந்தரங்கப் பகுதியை சுத்தம் செய்ய சோப்பு அல்லது வேதிப்பொருட்கள் அதிகம் நிறைந்த ஜெல்களை பயன்படுத்தக்கூடாது. இந்த பொருட்கள் பெரும்பாலும் வலுவான காரத்தன்மை கொண்டவை. இது யோனியின் சாதாரண pH அளவை மாற்றி, வறட்சி மற்றும் அரிப்புக்கு வழிவகுக்கின்றன.

# அதிர்வலையை ஏற்படுத்திய பெண் டாக்டர் தற்கொலை வழக்கு: போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கைது

மராட்டிய மாநிலம் பீட் மாவட்டத்தை சேர்ந்த 28 வயது பெண் டாக்டர் ஒருவர் சத்தாரா மாவட்டத்தில் உள்ள பல்தான் துணை மாவட்ட அரசு ஆஸ்பத்திரியில் பணியாற்றி வந்தார். அவர் ஆஸ்பத்திரி அருகே உள்ள ஓட்டல் அறையில் கடந்த வியாழக்கிழமை தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. தற்கொலைக்கு முன்பு அவர் தனது உள்ளங்கையில் குறிப்பு எழுதி வைத்திருந்தார்.

அதில் பல்தான் நகர போலீஸ் நிலையசப்-இன்ஸ்பெக்டர்கோபால் பதானே மற்றும் பல்தானில் தான் வசித்து வந்த அடுக்குமாடி கட்டிட வீட்டின் உரிமையாளரின் மகனும், சாப்ட்வேர் என்ஜினீயருமான பிரசாந்த் பங்கரின் பெயர் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இதில் சப்-இன்ஸ்பெக்டர் கோபால் பதானே தன்னை 4 முறை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், பிரசாந்த் பங்கர் உடல் மற்றும் மனரீதியாக துன்புறுத்தி வந்ததாகவும் குறிப்பிட்டு இருந்தார். மேலும் பெண் டாக்டர் தற்கொலைக்கு முன்பு எழுதி வைத்திருந்த 4 பக்க பரபரப்பு கடிதமும் சிக்கியது. அதில், சப்-இன்ஸ்பெக்டர், சாப்ட்வேர் என்ஜினீயரால் தனக்கு நேர்ந்த கொடுமைகள் குறித்தும், கைதான கைதிகளுக்கு போலி உடல் தகுதி சான்று வழங்கும்படி எம்.பி., போலீஸ்அதிகாரிகள்துன்புறுத்தியது பற்றியும் குறிப்பிட்டு இருந்தார்.

மராட்டியத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்த வழக்கில் சாப்ட்வேர் என்ஜினீயர் பிரசாந்த் பங்கரை புனேயில் போலீசார் கைது செய்தனர். கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்ட அவர், விசாரணைக்காக போலீஸ் காவலில் ஒப்படைக்கப்பட்டு உள்ளார்.

முக்கிய குற்றவாளியான போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கோபால் பதானே தலைமறைவாக இருந்தார். அவருக்கு போலீசார் அடைக்கலம் கொடுத்து பாதுகாத்து வருவதாக பெண் டாக்டரின் உறவினர்கள் குற்றம்சாட்டி இருந்தனர்.

## இந்திய செய்திகள்

# விசைப்படகு பழுதானதால் நடுக்கடலில் 11 நாட்கள் பரிதவித்த மீனவர்கள்.!



கோவாவில் உள்ள மீன்பிடி துறைமுகத்தில் இருந்து சான்ட் ஆண்டன் என்ற மீன்பிடி விசைப்படகில் 31 மீனவர்கள் கடந்த 13-ந்தேதி அரபிக்கடலில் மீன்பிடிக்க சென்றனர். இந்த நிலையில் கர்நாடக மாநிலம் மங்களூருவில் உள்ள புதிய மங்களூரு கப்பல் துறைமுக எல்லையில் சென்றபோது திடீரென்று அந்த விசைப்படகின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதனால் அவர்களை யாராலும் தொடர்புகொள்ள முடியவில்லை.

இந்த நிலையில் நடுக்கடலில் விசைப்படகு மாயமானது குறித்து கடந்த 24-ந்தேதி மங்களூருவில் உள்ள இந்திய கடலோர காவல் படைக்கு தகவல் கிடைத்தது. இதனால் கடலோர காவல் படையினர், மாயமான படகை தேடும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் வானிலை மாற்றம், கடல் சீற்றம் காரணமாக விசைப்படகின் தொடர்பு கடலோர காவல் படையினருக்கு கிடைக்கவில்லை.

இதையடுத்து மீட்பு விமானம் மூலம் மாயமான விசைப்படகை தேட கடலோர காவல் படை முடிவு செய்தது. அதன்படி கொச்சியில் இருந்து 'டோர்னியர்' என்ற மீட்பு விமானம் வரவழைக்கப்பட்டது. அந்த மீட்பு விமானம் மூலம் நடுக்கடலில் மாயமான விசைப்படகை தேடும் பணி நடந்தது. மீட்பு விமானம் மூலம் விசைப்படகின் இருப்பிடம் கண்டறியப்பட்டது. புதிய மங்களூரு கப்பல் துறைமுகத்தில் இருந்து 100 கடல் மைல் தொலைவில் அந்த விசைப்படகு தத்தளித்து கொண்டிருந்தது கண்டறியப்பட்டது.

இதுபற்றி கடலோர காவல் படைக்கு மீட்பு விமானத்தில் சென்றவர்கள் தகவல் தெரிவித்தனர். இதையடுத்து கடலோர காவல் படையினர் கஸ்தூர்பா காந்தி என்ற மீட்பு படகு மூலம் விசைப்படகு தத்தளித்து கொண்டிருந்த இடத்துக்கு சென்றனர். அப்போது அங்கு விசைப்படகு தத்தளித்து கொண்டிருந்தது தெரியவந்தது. நடுக்கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது விசைப்படகின் 'ஸ்டீயரிங் கியர்' செயலிழந்ததால் நகர முடியாமல் நின்றது. மேலும் விசைப்படகில் இருந்த ஜி.பி.எஸ். கருவியும் செயலிழந்ததுடன், திசை காட்டும் கருவியும் வேலை செய்யவில்லை. இதனால் அந்த விசைப்படகில் இருந்த 31 மீனவர்களும் செய்வதறியாது திகைத்து நின்றுள்ளனர்.

மேலும் கடல் அலையின் சீற்றம் காரணமாக விசைப்படகு கொஞ்சம், கொஞ்சமாக நகர்ந்து சென்றுள்ளது. இதனால் வேறு மீனவர்கள் யாரும் அந்த வழியாக வரவில்லை. இதன்காரணமாக 31 மீனவர்களும் 11 நாட்கள் நடுக்கடலில் விசைப்படகில் பரிதவித்து கொண்டிருந்தனர். அவர்கள் உணவு பொருட்கள் வைத்திருந்ததால் அதனை வைத்து சமைத்து சாப்பிட்டு தங்களை யாராவது மீட்க வரமாட்டார்களா என ஏக்கத்துடன் காத்திருந்தனர்.

தற்போது கடலோர காவல் படையினர் வந்ததால், விசைப்படகில் பழுது சரி செய்யப்பட்டது. பின்னர் அதில் இருந்த 31 மீனவர்களும் பத்திரமாக மீட்கப்பட்டனர். இதையடுத்து மற்றொரு மீன்பிடி விசைப்படகு வரவழைக்கப்பட்டு, கயிறு கட்டி பழுதான விசைப்படகு கரைக்கு கொண்டு செல்லப்பட்டது. அந்த படகு கார்வார் மாவட்டம் ஒன்னாவர்மீன்பிடிதுறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. 11 நாட்கள் நடுக்கடலில் புயல் காற்று, கனமழை, அலை சீற்றத்துக்கு மத்தியில் பரிதவித்த 31 மீனவர்களும் பத்திரமாக கரை திரும்பினர்.

# சூரியகாந்தை சுப்ரீம் கோர்ட்டு புதிய தலைமை நீதிபதியாக பரிந்துரைத்த பி.ஆர்.கவாய்

சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதியாக பி.ஆர்.கவாய் செயல்பட்டு வருகிறார். இவர் அடுத்த மாதம் 23ம் தேதியுடன் பணியில் இருந்து ஓய்வு பெறுகிறார். இதையடுத்து, புதிய தலைமை நீதிபதியை தேர்வு செய்யும் பணியை மத்திய சட்ட அமைச்சகம் தொடங்கியுள்ளது.



இந்நிலையில், சுப்ரீம் கோர்ட்டு புதிய தலைமை நீதிபதியாக சூரியகாந்தை நியமிக்க சட்ட அமைச்சகத்திற்கு தலைமை நீதிபதி கவாய் பரிந்துரை செய்துள்ளார்.

தலைமை நீதிபதிக்கு அடுத்த நிலையில் மூத்த நீதிபதியாக உள்ள சூரியகாந்த் சுப்ரீம் கோட்டின் 53வது தலைமை நீதிபதியாக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர் 2026 ஆண்டு பிப்ரவரி 9ம் தேதிவரை தலைமை நீதிபதியாக செயல்படுவார் என தகவல் வெளியாகியுள்ளது.

# இந்திய ஜூ-ஜிட்சு வீராங்கனை தற்கொலை.. அதிர்ச்சி சம்பவம்

சர்வதேச ஜூ-ஜிட்சு வீராங்கனையும் தற்காப்புக் கலை பயிற்சியாளருமான ரோஹினி கலாம் (வயது 35) ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா சார்பில் பங்கேற்றுள்ளார். இவர் நேற்று மத்தியப் பிரதேசத்தின் தேவாஸில் உள்ள அவரது வீட்டில் தற்கொலை செய்து கொண்டார்.

அவரது அறையின் கதவு நீண்ட நேரம் திறக்கப்படாததால் ரோஹினியின் தங்கை ரோஷ்னி கலாம் உள்ளே சென்று பார்த்தார். அங்கு அவர்தூக்கில்தொங்குவதைக் கண்டு அதிர்சி அடைந்தார். உடனடியாக குடும்பத்தினருக்கு தகவல் தெரிவித்தார். விரைந்து வந்து ரோஹினியை மீட்ட குடும்பத்தினர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே இறந்துவிட்டதாக அறிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். முதற்கட்ட விசாரணையில் அவர்



தற்கொலை செய்து கொண்டது உறுதியாகி உள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது. காவல்துறையின் தகவலின்படி, இந்த சம்பவம் நடந்தபோது, ரோஹினியின் தாயார் மற்றொரு மகளுடன் கோவிலுக்கு சென்றிருந்தார். அவரது தந்தையும் வீட்டில் இல்லை. அத்துடன் சம்பவ இடத்தில் எந்த கடிதமும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தனர்.

இருப்பினும் ரோஹினி தனது வேலை தொடர்பான மன அழுத்தத்தில் இருந்ததாக அவரது சகோதரி போலீசாரிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து போலீசார் ரோஹினி தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் குறித்து தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

உடல்நலம்

# நீரிழிவு நோயாளிகள் ஒரு நாளைக்கு எத்தனை வாழைப்பழம் சாப்பிடலாம்?

உடல் மிகவும் பலவீனமாக இருக்கிறது. உணவில் உடலுக்கு ஆரோக்கியம் தரும் சில பழங்களை சேர்க்கவேண்டும் என நினைத்தால் கண்டிப்பாக வாழைப்பழத்தை சேர்த்துக்கொள்ளலாம். சாப்பிட்ட உடனேயே ஆற்றல் தரக்கூடிய பழம் என்றால் அது வாழைப்பழம்தான். வாழைப்பழத்தில் உள்ள ஊட்டச்சத்துக்கள் குறித்தும், அவற்றால் உடலுக்கு கிடைக்கும் ஆரோக்கிய நன்மைகள் குறித்தும் இங்கு காணலாம்.

இரத்த சர்க்கரை அளவை சீராக்கும்

வாழைப்பழத்தில் கரையக்கூடிய மற்றும் கரையாத என இரண்டு வகையான நார்ச்சத்துகள் உள்ளன. கரையக்கூடிய நார்ச்சத்து செரிமானத்தை மெதுவாக்குகிறது. இதனால் நீண்ட நேரம் பசி எடுக்காது. கரையாத நார்ச்சத்து குடல் இயக்கத்தை சீராக வைத்திருக்க உதவுகிறது. பழுக்காத (பச்சை) வாழைப்பழங்களில் எதிர்ப்புத் திறன் கொண்ட ஸ்டார்ச் (resistant starch) அதிகம் உள்ளது. இது செரிமானத்திற்கு கடினமாக இருந்தாலும், நன்மை பயக்கும் குடல் பாக்டீரியாக்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது மற்றும் இரத்த சர்க்கரை அளவை சீராக வைத்திருக்க உதவுகிறது. நீரிழிவு இல்லாதவர்களுக்கு வாழைப்பழங்கள் இரத்த சர்க்கரை அளவில் பெரிய ஏற்றத்தை ஏற்படுத்தாது. ஏனெனில் அதில் உள்ள நார்ச்சத்து மற்றும் பிற ஊட்டச்சத்துக்கள் சர்க்கரை உறிஞ்சுதலை சீராக்க உதவுகின்றன. இருப்பினும் பழுத்த வாழைப்பழங்களில் அதிகளவு சர்க்கரை உள்ளதால், நீரிழிவு நோய் உள்ளவர்கள் அதிக வாழைப்பழங்கள் எடுத்துக் கொள்வதை தவிர்ப்பது நல்லது. ஒரு நாளைக்கு ஒரேயொரு சிறிய அல்லது நடுத்தர வாழைப்பழத்தை மட்டும் சாப்பிடுவது நல்லது.

மலச்சிக்கலை நீக்கும்



பழுக்காத வாழைப்பழங்களில் காணப்படும் எதிர்ப்புத் திறன் கொண்ட ஸ்டார்ச் ஒரு ப்ரீபயாடிக் ஆகும். இது குடலில் உள்ள நல்ல பாக்டீரியாக்களுக்கு உணவளித்து அதன் வளர்ச்சி மற்றும் செயல்பாட்டைத் தூண்டுகிறது. இது புரோபயாடிக்குகள் (நேர்மறையான பாக்டீரியாக்கள்) செழித்து வளர உதவுகிறது, குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது மற்றும் மலச்சிக்கலை நீக்க உதவுகிறது. வாழைப்பழங்களில் காணப்படும் பெக்டின் என்ற நார்ச்சத்து பெருங்குடல் புற்றுநோயிலிருந்து நம்மை பாதுகாக்க உதவும் எனக் கூறப்படு கிறது.

எடை இழப்புக்கு உதவும்

வாழைப்பழங்கள் ஒப்பீட்டளவில் குறைந்தளவு கலோரிகளை கொண்டவை. ஒரு நடுத்தர வாழைப்பழத்தில் சுமார் 105 கலோரிகளே உள்ளன. ஆனால் அவை சத்தானவை மற்றும் நிறைவானவை.

வாழைப்பழம் கொழுப்புச்சத்தை அதிகரிக்காது

இதய ஆரோக்கியத்திற்கு உதவும்

பொட்டாசியம் என்பது இதய ஆரோக்கியத்திற்கும், குறிப்பாக இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் அவசியமானது. வாழைப்பழங்கள் பொட்டாசியத்தின் சிறந்த மூலமாகும். ஒரு நடுத்தர வாழைப்பழம் தினசரி மதிப்பில் 10% பொட்டாசியத்தை வழங்குகிறது. பொட்டாசியம் நிறைந்த உணவு இரத்த அழுத்தத்தைக் குறைக்க உதவும். உயர் இரத்த அழுத்த அபாயத்தைக் குறைக்கும். வாழைப்பழங்களில் மெக்னீசியத்திற்கான DV-யில் 8% உள்ளது, இது இதய ஆரோக்கியத்திற்கான மற்றொரு முக்கியமான கனிமமாகும். மெக்னீசியம் குறைபாடு (ஹைப்போமக்னீமியா) இதய நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்தத்தில் அதிக அளவு கொழுப்புகள் ஏற்படும் அபாயத்துடன் தொடர்புடையது. எனவே, உங்கள் உணவு அல்லது சப்ளிமெண்ட்ஸ் மூலம் இந்த மெக்னீசியத்தை பெறுவது அவசியம்.

ஆக்ஸிஜனேற்றிகள்

காய்கறிகள், பழங்கள் அனைத்துமே அதிகளவு ஆக்ஸிஜனேற்றிகளை கொண்டிருக்கும். அந்த வகையில் வாழைப்பழங்களில் அமின்கள் உட்பட பல வகையான சக்திவாய்ந்த ஆக்ஸிஜனேற்றிகள் உள்ளன. இந்த ஆக்ஸிஜனேற்றிகள் இதய நோய் மற்றும் மாகுலர் சிதைவு அபாயத்தைக் குறைத்தல் போன்ற பல ஆரோக்கிய நன்மைகளை கொண்டுள்ளன. ஆக்ஸிஜனேற்றிகள் ஃப்ரீ ரேடிக்கல்களால் செல்களுக்கு ஏற்படும் ஆக்ஸிஜனேற்ற சேதத்தைத் தடுக்க உதவுகின்றன.

வாழைப்பழத்தில் உள்ள ஊட்டத்துக்கள்

வாழைப்பழத்தில் போதுமான அளவு கார்போஹைட்ரேட்டுகள், நீர், நார்ச்சத்து மற்றும் ஆக்ஸிஜனேற்றிகள் உள்ளன. இதில் புரதம் குறைவு என்றாலும், அதைவிட மிக மிக குறைவு கொழுப்புச்சத்து. இதனால் கொலஸ்ட்ரால் அதிகரிக்காது.

ஒரு வாழைப்பழத்தில் உள்ளவை

கலோரிகள்: 112

கொழுப்பு: 0.4 கிராம் (கிராம்)

புரதம்: 1 கிராம்

கார்போஹைட்ரேட்: 29 கிராம்

நார்ச்சத்து: 3 கிராம்

வைட்டமின் சி: தினசரி மதிப்பில் (DV) 12%

ரைபோஃப்ளேவின்: DVயில் 7%

ஃபோலேட்: DV யில் 6%

நியாசின்: DV யில் 5%

தாமிரம்: DV யில் 11%

பொட்டாசியம்: DV யில் 10%

மெக்னீசியம்: DV யில் 8%

# தினமும் முட்டை சாப்பிடலாமா? முட்டை சாப்பிடும்போது உடலில் நிகழும் மாற்றம் என்ன?

சிறியதாக இருந்தாலும் ஒரு சக்திவாய்ந்த ஊட்டச்சத்தாக இருப்பதுதான் முட்டை. ஒவ்வொரு நாளும் 27% அமெரிக்கர்கள் முட்டையை வேகவைத்தோ, ஆம்லெட்டாகவோ அல்லது சாண்ட்விச்சின் ஒரு பகுதியாகவோ எடுத்துக் கொள்கிறார்கள். காரணம் முட்டை ஒரு முழுமையான ஊட்டச்சத்து மிகுந்த உணவாகக் கருதப்படுகிறது. ஆனால் முட்டையை தினமும் சாப்பிடுவது ஆரோக்கியமானதா? ஒவ்வொரு நாளும் ஒரு முட்டை சாப்பிடும்போது உடலில் நிகழும் மாற்றம் என்ன? என்பது குறித்து பார்ப்போம்.

ஒரு முட்டையில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துகள்

கலோரிகள்: 71

மொத்த கொழுப்பு: 5 கிராம்

புரதம்: 6.24 கிராம்

வைட்டமின் பி12: 0.5 மைக்ரோகிராம்

வைட்டமின் டி: 1.24 மைக்ரோகிராம்

கால்சியம்: 24 மி.கி.

கோலின்: 169 மி.கி.

கர்ப்பிணிப் பெண்களின் கரு வளர்ச்சிக்கு முட்டை சிறந்த தேர்வா கும். முட்டையில் உள்ள ஊட்டச்சத்து நன்மைகள். புரதம் - முட்டையில் அதிகளவு புரதம் உள்ளது. இது செரிமானத்தை மெதுவாக்கும். மேலும் பசியை கட்டுப்படுத்தும். முட்டைகள் தசைகளைப் பராமரிக்கவும், திசுக்களைச் சரிசெய்யவும் உதவுகின்றன. மேலும், முட்டையின் மஞ்சள் கரு மற்றும் வெள்ளைப் பகுதியில் ஒன்பது அத்தியாவசிய அமினோ அமிலங்கள் நிறைந்துள்ளன.

வைட்டமின் டி - முட்டையில் நிறைந்துள்ள பலவிதமான வைட்டமின்கள் பல நன்மைகளைத் தருகின்றன. இதில் வைட்டமின் டி, வைட்டமின் ஏ, வைட்டமின் பி2, வைட்டமின் பி12, பயோட்டின் (Biotin), மற்றும் ஃபோலேட் ஆகியவை அடங்கும். இவை நோய் எதிர்ப்பு சக்தி, எலும்புகள் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தைப் பராமரிக்க உதவுகின்றன.

கோலின் - செல் வளர்ச்சி, வளர்சிதை மாற்றம் மற்றும் நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டிற்கு அத்தியாவசியமான கோலின், முட்டையில் உள்ளது. கல்லீரலின் செயல்பாட்டை அதிகரிப்பதைத் தவிர, கோலின் கொழுப்பைக் கடத்துவதற்கும் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் பயனுள்ளதாக இருக்கிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு, முட்டைகள் கருவின் வளர்ச்சிக்கு சிறந்த தேர்வாகும். ஏனெனில் அவை மூளை வளர்ச்சி மற்றும் அறிவாற்றல் செயல்பாடுகளில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

வைட்டமின் பி12 - இரண்டு முட்டைகள் ஒரு நாளைக்குத் தேவையான பி12- ல் மூன்றில் ஒரு பங்கை கொடுக்கின்றன. இந்த வைட்டமின் ‘சிவப்பு இரத்த அணுக்களை உருவாக்குவதற்கும், நரம்புகளை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கும், ஆற்றல் வளர்சிதை மாற்றத்தை



ஆதரிப்பதற்கும் அவசியம்.

ஆக்ஸிஜனேற்றிகள் - முட்டை யில் உள்ள லுடீன் மற்றும் ஜீயாக்சாண்டின் போன்ற கரோட்டினாய்டு ஆக்ஸிஜனேற்றிகள் கண் ஆரோக்கியத்திற்கு உதவுகின்றன.

தினசரி முட்டை எடுத்துக் கொள்ளலாமா?

ஒரு நாளைக்கு ஒரு முட்டை எடுத்துக்கொள்வது அனைவருக்கும் நல்லது. வயதானவர்கள், அதிக புரதத் தேவைகள் உள்ளவர்கள் ஒருநாளைக்கு இரண்டு முட்டை எடுத்துக்கொள்ளலாம். எப்போதாவது அதிகமாக சாப்பிடுவது பிரச்சனையில்லை. ஆனால் தொடர்ந்து ஒரு நாளைக்கு நான்கு அல்லது அதற்கும்மேல் சாப்பிடுவது நீரிழிவு, அதிக கொழுப்பு அல்லது இதய நோய் உள்ளவர்களுக்கு உகந்ததாக இருக்காது. அவர்கள் மருத்துவரின் ஆலோசனையை கேட்டுக் கொள்ளலாம். புரதச்சத்துக்கு வெறும் முட்டையை மட்டும் நம்பியில்லாமல், மீன் போன்ற மற்ற புரதச்சத்து நிறைந் தவைகளையும் உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது.

# தமிழக செய்திகள்

# SIR நடவடிக்கையை அதிமுக முழு மனதுடன் வரவேற்கிறது- ஜெயக்குமார்

இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை அதிமுக முழு மனதுடன் வரவேற்கிறது என அதிமுக அமைப்புச் செயலாளர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஜெயக்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. இந்தியா வின் சிறப்பே ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்துவது தான். அப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டு மென்றால் அதற்கு அடிப்படையே வாக்காளர் பட்டியல்தான்.

ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்த வேண்டும் என்றால் இந்தியா முழுவதும் உள்ள வாக்காளர் பட்டியல் சரியானதா என்று சரி பார்க்க வேண்டும். குறிப்பாக, தமிழகத்தில் 2026-ல் சட்டமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல் 100 சத வீதம் முழுமையானதாகவும், சரியானவையாகவும் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

எனவே, இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டிய லில் இரட்டை வாக்குகள், இறந்தவர்கள் மற்றும் இடம் பெயர்ந்தவர்ளை நீக்குவதும், புதிதாக தகுதி உள்ளவர்களை சேர்ப் பதும் அவ்வப்போது சுருக்கத் திருத்தம் மற்றும் தீவிர திருத்தம் என்ற முறைகளை பின்பற்றி சரி யான வாக்காளர் பட்டியலை உறுதி படுத்துவது இயல்பான ஒரு நடைமுறை.

எனவேதான், வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு சம்பந்தமாக அனைத்து அரசியல் கட்சி களும் பங்கேற்கும் வகையில் இந்திய தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படும் கூட்டங்களில், தமிழ் நாட்டில் தற்போதுள்ள வாக்காளர் பட்டியல் 100 சதவீத சரிபார்ப்பு இல்லாமல் முழுமையானதாக இல்லை என்பதால், வாக்காளர் பட்டியலை முழுமையாக ஆய்வு செய்யுங்கள் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்திய தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தி வந்துள் ளோம்.

குறிப்பாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைமைக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள், எங்கள் கழகப்

பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஒப்புதலோடு இந்தியத் தேர்தல் ஆணையத்தின், மாவட்ட அளவில் நடைபெறும் கூட்டங்கள்; மாநில அளவில் சென்னையில் நடைபெறும்



கூட்டங்கள் மட்டுமல்லாமல், டெல்லியில் இந்திய தலைமை தேர்தல் ஆணையம் நடத்தும் கூட்டங்களிலும், தமிழகத்தில் வாக்காளர் பட்டியல்களில் உள்ள குளறுபடிகளை நாங்கள் உரிய ஆதாரங்களுடன் எடுத்து வைத்து, திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலை கோரி வருகிறோம்.

உதாரணமாக, 2023-ஆம் ஆண்டு நடைபெற்ற ஈரோடு கிழக்கு சட்ட மன்ற இடைத் தேர்தலின்போது வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில், அந்தத் தொகுதியில் வசிக்காத 40 ஆயிரம் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தது.

அதேபோல், சுமார் 8 ஆயிரம் இறந்தவாக்காளர்களின்பெயர்களும் பட்டியலில் இடம் பெற்றிருந்தது. இதற்கான ஆதாரங்களை கழகத்தின் சார்பில் தேர்தல் ஆணையத்திற்கு புகாராகக் கொண்டு சென்றும், அதைப்பற்றி தேர்தல் ஆணையம் கண்டுகொள்ளவில்லை. இடைத் தேர்தல் முடியும்வரை அப்பெயர்கள் நீக்கப்படவில்லை.

அதேபோல், 2024 நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழகம் முழுவதும் இரட்டை வாக்குகள், இறந்தவர்கள் மற்றும் முகவரி மாற்றம் செய்தவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படவில்லை. இது குறித்து சம்பந்தப்பட்ட மாவட்டத் தேர்தல் அலுவலர்களிடமும், இந்திய தேர்தல் ஆணையத்திடமும் புகார்கள் கொடுக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

2024-ஆம் ஆண்டு, சென்னை ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி யில் இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்ட வாக்காளர் பட்டியலில், இரட்டை வாக்குகள், முகவரி மாற்றம் மற்றும் இறந்தவர்கள் ஆகியோரின் பெயர்கள் நீக்கப் படவில்லை என்றும்; இப்படி சுமார் 44 ஆயிரம் நபர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக் கப்பட வேண்டும் என்று சென்னை யில் உள்ள தலைமை தேர்தல் அதிகாரியிடம் உரிய ஆதாரங்களு டன் மனு அளித்தும் நடவடி க்கை எடுக்கப்படவில்லை என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வழக்கு தொடரப்பட்டது.

அதைத் தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் உத்தர வுப்படி, தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலை ஆய்வு செய்து, ஆர்.கே. நகர் தொகுதியில் மட்டும் இன்றுவரை சுமார் 31 ஆயிரம் பெயர்கள் நீக்கப் பட்டுள்ளன. மீதமுள்ள பெயர்கள் மீதான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இவ்வழக்கு சென்னை உயர்நீ திமன்றத்தில் நடைபெற்று வந்தபோது, கழகத்தின் சார்பில் சென்னை மாநகர் முழுவதும் இதுபோன்று பல்லாயிரக்கணக்கான பெயர்கள் வாக்காளர் பட்டியலில் முறைகேடாக இடம் பெற்றுள்ளது என்று நாங்கள் தெரிவித்தோம். தொடர்ந்து, தியாகராயநகர், ஆயிரம்விளக்கு, சேப்பாக்கம் ஆகிய தொகுதிகள் உள்பட பல தொகு திகளின் சார்பாக சென்னை உயர்நீ திமன்றத்தில் வழக்கு பதியப்பட்டு, மாநில தேர்தல் ஆணையம் வாக்காளர் சரிபார்ப்பினை நடத்தி வருகிறது.

எங்களது கழகப் பொதுச் செயலாளர் சூபுரட்சித் தமிழர்' எடப்பாடியார் அவர்கள் சூமக்க ளைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்று ஆளும் விடியா திமுக ஸ்டாலினின் ஃபெயிலியர் மாடல் அரசின் தோல்விகளை தமிழகம் முழுவதும் எடுத்துக் கூறும் புரட்சித் தமிழரின் எழுச்சிப் பயணத்தின் போது, பல தொகு திகளில் வாக்காளர் பட்டியலில் நீக்கப்படாத இரட்டை வாக்குகள், இறந்தவர் வாக்குகள், முகவரி மாற்றம்உள்ளிட்ட குளறுபடிகளைசு ட்டிக்காட்டி, வாக்காளர் பட்டியலை 100 சதவீதம் ஆய்வு செய்து திருத்திய வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தி வருகிறார்.

வாக்காளர் சரிபார்ப்பு கோரிக் கையை சென்னை மட்டுமல்லாது, டெல்லியில் இந்திய தேர்தல் ஆணையம் நடத்தும் அனைத்துக் கூட்டங்களிலும் உரிய ஆதாரங் களுடன் நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

எனவே, இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள 'சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத் தத்தை' அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக த்தின் சார்பில் முழு மனதுடன் வரவேற்கிறோம். இந்திய தேர்தல் ஆணையம் இந்த சிறப்பு தீவிர திருத்தத்தை முறையாகவும், வெளிப் படையாகவும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்தப் பணிகளையெல்லாம் மாநிலஅரசின்கீழுள்ளஅலுவலர்கள் தான் செய்யப்போகிறார்கள் என்ப தால், தேர்தல் ஆணையம் அவர்கள் நடுநிலையோடு செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# விஜய்யின் அணுகுமுறை புதிதாக உள்ளது - விமர்சித்த திருமாவளவன்



கரூரில் கடந்த மாதம் 27-ந் தேதி தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் பங்கேற்ற பிரசார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தில், பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.20 லட்சம் நிவாரணம் வழங்கினார் விஜய்.

அனுமதி உள்பட பல்வேறு காரணமாக பாதிக்கப்பட்டவர்களை விஜய் சந்தித்து பேசுவதில் கால தாமதம் ஏற்பட்டது. இந்த நிலை யில், உயிரிழந்த 41 பேரின் குடும் பத்தினரையும் சென்னைக்கு வரவழைத்து நேரில் ஆறுதல் கூறினார் விஜய்.

பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திக்கும் நிகழ்வு மாமல்லபுரத்தில் உள்ள பார் பாயிண்ட்ஸ் ஓட்டலில் நடைபெற்றது.

இதுவரை இல்லாத நடைமுறை யாக பாதிக்கப்பட்டவர்களை தான் இருக்கும் இடத்திற்கு அழைத்து வந்து அரசியல் தலைவர் ஒருவர் ஆறுதல் கூறுவது குறித்து பல விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில் இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய விசிக தலைவர் திருமாவளவன், 'பாதிக்கப்பட்ட மக்களின் இடத் திற்கு சென்றுதான் தலைவர்கள் இதுவரை ஆறுதல் கூறியுள்ளனர். இவ்வளவு காலம், நாம் அதை தான் பார்த்திருக்கிறோம். ஆனால் நடிகர் விஜய், பாதிக்கப் பட்டவர்கள் அனைவரையும் சென்னை வரவழைத்து பார்ப்பது ஒரு புதிய அணுகுமுறையாக உள் ளது' என்று தெரிவித்தார்.

முன்னதாக, கரூர் வந்தால் தனது உயிருக்கு ஆபத்து என நினைத்து பாதிக்கப்பட்டவர்களை விஜய் சென்னைக்கு அழைத்து பார்த்திருக் கலாம் என பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# 7800mAh பேட்டரியுடன் உருவாகும் ஒன்பிளஸ் ஸ்மார்ட்போன்... லீக் ஆன முக்கிய தகவல்..!




ஒன்பிளஸ் நிறுவனத்தின் அதிகம் பேசப்பட்ட ஒன்பிளஸ் ஏஸ் 6 ஸ்மார்ட்போன் ஒன்பிளஸ் 15 மாடலுடன் அறிமுகம் செய்வதாக ஒன்பிளஸ் உறுதிப்படுத்தி இருக்கிறது. இரு ஸ்மார்ட்போன்களும் வருகிற 27ஆம் தேதி சீன சந்தையில் அறிமுகமாகின்றன. ஸ்மார்ட்போன் வெளியீடு உறுதியாகி இருக்கும் நிலையில், இந்த ஸ்மார்ட்போனின் முக்கிய விவரங்கள் சீனா டெலிகாம் வலைத்தளத்தில் வெளிவந்துள்ளன.

டெலிகாம் வலைத்தள பட்டியலில் ஒப்போ PLQ110 என்ற மாடல் நம்பர் கொண்ட ஸ்மார்ட்போனின் அம்சங்கள் தெரியவந்துள்ளது. இந்த ஸ்மார்ட்போன் குயிக்சில்வர், ஃபிளாஷ் வைட் மற்றும் ரேசிங் பிளாக் என மூன்றுநிறங்களில் கிடைக்கும் என்று ஒன்பிளஸ் தெரிவித்துவிட்டது.

இந்த ஸ்மார்ட்போன் அல்ட்ரா சோனிக் கைரேகை ஸ்கேனர் கொண்டிருக்கும் என்றும், IP66/68/69/69K டஸ்ட் மற்றும் வாட்டர் ரெசிஸ்டண்ட் வசதி கொண்டிருக்கும் என்று ஒன்பிளஸ் சமீபத்தில் உறுதிப்படுத்தியது.

மேலும், இந்த ஸ்மார்ட்போன் 7800mAh பேட்டரியுடன் வரும் என்று கூறப்படுகிறது.

ஒன்பிளஸ் ஏஸ் 6 எதிர்பார்க்கப்படும் அம்சங்கள்:

6.78-இன்ச் (2800×1272 பிக்சல்கள்) 1.5K AMOLED டிஸ்ப்ளே 165Hz ரிப்ரெஷ் ரேட்

ஆக்டா கோர் ஸ்னாப்டிராகன் 8 எலைட் 3nm பிராசஸர், அட்ரினோ 830 GPU

12GB / 16GB LPDDR5X RAM, 256GB / 512GB / 1TB UFS 4.1 மெமரி

டூயல் சிம் (நானோ + நானோ)

ஆண்ட்ராய்டு 16 சார்ந்த கலர்ஓஎஸ் 16

50MP பிரைமரிகேமரா, OIS

8MP 120° அல்ட்ரா-வைடு கேமரா, 4K 60 fps வீடியோ பதிவு

16MP செல்ஃபி கேமரா

இன்-டிஸ்ப்ளே அல்ட்ராசோனிக் கைரேகை சென்சார், இன்ஃப்ராரெட் சென்சார்

யுஎஸ்பி டைப்-சி ஆடியோ

ஸ்டீரியோ ஸ்பீக்கர்கள்

5ஜி SA/ NSA, டூயல் 4ஜி வோல்ட்இ, வைபை 7 802.11 be (2.4GHz + 5GHz), ப்ளூடூத் 5.4

7800mAh பேட்டரி

120W சூப்பர்வூக் ஃபாஸ்ட் சார்ஜிங்

# கூகுள் குரோமுக்கு ஆப்பு - அட்லஸ் வெப் பிரவுசரை களமிறக்கிய ChatGPT

செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் உலக அளவில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது. இப்போதுவரை இந்த ஏஐ தொழில்நுட்பத்தில் ஓபன் ஏஐ - சாட்ஜிபிடி, கூகுள் - ஜெமினி, டீப்சீக், எக்ஸ் குரோக் ஆகியவையே நிறுவனங்கள் கோலோச்சி வருகின்றன.

இதில் சாட்ஜிபிடியை மிக அதிகமானோர் தற்போது பயன்படுத்தி வருகின்றனர்.



இந்நிலையில், கூகுள் குரோமுக்கு போட்டியாக ஓபன் ஏஐயின் சாட்ஜிபிடி அட்லஸ் வெப் பிரவுசர் களம் இறங்கியுள்ளது.

தற்போது, அட்லஸ் வெப் பிரவுசர் ஆப்பிள் ஹூச் ஞிநூகு பயனர்கள் இதை பயன்படுத்தக்கூடிய நிலையில், விரைவில் ஙிடிணஞீணிதீண், டிநூகு மற்றும் அணஞீணுரணிடிஞீ இயங்குதளங்களிலும் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கூகுள் குரோமைப் போலவே இதுவும் இடணுரணிட்டிதட் ஞச்ண்னுஞீ பிரவுசர் என்பதால், கூகுள் குரோமுக்கு போட்டியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் கூகுளுக்கு சுமார் ÷150 பில்லியன் இழப்பு ஏற்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.






## தொழில் நுட்பம்

# பட்ஜெட் பிரிவில் புது ஸ்மார்ட்போன் உருவாக்கும் நத்திங்... வெளியான முக்கிய தகவல்..!



நத்திங் நிறுவனத்தின் புதிய ஸ்மார்ட்போன் விவரங்கள் தொடர்ந்து இணையத்தில் லீக் ஆகி வருகின்றன. அந்த வகையில், நத்திங் நிறுவனம் இந்தியா உட்பட சர்வதேச சந்தையில் நத்திங் போன் 3a லைட் ஸ்மார்ட்போனை விரைவில் அறிமுகம் செய்ய இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த ஸ்மார்ட்போன் விவரங்கள் முன்னதாக கீக்பென்ச் தளத்தில் இடம்பெற்றிருந்தது.

இந்த வரிசையில், தற்போது, நத்திங் போன் 3a லைட் விலை மற்றும் வெளியீட்டு தேதி ஆன்லைனில் கசிந்துள்ளது. புதிய நத்திங் போன் 3a லைட் ஸ்மார்ட்போன் இரண்டு வண்ண விருப்பங்களில் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. மேலும் இந்த ஸ்மார்ட்போன் ஒற்றை வேரியண்டில் கிடைக்கும் என்று தெரிகிறது.

பிரெஞ்சு வெளியீடான டீ-லேப்ஸ் அறிக்கையின்படி, நத்திங் போன் 3a லைட் நவம்பர் மாத தொடக்கத்தில் ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்மார்ட்போன் நவம்பர் 04 ஆம் தேதி ஐரோப்பிய சந்தையில் விற்பனைக்கு வரக்கூடும் என்று கூறப்படுகிறது. இது தவிர, பிரான்சில் இந்த ஸ்மார்ட்போன் 249.99 யூரோக்கள் (இந்திய மதிப்பில் ரூ. 25,525) ஆரம்ப விலையில் வரக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

சில ஐரோப்பிய நாடுகளில் இந்த ஸ்மார்ட்போனின் விலை உக்கீ 239.99 ஆக இன்னும் குறைவாக இருக்கலாம் என்றும் அறிக்கை கூறுதுகிறது. மேலும், நத்திங் போன் 3a லைட் 8 ஜிபி ரேம், 128 ஜிபி மெமரி கொண்ட ஒற்றை வேரியண்டில் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்மார்ட்போன் பிளாக் மற்றும் வைட் என இரண்டு வண்ண விருப்பங்களில் கிடைக்ககூடும்.

நத்திங் போன் 3a லைட் எதிர்பார்க்கப்படும் அம்சங்கள்:

கீக்பென்ச் தள விவரங்களின் படி, இந்த ஸ்மார்ட்போன் A001T என்ற மாடல் நம்பர் கொண்டுள்ளது. மேலும், இந்த ஸ்மார்ட்போன் ஆக்டா-கோர் மீடியாடெக் டிமென்சிட்டி 7300 பிராசஸர் கொண்டிருக்கும் என்று கூறப்படுகிறது. இத்துடன் மாலி-G615 MC2 எகக் கொண்டிருக்கும் என்று தெரிகிறது. புதிய நத்திங் ஸ்மார்ட்போன் 8 ஜிபி ரேம் உடன் வரும் என்றும் ஆண்ட்ராய்டு 15 சார்ந்த ஓஎஸ் கொண்டிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

# 8GB ரேம், 100GB Free ஸ்டோரேஜ் உடன் கிடைக்கும் புது லெனோவோ டேப்லெட்

லெனோவா நிறுவனம் குரோம்புக் சீரிசில் முற்றிலும் புதிய மாடலை அறிமுகம் செய்துள்ளது. டூயட் டேப்லெட் என அழைக்கப்படும் புதிய டேப்லெட் மீடியாடெக் கோம்பேனியோ 838 பிராசஸரில் இயங்குகிறது. இதில் 8 ஜிபி ரேம், 128 ஜிபி மெமரி கொண்டிருக்கிறது.

இத்துடன் கூகுள் ஒன் கிளவ்டு ஸ்டோரேஜ் மூலம் 100 ஜிபி வரை இலவச ஸ்டோரேஜ் பெறலாம். புகைப்படங்கள் எடுக்க முன்பக்கம் 5MP கேமராவும், பின்பக்கம் 8MP கேமராவும் உள்ளன. கூகுள் குரோம்புக் உடன் ஜெமினி சேவையும் இடம் பெற்றுள்ளது.

மேலும், ஸ்டீரியோ ஸ்பீக்கர்கள், ஸ்மார்ட் ஆம்ப்ளிபையர், எச்.டி. ஆடியோ என ஒலி தரமும் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த டேப்லெட் முழு சார்ஜ் செய்தால் 12 மணி நேரம் வரையிலான பேட்டரி பேக்கப் வழங்குகிறது.

அளவீடுகளில் இது 21.81 செ.மீ. நீளத்தில் 1920x1200 பிக்சலுடன்




21.05 மி.மீ. தடிமன் கொண்ட திரை, 400 நிட்ஸ் பிரைட்னஸ் கொண்டிருக்கிறது. கனெக்டிவிட்டிக்கு ப்ளூடூத் 5.3 வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த டேப்லெட்டின் எடை 1.1 கிலோ கிராம் ஆகும். இந்திய சந்தையில் இந்த டேப்லெட் விலை ரூ.13,999 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

# உலக செய்திகள்

## ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா குறைத்துள்ளது - அமெரிக்கா

ரஷியா - உக்ரைன் போர் 3 ஆண்டுகளுக்குமேல் நீடித்து வருகிறது. இந்த போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார். ஆனால், ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகள் இந்த போரை ஊக்குவிப்பதாக டிரம்ப் குற்றஞ்சாட்டி வருகிறார்.

குறிப்பாக, இந்தியா, சீனா போன்ற நாடுகள் ரஷியாவிடமிருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் வாங்கும் நிலையில் அந்த



நாடுகள் மீது அமெரிக்கா அதிக வரி விதித்து வருகிறது. மேலும், ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா, சீனா போன்ற நாடுகள் நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி வருகிறார்.

ஆனால், அமெரிக்காவின் எதிர்ப்பை மீறி இந்தியா, சீனா போன்ற நாடுகள் ரஷியாவிடமிருந்து தள்ளுபடி விலையில் கச்சா எண்ணெய் வாங்கி வருகின்றன.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பின் அறிவுறுத்தலையடுத்து ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா குறைத்துக் கொண்டுள்ளதாக வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் கரோலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெள்ளைமாளிகையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கரோலின் கூறுகையில், ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை சீனா குறைத்துக்கொண்டதாக சில சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதேவேளை, ஜனாதிபதி டிரம்ப்பின் வேண்டுகோளை ஏற்று ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா குறைத்துக்கொண்டுள்ளது' என்றார்.

## லெபனான் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் - 4 பேர் பலி

இஸ்ரேல் - ஹமாஸ் போர் கடந்த 2023 அக்டோபர் மாதம் தொடங்கி 2 ஆண்டுகளாக நடைபெற்றது. இந்த போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கு ஆதரவாக லெபனானில் செயல்பட்டு வந்த ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது.

இதையடுத்து, லெபனானின் ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பு மீது இஸ்ரேல் கடந்த ஆண்டு அதிரடி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா உள்பட பலர் உயிரிழந்தனர்.



இதையடுத்து, இரு தரப்பிற்கும் இடையே போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. ஆனாலும், ஹிஸ்புல்லா மீண்டும் ஆயுதங்களை தயாரித்து தாக்குதல் நடத்துவதை தடுக்க அந்த அமைப்பினர், ஆயுத கிடங்குகளை குறிவைத்து இஸ்ரேல் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், லெபனானின் தெற்கு பகுதியில் உள்ள அரபுசலீம் பகுதியில் இஸ்ரேல் நேற்று வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர். ஹிஸ்புல்லா ஆயுத கிடங்கை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது.

உங்கள்
வியாபாரம் உலகம்
முழுவதும் சென்று அடைய
கதிர்ஒளியில் விளம்பரம்
செய்யுங்கள்!

## ஒரேநேரத்தில் அரசு, தனியார் அலுவலகங்களில் வேலை; அமெரிக்காவில் இந்தியர் கைது

அமெரிக்காவின் நியூயார்க் மாகாணம் லாதம் பகுதியில் வசித்து வருபவர் மெஹல் கோஸ்வாமி (வயது 39). அமெரிக்க வாழ் இந்தியரான இவர் நியூயார்க்கில் உள்ள அரசு நிறுவனமான தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். அரசு ஊழியரான இவர் வீட்டில் இருந்து ஒர்க் பிரம் ஹோம் முறையில் பணியாற்றி வந்தார்.

அரசு ஊழியரான கோஸ்வாமி தனியார் நிறுவனத்திலும் பணிக்கு சேர்ந்துள்ளார். கடந்த 2022ம் ஆண்டு ஐரோப்பிய நாடான மால்வாவில் உள்ள செமிகண்டக்டர் நிறுவனத்தில் ஊழியராக பணிக்கு சேர்ந்துள்ளார். அந்நிறுவனத்திலும்



வீட்டில் இருந்து ஒர்க் பிரம் ஹோம் முறையில் பணியாற்றி வந்தார். இரு நிறுவனங்களையும் சேர்த்து கோஸ்வாமி இந்திய மதிப்பில் சுமார் ரூ. 40 லட்சம் வரை சம்பாதித்துள்ளார்.

இந்நிலையில், கோஸ்வாமி தனியார் நிறுவனத்தில் பணியாற்றுவது குறித்து மர்ம நபர் நியூயார்க்கில் உள்ள அரசு அலுவலகத்திற்கு மெயில் மூலம் தகவல் கொடுத்துள்ளார்.

இதையடுத்து அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில் கோஸ்வாமி ஒரேநேரத்தில் அரசு, தனியார் நிறுவனங்களில் வேலை செய்வது உறுதியானது. இதையடுத்து அவரை கைது செய்த போலீசார், கோஸ்வாமியை சிறையில் அடைத்தனர். மேலும், கோஸ்வாமி மீதான குற்றச்சாட்டுகள் உறுதியாகும்பட்சத்தில் அவருக்கு 15 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும், 15 ஆயிரம் அமெரிக்க டாலர்கள் அபராதமும் விதிக்கப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

## உக்ரைன் போரில் ஈடுபடுத்த மிரட்டல்; ரஷியாவில் தவிக்கும் ஐதராபாத் வாலிபர் - கண்ணீர் வீடியோ

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தை சேர்ந்தவர் முகமது அகமது. இவருடைய மனைவி அப்சா பேகம். இந்த தம்பதிக்கு சோயா பேகம் (10) முகமது தைமூர்(4) என்ற பிள்ளைகள் உள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் தனியார் நிறுவனம் மூலம் முகமது அகமது ரஷியா அழைத்துச் செல்லப்பட்டார். அவர் அங்கு ராணுவத்தில் சேர்க்கப்பட்டு உக்ரைன் போரில் ஈடுபடுத்தப்பட்டு கொடுமை அனுபவித்து வருவதாக தனது மனைவியிடம் செல்போனில் தொடர்பு கொண்டு பேசி உள்ளார்.

இது தொடர்பாக அப்ஷா பேகம் வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு கண்ணீர் மல்க கடிதம் எழுதி உள்ளார். அதில் மாஸ்கோவில் உள்ள இந்திய தூதரகம் மூலம் எனது கணவரை கண்டுபிடித்து மீட்டு அழைத்து வர வேண்டும் எனக் கூறியுள்ளார்.



நான் இருக்கும் இடத்தில் ஒரு எல்லை, போர் நடந்து கொண்டிருக்கிறது. நான்உட்பட 4இந்தியர்கள் போர் மண்டலத்திற்குள் செல்ல மறுத்துவிட்டோம். அவர்கள் எங்களை சண்டையிட மிரட்டினர், என்னையும் இன்னொருவரையும்' நோக்கி ஆயுதத்தை நீட்டினர்.என் கழுத்தில் துப்பாக்கியை வைத்து, என்னைச் சுட்டு, டிரோன் மூலம் நான் கொல்லப்பட்டது போல் அரங்கேற்றுவோம் என்கின்றனர்.

'என் காலில் பிளாஸ்டர் போடப்பட்டுள்ளது, நடக்க முடியவில்லை. என்னை இங்கு (ரஷியா) அனுப்பிய முகவரை தயவுசெய்து விட்டு விடாதீர்கள். அவர் என்னை இவற்றில் சிக்க வைத்தார். வேலை இல்லாமல் 25 நாட்கள் இங்கே உட்கார வைத்தார். நான் வேலை கேட்டுக்கொண்டே இருந்தேன், ரஷியாவில் வேலைவாய்ப்பு என்ற போர்வையில் நான் வலுக்கட்டாயமாக இதில் இழுக்கப்பட்டேன், என்று வர் கூறியுள்ளார்.

இந்த வீடியோ ஐதராபாத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. ரஷியாவில் சிக்கியுள்ள அகமதுவை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒவைசி எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

## வெனிசுலாவில் சிறிய ரக விமானம் விபத்து - 2 பேர் பலி

வெனிசுலாவின் டாச்சிரா மாகாணம் பாராமில்லோ விமான நிலையத்தில் இருந்து சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டது. ஓடுதளத்தை விட்டு மேலே பறந்த சில நிமிடங்களிலேயே அந்த விமானம் விமானியின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் ஓடுபாதையில் விழுந்த விமானம் தீப்பிடித்து எரிந்தது.



இந்த விபத்தில் விமானி உள்பட 2 பேரும் கருகி பலியாகினர். இதுதொடர்பான வீடியோ சமூகவலைதளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து விமான போக்குவரத்து துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ரோபோக்களுக்கு மனித வடிவ கைகள் ரெடி!



வித்தியாசமான ரோபோ கரம் ஒன்றை உரு வாக்கியிருக்கிறது சீனாவின் லூஜி டெக். 'ஹ்யூமனாய்டு' எனப்படும் மனித வடிவ ரோபோக்களுக்கு பொருத்தக் கூடிய இயந்திரகண், காது, கை, கால், மூட்டுகள் போன்ற தனித்தனி பாகங்களை தயாரிக்க, இன்று சீன நிறுவனங்கள் போட்டி போடுகின்றன. லூஜி டெக்கின் ஐந்து விரல் ரோபோ கரம், மனித உருவ ரோபோக்கள் மற்றும் தொழிற்சாலை ரோபோக்களுக்கு பொருத்தக்கூடிய வகையில் உருவாக்கபட்டுள்ளது.

இந்த ரோபோ கையின் எடை, 600 கிராமுக்கும் குறைவு. இதன் விரல்களும் மணிக்கட்டும் 20 டிகிரி கோணம் வரை அசையும் திறன் கொண்டது. இதன் விரல்நுனி விசை கிட்டத்தட்ட 15 நியூட்டன் அளவுக்கு இருக்கும். இந்த உலோகக் கையால் ஏறத்தாழ 10 கிலோ எடையுள்ள பொருட்களை பிடித்துத் தூக்க முடியும்.

இந்த 'லூஜி கை'யின் விலை தோராயமாக 4.84 லட்சம் ரூபாய் ஆகும். இது, ஆய்வுக்காகத் தனியாக வடிவமைக்கப்படும் விலையுயர்ந்த ரோபோ கைகளின் விலையைவிடக் குறைவுதான். தவிர, இது மற்ற நிறுவன ரோபோக்களை இயக்கும் மென்பொருளை எழுதும் டெவலப்பர்களுக்கான மென்பொருளுடன் வருகிறது. இதனால், பிற ரோபோக்களுக்கு, உடனடியாகப் பூட்டிப் பயன்படுத்த முடியும். அதோடு, இந்தக் கை களுக்கு புதிய வித்தைகளையும் கற்றுத்தர முடியும்.

இந்தக் கையை அதிக அளவில் தயாரிக்க முடிந்தால், வெறும் காட்சிப் பொருளாக இல்லாமல், ஒரு அவசியமான கருவியாக மாறும். ரோபோக்களுக்கு, மனிதக் கைகளைப் போன்றே செயல்படும் கைகளை வடிவமைத்து தயாரிக்கும் பொறியியல் செலவைக் குறைப்பதன் வாயிலாக, மனிதனைப் போலவே நடமாடும் ரோபோக்களை நிஜ உலக வேலைகள் மற்றும் தொழிற் சாலைப் பணிகளுக்கு விரைவாகக் கொண்டுவர முடியும்.

# வைரஸுக்கு எமன் ஏலக்காய்



நீண்ட நெடுங்காலமாக நம்முடைய இந்தியப் பாரம்பரிய மருத்துவத்தில் ஏலக்காய் பயன்பட்டு வருகிறது. சமீபத்திய ஆய்வு ஒன்று வைரஸ்களுக்கு எதிராக நம்முடைய உடலைத் தயார் செய்யும் சக்தி ஏலக்காய்க்கு உண்டு என்று கூறுகிறது.

ஜப்பான் நாட்டில் உள்ள ஷின்ஷூ பல்கலை ஆய்வாளர்கள் வைரஸ் நோய்களுக்கு தாவரங்களில் உள்ள சேர்மங்கள் எப்படி தீர்வாக அமையும் என்பது குறித்து ஆராய்ந்து வந்தனர். அப்போது ஏலக்காயில் உள்ள 1, 8 - சினியால் எனும் சேர்மம் வைரஸ்களுக்கு எதிராக உடலில் இருக்கும் நோய் எதிர்ப்பு செல்கள் போராடுவதற்கு உதவும் என்று கண்டறிந்தனர். இதை நேரடியாக சோதிக்க வேண்டும் என்பதற்காக மனித நுரையீரலில் இருக்கும் அ549 எனும் செல்களை தனியே பிரித்தனர். அதன் மீது 1, 8 - சினியாலைச் செலுத்தினர். பிறகு அதே செல்களுக்குள் வைரஸையும் செலுத்தினர்.

இந்த சினியால் செல்களில் இருக்கிற நியூக்ளியர் அமிலங்களை தூண்டிவிட்டது. இந்த அமிலங்கள் வைரஸின் டிஎன்ஏ, ஆர்ஏ மூலக்கூறுகளை புரிந்துகொண்டன. வெகு குறைந்த நேரத்தில் இந்த அமிலங்கள் சைட்டோகைன்ஸ் எனும் நோய் எதிர்ப்பு செல்களுக்கு சமிக்ஞை கொடுத்தன. இதனால் நம்முடைய உடலில் இயற்கையாக உள்ள நோய் எதிர்ப்பு செல்கள் தூண்டப்பட்டு வைரஸை சுலப மாக அழித்தன.

## நவீன அறிவியல்

எனவே வெளியில் இருந்து மருந்து கொடுக்காமல் நம்முடைய உடலின் நோய் எதிர்ப்பு சக்தி மண்டலத்தை தூண்டி வைரஸுக்கு எதிராக போராட வைக்கும் ஆற்றல் ஏலக்காயில் உள்ளது என்பது இந்த ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

# இந்தியாவின் துருவ ஆய்வில் அடுத்த மைல்கல்

தேசிய துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சி மையத்தின் (NCPOR) கீழ், கிழக்கு அண்டார்டிகாவில் இந்தத் தளம் 2,000 கோடி ரூபாய் முதலீட்டில் கட்டப்பட உள்ளது. ஜனவரி 2029-க்குள் இதன் கட்டுமானத்தை முடிக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

மைத்ரி 2 நிலையத்தில், 1989-ல் நிறுவப்பட்ட 'மைத்ரி 1'ஐ விட பல மேம்பட்ட அம்ச ங்கள் இருக்கும். இதன் பகுதிகளை



உடனே மாற்றி அமைக்கும் விதத் தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கோடையில் சூரிய ஒளி வாயிலாகவும், ஆண்டு முழுதும் காற்றாலை வாயிலாகவும் மின் சாரத்தை இந்த நிலையம் பெறும். மேலும், இந்திய ஆய்வாளர்கள் இல்லாத மாதங்களில், தட்பவெப்பநிலைத் தரவுகளைத் தொடர்ந்து அனுப்பும் தானியங்கி கருவிகளும் இங்கு நிறுவப்படும்.

இந்த ஆய்வுத் தளத்திற்குத் தேவையான அனைத்து கட்டுமானம் மற்றும் கருவிகளும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு, தென் ஆப்ரிக்கா வழியாகக் கப்பலில் அனுப்பப்படுகிறது. பிறகு, பனி போர்த்திய தரை முழுதும் இழுத்துச் செல்லப்படும். கட்டுமானப் பணிகள், அண்டார்டிகாவின் கோடையான அக்டோபர் - மார்ச் காலகட்டத்தில் மட்டுமே நடக்கும்.

இந்த பிரமாண்ட முயற்சி, உலக துருவ ஆய்வில் இந்தியாவின் பங்களிப்பை அதிகரிக்கும். அதுமட்டுமல்ல, பனிப்பாறைகளின் இயக்கத்தைக் கண்காணிப்பதன் மூலம், உலக பருவநிலை கொள்கை விவாதங்களில் இந்தியாவின் குரலை வலுப்படுத்தவும் உதவும்.




உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

# புற்றுநோயை தடுக்கும் கொழுப்பு எது?

தற்போதைய சூழலில் கொழுப்பு சத்து என்றாலே அது உடலுக்கு தீங்கானது என்ற கருத்து உள்ளது. இது முற்றி லும் உண்மை என்றோ, முற்றிலும் பொய் என்றோ கூற இயலாது. எந்த வகையான கொழுப்புகள் உடலுக்கு நன்மை செய்யும்; எவை கெட்டது செய்யும் என்பது குறித்து பல்வேறு ஆய்வுகள் நடந்து வருகின்றன.

ஹாங்காங் பல்கலை ஆய்வாளர்கள் இது தொடர்பாக முக்கிய ஆய்வை மேற்கொண்டனர். நம் உடலில் சாதாரண கட்டிகள் முதல் புற்று கட்டிகள் வரை அனைத் தையும் எதிர்த்து போராடு பவை ரத்த வெள்ளை அணுக்கள் தான். இவற்றில் பல்வேறு வகைகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை டெல்டா காமா டி செல்கள். இவற்றை மட்டும் தனியாக எடுத்து ஆய்வகத்தில் வைத்து, விஞ்ஞானிகள் சோத னைக்கு உட்படுத்தினர்.

இவற்றை இரண்டு பிரிவுகளா க்கினர். ஒரு பிரிவுக்கு உணவாக கொட்டைகள், அவகாடோ, ஆலிவ் எண்ணெய் ஆகிவற்றில் இருக்கும் கொழுப்பான ஒலிக்



அமிலத்தை செலுத்தினர். மற்றொரு பிரிவினருக்கு பால் பொருட்கள், இறைச்சி, பனை எண்ணெய் ஆகியவற்றில் இருக்கும் பால்மிடிக் அமிலத்தை செலுத்தினர்.

சில தினங்கள் கழித்து ஆராய்ந்தபோது, ஒலிக் அமிலம் செலுத்தப்பட்ட செல்களுக்குள் உயிரியல் இயக்கம், கட்டிகளை அழிக்கும் திறனும் சிறப்பாக இருந்தன. பால்மிடிக் அமிலம் செலுத்தப்பட்ட செல்கள் உயிரியல் இயக்கம் பாதிக்கப் பட்டு, தங்களை தாங்களே அழித்துக் கொண்டன.

இந்த ஆய்வு மூலம் புற்றுநோயால் பாதிக்கப் பட்டவர்கள் ஒலிக் அமிலக் கொழுப்பு நிறைந்த உணவுகள் உட்கொண்டு, பால்மிடிக் அமிலம் நிறைந்த உணவுகளை தவிர்ப்பது நன்மை தரும் என தெரிய வந்துள்ளது.



# லா லிகா லீக்: பார்சிலோனாவை வீழ்த்தி ரியல் மாட்ரிட் த்ரில் வெற்றி

லா லிகா லீக் தொடரில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா, ரியல் மாட்ரிட் அணிகள் மோதின.



பரபரப்பாக நடந்த ஆட்டத்தில் பார்சிலோனா அணியை 2-1 என்ற கோல் கணக்கில் ரியல் மாட்ரிட் அணி வீழ்த்தியது.

ரியல் மாட்ரிட் அணி சார்பில் கைலியன் எம்பாப்பே ஒரு கோலும், பெல்லிங்காம் ஒரு கோலும் அடித்தார். பார்சிலோனா அணிக்காக லோபஸ் ஒரு கோல் அடித்தார்.

# ஆசிய ரக்பி: இறுதிப் போட்டியில் இந்தியா தோல்வி

13 நாடுகள் பங்கேற்ற ஆசிய ரக்ஃபி எமிரேட்ஸ் ஆண்கள் செவன்ஸ் டிராபி 2025 தொடர் ஓமனில் நேற்று தொடங்கியது.

இன்று நடைபெற்ற அரையிறுதியில் இந்தியா 17-0 என சவுதி அரேபியாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இறுதிப் போட்டியில் கஜஸ்தானை எதிர்கொண்டது. இதில் கஜகஸ்தான் 27-0 இந்தியாவை வீழ்த்தி முதலிடம் பிடித்தது.



3ஆவது மற்றும் 4ஆவது இடத்திற்கான போட்டியில் ஆப்கானிஸ்தான் 17-12 என சவுதி அரேபியாவை வீழ்த்தியது.

www.kathiroli-media.ca



# புரோ கபடி லீக்: எலிமினேட்டர் 3 சுற்றுக்கு முன்னேறியது தெலுங்கு டைட்டன்ஸ்



12 அணிகள் பங்கேற்ற 12-வது புரோ கபடி லீக்கில் நேற்று முன்தினத்தோடு லீக் ஆட்டங்கள் முடிவடைந்தன.

புனே, டெல்லி, பெங்களூரு, தெலுங்கு டைட்டன்ஸ், அரியானா, மும்பை, பாட்னா, ஜெய்ப்பூர் ஆகிய அணிகள் முறையே முதல் 8 இடங்களைப் பிடித்து பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறின. தற்போது பிளே ஆப் சுற்றுப் போட்டிகள் நடந்து வருகின்றன.

நேற்றுநடந்தமினிகுவாலிபையர் சுற்று போட்டியில் தெலுங்கு டைட்டன்ஸ், பெங்களூரு புல்ஸ் அணிகள் மோதின.

ஆரம்பத்தில் இருந்தே தெலுங்கு டைட்டன்ஸ் அணி சிறப்பாக ஆடியது. இறுதியில், தெலுங்கு டைட்டன்ஸ் அணி 37-32 என்ற புள்ளிக் கணக்கில் வென்று எலிமினேட்டர் 3 சுற்றுக்கு முன்னேறியது.

இன்று நடைபெற உள்ள எலிமினேட்டர் 2 சுற்றில் பாட்னா அணி பெங்களூரு புல்ஸ் அணியுடன் மோதுகிறது.

# மகளிர் உலகக் கோப்பை: மழையால் கைவிடப்பட்ட இந்தியா, வங்கதேசம் போட்டி

13-வது மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடந்து வருகிறது. லீக் சுற்று முடிவில் ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

இந்நிலையில், நவி மும்பையில் இன்று நடைபெற்ற கடைசி மற்றும் 28-வது லீக் ஆட்டத்தில் இந்தியா, வங்கதேசம் அணிகள் மோதின. டாஸ் வென்ற இந்தியா பந்துவீச்சை தேர்வு செய்தது. மழை காரணமாக போட்டி 27 ஓவராகக் குறைக்கப்பட்டது.

அதன்படி, முதலில் ஆடிய வங்கதேச அணி 27 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 119 ரன்கள் எடுத்தது.

இந்தியா சார்பில் ராதா ராணி 3 விக்கெட்டும், ஸ்ரீ சரணி 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 120 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா களமிறங்கியது. மழை காரணமாக 27 ஓவரில் 126 ரன்கள் என இலக்கு மாற்றியமைக்கப்பட்டது.

இந்திய அணி 8.4 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 57 ரன்கள் எடுத்திருந்த நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டது.



ஸ்மிருதி மந்தனா 34 ரன்னும், அமன்ஜோத் கவுர் 15 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர். மழை நிற்காததால் ஆட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதன்மூலம் இந்திய அணி 7 போட்டிகளில் 3 வெற்றி, 3 தோல்வி என மொத்தம் 7 புள்ளிகளுடன் 4வது இடத்தில் உள்ளது. வங்கதேசம் 7வது இடம் பிடித்தது.

# வயதை பார்க்காதீங்க: நோக்கம் மற்றும் அனுபவத்தை பாருங்க- தேர்வாளர்களுக்கு ரகானே அட்வைஸ்

இந்திய அணியின் சிறந்த மிடில் ஆர்டர் பேட்ஸ்மேனாக விளங்கிய ரகானே, மீண்டும் அணியில் இடம் கிடைக்காமல் தவித்து வருகிறார். உள்ளூர் பேட்டிகளில் சிறப்பாக விளையாடிய போதிலும், தேர்வாளர்கள் அவரை பரிசீலனை செய்யாமல் புறக்கணிக்கின்றனர்.

37 வயதாகும் ரகானே, ரஞ்சி டிராபியில் மும்பை அணிக்காக விளையாடி வருகிறார். அவர் சத்தீஸ்கர் அணிக்கெதிராக 159 ரன்கள் விளாசினார்.

இந்த நிலையில், 2024-25 தொடரில் இந்திய அணி ஆஸ்திரேலியா சென்று 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் 1-3 என படுதோல்வியடைந்தது. இந்த தொடருக்கான இந்திய அணிக்கு நான் தேவை என உணர்ந்ததாக ரகானே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரகானே கூறியதாவது:-

வயது வெறும் நம்பர்தான். ஒரு வீரராக உங்களுக்கு அனுபவம் இருந்தால், இன்னும் உள்ளூர் போட்டியில் விளையாடிக் கொண்டிருந்தால், உங்களுடைய சிறந்த ஆட்டத்தை கொடுத்துக் கொண்டிருந்தால், தேர்வாளர்கள், உங்களை இந்திய சீனியர் அணிக்கு பரிசீலனை செய்ய வேண்டும்.

தேர்வு வயதை பற்றியது அல்ல. அது நோக்கத்தை பற்றியது. அது ரெட்பால் கிரிக்கெட்டின் பேரார்வம் பற்றியது. நீங்கள் ஆட்டத்தில் கொடுக்கும் கடின உழைப்பை பற்றியது. இதனால் வயதை நான் முற்றிலுமாக நம்பவில்லை.

# விளையாட்டு செய்திகள்

# வியன்னா ஓபன் டென்னிஸ்: சாம்பியன் பட்டம் வென்றார் சின்னர்

வியன்னா ஓபன் டென்னிஸ் தொடர் ஆஸ்திரியாவில் நடைபெற்றது.



ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் இத்தாலியின் ஜானிக் சின்னர், ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வரேவ் உடன் மோதினார்.

இதில் சின்னர் 3-6 என முதல் செட்டை இழந்தார். இதில் சுதாரித்துக் கொண்ட சின்னர் அடுத்த இரு செட்களை 6-3, 7-5 என வென்று சாம்பியன் பட்டம் வென்றார். வியன்னா ஓபன் தொடரில் இவரது 2வது பட்டமாகும்.

# ஜப்பான் ஓபன் டென்னிஸ்: சாம்பியன் பட்டம் வென்றார் பெலிண்டா பென்சிக்

ஜப்பான் ஓபன் டென்னிஸ் தொடர் டோக்கியோவில் நடைபெற்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தின் இறுதிச்சுற்றில் சுவிட்சர்லாந்தின் பெலிண்டா பென்சிக், செக் வீராங்கனை லிண்டா நோஸ்கோவா உடன் மோதினார்.



இதில் அதிரடியாக ஆடிய பென்சிக் 6-2, 6-3 என்ற செட் கணக்கில் வென்று சாம்பியன் பட்டம் வென்று அசத்தினர்.

# துப்பாக்கி சுடும் பயிற்சியில் நடிகர் அஜித்...

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர் அஜித்குமார். தமிழ் சினிமாவில் பெரும் எண்ணிக்கையிலான ரசிகர்களை கொண்ட நடிகராகவும் இருந்து வருகிறார். இவர் நடிப்பில் அண்மையில் திரையரங்குகளில் வெளியான 'குட் பேட் அக்லி' படம் நல்ல வரவேற்பை பெற்றது. குட் பேட் அக்லி படத்தின் வெற்றியைத் தொடர்ந்து நடிகர் அஜித்குமார் கார் ரேஸ்களில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். சொந்தமாக கார் ரேஸிங் பந்தய நிறுவனத்தையும் அவர் உருவாக்கி உள்ளார். இந்த கார் பந்தய நிறுவனம் துபாய், பெல்ஜியம் போன்ற நாடுகளில் நடைபெற்ற பந்தயங்களில் கலந்து கொண்டு பரிசுகளையும் வென்றுள்ளது.



அஜித்குமாரின் அடுத்த படத்தையும் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்க உள்ளதாக தகவல்கள் கூறப்படுகிறது. இந்த படம் ஜனரஞ்சகமான கமர்ஷியல் படமாக அமையும் என ஆதிக் சமீபத்தில் அளித்த பேட்டியில் கூறியிருந்தார். புதிய படத்தின் ப்ரீ புரொடக்சன் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் அஜித் குமார் குடும்பத்தினருடன் பாலக்காட்டில் உள்ள பகவதியம்மன் கோவிலில் தரிசனம் செய்துள்ளார். இந்த புகைப்படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

இந்நிலையில், திருப்பூர் கொங்குநாடு ரைபிள் கிளப்பில், அதன் நிறுவனர் செந்தில் குமார் உடன் இணைந்து, அஜித்குமார் துப்பாக்கிச்சுடும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். இலக்கை அஜித் குறிபார்த்து சுடும் காட்சிகள் வெளியாகி கவனம் பெற்றுள்ளது.

உங்கள் வியா-
பாரம் உலகம்
முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில்
விளம்பரம்
செய்யுங்கள்!

# 52 வயதில் 50-வது பிறந்தநாளை கொண்டாடிய நடிகை - வறுத்தெடுக்கும் நெட்டிசன்கள்




இந்தி திரை உலகில் பிரபல நடிகையாக இருப்பவர் மலைக்கா அரோரா. அர்பாஸ்கானை திருமணம் செய்து கொண்ட மலைக்கா அரோரா அவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவரை விட்டு பிரிந்தார். இதைத் தொடர்ந்து 2018-ம் ஆண்டு பிரபல பாலிவுட் நடிகரும் போனி கபூரின் மகனுமான அர்ஜுன் கபூருடன் மலைக்கா அரோராவுக்கு காதல் ஏற்பட்டது.

மலைக்காவும் அவரை விட 12 வயது குறைந்த அர்ஜுன் கபூரும் திருமணம் செய்து கொள்ளாமல் ஒன்றாக வாழ்ந்து வந்தனர். கடந்தாண்டு கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் பிரிந்தனர். பிரிந்த பிறகும் நண்பர்களாக இருந்து வந்தனர். சமீபத்தில் நடந்த ஹோம்பவுண்ட் படத்தின் பிரீமியர் காட்சியின் போது மலைக்காவும், அர்ஜுன் கபூரும் கட்டி பிடித்து அன்பை பரிமாறிக் கொண்டனர்.

இந்த நிலையில், கடந்த 23-ந்தேதி மலைக்கா அரோரா தனது பிறந்தநாளை கொண்டாடினார். அவரது நெருங்கிய தோழி கரீனா கபூர், சகோதரி அம்ரிதா அரோரா உள்ளிட்டோர் மலைக்கா அரோராவின் பிறந்தநாள் பார்ட்டி தொடர்பான புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பதிவிட்டு வாழ்த்து தெரிவித்தனர். அந்த பிறந்தநாள் கேக்கில் '50' என்ற எண் இடம்பெற்றிருந்தது. மேலும் மலைக்கா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்ட பதிவிலும், ''எனது 50-வது பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் நன்றி'' என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் மலைக்கா அரோரா குறித்து இணையதளங்களில் கிடைக்கும் தகவல்களில், அவர் 1973-ம் ஆண்டு அக்டோபர் 23-ந்தேதி பிறந்துள்ளார் என்று தெரியவருகிறது. அதன்படி 2025-ம் ஆண்டில் அவருக்கு 52 வயது ஆகிறது. ஆனால் 52 வயதில் மலைக்கா 50-வது பிறந்தநாளை கொண்டாடுகிறார் என சமூக வலைதளங்களில் நெட்டிசன்கள் பலவிதமாக விமர்சித்து வருகின்றனர்.

மலைக்கா கடந்த 2019-ம் ஆண்டு தனது 46-வது பிறந்தநாளை கொண்டாடியுள்ளார். அந்த புகைப் படங்களையும் நெட்டிசன்கள் தேடிப் பிடித்து ஆதாரமாக பகிர்ந்து வருகின்றனர். உண்மையான வயதை கூறுவதற்கு தயக்கம் காட்டுவது ஏன்? என்று மலைக்காவிற்கு ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர். அவர் வயதை கணக்கிடும்போது கொரோனா ஊரடங்கு காலத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிட்டார் எனவும் கிண்டலாக பதிவு செய்து வருகின்றனர்.

# உங்கள் துணை எப்படிப்பட்டவர்? - ராஷ்மிகா சொன்ன பதில்

ராஷ்மிகா மந்தனா தற்போது ''தி கேர்ள் பிரண்ட்'' படத்தில் நடித்துள்ளார். இப்படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது.



இந்தப் படத்தின் கதை காதலில் ஒருவரின் 'வகை'யைக் கண்டுபிடிப்பதைச் சுற்றியே உள்ளது. விழாவில் உங்கள் துணை எப்படிப்பட்டவர் என்று தொகுப்பாளர் ராஷ்மிகாவிடம் கேட்டபோது, அவர் சிரித்துக் கொண்டே, 'உங்கள் எல்லோருக்கும் பதில் தெரியும்' என்று கூறினார்.

இந்த மாத தொடக்கத்தில் ஐதராபாத்தில் ராஷ்மிகாவும் விஜய் தேவரகொண்டாவும் நிச்சயதார்த்தம் செய்து கொண்டதாக பரவலாகப் பேசப்படுகிறது, இருப்பினும் இருவரும் அதை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை.

# மூதாட்டியிடம் நட்பாக பழகி ஆபாச வீடியோவை வெளியிடுவதாக மிரட்டி பணம் கேட்ட நடிகை - போலீஸ் வழக்குப்பதிவு



பெங்களூரு திலக்நகர் போலீஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 61 வயது மூதாட்டி வசித்து வருகிறார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அந்த மூதாட்டிக்கும், கன்னட சின்னத்திரை நடிகையான ஆஷா ஜோஸ் என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. பின்னர் 2 பேரும் நட்பாக பழகி வந்தனர். இதற்கிடையில் அந்த மூதாட்டி, தான் வேலை செய்து வரும் நிறுவனத்தை சேர்ந்தவரை திருமணம் செய்து கொண்டு வசதியாக வாழ்வது பற்றி ஆஷாவுக்கு தெரிவித்தார்.


இதையடுத்து, மூதாட்டியின் செல்போனில் இருந்து, அவருடைய ஆபாச வீடியோக்கள், புகைப் படங்களை ஆஷா தனது செல்போனுக்கு பகிர்ந்து கொண்டதாக தெரிகிறது. மேலும் தனக்கு பணப்பிரச்சினை இருப்பதாகவும், உங்களது கணவரிடம் இருந்து பணம் வாங்கி கொடுங்கள் என்றும் மூதாட்டியிடம் ஆஷா கேட்டதாக கூறப்படுகிறது. இதற்கு அந்த மூதாட்டி மறுத்து விட்டார்.

இதையடுத்து, தன்னிடம் இருக்கும் மூதாட்டியின் ஆபாச வீடியோக்கள், புகைப்படங்களை சமூக வலைதளங்களில் வெளியிடுவதாகவும், அவ்வாறு வெளியிடாமல் இருக்க ரூ.2 கோடி கொடுக்க வேண்டும் என்றும் ஆஷா மிரட்டியுள்ளார். அத்துடன் சில ஆடியோ ஆதாரங்களையும் மூதாட்டிக்கு போட்டுக்காட்டி ஆஷா மிரட்டியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த மூதாட்டி நடந்த சம்பவங்கள் குறித்து திலக்நகர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில், ஆஷா மீது வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆஷா ஜோஸ் கன்னட தொலைக்காட்சிகளில் வெளியான பல்வேறு சின்னத்திரை தொடர்களில் நடித்து பிரபலமானவர் ஆவார். கடந்த 2016-ம் ஆண்டு நடந்த மிஸ் இந்தியா பிளானட் அழகி போட்டியிலும் ஆஷா பங்கேற்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

www.kathi-
rolimedia.ca



THE LAW OFFICES OF MELENI DAVID
Nice
Naughty
THE LAW OFFICES OF MELENI DAVID
Your Personal Injury Lawyer
THE LAW OFFICES OF MELENI DAVID BARRISTERS AND SOLICITORS
MDLAW.CA
416.430.0044
HOTLINE
416.271.5992
885 Progress Avenue, Suite 110
Scarborough, ON M1H 3G3
PHONE: 416.430.0044




INTERNATIONAL SHOTOKAN KARATE-DO ORGANIZATION
KARATE RAJAGURU ACADEMY
சர்வதேச ஷோடோகான் கராத்தே - டோ ஆர்கனைஸேஷன்
கராத்தே ராஜகுரு அகாடமி
55 Years Golden Jubilee 1965 - 2020
1965 ஆம் ஆண்டு முதல் சர்வதேச அளவில், விஞ்ஞான தற்காப்புக்கலையில் குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் வேண்டி அனுபவம் நிறைந்த
கராத்தே
சிலம்பம்
ஆயுத பயிற்சி
யோகா
தியானம்
பெண்களுக்கான சிறப்பு தற்காப்புப் பயிற்சி
மனித நேயர், சேவ ரத்னா, வீர ரத்னா, மாமல்லன், போதிதர்மா, கிரேண்ட் மாஸ்டர், ஹான்ஷி, லயன்
ராஜகுரு த. ரவிந்திரன் M.A., M.S., M.I.B.R.
(9th Dan Black Belt - International Grand Champion - Gold Medalist)
அவர்களின் நேரடி தனிச்சிறப்பு பயிற்சி பெற்று, இன்று கனடாவின் முதன்மை ஆசிரியராக
கராத்தே, யோகா, தியானப் பயிற்சியில், தலை சிறந்து விளங்கும் ஒப்பற்ற
இலங்கை வீராங்கனை ரென்ஷி கயலினியின்
(5th Dan Black Belt - International Secretary - Examiner - Chief Instructor - Technical Director)
அவர்களின் திறமையான பயிற்சியை நேரடியாக பெறவும்,
அன்பு, அமைதி, பொறுமை, ஒழுக்கம் மற்றும் வீரம் போன்ற நற்குணங்களுடன் வாழவும்,
மாதா, பிதா, குரு, தெய்வம் மற்றும் குடும்பம் போன்ற நினைவுகளுடன் சிறப்புடன் வாழவும்,
தமக்கும், பிறர்க்கும் ஆபத்து ஏற்படும் காலங்களில் பாதுகாத்துக்கொள்ளவும்,
இளைஞர்களை நல்வாழ்க்கையில் அமைத்துக்கொள்ளவும், மற்றும் அனைத்து குழந்தைகளும்,
இளைஞர்களும் கல்வியறிவுடன் கூடி, தெளிவான சிந்தனையும், சுய கட்டுப்பாடும்,
நிறைவான தன்னம்பிக்கையும், பூர்த்தியான ஞானத்தையும் பெற்று,
மன அமைதியுடன் வாழவும்...
எமது தற்காப்புக்கலை பயிற்சி நிலையங்களை அணுகவும்
647-719-4756
E: info.isko@yahoo.com | Web: isko.co | Fb.com/karaterajaguru | Instagram @ KarateRajaguru | Twitter @ KarateRajaguru | karaterajaguruofficial.blogspot.com
SCARBOROUGH
* CONDITIONS APPLY - PROMOTIONS & DISCOUNTS IS A LIMITED TIME OFFER - PLEASE CONTACT OUR OFFICE FOR DETAILS
MISSISSAUGA

# ஈகுவடாரில் சோகம்: நீச்சல் குளத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் பலி



தென் அமெரிக்க நாடான ஈகுவடாரின்சாண்டோடொமிங்கோ நகரில் நீச்சல் குளம் அமைந்துள்ளது. அங்கு ஏராளமானோர் குளித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது வேனில் இருந்து இறங்கிய ஒரு கும்பல் நீச்சல் குளத்துக்குள் நுழைந்தது. பின் அங்கிருந்தவர்களை நோக்கி சர மாரி துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இதுகுறித்து போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

முதல் கட்ட விசாரணையில், போதைப் பொருள் கடத்தல் முன் விரோதம் காரணமாக இந்த தாக்குதல் நடைபெற்றது தெரிய வந்துள்ளது. இதையடுத்து தப்பியோடிய குற்றவாளிகளைப் போலீசார் வலைவீசி தேடி வரு கின்றனர்.

# பயங்கரவாதிகள் பட்டியலில் சல்மான் கான்?: பின்னணியில் பாகிஸ்தான்

பாலிவுட் நடிகர் சல்மான்கான் அண்மையில் சவுதி அரேபியாவில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பலுசி ஸ்தான் குறித்து பேசிய கருத்துகள் காரணமாக பாகிஸ்தானில் பெரும் சர்ச்சைக்குள்ளாகியது

இதன் விளைவாக, பாகிஸ்தான் அரசு அவரை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்துள்ளதாக தக வல்கள் வெளியாகின. ரியாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சல்மான் கான் பேசியதாவது:

நீங்கள் ஒரு இந்தித் திரைப்படம் எடுத்து இங்கு (சவுதி அரேபியா) வெளியிட்டால், அது ஒரு சூப்பர் ஹிட் ஆகும்.

தமிழ், தெலுங்கு அல்லது மலையாள திரைப்படத்தை உருவா க்கினால் அது பல நூறு கோடிகளை சம்பாதிக்கும். ஏனெனில் பல நாட்டைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்துள்ளனர். இங்கு பலுசி ஸ்தானைச் சேர்ந்தவர்கள் உள்ளனர், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள் உள்ளனர், பாகிஸ்தானைச் சேர்ந்த வர்கள் உள்ளனர். அனைவரும் இங்கு வேலை செய்கிறார்கள் என பேசியிருந்தார்.

சல்மான்கானின் இந்தப் பேச்சால் கோபமடைந்த பாகிஸ்தான், அவரை பயங்கரவாதிகள் பட்டியலின் 4-வது அட்டவணையில் சேர்த்துள்ளதாக தகவல் வெளியானது. எனினும், இது தொடர்பான அதிகாரப்பூர்வ தகவல் எதுவும் இல்லை.



# ஆசியான் உச்சிமாநாட்டில் டிரம்ப்.. தாய்லாந்து - கம்போடியா அமைதி ஒப்பந்தம் கையெழுத்து!

தென்கிழக்காசிய நாடுகளான கம்போடியா மற்றும் தாய்லாந்து இடையே எல்லைப் பிரச்சினை காரணமாக கடந்த மே மாதம் திடீர் மோதல் வெடித்தது.

இரு நாட்டு படைகளும் மாறி மாறி தாக்கி கொண்டதில் 30-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிர் இழந்தனர்.

எல்லைப்பகுதியில் வசித்து வந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வெளியேறினார்கள். இந்த போரை முடிவுக்கு கொண்டு வர மலேசியா மத்தியஸ்தம் செய்து வந்தது.

மேலும் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப்பும் இதில் தலையிட்டு இரு நாட்டு தலைவர்களுடன் பேசி மோதலை முடிவுக்கு கொண்டு வந்தார்.

இந்நிலையில் ஆசிய நாடு களுக்கு பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் இன்று மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற 47வது ஆசியான் உச்சி மாநாட்டின் கலந்துகொண்டார்.

மாநாட்டின் ஒரு பகுதியாக டிரம்ப் முன்னிலையில் தாய்லாந்து - கம்போடியா இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

கம்போடிய பிரதமர் ஹுன் மானெட் மற்றும் தாய்லாந்து பிரதமர் அனுடின் சார்ன்விராகுல் ஆகியோர் டிரம்ப் முன்னிலையில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த அமைதி ஒப்பந்தத்திற்கு உறு துணையாக இருந்த அமெரிக்க அதிபர் டிரம்ப்பிற்கு கம்போடிய பிரதமர் ஹுன் மானெட் தனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் மூலம் தாய்லாந்து காவலில் வைத்திருந்த 18 கம்போடிய வீரர்கள் விடுவிக்கப் பட்டனர். இரு நாடுகளும் தங்களுக்கு இடையேயான 800 கி.மீ நீளமுள்ள எல்லைப் பகுதியில் நிலைநிறுத்தப்பட்ட கனரக ஆயுதங்களை அகற்றும் பணிகள் தொடங்கியுள்ளன.

இந்த ஒப்பந்தத்துடன் சேர்த்து, மலேசியாவுடனான வர்த்தக ஒப்பந்தம், அரிய மண் தாதுக் கள் ஒப்பந்தத்திலும் டிரம்ப் கையெழுத் திட்டார்.

மேலும் கம்போடியா உடனான வர்த்தக ஒப்பந்தம் மற்றும் தாய்லாந்துடனான கனிம வள ஒப்பந்தத்திலும் டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.



# உக்ரைன் தலைநகரை குறிவைத்து ரஷியா டிரோன் தாக்குதல்: 3 பேர் பலி

உக்ரைன் தலைநகர் கீவ் நகரை குறிவைத்து 2ஆவது நாளாக இரவு நேரத்தில் ரஷியா டிரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. இதில் 3 பேர் உயிரிழ்ந்த நிலையில், 29 பேர் காயம் அடைந்துள்ளனர்.

கீவில் உள்ள டெஸ்னியான்ஸ்கி மாவட்டத்தில் உள்ள இரண்டு குடியிருப்பு கட்டிடம் ரஷியாவின் டிரோன்கள் தாக்குதலால் தீப்பிடித்து எரிந்தது. 9 மற்றும் 16 மாடி குடியிருப்புகளில் இருந்து மக்களை மீட்புக்குழுவினர் வெளியேற்றினர். 74 வயது மூதாட்டியால் வீட்டில் இருந்து வெளியே வரமுடிய வில்லை. இதனால் அவர் மூச்சுத் திணறி உயிரிழந்தனர்.

மேலும் 19 வயது இளம் பெண் மற்றும் அவருடைய 46 வயது தாய் ஆகியோரும் உயிரிழந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை மட்டும் 101 டிரோன்கள் மூலம் ரஷியா தாக் குதல் நடத்தியுள்ளது. இதில் 90 டிரோன்களை தடுத்து நிறுத்தியும், தாக்கியும் அழித்ததாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது. ஐந்து டிரோன்கள் நான்கு இடங் களை தாக்கியது எனவும் தெரிவித் துள்ளது.

ஏவுகணை மற்றும் டிரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தி 4 பேர் கொலை செய்த நிலையில், இந்த தாக்குதலை ரஷியா நடத்தியுள்ளது.



# வீட்டு வேலை செய்யாத கணவனுக்கு கத்திக்குத்து.. அமெரிக்காவில் இந்திய வம்சாவளி ஆசிரியை கைது

அமெரிக்காவில் வீட்டை சுத்தம் செய்யாததற்காக கணவரின் கழுத்தில் கத்தியால் குத்தியதாக இந்திய வம்சாவளி ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார்.

வட கரோலினாவின் பாக்ஸ்ஹேவன் டிரைவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் தொடக்கப்பள்ளி ஆசிரியை சந்திரபிரபா சிங் (44) தனது கணவர் அரவிந்த் சிங் உடன் வசித்து வந்தார்.

இந்நிலையில் கடந்த அக்டோபர் 12 அன்று, வீட்டை சுத்தம் செய்யாதது தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதத்தில் சந்திரபிரபா தனது கணவர் அரவிந்த் சிங்கைக் கத்தியால் கழுத்தில் குத்தியுள்ளார். இதனால் கழுத்தில் ஆழமான காயம் ஏற்பட்டு அரவிந்த் சிங் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த போலீசார் சந்திரபிரபாவை கைது செய்தனர். போலீசாரிடம் சந்திரபிரபா கூறுகையில், 'காலை உணவு தயாரிக்கும் போது என் கணவரிடம் எனக்கு உதவுமாறு கேட்டேன்.

அவர் வீட்டை சுத்தம் செய்யாததால் நான் மிகவும் வருத்தப்பட்டேன். நான் கையில் கத்தியுடன் திரும்பியபோது, தற்செயலாக என் கணவரின் கழுத் தில் காயம் ஏற்பட்டது' என்று கூறினார்.

இருப்பினும், அரவிந்த் சிங் தனது மனைவி வேண்டுமென்றே தன்னை குத்தியதாக குற்றம் சாட்டியுள்ளார். தற்போது சந்திரபிரபா ஜாமீனில் வெளிவந்துள் ளார். பள்ளியிலிருந்தும் அவர் இடைநீக்கம் செய்யப்பட்டார்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!